காவ்

# எதிர் எதி



# கோணங்களி

ஞானி

# எதிர் எதிர்க் கோணங்களில்...
# தத்துவம், மதம், மானுடம்

ஞானி

காவ்யா

| | | |
|---|---|---|
| நூல் | : | எதிர் எதிர்க் கோணங்களில்... தத்துவம், மதம், மானுடம் |
| © ஆசிரியர் | : | ஞானி (கி. பழனிச்சாமி) |
| முதல் பதிப்பு | : | நவம்பர் 2002 |
| வெளியீடு | : | காவ்யா<br>14, முதல் குறுக்குத் தெரு,<br>டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,<br>சென்னை - 24. ✆ 4801603.<br>E-mail : kaavyabooks@hotmail.com |
| ஒளியச்சு | : | ஜி.எம்.சிஸ்டம்ஸ்,<br>கோயமுத்தூர் - 12. |
| அச்சாக்கம் | : | மணி ஆப்செட், சென்னை - 600 005 |
| அட்டை | : | முத்து |
| பக்கங்கள் | : | 184+10 |
| விலை | : | ரூ.80,00 |


## பதிப்புரை

இந்த ஆண்டில் ஞானி அவர்களின் இரண்டு நூல்களை காவ்யா வெளியிடுகிறது. அவர் ஒரு சுரங்கம். கருத்துகள் தோண்டத் தோண்ட குவியும், அவரது தவம் பாராட்டக் கூடியது.

எதிர்எதிர் கோணங்களில் - சற்று வித்தியாசமான நூல். இதில் கருத்து மோதல்கள் மிகுதி. எல்லா வகையிலும் சிந்தித்து பார்த்துள்ளார். இதுவும் இவரால்தான் முடியும் போலும்.

- மார்க்சியத்தின் துணை இல்லாமல் காந்தியம் உடைமை வர்க்க எல்லையைக் கடக்க முடியாது.

- சிலப்பதிகாரம் முதல் சுந்தர ராமசாமி வரை இருத்தலியலில் தமிழ் இலக்கியத்துள்ளும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

- ஜே.கிருஷ்ணமூர்த்தி ஒரு போராளி. இவர் வழியே சமதர்மத்தை நாம் ஆழமாக முன்னெடுக்க முடியும்.

- இந்து மதத்தின் உள்ளிருந்தும் இஸ்லாமியத்தின் உள்ளிருந்தும் விடுதலை இறையியல் எழ வேண்டும். மதவாதம் வேண்டாம்.

- பெண்ணியமும் மனித விடுதலைக்கான கோட்பாடு மற்றும் செயல்முறை.

இப்படி ஏராளமான கோணங்கள்; எல்லாமே எதிர் எதிர்க் கோணங்களில். எங்கள் ஆஸ்தான வித்தகர்களில் ஞானியும் ஒருவர். இவரது நூல்கள் தொடர்ந்து வரும்.

காவ்யா சண்முகசுந்தரம்

# முன்னுரை

மனித வாழ்க்கை அழகும் அர்த்தமும் உடையதாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். வாழ்க்கையில் அன்பு தழைக்க வேண்டும். அறம் செழிக்க வேண்டும். இயன்றவரை நம்மைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். நம்மீது யாரும் ஆதிக்கம் செய்ய வேண்டாம். நாமும் பிறர்மீது நம்மைத் திணிக்க வேண்டாம். இயற்கையோடும், உயிர்களோடும் நாம் நேசத்தோடு வாழ வேண்டும். நம்மீது செலுத்தப்படும் ஆதிக்கம் நம்மை சுருக்குகிறது, பிளவுபடுத்துகிறது, நம் படைப்பியக்கத்தை அழிக்கிறது.

நமக்குள் எப்பொழுதும் ஒரு குழந்தை உண்டு. கலைஞன் இருக்கிறான். இவர்கள் நம்மோடு இயல்பாக இருக்க வேண்டும். நமக்கு வளமான உறவுகள் வேண்டும். இயற்கையோடு மட்டுமல்லாமல் அனைத்து உயிர்களோடும் நமக்கு உறவு வேண்டும். பிரபஞ்சம் நமக்குள் வந்து போக வேண்டும். அந்தளவுக்கு நம்மை திறந்து வைத்திருக்க வேண்டும்.

இப்படி இருப்பதுதான் / இயங்குவதுதான் மனித வாழ்க்கை, மனிதனுக்கான வாழ்க்கை. நெடுங்கால வரலாறு நமக்குள் இப்படி ஒரு உயர்வகையான மனித வாழ்க்கையைப் பதிவு செய்திருக்கிறது. இலக்கியங்கள், அறநூல்கள் இவ்வகை வாழ்க்கையை நமக்குச் சொல்லுகின்றன. சான்றோர்கள் இத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமக்கென இவர்கள் வாழாதவர்கள். சாக்ரடீஸ் என்றும், இயேசு என்றும், வள்ளுவர் என்றும், புத்தர் என்றும் இவர்களுக்குப் பெயர் சொல்லுகிறோம்.

சமூகத்தின் நலன்களுக்காகத் தம் உயிரைக் கொடுத்தும் பாடுபட்டவர்கள், இவர்களைச் சேர்ந்தவர்கள். தேசம் என்றும், விடுதலை என்றும், மொழி என்றும் இலட்சியங்களோடு வாழ்ந்தவர்கள் இத்தகையவர்கள். எத்தகைய சமூகத்திலும் இத்தகையவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களால்தான் உலகம் தழைக்கிறது.

வாழ்க்கை இப்படி எல்லாக் காலத்திலும் இருப்பது இல்லை. நெருக்கடிகள், சிக்கல்கள், ஆதிக்கங்கள் முதலியவை வாழ்வின் எல்லையை சுருக்குகின்றன. உடமையும் அதிகாரமும் வாழ்வுக்கு எல்லை வகுக்கின்றன. வாழ்க்கை சாரமற்றதாக – அழகற்றதாக மாறுகிறது. சடங்குகள்

வாழ்க்கையை அடைத்துக் கொள்கின்றன. வாழ்வின் எல்லாக் களங்களிலும் சடங்குகள். வாழ்க்கை இப்படி இறுகும்பொழுது இந்த இறுக்கத்தை கலைத்துக் கொள்ள நேர்கிறது. இத்தகைய சூழலில்தான் குடும்பம் முதலிய அனைத்து நிறுவனங்களும் கேள்விக்குள்ளாகின்றன. சடங்குகளில் இறுகிப்போன மத அமைப்பின் உள்ளிருந்தும் கேள்விகள் எழுகின்றன. கடவுள் உண்டா? ஆன்மா என ஒன்று இருக்கிறதா? சடங்குகளுக்கு வாழ்க்கையில் என்ன இடம்? இப்படி கேள்விகள் எழுகின்றன. இவ்வகைக் கேள்விகள், தத்துவம் தொடர்பான கேள்விகள்; வாழ்க்கையின் அடிப்படைகளைப் புரட்டிப் பார்க்கிற கேள்விகள்.

இப்படிக் கடவுளுக்கெதிராகவும் கேள்விகள் எழும்பொழுது, கடவுள் இல்லை என்று ஆகவில்லை. ஆன்மா பொய் என்று ஆவதில்லை. இவற்றின் உள் இயக்கம் என்ன? என்று கேட்க நேர்கிறது. வாழ்வுக்கு ஆதாரம் அன்பு – அறம். கடவுள் முதலிய கருத்தினங்களுக்குள் இவை உள்ளடங்கி உள்ளன. மதம் என்ற அமைப்பினுள் இத்தகைய சாரம் ஏன் வற்றிப் போய்விட்டது? யார் இதைச் செய்தவர்கள்? இப்படியும் கேள்விகள் எழுகின்றன. மதம் எப்படி ஆதிக்கமாக மாறியது. ஆதிக்கத்துக்கு எப்படி சேவை செய்ய நேர்ந்தது? இந்த ஆதிக்கம் வரலாற்றுக்குள் எப்படி வந்தது? சமூகம் எப்படி இதை ஏற்றுக்கொண்டது? கலைஞர்கள் எப்படி இந்த ஆதிக்கத்திற்கு இடம் தந்தார்கள்? அறம் எவ்வாறு மறம் ஆயிற்று?

இவ்வாறெல்லாம் வரலாற்றுக்குள் – சமூக அமைப்புக்குள் நாம் தேடிச் செல்கிறோம். தத்துவம் என்ற கைவிளக்கை ஏந்திச் செல்கிறோம். வாழ்க்கையைப் புதியதாக மாற்ற வேண்டும். இந்த உலகம், இந்த இயற்கை எல்லோருக்கும் உரியது. சமத்துவம் / சமதர்மம் தான் வாழ்வின் மேறம். இந்த உலகத்தை ஆதிக்கவாதிகளுக்கு நாம் விட்டுத்தர முடியாது. அரக்கர்கள் இந்த உலகத்தை கைப்பற்றிக் கொள்ள நாம் அனுமதிக்க முடியாது. இவர்கள் எப்படியோ, எந்தக் காலத்திலோ, நமக்குள்ளும் நுழைந்து வம்பாய், வழக்காய், போட்டியாய், பொறாமையாய், தன்னலமாய், வெறியாய், ஆதிக்கமாய், ஆடம்பரமாய் நமக்குள்ளும் தங்கி இருக்கிறார்கள். இவர்களை நமக்குள்ளிருந்து வெளியேற்ற வேண்டும். வெளியேற்றினால் ஒழிய நமக்குள் அன்பு தழைக்காது. அறம் பெருகாது. ஆற்றல் திரளாது.

நெருக்கடிகள் மிகுந்த சூழலில் நாம் இன்று வாழ்கிறோம். மத நிறுவனங்கள் ஆதிக்க நிறுவனங்களாக மாறி உள்ளன. பொருளியல் முதலியவற்றில் வகை வகையான ஆதிக்கங்கள். இவற்றோடு ஒத்துச்



செல்லும் புதிய வகை மதவாதிகள். போலித் துறவியர்கள். இவர்களை மகிமைப்படுத்தும் படிப்பாளிகள். இவர்களின் காண்டலுக்குள்ளாகி தமக்கான வாழ்வை – வரலாற்றை – தேசத்தை இழந்து தவிக்கிற கோடிக்கணக்கான மக்கள். இவர்கள் தம்மை எப்படி மீட்டுக் கொள்ள முடியும்? இங்குதான் தத்துவம் தேவைப்படுகிறது. எல்லாவற்றையும் புரட்டிப் பார்க்க வேண்டும். அதிகாரம் எந்த வடிவில் இருந்தாலும் அதை வெளியேற்ற வேண்டும்.

இதைச் சொல்வதற்குத்தான் இந்தக் கட்டுரைகள். பல்வேறு சமயங்களில் நான் எழுதிய கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன. ஒரு திறனாய்வாளன் என்ற முறையில் என் வாழ்க்கை உட்பட எல்லாவற்றையும் திறனாய்வுக்கு உட்படுத்துவதை என் கடமையாகக் கொண்டிருக்கிறேன். நான் தனியனாக இல்லை; எத்தனையோ அறிஞர்களோடும், சான்றோர்களோடும், கலைஞர்களோடும் தான் நான் இருக்கிறேன். இவர்களிடமிருந்து நான் கற்றுக் கொள்கிறேன். எனக்குள்ளும் இவர்கள் தங்கி இருக்கிறார்கள். இவர்களின் பட்டியலை என்னால் தொகுக்க முடியாது. புத்தர், இயேசு என்று தொடங்கி எத்தனை பேரைச் சொல்லமுடியும். காந்தியும் மார்க்சும் என்னை எனக்குக் கற்றுத் தருகிறார்கள். ஜே.கே.யிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. இந்தக் கட்டுரைகளை எழுத எனக்குத் தூண்டுதலாக இருந்த பலரையும் நினைத்துக் கொள்கிறேன். என்னை உருவாக்கிய அனைவரையும் நினைத்துக் கொள்கிறேன்.

இக்கட்டுரைகளைத் தொகுப்பதிலும், ஒளி அச்சு செய்வதிலும், பிழை திருத்தம் பார்த்ததிலும் என்னோடு ஒத்துழைத்த நண்பர்களுக்கு நன்றி. இந்தக் கட்டுரைத் தொகுப்பைப் பற்றிக் கூறிய உடன் எந்தவகையிலும் தயக்கம் இல்லாமல் இதை வெளியிடுவதற்குப் பேரன்போடு ஒப்புக்கொண்ட மரியாதைக்குரிய காவ்யா திரு. சண்முக சுந்தரம் அவர்களுக்கு என் மனம் நிறைந்த நன்றிகள். தமிழின் ஆக்கத்திற்கு இன்று தேடித் தேடி தரமான நூல்களை வெளியிடுகின்ற அவரது பேரார்வமும் முயற்சிகளும் நம் வணக்கங்களுக்குரியவை.

15.8.2002 – ஞானி

## உள்ளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

பகுதி 1 : தத்துவம்

1. காந்தியமும் மார்க்சியமும் 1
2. இருத்தலியல் 27
3. இருத்தலியல் வழியே தமிழ் இலக்கியம் 42
4. ஞானவெளியில் ஜே. கிருஷ்ணமூர்த்தி 53
5. பெர்னார்டு ஷா என்னும் விஞ்ஞானி 69

பகுதி 2 : மதம், மதவாதம், மத நல்லிணக்கம்

6. மதங்களும் மனிதமும் 85
7. மதமா? மனிதமா? 90
8. வகுப்புவாதத்தின் வேர்கள் 95
9. வேண்டாம் மதவாதம் 107
10. மதவாதம் தேவையில்லை 111
11. மத நல்லிணக்கம் : எப்போது எப்படி சாத்தியம்? 121
12. பார்ப்பனியத்தின் வெற்றி 125
13. பார்ப்பனியம் : எப்படி, எப்போது ஒழியும்? 134

பகுதி 3 : வரலாறு, பண்பாடு, மானுடம்

14. மனிதன் – வரலாறு 143
15. மாறிவரும் அரசியல், பண்பாடு 147
16. வளர்ச்சியும் மனித உரிமையும் 156
17. வரலாற்றில் காரியவாதம் 161
18. கோத்தா வேலைத்திட்டம் 167
19. பெண்ணியம் 170
20. பாலியலும் மனித விடுதலையும் 175


# காந்தியமும் மார்க்சியமும்

1

**எனது அணுகுமுறை - சில விளக்கங்கள் :**

1. காந்தியம் – என்று காந்தியின் சிந்தனை, நடைமுறைகளை ஒரு கட்டமைப்புக்குள் அடக்குவதை காந்தி விரும்பவில்லை. 'காந்தியச் சிந்தனை' என்று பெயரிடுவதையே அவர் ஏற்றார். அல்லது 'காந்திய நெறி' என்பதுவும் சரியான பெயராக அவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

'காந்தியம்' என்ற சொல்லை என் கட்டுரையில் காந்தியச் சிந்தனை – காந்திய நெறி எனற பொருளிலேயே கையாள்கிறேன். இப்படிக் கையாள்வதில் ஒரு வசதி – காந்தி என்ற ஒரு நபருடன் – ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துடன் மட்டும் இதனைச் சம்பந்தப்படுத்தாமல், விரிவான கால அளவுக்குள் – காந்தியின் காலத்துக்கு முன்னும் பின்னும் – வைத்து சிந்தனையில், செயல்முறையில் ஒரு நெறிமுறை என்ற வகையில் இதனைப் பொருள்படுத்திக் கொள்ளமுடியும். கூடவே ஓர் உண்மை : காந்தியிடம் காந்தியம் என்று சொல்லக்கூடிய ஒரு சிந்தனை முறை மெல்ல மெல்ல வடிவெடுத்தது . . . காந்திக்குப் பிறகும் தொடர்ந்தது . . . என்பதையும் ஏற்றுக் கொள்ளவே இந்த ஆய்வில் ஈடுபடுகிறோம்.

மார்க்சியம் என்ற சொல், வசதி கருதி ஒரு சொல்லமைப்பாகக் கையாளப்பட்டாலும், மார்க்ஸ் – எங்கெல்ஸ் – லெனின் – ஸ்டாலின் – மாவோ சிந்தனை மற்றும் நடைமுறை, இந்தியாவில் இதன் போக்குகள் முதலிய பலவற்றையும் உள்ளடக்கக்கூடிய ஒரு கருத்தாக்கமாக இக்கட்டுரையில் பயன்படுத்துகிறேன்.

2. கட்டுரையில் காந்தியம் – மார்க்சியம் பற்றிய விளக்கங்களை முதலில் தொகுத்துச் சொல்லிவிட முடியுமா என்றால், இட, கால வசதி கருதியும், விளக்கங்களில் உள்ள விரிவான கருத்து வேறுபாடுகள் கருதியும், இந்த விரிவுரைக்குள் நுழைந்தால் இதனை விட்டு வெளி வருதல் சாத்தியமில்லை என்பதாலும், இப்பகுதியை விட்டு விடுகிறேன். ஆயினும் இப்பிரச்சினையிலிருந்து நான் தப்ப முடியாது. இடையில் சில விளக்கங்கள் இடம்பெறும். அவையும் விவாதத்திற்கு உரியனவே.

3. அதுபோலவே காந்தியம் என்று சொல்லக்கூடிய சிந்தனை - நடைமுறைப் போக்கைப் பிரதிபலித்தவர்களுக்கும், மார்க்சியப் போக்கைப் பிரதிபலித்தவர்களுக்கும் இடையில் பல காலகட்டங்களில் கடுமையான விவாதங்கள் நடந்துள்ளன. குறிப்பாக 1930 களின் தொடக்கத்தில் 1942-43 ல் இக்கால கட்டங்களுக்கும் அப்பால் பார்த்தால் இவ்விவாதங்கள் நிரந்தரமாக 1920 முதற்கொண்டு இன்றுவரை நடைபெறுகின்றன. சர்வதேச அமைப்பிற்குள் - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் - அதுவும் பல்வேறு கட்டங்களிலும் கடுமையான விவாதங்கள் நடந்துள்ளன. காந்தி பற்றி - காங்கிரஸ் இயக்கம் பற்றி - ஒன்றுக்கு மற்றது வேறுபாடான, சில சமயங்களில் முரண்பாடான மதிப்பீடுகளுடன் ... கடைசியாக அருண் சௌரி, பசவ புன்னையா விவாதங்களும். இவ்வகை விவாதங்களும் இக்கட்டுரையின் மையப் பொருள் ஆவதில்லை. இவ்விவாதங்கள் முடிவற்றவை ; முடிவு பெறாதவை. எனினும் எனது கட்டுரைக்குள் ஆங்காங்கே என் பார்வைக்குள் இவை சிற்சில இடங்களில் வரக்கூடும்.

4. இனி என் கட்டுரையின் எல்லை பற்றியும் அதற்கான என் பார்வை பற்றியும் கூறிக் கொள்ள வேண்டும். என் பார்வையை மார்க்சியப் பார்வை என்று நான் நம்புகிறேன். எனது மார்க்சியப் பார்வை வழியே, முடியுமானால் காந்தியம் பற்றிய ஒரு மதிப்பீட்டை முன்வைப்பது என் நோக்கம். இதில் நான் வெற்றி பெறுவேன் என்பதற்கு உத்தரவாதம் தரமுடியாது. இப்பிரச்சினை பற்றிய விவாதத்திற்கு, சில புதிய வித்தியாசமான கருத்துக்களை முன்வைக்க முடியும் என்பது என் நம்பிக்கை. முடியுமானால் இன்றைய காலச் சூழலில் வைத்து காந்தியம் பற்றிய மதிப்பீட்டுக்கான சில குறிப்புகளையேனும் தரமுடியும்.

2

காந்தியம் பற்றிய ஒரு மறு மதிப்பீட்டுக்கான தேவை என்ன - அதுவும் குறிப்பாக இன்றைய நிலையில் என்ற கேள்வி நமக்கு முன் பெரிதாக எழுகிறது - அதுவும் மார்க்சியத்தை நம்பும் ஒருவருக்கு என்ன தேவை என்ற கேள்வி.

காந்தியம் பற்றிப் பாடப் புத்தகங்கள் நிறையவே பேசுகின்றன. இந்திய விடுதலையில் காந்தியின் - காங்கிரஸின் முதன்மைப்பங்கு பற்றிப் பாடப்புத்தகங்கள் பேசுகின்றன. இன்று உருவாகும் இளைஞர் தலைமுறை பாடப்புத்தகங்களில் சித்திரிக்கப்படும் காந்தியின் முக்கியத்துவத்தை,



ஆசிரியர்கள் வழியே - சிலசமயம் அரசியல் தலைவர்கள் வழியே - பலசமயம் கட்சித் தலைவர்கள் வழியிலும் - சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ ஏற்றுக் கொள்ள நேரிடலாம். பாடப் புத்தகங்கள் அரசின் கல்வித்துறையால் நிர்ணயிக்கப்படுபவை. அரசுக்கு மக்களை ஆள்வதில் பல பிரச்சினைகள் - அரசோடு சம்பந்தம் உடைய காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும். காந்தி பற்றிய பிரச்சாரத்தில் சில குறிப்பிட்ட நோக்கங்கள் உள்ளன. இந்திய விடுதலைக்குப் போராடியது காங்கிரஸ் கட்சிதான் - காந்தி தான் என்ற கருத்தை இளைய தலைமுறையினருக்கு அழுத்தமாக ஏற்படுத்திவிடுவது காங்கிரஸ் கட்சியின் தலைமையை நிலைநிறுத்தப் பயன்படும். இந்தப் பிரச்சாரத்திற்கு மேலும் ஓர் உள்ளார்ந்த நோக்கமும் உண்டு. வன்முறை அறவே கூடாது; ஜனநாயகத்தில் வன்முறைக்கு இடமில்லை. இந்தியாவில் ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமானால் வன்முறைக்கு நாம் அறவே இடம் தரக்கூடாது. வன்முறையை முன்னிலைப்படுத்தும் எந்த இயக்கமும் செல்வாக்குப் பெறக்கூடாது என்பது இந்த நோக்கம். இப்படிப் பிரச்சாரம் செய்வதன் மூலம் இந்தியாவில் நடைபெறும் ஜனநாயகத்திற்கு இன்றைக்கும் காந்தியைக் காப்பாளர் ஆக்கிக் கொள்ள முடியும். இதை ஜனநாயகம் என்றும் நிரூபித்துக் கொள்ள முடியும். இந்தியாவில் இன்று முன்னிலைப்பட்டு வரும் புரட்சிகரப் போராட்டங்களை, அவை வன்முறை சார்ந்தவை என்று கூறி மக்கள் அவற்றைப் புறக்கணிக்கக் கோர முடியும். வன்முறை சார்ந்தவை, ஜனநாயக விரோதமானவை என்பதனால் இவற்றை எந்த முறையிலேனும் அடக்குவதை நியாயப்படுத்திக் கொள்ள முடியும். இத்தகைய அடக்குமுறை மூலம் அரசியலில் மட்டுமல்லாமல், அரசியலில் வெளியீடு பெறும் எத்தனையோ பொருளாதார ஆதிக்கச் சக்திகளைக் காத்துக் கொள்ள முடியும். காந்தியத்தை, ஆட்சியாளர்கள் இவ்வாறு தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும்போது மார்க்சியவாதிகள் இதன் உண்மை பற்றிய பிரச்சினையில் ஈடுபாடு காட்ட நேரிடுகிறது. புரட்சிகர இயக்கங்களும் காந்தியைத் தம் எதிர்நிலையிலேயே வைத்து நோக்குகின்றன. இதன் உண்மையும் நமக்குப் பிரச்சினையாகிறது. காந்திய சகாப்தம் முடிவடைந்து விட்டது - நேரு சகாப்தமும் முடிவடைந்து விட்டது என்பது உண்மைதான் என்றபோதிலும், காந்தியத்தின் சாரமான சில அம்சங்கள் இன்றைக்கும் மார்க்சியவாதிகள் - புரட்சிவாதிகளுக்கு எதிர்நிலையில் வைத்துப் பிரச்சாரம் செய்யப்படுகின்றன. ஆகவே காந்தியத்தை இனி எடுத்து நிலைநிறுத்தக் கூடிய எந்த இயக்கமும் இல்லை என்றாலும் காந்தியம் நம் பரிசீலனைக்கு உரியதாகிறது.

## 3

இந்தியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் காந்தி - காங்கிரஸின் பங்கு பற்றிய பாடப்புத்தக சித்திரிப்புகளின் மிகைப்படுத்தலை - பொய்களை நாம் அலட்சியப்படுத்திவிடக் கூடாது. புரட்சிகர இளைஞர் குழுக்கள் இந்தியாவில் பரவலாக பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பியபோது பிரிட்டிஷார் அவற்றை வன்முறை, வழக்கு என்ற முறையில் அடக்குவதில் வெற்றி கண்டனர். காங்கிரஸ் இயக்கத்திலும் திலகர் முதலியவர்களின் தீவிரப் போக்கு அடக்கப்பட்ட நிலையில் காந்தியின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது. மக்கள் மத்தியில் இருந்த சோர்வு, போராட்டத்தில் ஏற்பட்டிருந்த தொய்வு ஆகியவற்றை நீக்கும் முறையில் ஒரு தலைமை தேவைப்பட்டது. காந்தி இந்த இடத்தை நிரப்பினார். தென்னாப்பிரிக்காவில் அவர் நடத்திய போராட்டப் பின்னணியில், இந்திய மரபுகளிலிருந்து உயிர்த்தெழல் என்ற முறையில் அவர் முன்வைத்த சில கருத்துக்கள், அவர் மேற்கொண்ட எளிய வாழ்க்கை முறை, வலிமைமிக்க அந்நியர் ஆதிக்கத்தை மனவலிமை - உண்மை ஆகியவற்றின் வலிமை கொண்டு எதிர்க்க முடியும் என்று அவர் தந்த நம்பிக்கை ஆகியவை காந்திக்குப் பெருமை சேர்த்து அவரது இடத்தை உறுதிப்படுத்தின. அதுவரை காங்கிரஸ் இயக்கம் அணுகாத பல புதிய பிரதேசங்களில் தன் செயல்முறையை அவர் விரிவுபடுத்தினார். இந்தியாவில் பெரும்பான்மையாக உள்ள உழவர்கள், கிராம சமூகச் சீர்குலைவுகள், கிராமியத் தொழில்களைப் புதுப்பித்தல், ஏழை மக்களுக்குச் சுகாதாரம் முதலியவற்றைக் கற்றுத் தருதல், ஹரிஜனங்களிடம் அவர் பரிவு கொண்டு அவர்களை இந்து சமூகம் ஏற்கவேண்டுமென்று பரிந்துரைத்தது, புனர்நிர்மாணத்திட்டம் என்ற முறையில் வறுமையில் ஆழ்ந்து கிடக்கும் மக்களுக்கு அவர் காட்டிய வாழ்வு நெறி, எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது பற்றி அவர் முன்வைத்த கிராமராஜ்ஜிய சித்திரிப்புகள் ... முதலியன அவர் தலைமையை உறுதிப்படுத்தின. விடுதலைப் போராட்டத்திற்கு பலபகுதி - பலதுறை சார்ந்த மக்களையும் திரட்ட அவர் நடைமுறை உறுதுணையாக இருந்தது. இவற்றுடன் இந்தியாவின் ஏழை மக்கள் மனப்பான்மை, துறவிக்குத் தரும் மரியாதை, அவதாரங்களுக்கு மகிமை தரும் போக்கு முதலியனவும் இணைந்தன. தேசிய காங்கிரஸ் இயக்கத்திற்கு மாபெரும் சக்தி காந்தி வழியாகக் கிடைத்தது. இயக்கத்தில் ஒரு சர்வாதிகாரி என்ற அளவுக்கு அவர் தகுதி மதிக்கப்பட்டது. இந்து - முஸ்லீம் ஒற்றுமை பற்றி உண்மையாகவே அவர் பேசியதையும் சேர்த்துக் கொள்ளலாம். சத்திய சோதனை என்ற புத்தகத்தின்மூலம் அவரது வாழ்க்கை புனிதமானதாக மதிக்கப்பட்டது. இந்தியாவே அவர்மூலம்



புத்துயிர்ப்புப் பெற்றது போன்ற நிலை ... அவரும் மகாத்மாவானார். பெரிய படிப்பாளிகள், சமூகத்தில் உயர் பதவி வகித்தவர் எல்லோரும் அவரைச் சூழ்ந்திருந்து, அவரைப் பெருமைப்படுத்தினர்.

விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள் - 1919 ஜாலியன் வாலாபாக் - 1921 ரௌலட் சட்ட எதிர்ப்பு தோல்வி - 1933 ஒத்துழையாமை இயக்கம் - சௌரிசௌரா இயக்கம் பின்னடைவு - புனர்நிர்மாணத் திட்டங்கள் - சுபாஷ் சந்திரபோஸ் வெளியேற்றம் - 1942 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் - 42 ஆகஸ்ட் போராட்டம் - காங்கிரஸ் சோஷலிஸ்ட்டுகள் வன்முறை இயக்கம் - வட்ட மேஜை மாநாடுகள் - காந்தி - வைஸ்ராய் சமரசப் பேச்சுகள் - முறிவு - உண்ணாவிரதம் - பூரண சுயராஜ்யக் கோரிக்கை - இந்தியாவுக்கு அரசியல் சட்டம் தேவை என்ற பிரேரணை - 1946 கப்பல் படையினர் எழுச்சி - காந்தி முதலானவர்களின் வேண்டுகோள் பின்னடைவு - இடையில் முஸ்லீம் பாகிஸ்தான் கோரிக்கை - அம்பேத்கார் இயக்கம் - 1946 மௌண்ட்பேட்டன் திட்டம் - இந்துமுஸ்லீம் கலவரம் - 1947 ஆகஸ்டு சுதந்திரம் - நவகாளியில் காந்தி - காந்தியின் இறுதிக் காலச் சோர்வு - 48 படுகொலை - கம்யூனிஸ்டுகள் சேர்தல் - விலகுதல் - விமர்சனங்கள்.

காந்திய - காங்கிரஸ் இயக்கம் - தோற்றம் - வளர்ச்சி - போராட்டங்கள் - பின்னடைவு - முன்னேற்றம் முதலிய பல நிகழ்ச்சிப் போக்குகளை மேலும் விரிவானதொரு வரலாற்றுச் சூழலில் - சித்தாந்தப் பின்னணியில் வைத்துப் பார்ப்போமானால் மேலும் சில உண்மைகள் நமக்குப் புலப்படும்.

இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தைத் தோற்றுவித்ததில் பிரிட்டிஷார் பங்கை நாம் மறந்துவிட முடியாது. இதற்கு முன்பே தொடக்கத்தில் கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனி இந்தியாவைப் பிடிக்கக் கையாண்ட முறைகள், முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் - அதன் விளைவாக சுதேச மன்னர்களுடன் இந்திய அரசு - பிரிட்டிஷ் அரசு செய்து கொண்ட உடன்பாடு முதலியவற்றையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்தியா ஒரு காலனி நாடு. இந்தியாவில் தொழில்கள் வளரக் கூடாது. பிரிட்டிஷாருக்குத் தேவையான மூலப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய இந்தியா சந்தை ஆக வேண்டும். இந்திய அரசை நடத்த இங்கொரு அதிகார - அலுவலர் வர்க்கம் தேவை. அதற்கான கல்வி முறை -

மொழிக்கொள்கை தேவை. மதப் பிரச்சினையில் தலையிட வேண்டாம். மத வேறுபாடுகள் பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சாதகமானவை. ஜமீன்தாரி முறை, ரயத்வாரி முறையும் இப்படியே. புரட்சிகர இளைஞர் குழுக்களை அடக்கக் கடுமையான அடக்கு முறைகள் ... சட்டங்கள். இடையிடையே சில சீர்திருத்தங்கள். இந்தியர்களைத் தயார் செய்தே இந்தியாவை ஆளவேண்டும். இதற்காகவே நிறைய ஆட்கள் காத்திருக்கிறார்கள். இந்திய மக்கள் சுதந்திரத்திற்குத் தகுதியற்றவர்கள். நிர்வாக முறையில் அவர்களுக்குப் பயிற்சி தேவை. இறுதியில் அவர்கள் சுதந்திரம் பெறுவார்கள். சுதந்திரத்திற்கான கோரிக்கைகள் 'நியாயமாக' இருக்கவேண்டும். போராட்டங்களும் அவ்வாறே. இதற்கு இந்திய தேசிய காங்கிரஸ் ஒத்துழைக்க வேண்டும். விடுதலை கோரும் இந்திய மக்களை, வன்முறையை மறுக்கும் ஒரு நிறுவனம் வழிநடத்த வேண்டும். அந்த நிறுவனத்தின் நடைமுறையை மீறி வன்முறை வெடிக்கும்போது அரசு அதிகாரம் கடுமையாக அடக்கும். அப்போதும் விடுதலை கோரும் இயக்கம் இந்த அடக்குமுறையை நியாயப்படுத்த வேண்டும் அல்லது கண்டும் காணாது இருந்துவிட வேண்டும். பிரச்சினைகள் மீண்டும் முற்றும்போது எதிரெதிரான கோரிக்கைகள் உடையவர்கள் கூடிப் பேசி விவாதித்து உடன்பாடான ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதுதான் அரசியல், ஜனநாயக நடைமுறை. இந்தச் சூழலில் காந்தி முற்றாகப் பொருந்தினார். இதன் பொருள் என்ன? பிரிட்டிஷ் அரசின் தேவைகளோடு காந்தியின் இயக்கம் ஒத்துச் சென்றது.

காந்தியச் சித்தாந்தம் இங்கு முக்கியப் பங்கு வகித்தது. எல்லோரும் மனிதர்கள் – பிரிட்டிஷ்காரர்களும், இந்திய சுதேச மன்னர்களும், ஜமீன்தார்களும், நிலக்கிழார்களும், எல்லோரும் தான். எல்லோருக்கும் ஆன்மா என்ற ஒன்றிருக்கிறது. பரப்பிரம்மம் அங்கு ஆன்மாவாகத் தங்கியிருக்கிறது. ஆன்மாவின் இயல்பான குணம் அன்பு. அன்பு சில சூழலில் மறைந்திருக்கலாம். அதைக் கிளர்ந்தெழ வைக்க முடியும். வன்முறையில் ஒருவரை எதிர்கொள்ளும்போது ஆன்மாவிலுள்ள அன்பு திரிந்து வன்முறையே மேலோங்கும். ஆகவே, அன்பு நெறியே – அஹிம்சை முறையே சிறந்தது, சரியானது. அநீதிகளை அஹிம்சை முறையிலேயே எதிர்க்க வேண்டும். வன்முறை, வன்முறையையே வளர்க்கும். ஆகவே அதை முற்றாகக் கைவிட வேண்டும். நிலக்கிழார்கள், முதலாளிகள் ஆகியவர்களையும் எதிர்கொள்ளும் முறை இதுதான். எனவே தான் தர்மகர்த்தா கொள்கை தேவையாகிறது. உடைமை இறைவனுக்கே சொந்தம், உடைமையின் பங்குதாரர்கள் தான் முதலாளிகளும், தொழிலாளர்களும்,



நிலக்கிழார்களும், உழவர்களும். வன்முறை விடுதலைக்கு வழிவகுக்காது. திரும்பவும் ஒரு சர்வாதிகாரத்திற்கே வழிவகுக்கும். வன்முறையால் வரும் சுதந்திரம் வேண்டாம். வன்முறையை உற்பத்தி செய்யாதது கிராமியச் சமுதாய முறை. அது இன்னும் அழிந்துவிடவில்லை. அதை நாம் காப்பாற்ற வேண்டும். இயந்திரங்கள் நகர நாகரிகத்திற்கு இடம் தரும். ஆகவே இயந்திரங்கள் தேவையில்லை. அன்புதான் உண்மையானது. உண்மையே அன்பு, கடவுள் எல்லாம். உண்மைதான் அஹிம்சையும். இந்து மதத்தின் உள்ளார்ந்த பகுதியல்ல தீண்டாமை – சாதி ஏற்றத்தாழ்வுகள். இதனால் மனிதனை மனிதன் அடிமைப்படுத்துதல் இந்து மதத்திற்கு உடன்பாடல்ல. இடையில் புகுந்துவிட்ட தீண்டாமையை மாற்றியாக வேண்டும். இதற்காக சாதிகளை ஒழிக்க வேண்டியதில்லை. தொழில் வேற்றுமைகள் – குணவேற்றுமைகளுக்கு ஏற்றவகையில் ஏற்பட்டது வர்ண முறை. அதைப் புதுப்பித்தலே தேவை. இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டும் என்பதன் நோக்கம், நமக்கான வழிமுறையில் – அன்பு முறையில் வாழ்வதற்காகத்தான். மதங்கள் அன்பையே போதிக்கின்றன. வரலாற்றுக் காலம் முழுவதும் நிலைபெற்ற இந்திய கிராமிய முறையை திரும்பவும் உயிர்ப்பிக்க வேண்டும். அதுவே கிராம ராஜ்யம். இதற்கான வாய்ப்புத்தான் இந்திய சுதந்திரம். வன்முறையில் இதைப் பெற்றால் நாம் கிராமராஜ்யம் அமைக்க முடியாது. இறைவன்தான் உண்மை. உண்மைதான் இறைவன். உண்மையே அன்பு, அகிம்சை. இந்த அகிம்சை, தீமைகளை எதிர்க்கத் திராணியும். செயல்பாடற்றதல்ல இந்த அகிம்சை ; செயலூக்கம் மிக்கது. அன்பை நிலைநிறுத்துவதற்கு சோசலிசம் தேவை எனில் ஏற்கத்தான் வேண்டும். எனது சோசலிசத்தில் வன்முறைக்கு இடம் இல்லை – இப்படிச் சென்றது காந்தியச் சித்தாந்தம். இந்த வகை சித்தாந்தம் எல்லோரையும் ஏதோ ஒரு வடிவத்தில் கவரும். முதலாளிகள், நிலக்கிழார்கள், சமயவாதிகள், சோசலிசம் வேண்டுபவர், கிராம மக்கள் எல்லோரையும் கவரும். சாதியில் தாழ்ந்தவர், இந்து மதத்துக்குப் புறம்பானவர்களையும் கவரும். பிரிட்டிஷ்காரர்களையும் இது கவர முடியும்.

இத்தகைய காந்தியத்திற்கு இந்திய அளவில் மட்டும் அல்லாது உலக அளவிலும் வரவேற்பு கிடைத்தது. 1917–ல் நிகழ்ந்த ரஷ்யப்புரட்சி வன்முறைப் புரட்சி. தொடர்ந்து அங்கு வன்முறையே அரசு வடிவாகி இருக்கிறது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இத்தகைய வன்முறையின் சாதனம். உலக அளவில் இயந்திரங்கள், தொழில்வளர்ச்சி, பெருந்தொழில் நிறுவனங்கள், பிற நாடுகளைச் சந்தையாக்கும் வன்முறையையே ஊக்குவிக்கின்றன. முதலாளியம் – ஏகாதிபத்தியங்கள் வன்முறையையே

சார்ந்திருக்கின்றன. அதிகார வர்க்கத்தின் கையிலேயே ஆட்சி போய்ச் சேர்கிறது. பெருந்தொழில் முறையிலான உற்பத்தி முறையிலும், அதிகார வர்க்க ஆட்சி முறையிலும் மக்களுக்குப் பங்கு இல்லை. மக்கள் வெறும் கருவிகள். அத்தகைய போக்கே முதலாளிய நாஜி – கம்யூனிச நாடுகளில் பாவி வருகின்றன. இந்தியா இந்த வழியில் செல்லக்கூடாது. முடியுமானால் இந்தப் போக்கை இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும். இதற்குச் சுதந்திரம் தேவை. சுதந்திர இந்தியா உலகிற்குப் புதிய ஒளியைத் தரும். மேற்கத்திய நாகரிகம் வன்முறையை அடிப்படையாகக் கொண்டது. கிழக்கத்திய நாகரீகம் அன்பு வழியில் அமைவது. உலகப்போர், அணு ஆயுதப் போர் முதலியவற்றைத் தடுத்து நிறுத்தவல்லது அன்பு நெறிதான்.

காந்தி தலைமையில் காங்கிரஸ் இயக்கம், விடுதலைக்கான போராட்டங்களை தொடர்ச்சியாக – உறுதியாக நடத்தியதா என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டால் இல்லை என்றுதான் பதில் கூறவேண்டும். சௌரிசௌராவைத் தொடர்ந்து போராட்டத்தைப் பின்வாங்கியதைக்கூட நாம் நியாயப்படுத்திக் கொள்ளமுடியும். வன்முறைப் போராட்டம் தொடர்ந்திருந்தால் பிரிட்டிஷ் அரசு கடுமையாக ம்க்கள் போராட்டங்களை அடக்கியிருக்கும் என்று விவாதிக்கலாம். ஆனால் இதே நிலை எப்போதும் நீடிக்கவில்லை. ஹிரேன் முகர்ஜி விவாதிப்பதைப்போல, விடுதலைப் போராட்டங்கள் தீவிரப்பட்ட சமயங்களிலெல்லாம் இந்து – முஸ்லீம் ஒற்றுமை அற்புதமாக வெளிப்பட்டது. போராட்டங்கள் நிறுத்தப்பட்ட காலங்களில் வேற்றுமைகள் தோன்றின என்ற கூற்றிலுள்ள உண்மையைப் புறக்கணித்துவிட முடியாது. நெறியா? இலக்கா? என்ற கேள்வியை காந்தி எழுப்பி, எப்போதும் நெறியே முக்கியம், இலக்கு அல்ல என்ற முடிவில் உறுதியாக இருந்தார். காந்தியின் பார்வையில் பிரிட்டிஷ் அரசு இந்திய மக்களின் கொடிய எதிரியல்ல; அவர்களும் மூத்த சகோதரர்கள்தான். காங்கிரஸ் இயக்கத்திற்கு வெளியில் மக்கள் சார்பில் நடைபெற்ற தொழிலாளர், உழவர் போராட்டங்கள் பல. அவற்றுக்கு காந்தியின் ஆதரவு இல்லை. அவற்றை விடாமல் எதிர்த்து வந்தார். பகத்சிங் முதலியவர்களைக் காந்தி ஆதரிக்கவில்லை. அவர்களைக் கொலைத் தண்டனையிலிருந்து விடுவிப்பதில் காந்திக்கு உடன்பாடில்லை. சில அரசியல் சலுகைகள் பெறுவதே அவருக்கு முக்கியம். காங்கிரஸ் கட்சிக்குள்கூட அவர் ஜனநாயகம் பேணவில்லை. சுபாஸ் சந்திரபோஸ் வன்முறையாளர் என்பதற்காக நேர்மையற்ற வழியில் அவரை வெளியேற்றி வைத்தார். 'பிரிட்டிஷார் அந்நியர்கள். அவர்களை வெளியேற்ற வேண்டும். அதுவே முதன்மையான லட்சியம்' என்று பேசி, சுதேச மன்னர்கள்,



ஜமீன்தார்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை அவர் ஆதரிக்கவில்லை. அதாவது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அமைதிவழிப் போராட்டங்களையே அவ்வப்போது நடத்தினாரே ஒழிய, நிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மைக்கெதிரான போராட்டங்களை நடத்தவே இல்லை. இவர்களும் இந்தியர்கள் ; சுதந்திரம் கிடைத்தபிறகு பார்க்கலாம் என்ற முறையில் சுதந்திரம் என்ற பொருள் வரையறையைச் சீர்குலைத்தார். சத்தியாகிரகப் போராட்டங்களில் தொழிலாளர்கள் கலந்து கொள்வதைத் தடுத்தார். மக்கள் திரளாகப் போராடினால், வன்முறை தோன்ற வாய்ப்புகள் உண்டு என்பதால் தனிநபர் சத்தியாகிரகம் வரை சென்றார். காங்கிரஸ் கட்சியை நடத்த நிதியுதவியை எந்த முதலாளி தந்தாலும், சுதேச மன்னர்கள் தந்தாலும் விரும்பி ஏற்றார். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பதவிவெறி பிடித்தவர் போக்கை அவர் கண்டு கொள்ளவே இல்லை. காங்கிரஸ் கட்சிக்குள்ளிருந்த எல்லோரும் வன்முறையை உண்மையாக மறுத்துவிடவில்லை என்பதைக் காந்தி பார்க்கவில்லை. இத்தகைய காங்கிரஸ்காரர்கள் கையில் சுதந்திரம் கிடைத்தால் என்ன நேரும் என்பதை முன்கூட்டியே அவர் சிந்திக்கவில்லை. பிரிட்டிஷார் படையில் சேவகம் செய்யும் இந்தியர்கள் அரசு இட்ட ஆணையைத்தான் நிறைவேற்ற வேண்டும். சுதந்திரப் போராட்டத்தில் அவர்களுக்குப் பங்கில்லை. 1946–இல், நடந்த கப்பற் படையினர் கலகத்தை காந்தி ஏற்கவில்லை. சத்தியாகிரகம் என்ற அமைதிவழிப் போராட்டத்தை முற்றான ஆயுதமாக்க விரும்பி, அது தோற்ற சமயங்களிலெல்லாம், போராட்ட முறையின் தோல்வி என்று பார்க்காமல், மக்களுக்குப் பக்குவம் போதாது அல்லது தனக்கு இன்னும் போதிய தகுதி இல்லை என்று உண்ணாவிரதம் மேற்கொண்டார். காங்கிரஸ் கட்சியின் தலைமையிலுள்ளவர்களின் நோக்கம், ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவது தான் என்று அவர் பார்க்கவில்லை. இந்தியாவின் சாதிக் கொடுமைகள் பற்றிய முற்றான உணர்வில்லாமல், எல்லா விஷயங்களையும் அமைதி வழியிலேயே பிடுங்கி எறிய முடியும் என்று கருதிக் காத்துக் கொண்டிருந்தார்.

காந்தி தலைமையிலான இந்திய விடுதலைப் போராட்டங்களின் விளைவாகத்தான் சுதந்திரம் கிடைத்ததா என்ற கேள்விக்கு, அப்படித்தான் என்று யாரும் பதில் கூறிவிட முடியாது. காந்தி இல்லாவிட்டாலும் இந்தியாவுக்கு காங்கிரஸ் மட்டுமல்லாமல் பிற இயக்கங்களின் போராட்டங்களாலும் சுதந்திரம் கிடைத்திருக்கக் கூடும். காந்தியால் தான் சுதந்திரம் காலங்கடந்து கிடைத்தது. காந்தி இல்லை என்றால் மக்களின் தீவிரமான ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் மூலம்

இன்னும் சரியான உள்ளடக்கத்தோடு கூடிய சுதந்திரம் கிடைத்திருக்கும். இத்தகைய கேள்விகளை இன்று எழுப்பிக் கொள்வதால் பயன் உண்டா என்பது பற்றித் திட்டவட்டமாகக் கூறமுடியாது. மேலும் ஒன்றைக் கூறிக் கொள்ள முடியும். இரண்டாவது உலகப்போரில் பிரிட்டன் பலவீனப்பட்டது. இனிமேலும் காலனி நாடுகளைக் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டது. ஒருவேளை எத்தகைய இயக்கம் அல்லது இயக்கங்கள் தோன்றியிருந்தாலும் பிரிட்டன் இப்படி இராணுவ ரீதியில் பலவீனப்படும் வரை சுதந்திரம் கிடைத்திருக்காது என்பதைக் கூறிக்கொள்ள முடியும். இந்திய விடுதலை என்பதன் உள்ளடக்கத்தை காந்தியும், காங்கிரஸ் இயக்கமும் குறைத்து விட்டன ; பலவீனப்படுத்தின. காங்கிரஸ் இயக்கத்திற்கு வெளியிலும் தீவிரமான பல போராட்டங்கள் நடைபெற்றன. ஒரு பலவீனமான சுதந்திரம் கிடைக்கவே காங்கிரஸ் பயன்பட்டது.

இரண்டாவது உலகப் போரில் பிரிட்டன் பலவீனப்பட்டுப் போய் இனிமேலும் இராணுவ ரீதியாக இந்திய மக்களை அடக்கி ஆள முடியாது என்ற நிலை ஏற்பட்டதாலும், இந்திய ராணுவத்தை இனியும் நம்பியிருக்க முடியாது என்பதாலும், காங்கிரஸ் கட்சியின் தலைமையை மீறி மக்களின் புரட்சிப் போராட்டங்கள் தீவிரப்பட்ட நிலையிலும், அவசர அவசரமாக ஒரு அதிகாரப் பரிவர்த்தனை நடைபெற்றது. இந்து – முஸ்லீம் பிரிவினையைத் தனக்குச் சாதகமான சக்தியாகப் பயன்படுத்திய பிரிட்டிஷ் ஆட்சிக்கு நாட்டுப் பிரிவினை தேவையாக இருந்தது. அரசியல் ரீதியில் தம் இருப்பு இங்கு இல்லாவிட்டாலும், பொருளாதாரச் சுரண்டல் பாதிக்காது என்ற உத்திரவாதத்தோடும், பிரிட்டிஷார் இல்லாவிட்டாலும் பிரிட்டிஷார் வகுத்த சட்டங்களும், அதிகார வர்க்கமுமே இந்தியாவை ஆளும் என்ற நம்பிக்கையோடும் இந்திய சுதந்திரத்திற்கு உடன்பட்டனர். இந்தியச் சுதந்திரம் காந்திக்குச் சுதந்திரமாகப்படவில்லை. இந்தியா துண்டாடப்பட்டதில் காந்திக்கு அறவே விருப்பமில்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் பதவி ஆசை அருவருப்புத் தந்தது. அவர் தொடர்ந்து உயிர்வாழ விரும்பவில்லை. சாவு அவருக்கு விடுதலையாக வந்து சேர்ந்தது. காங்கிரஸ் கட்சி நல்ல காலம் கலைக்கப்படவில்லை. தலைவர்கள் இனி நிம்மதியாக, உயர்பீடங்களிலிருந்து கொண்டு சகல வசதிகளோடும் மக்களை ஆதிக்கம் செய்ய முடியும். 'காந்தி வாழ்க' என்று இனி உரக்கக் கத்தமுடியும். காந்தியின் பெயரால் தேர்தல்களில் வெற்றி பெற முடியும்.

இப்பொழுது கேட்டுக் கொள்வோம் : காந்தியம் வெற்றி பெற்றதா?



இல்லை ; காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது : எதில்? ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில். காந்தியத்தின் சமாதியின் மேல் காங்கிரஸ் கட்சி அதிகாரம். இந்த அதிகாரம் யார் நன்மைக்காக? கோடிக்கணக்கான ஏழைகளுக்காகவா? இல்லை – இந்தியாவின் முதலாளிகளுக்காக, நிலக்கிழார்களுக்காக, அரசு அதிகாரிகளுக்காக. இது சுதந்திரம் தானா? தொடர்ந்து உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் என்ன செய்தது? ஏற்கனவே இருந்த சமூக அமைப்புக்கு – சுரண்டல் முறைக்கு சட்ட அங்கீகாரம் தந்தது.

காந்தியவாதிகளாகத் தங்களை முன்பே பிரகடனம் செய்து கொண்டவர்கள் என்னவானார்கள்? காந்தியக் கைத்தொழில், கதர்த் தொழில்கள் அரசின் ஒரு துறையாகியது போதாதா? வினோபா, கூட்டுறவு முறையில் சில சோதனைகள், கல்வித் துறையில் சில சோதனைகள் நடத்தினார். காந்தியின் ஆன்மீகச் சீடர் இவர். தெலுங்கானாப் புரட்சிக்குப்பின் பூதான இயக்கத்தில் ஈடுபட்டார். அதன் வெற்றி தோல்விகள் பற்றி விரிவாகப் பேசுவதற்கில்லை. இறுதியில் ஆசிரமத்திற்குள் ஒரு தனி முனிவராக ஒதுங்கி பசுவதைத் தடைச் சட்டத்திற்காக உயிர்விடத் துணிந்தார். இந்திரா காந்தியின் நெருக்கடி நிலையை ஆசீர்வதித்தார். நேரு, காந்தியின் அரசியல் சீடர். காந்தியின் வாரிசு. உலக சமாதானம் பற்றிப் பேசினார். ஏழைகளின் நன்மைக்காக சோசலிசம் தேவை என்று பெருந்தொழில் முயற்சிகள் செய்தார். காந்தியின் கோட்பாடு – நமக்கு முதலாளியமும் வேண்டாம், கம்யூனிசமும் வேண்டாம் என்ற கோட்பாடு – நேருவிடம் சமாதான சகவாழ்வு, கூட்டு சேராக் கொள்கை ஆகியவற்றுக்கு இடம் தந்திருக்கக் கூடும். அதுபோலத்தான் பொருளாதாரத் துறையில் கலப்புப் பொருளாதாரமும். இறுதியில் பெருந்தொழில் முயற்சியின் விளைவாக, எல்லாப் பயன்களும் செல்வந்தர்களுக்கே போய்ச் சேருவதைக் கண்டார். காந்தியின் பெயரை மகிமைப்படுத்திக் கொண்டே, மக்களின் போராட்டங்களை அடக்க அரசின் வன்முறையைப் பயன்படுத்துவதில் அவர் தயக்கம் காட்டவில்லை. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அரசியல் துறவு பூண்டு, இறுதிக் காலத்தில் முற்றான புரட்சிக்கான ஒரு பெரு முயற்சியில் ஈடுபட்டபோது மரணம் அடைந்தார். லோகியாவின் சோசலிசப் பாதை முயற்சிகள் வெற்றி பெறவில்லை. காந்தி இன்று அருங்காட்சியகங்களின் நூலகங்களில் குடியேறியிருக்கிறார்.

– அவ்வளவு தானா? காந்தியிடமிருந்து நாம் மீட்க வேண்டிய அம்சங்கள் உண்டா, இல்லையா? எவை? என்பது பற்றிப் பிறகு பேசுவோம்.

4

இப்படியெல்லாம் நேர்ந்துவிடுமென்று முன்கூட்டியே காந்திக்கு தெரியாதா? காந்திக்குள்ளேயே இருந்த உள்முரண்களை காந்தி அறியவில்லையா? எப்படி அறியாமல் இருக்கமுடிந்தது?

இந்தக் கேள்விக்கு அறுதியான முடிவு கூறமுடியுமா என்று தெரியவில்லை. முழு முற்றான அஹிம்சையை வற்புறுத்திய அதேசமயத்தில், இது கோழைகளின் ஆயுதமல்ல; கோழைகள் அஹிம்சையைத் தேர்ந்தெடுப்பார்கள் என்றால் அதைவிட அவர்கள் ஆயுதம் தாங்குவதையே ஏற்பேன் என்றார் காந்தி. வன்முறை அறவே கூடாதென்றவர், தன் கருத்தை – தலைமையை மற்றவர் ஏற்க வேண்டும் என்பதற்காக கட்சியிலிருந்து விலகல், உண்ணாவிரதம் மேற்கொள்ளல் போன்ற முறைகளைக் கடைப்பிடித்தார். நேரு விமர்சனம் செய்தபடி, காந்தியின் இந்த நடைமுறை கொடிய வன்முறை அல்லவா! அரசு, வன்முறையைத்தான் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்பதை நன்கு அறிந்திருந்த காந்தி, மக்கள் பயன்படுத்தும் வன்முறையை ஏற்கமுடியாதது ஏன்? சக்ளத்வாலாவிடம் பேசியபோது, இந்த அஹிம்சை முறை என்பதுகூட தற்காலிகமானதுதான்; காரணம், பிரிட்டிஷ் அரசின் கொடிய அடக்குமுறையால் பாதிக்கப்பட்டு சோர்வடைந்த மக்களுக்கு அஹிம்சை முறைதான் ஏற்றது; மக்கள் தம் வலிமையை உணரும்போது இதைக் கைவிடுவேன் என்று கூறிய காந்தி, இறுதிவரை அஹிம்சையே எல்லா நோய்களுக்கும் சர்வரோக நிவாரணி என்ற முறையில் ஏன் பேசிக் கொண்டிருந்தார்? 1942 – வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது மக்கள் பயன்படுத்திய வன்முறை பற்றி வைஸ்ராய் குறை கூறிய நிலையில், அரசு வன்முறைக்கு எதிராக மக்கள் பயன்படுத்தும் வன்முறையை எப்படிக் குற்றம் சொல்லமுடியும் என்று கேட்டார். இந்த உண்மை ஏன் அவருக்கு முன்பே புலப்படவில்லை? கீதைகூட அஹிம்சையைத்தான் உபதேசிக்கிறது என்று காந்தியால் எப்படி விளக்கம் தர முடிந்தது? இந்திய மக்களை நாசப்படுத்தும் பிரிட்டிஷாரையும் நேசிக்கும் அவரது உண்மை பற்றிய விளக்கம் எந்த வகையில் சரியானது? உண்மையோடு அவர் நடத்திய பரிசோதனை எந்த வகையில் சரியான சோதனை? இந்தச் சோதனை எந்தச் சூழல் வரை செல்லுபடியாகும்? அஹிம்சை – உண்மை – கடவுள் இவையெல்லாம் எப்படி ஒரே படிமத்திற்குள் அடங்கும்? இந்தியாவின் ஏழை உழவர்களைப் போல வாழ உறுதி கொண்டார் காந்தி. எட்டு முழ ஆடை, ஆட்டுப்பால் முதலிய வசதிகள் எத்தனை ஏழை இந்தியர்களுக்குக்



கிடைத்தன? காந்தியை ஏழையாக வைத்திருக்கவே நிறைய செலவு செய்ய வேண்டியுள்ளது என்று வேடிக்கையாகக் கூறிய கவி சரோஜினியின் கூற்று எத்தனை உண்மையானது! மக்கள் தம் வாழ்வின் ஆதாரமாக ஏற்றுக் கொள்ள முடியாத அஹிம்சையை அவர்களின் வாழ்வுக்குள் எப்படித் திணிக்க முடியும்? ஏழைகளுடன் தோழமை கொள்ள விரும்பிய காந்தி எப்படி முதலாளிகளின் நன்கொடை, ஆதரவு ஆகியவற்றை ஏற்க முடிந்தது? இயந்திரங்கள் வேண்டாம் என்று கூறிய காந்தி நாளடைவில் இயந்திரங்கள் சுரண்டலுக்கு உதவியாக இருக்கக் கூடாது. அரசே பெருந்தொழில்களை நடத்த முடியுமானால் இயந்திரங்களின் பயன்பாட்டை ஏற்கிறேன் என்று கூறினார். இந்த உண்மை அவருக்கு முன்பே ஏன் புலப்படவில்லை? சுதந்திரம் என்பதன் உள்ளடக்கம், அரசியல் ரீதியில் மட்டுமல்ல, பொருளியல் – சமூகவியல் முறையிலும் தான். அடிமைத்தனம் என்பது ஒன்றோடு ஒன்று கைகோர்த்தபடியே இயங்குகிறது. முதலில் அரசியல் விடுதலை, அப்புறம் பிற விடுதலை என்பது எப்படிச் சாத்தியமாகும்? இந்திய கிராமங்கள் மாறாத – அமைதி தவழும் – சமுதாயங்கள் அல்ல. பிரிட்டிஷாரின் கொடுமையான சுரண்டல் முறையின் விளைவாக மேலும் சிதைவடைந்து – இனிமேலும் முன்னைய நிலைக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் இருந்ததை ஏன் காந்தி புரிந்து கொள்ளவில்லை? அன்பு, நேர்மை முதலியவற்றைக் கடைப்பிடிக்க இயலாத வறிய நிலையில் சமூகச் சீரழிவில் மக்கள் இருந்ததை காந்தி ஏன் காணவில்லை? காந்தி கூறிய தர்மகர்த்தா கொள்கைக்கு காங்கிரஸ் இயக்கமும், காங்கிரஸ் சார்ந்த முதலாளிகளும் உடன்பாடு கொண்டவர்களாகவா இருந்தார்கள்? ஜமீன்தார்களுக்கு எதிராக நிலப்பறி இயக்கம் நடந்த '46–காலத்தில் ஹூமி பிஷரிடம் உழவர்களின் போராட்ட நியாயத்தை ஒப்புக் கொண்டு பேசினார். இது காந்திக்கு முன்பே புலப்பட்டிருக்கக்கூடாதா? 'இந்திய மனம்' பற்றி டி.டி. கோசாம்பியின் ஒரு கூற்று இங்கு நினைவுக்கு வருகிறது : ஒன்றுக்கு மற்றது முற்றிலும் முரணான பலவற்றை ஒன்றின் பல வெளிப்பாடுகளாகப் பார்க்கும் அத்வைதத் திறன் பற்றி கேலியாகக் குறிப்பிட்டார். இத்தகைய மனநிலை, எல்லாக் குழப்பங்களையும் தனக்குள் வைத்துக்கொண்டே தன்னை ஆரோக்கியமாக இருப்பதாகக் கருதிக் கொள்ளும் மனநிலை, 'வேற்றுமையில் ஒற்றுமை காணும்' விந்தை மனநிலை இது. காந்தியையும் இப்படி விமர்சனம் செய்யலாம். கூடவே இன்னொரு கேள்வியையும் கேட்டுக் கொள்ளலாம் : இத்தகைய மனநிலையிலிருந்து – மனக்குழப்பத்திலிருந்து அறவே தப்பியவர் தான் யார்? புறச் சூழலிலுள்ள முரண்பட்ட – குழப்பமான சக்திகளின் பாதிப்பிலிருந்து தன்னை முற்றாக யார் விலக்கி வைத்துக் கொள்ளமுடியும்? வேறு வழியில்லை. இது மனித

"விதி". இத்தகைய குழப்பங்கள் தனக்குள் – சூழலுக்குள் இருப்பதை, இயங்குவதை அறவே கண்டு கொள்ளாமல் அல்லது காண முடியாமல் அல்லது கண்ட பின்னரும் வெறும் அத்வைதமாகப் பேசிக்கொண்டிருப்பது எத்தகைய குற்றம்? சிந்தனைத் திறனும், செயல் திறனுமற்ற சாமியார்கள் தவிர வேறு யார் இப்படி சும்மா இருந்து சுகம் பெற முடியும்? காந்தி இப்படியொரு சாமியார் அல்லவே?

5

இந்த இடத்தில் மார்க்சியவாதிகள் பற்றி – கம்யூனிசம் பற்றி காந்தி கொண்டிருந்த கருத்துக்களை விவாதிக்க வேண்டி உள்ளது. மார்க்சியவாதிகள் அல்லது கம்யூனிஸ்டுகள் என்று கூறிக்கொண்டவர்களை அவர் எக்காலத்திலும் வெறுக்கவில்லை. அவர்களோடு விவாதித்தார். விவாதத்தின் இறுதிவரை சென்றார் என்றுகூற முடியாது. சிறையிலிருந்தபோது மார்க்சின் 'மூலதனத்தை' படித்தேன், தான் எழுதியிருந்தால் அதைவிடச் சிறந்ததாக எழுதியிருப்பேன் என்றார். மார்க்ஸ், லெனின் போன்றவர்களை அவர் மதித்தார். ரஷ்யாவில் ஏற்பட்டுவந்த சமூக மாற்றம் பற்றியும் பாராட்டினார். கூடவே ரஷ்யக் கம்யூனிஸ்டுகளின் வன்முறையை தாம் அறவே ஏற்கவில்லை என்றார். கம்யூனிசத்தையும் வன்முறையையும் சமப்படுத்தியே பேசினார். கம்யூனிசத்தோடு ஒப்பிடும்போது தனது அஹிம்சை முறையின் மேன்மைபற்றி அவர் எப்போதும் உயர்கருத்து கொண்டிருந்தார். மக்களை வர்க்கங்களாகப் பிரிப்பதை அவர் முற்றாக ஏற்கவில்லை. கம்யூனிசம் பற்றி தான் போதிய அளவு படிக்கவில்லை; நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டது தான், கம்யூனிசம் பற்றிய தன் கருத்துகளுக்கு ஆதாரம் என்றார். தான் உருவாக்க விரும்பும் சர்வோதயம் ராமராஜ்ஜியம், கம்யூனிஸ்டுகள் உருவாக்க விரும்பும் சமூகத்தைவிட உயர்வானதென்று உண்மையாகவே நம்பினார். தனது நெறி அஹிம்சை முறை; நெறியே முக்கியம். இலக்கு முக்கியமில்லை என்றார். கம்யூனிஸ்டுகளுக்கு இலக்கே முக்கியம்; நெறி, வன்முறை என்று கருதினார். ஜோஷிக்கு எழுதிய கடிதத்தில், கம்யூனிஸ்டுகள் பற்றி தான் ஏற்கனவே கொண்டிருக்கும் விருப்பு – வெறுப்புகளை தன்னால் கடக்க முடியவில்லை என்றார். மற்றவர்களைப் போல கம்யூனிஸ்டுகளை தேசத்துரோகிகள் என்று அவர் குற்றம்சாட்டவில்லை. அவர்களும் தேசபக்தர்கள் என்று ஏற்றார். கம்யூனிசத்தின் தொழில்மயமாக்கல் கோட்பாடு அவருக்கு உடன்பாடில்லை. அதிகார வர்க்கக் கொடுங்கோன்மையே இதன் இறுதி விளைவாக இருக்குமென்று நம்பினார்.



கம்யூனிஸ்டுகள் பற்றி காந்தியின் கருத்துகளை இங்கு சுருக்கமாக விமர்சனம் செய்து கொள்ளலாம். காந்தியே கருதியபடி கம்யூனிஸ்டுகள் பற்றிய அவரது விருப்பு வெறுப்புகளை கடந்து அவரால் சிந்திக்க முடியவில்லை. 'மூலதனத்தை' அவர் சரிவரப் படித்திருக்க முடியாது. மார்க்ஸ் அளவுக்கு அவர் அறிஞரல்ல. கம்யூனிசமும் வன்முறையும் ஒன்றல்ல. வன்முறை வழியில் அல்லாமல் ஏற்கனவே உள்ள அரசு இயந்திரத்தை நொறுக்க முடியாது; சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாதென கம்யூனிஸ்டுகள் கருதியதில் தவறில்லை. என்றைக்கும், எப்போதும், யாரிடத்தும் வன்முறையே தங்கள் நெறி என்று எந்தக் கம்யூனிஸ்டும் நம்பியதில்லை. பிரச்சினையை இந்த அளவுக்கு சுருக்கி விடுவது விவாத முறையுமல்ல. பாட்டாளி வர்க்க எதிரிகளோடு தாங்கள் கொண்டுள்ள பகை முரண்பாட்டை வன்முறையில்தான் தீர்க்க முடியும் என்று நம்பிய கம்யூனிஸ்டுகள், மக்களுக்கிடையில், மக்களோடு தமக்குள்ள நட்பு முரண்பாட்டை அன்பு முறையில் தான் அணுக வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதைத்தான் ஏற்கிறார்கள். வன்முறை அறவே தவறானது என்ற கருத்தில், காலந்தோறும் அரசும், ஆளும் வர்க்கமும் நடத்தி வரும் கொடுமைகளின் விளைவாக மக்கள் அடையும் நாசத்தை அன்பு நெறி என்று அறிவுள்ள எவனும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இத்தகைய சூழல்களில் வன்முறை என்பது ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடே அன்றி வேறல்ல. ஸ்டாலின் காலத்தில், மக்களோடு கட்சி கொண்டிருந்த முரண்பாட்டை வன்முறை வழியில் தீர்க்க முயன்றார்கள் என்பதனால் வன்முறைதான் மார்க்சிய நெறி என்று யாரும் விவாதிக்க முடியாது. ஸ்டாலின் காலத்து வன்முறைப் போக்கினால் பாதிக்கப்பட்ட காந்தி இப்படியொரு முடிவுக்கு வந்திருக்க முடியும். மார்க்சியம் பற்றிய தீர்க்கமான ஆய்விலிருந்து வந்த முடிவல்ல இது என்பது தெளிவு. இலக்கா? நெறியா? என்ற விவாதத்திலிருந்தே எல்லாவற்றின் உண்மையையும் வகுத்துவிட முடியாது. மனிதர்களை வர்க்கமாகப் பிரித்துப் பார்ப்பதிலேயே கருத்துவேறுபாடு கொள்ளும் காந்திக்கு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்ற அரசியல் போக்கு புரியாது. தான் உருவாக்க விரும்பும் சோசலிசம், கம்யூனிஸ்டுகளின் சொர்க்கத்தைவிட சிறந்ததாக இருக்கும் என்று காந்தி நம்பியது தற்பெருமையோடு கூடிய பிரமை என்பதற்கு மேல் வேறுவிதமாகச் சொல்வதற்கில்லை. தீவிரமான விருப்பு வெறுப்புகளில் சிக்கியிருந்த காந்திக்கு, கம்யூனிஸ்டுகள் – கம்யூனிசம் பற்றிய உண்மைத் தேட்டம் போதிய அளவில் இருக்கவில்லை. உண்மை, கடவுள், அகிம்சை இவற்றைச் சமப்படுத்திய மனநிலை கொண்டவருக்கு, இந்த சமநிலைக்கு அப்பாற்பட்ட உண்மைத் தேட்டம் சாத்தியமில்லை. கம்யூனிஸம் பற்றி உண்மையோடு காந்தி 'பரிசோதனை' செய்து கொள்ளவில்லை.

## 6

இனி காந்தி பற்றி கம்யூனிஸ்டுகள் கொண்டிருந்த - கொண்டுள்ள கருத்துக்களை தொகுத்து பரிசீலனை செய்வோம்.

1. காந்தி ஒரு பனியா - வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். காந்தியின் தந்தையார் போர்பந்தரில் அரசரைச் சார்ந்த திவான். ஆகவே அவரால் தன் வர்க்க வரையறையைக் கடந்து சிந்திக்க முடியாது.

2. இளமை முதற்கொண்டே மத சம்பந்தமான நம்பிக்கைகளில் ஊறிப் போனவர் காந்தி. இந்துமத நம்பிக்கைகள் அவரிடம் இறுதிவரை அழுத்தமாகப் பதிந்திருந்தன. அவரது கிராமராஜ்யக் கற்பனைகள், வர்ணமுறைச் சமூக அமைப்பு, அகிம்சைக் கோட்பாடு, தர்மகர்த்தாக் கொள்கை, சர்வோதயம் முதலியவை மத சம்பந்தம் உடையவை.

3. காந்தி இங்கிலாந்தில் படித்தபோதே, மார்க்சியம் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தும் வேறு தேடல்களிலேயே காந்தியின் ஆர்வங்கள் சென்றன. காந்தி படித்தது பிரிட்டிஷ் சட்டம். பூர்சுவா ஜனநாயகம் என்ற கட்டமைப்புத்தான் அவர் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது. அவரது வர்க்கச் சார்பும் இத்தகைய கட்டமைப்பைத் தான் ஏற்கும். அவற்றை அவரால் மீற முடியாது. முரண்பாடுகள் ஏற்படும்போது வர்க்க சமரசம் என்ற அளவுக்கு மேல் அவரால் இயங்க முடியாது.

4. தென்னாப்பிரிக்காவில் போயர் போரில் வெள்ளையர்களுக்குச் சார்பாக சாரணர் இயக்கத்தில் பணிபுரிந்தார் காந்தி. அங்கு குடியேறிய இந்தியர்களின் சில குடியுரிமைகளுக்காக அவர் போராடினாரே ஒழிய அவர்களுடைய விடுதலைக்காக போராட முடியாது. இந்தியாவில் நிலைமை வேறு. ஆகவே தென்னாப்பிரிக்கச் சூழலில் அவர் வகுத்த போராட்ட முறையை இந்தியச் சூழலில் பொருத்தியிருக்க வேண்டாம்.

5. காங்கிரஸ் இயக்கமே பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தைக் காப்பதற்காக அவர்களால் திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம்தான். தீவிரவாத தலைவர்களை ஒழித்துக்கட்டிய பிறகு, காந்தி மாதிரி ஒரு அஹிம்சாவாதி மூலம் தங்கள் ஆட்சிக்கு பாதகம் ஏற்படாது என்று அவர்கள் நம்பியது உண்மை. பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியக்



கொள்கைக்கு கூடியவரை சாதகமாகவே காந்தி இயங்கினார். ஏகாதிபத்தியத்தின் ஏஜண்ட் என்று காந்தியை வர்ணிக்க முடியும்.

6. ரஷ்யா, கம்யூனிஸம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றி ஏகாதிபத்தியவாதிகள் பரப்பிய பொய்களையே காந்தி உண்மை என நம்பினார்.

7. காந்தி வகுத்த நிர்மாணத் திட்டங்கள் என்பவை ஏகாதிபத்தியத்திற் கெதிரான போராட்டத்தை மழுங்கடிக்க அல்லது திசைதிருப்பவே பயன்படும். இதன்மூலம் காந்தியின் கொள்கை ஏகாதிபத்திய சேவைதான்.

8. இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஒத்துழைப்போடு அல்லது பிரிட்டிஷாரின் அடக்குமுறையையும் மீறி வளர்ந்துவரும் முதலாளியத்தின் (இது தரகு முதலாளியம் இல்லை, தேசிய முதலாளியம்) நலன்களைச் சார்ந்து காந்தி இயங்கினார். இந்திய முதலாளிகளின் நாகன் காந்தி. அவர்களின் நலன்களை மனத்தில் கொண்டே விடுதலைப் போராட்டங்களை காந்தி தீவிரமாக நடத்தவில்லை. முதலாளி - தொழிலாளி உறவுகள், தர்மகர்த்தா கொள்கை முதலியவை, உடைமை வர்க்கத்திற்கு சேவை செய்யக் கூடியவை. நிலப்பிரபுத்துவத்தோடும் ஏகாதிபத்தியத்தோடும் சமரசம் செய்து கொண்ட பூர்சுவாக்களின் ராஜ்யமே காந்தியின் ராமராஜ்யம்.

9. தேசிய விடுதலைப் போராட்டங்கள் பூர்சுவாக்களின் தலைமையில் தான் நடைபெறும். அக்கால கட்டங்களில் பிரதிபலிப்பவை தேசிய விடுதலைப் போராட்டங்கள். ஆகவே இத்தகைய போராட்டங்களில் மக்களோடு கம்யூனிஸ்டுகள் கலந்து கொள்ள வேண்டும். உள்ளிருந்தே போராடித்தான் தலைமையின் போக்கை மாற்ற வேண்டும் இல்லையெனில் தேசிய முதலாளிகள், ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு பாட்டாளிவர்க்கப் புரட்சி இறுதியில் தங்களையும் கடந்து சென்று விடும் என்பதால் ஏகாதிபத்தியத்தோடும், நிலப்பிரபுத்துவத்தோடும் கூட்டுச் சேரத் தயாராகிவிடுவார்கள். இனி தேசிய விடுதலைப் போராட்டங்களை பூர்சுவாக்கள் நடத்த முடியாது. பாட்டாளி வர்க்கம் தான் தலைமை தாங்கி நடத்த வேண்டும். ஆகவே காங்கிரஸ் கட்சியின் தலைமையைத் தகர்த்து, கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத் தலைமையில் கட்சி கட்டி மக்களைத் திரட்டிப் போராட வேண்டும்.

இப்படி காந்தியின்மீதும், காந்தியக் கோட்பாடுகளின் - நடைமுறையின் மீதும் மார்க்சியவாதிகள் விமர்சனம் செய்தனர். மார்க்சியவாதிகளின் கருத்துக்கள் எப்போதும் உள்முரணற்றதாகவும் இல்லை. அடிக்கடி தங்கள் கருத்துக்கள் - மதிப்பீடுகளை மாற்றிக் கொண்டனர். காந்தியின் தலைமையில் கம்யூனிஸ்டுகளும் இணைந்து போராடுவதை லெனின் வரவேற்றார். எம்.என்.ராய் வேண்டாம் என்று கருத்துக் கொண்டார். சில காலம் கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து போராடினர். 1930களின் தொடக்கத்தில் சர்வதேச கம்யூனிஸ்டு அரங்கில் எடுத்த முடிவின்படி வெளியேறினர். சிறிது காலம் கழித்து உள்ளே இணைந்து போராடினர். இரண்டாவது உலகப் போரின் ஒரு கட்டத்தில் சோசலிச ரஷ்யாவைக் காப்பதே உலக மக்களின் கடமை என்று முடிவு செய்து பிரிட்டிஷ் அரசுக்கு ஆதரவாகவும், காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும் நிலைப்பாடு மேற்கொண்டனர். கம்யூனிஸ்டுகள் தேசத் துரோகிகள் என்ற குற்றச்சாட்டைப் பெற்றனர். '47-ல் இந்திய சுதந்திரத்தை, சுதந்திரம் என்றே அங்கீகரிக்காத நிலைப்பாடு மேற்கொண்டனர். தெலுங்கானா புரட்சி நடத்தினர். பின்னர் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு பாராளுமன்ற பாதையைத் தேர்ந்தெடுத்தனர். ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்குக்கு பல சமயங்களில் உட்பட்டனர். சிலசமயம் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உட்பட்டனர். எப்படிப் பார்த்தாலும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கு இன்றுவரை கேள்விக்குரியதாகவே இருக்கிறது. காந்தியைப் பற்றிய விமர்சனங்களை முன்வைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் டாங்கே, அதிகாரி, ஈ.எம்.எஸ், ஹிரேன் முகர்ஜி, கே. தாமோதரன், சர்தேசாய், ஆர்.பி. சராப், குல்தீப் ஜான்சி, இவர்களோடு ரஷ்ய அறிஞர் உல்லியனோவ்ஸ்கி.

முன்னரே கூறியபடி மார்க்சியவாதிகள் என்று கருதப்படுபவர்களின் காந்தி பற்றிய மதிப்பீடுகளில் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் உண்டு. சர் தேசாய் குறிப்பிட்டபடி, காந்தி என்றுமே கம்யூனிஸ்ட்களுக்கு ஒரு புதிராகவே இருந்திருக்கிறார். உல்லியனோவ்ஸ்கி ஒத்துக் கொள்கிறபடி ஸ்டாலின் காலத்து தீவிரவாதம் மேலோங்கிய நிலையில் காந்தி பற்றிச் செய்த முடிவுகள் இன்று விமர்சனத்திற்கு உரியவை. காந்தி உணர்வு பூர்வமாகவே ஏகாதிபத்தியத்தின் ஏஜண்ட் அல்லது தேசிய முதலாளிகளின் ஏஜண்ட்டாக செயல்பட்டாரா, அல்லது காந்தியின் செயல்பாடுகள் ஏகாதிபத்தியத்திற்கு அல்லது இந்திய முதலாளிகளுக்கு புற நிலையில் பயன்பட்டனவா, அல்லது இந்திய முதலாளிகள் காந்தியை பயன்படுத்திக் கொண்டனரா, காந்தியின் செயல்முறைகள்



முதலாளியத்திற்குச் சாதகமாக இருந்தனவா என்ற முறையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. டால்ஸ்டாயை லெனின், மதிப்பிட்டதுபோல காந்தியை மதிப்பீடு செய்ய வேண்டும் என்று விவாதிப்பவர்களும் இருக்கிறார்கள். இவ்விவாதங்கள் இனியும் நெடுங்காலத்துக்குத் தொடரும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் வரலாற்றில் முன்வந்து நிற்கும் பிரச்சினைகள், போராட்டங்கள் ஆகியவற்றை ஒட்டியும் இவற்றைச் செய்யும் கட்சிகளின் உள்ளடக்கத்தை ஒட்டியும் காந்தியைப் பற்றிய மதிப்பீடுகள் தொடர்ந்து செய்யப்படும்.

காந்தி, காந்தியம், காங்கிரஸ் இயக்கத்தில் காந்தியின் பங்கு முதலியவை பற்றி மார்க்சியவாதிகளுக்கிடையில் - தங்களை மார்க்சியவாதிகள் என்று நம்புபவர்களுக்கிடையிலும் - கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், இவர்களின் அணுகுமுறையும் ஆய்வும் புறக்கணிக்கத்தக்கவை அல்ல. இத்தகையவர்களின் முயற்சியேகூட இவர்களைப்பற்றிய விமர்சனமாகவும் அமைவதோடு, இந்தியச் சூழலிலுள்ள சிக்கலான நிலைமைகளில், காந்தி மட்டுமல்லாமல் இவர்களும் இயங்க வேண்டியிருந்தது பற்றியும் சில உண்மைகளை வெளிப்படுத்தும். காந்தி ஒரு தனிநபர் மட்டுமல்ல, வரலாற்று இயக்கச் சக்திகளின் போக்கில், தனிநபர்கள் என்பவர்கள் வரலாற்றுச் சக்திகளின் குறிப்பிட்ட திரட்சி காரணமாக குறிப்பிட்ட வகையில் ஆளுமையும், ஆற்றலும் பெறுகிறார்கள். வரலாறு ஒரு குறிப்பிட்ட காலத்தில் முன்வைத்த பிரச்சினைகள் எவையோ, அவற்றோடுதான் தனிநபர்களும் இயக்கங்களும், வரலாற்றுப் போக்கோடு உடன்பட்டோ எதிர்த்தோ இயங்க முடியும். காந்தியின் குறையும் நிறையும் வரலாற்றோடு தொடர்புடையவை. அத்துடன் தனிநபர் சார்ந்தவையும். தவிர ஒரேகாலகட்டத்தில் இரு எதிர்நிலைச் சக்திகள் மட்டுந்தான் வரலாற்றில் இயங்குகின்றன என்பதில்லை; பற்பல சக்திகள் இயங்குகின்றன. இவை இறுதிவரை இரண்டு எதிர்நிலைச் சக்திகளாகத் திரளாமல் இருந்து விடவும் கூடும். வரலாற்றில் இயக்கவேகம் கூடாமலிருப்பதற்கு இதுவும் காரணமாகிவிடும். இந்திய வரலாற்றில் - காந்திய வரலாற்றிலும் - இத்தகைய போக்கு காணத்தக்கதாக இருக்கிறது.

## 7

காந்தி பற்றிய அறுதியான தீர்ப்பு வழங்குவதை எதிர்காலத்துக்கு விட்டுவிட்டு அத்தகைய தீர்ப்பு ஒன்றை நோக்கிய முன்முயற்சியாக சிலவற்றை இங்கு முன்வைக்கலாம். காந்தி பற்றி தீர்மானம் செய்வதிலுள்ள

சிரமங்கள் - கருத்து வேறுபாடுகள் முதலியவற்றை முன்நிறுத்திப் பார்க்கும்போது, காந்தியத்தை அளப்பதற்கான அளவுகோல்களிலுள்ள திரிபுகள் பற்றியும் நாம் கவனம் கொள்ள வேண்டும். தப்பான அளவுகோல்களை வைத்துக் கொண்டு சரியான மதிப்பீட்டைச் செய்யமுடியாது. உலக அளவிலும் இந்தியாவிலும் உள்ள மார்க்சியவாதிகள் எல்லாக் காலகட்டங்களிலும் எல்லாப் பிரச்சினைகளிலும் சரியா மதிப்பிட்டு நடைமுறையையும் தீர்மானித்து, பிரச்சினைகளை சரிவரத் தீர்த்துவிட்டதாக உரிமை கொண்டாட முடியாது. குறிப்பாக இந்திய வரலாறு, இந்தியா பற்றிய வர்க்க வரையறை முதலிய எல்லாப் பிரச்சினைகளிலும், மார்க்சியவாதிகள் என்று தம்மை கூறிக் கொள்பவர்களுக்கிடையிலுள்ள தடுமாற்றங்கள் பல சமயங்களில் வெளிப்படையாகவே தெரியவந்துள்ளன. தம் கையிலுள்ள அளவுகோலைக் கொண்டு ஓங்கி அடிப்பதனாலேயே காந்தியத்தைச் சாகடித்து விடவும் முடியாது. காந்தியம் பற்றி உறுதியான தீர்ப்பை வழங்கிவிட்டதாக நம்பிக்கை தெரிவிப்பதன்மூலம் தம் குறைபாடுகளை மறைத்து விடவும் முடியாது. இந்த கவனத்தோடு சில குறிப்புகள் இங்கு முன் வைக்கப்படுகின்றன.

1. இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் கிளர்ந்தெழுந்த புரட்சிகர இயக்கங்கள், உழவர் போராட்டங்கள் முதலியவற்றை பிரிட்டிஷ் அரசு ஈவு இரக்கமற்ற முறையில் அடக்கியது. இந்தப் போராளிகளுக்கிடையில் உறவு இல்லை. இவர்கள் அனைவரையும் சார்ந்த இயக்கம் இல்லை. இயக்கத்தை வழிகாட்டக்கூடிய தகுதியான தத்துவம் உருவாகவில்லை. அதனால் இவற்றை அடக்குவது பிரிட்டிஷாருக்கு முடிந்தது. இதேபோல கம்யூனிஸ்டு இயக்கமும் மிகக் குரூரமான முறையில் அடக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியும், காந்தியும் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் முறையில் செயல்பட்டனர். கம்யூனிஸ்ட் இயக்கம் வளர்ச்சி பெறாததற்கு ஒருபுறம் பிரிட்டிஷ் அரசாங்கமும், மறுபுறம் காந்தி - காங்கிரசும் காரணம்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒன்றிணைந்து போராட வேண்டிய இந்தச் சக்திகளுக்குள்ளேயே மனக் கசப்பும், சிலசமயம் பகைமையும் ஏற்பட்ட நிலையில் கம்யூனிஸ்ட்கள் தம் நிலைப்பாட்டைக் காத்துக் கொள்ள முடியாது. வெள்ளம் போலப் பெருகிவரும் தேசிய உணர்வெழுச்சிக்கு கம்யூனிஸ்ட்டுகள் எதிரானவர்கள்; இவர்கள் தங்கள் கோட்பாட்டை இந்தியாவில் இருந்து கண்டு வருக்கவில்லை; மாஸ்கோவிலிருந்து இறக்குமதி செய்தார்கள்; இவர்களின் நடைமுறை இந்தியச் சார்பானதல்ல - இவ்வாறெல்லாம் பழிச் சொற்கள் வீசப்படும்போது மக்கள் மத்தியில்



கம்யூனிஸ்ட்கள் செல்வாக்குப் பெற முடியாது. தேசியம் மாபெரும் சக்தி. சர்வதேசியம் இதற்குமுன் நிற்கமுடியவில்லை. காங்கிரஸ் இயக்கம் தோன்றி சுமார் 30 ஆண்டுகள் கழிந்தே கம்யூனிஸ்ட் இயக்கம் தோன்றுகிறது. மக்கள் மத்தியில் ஏற்கனவே செல்வாக்குப் பெற்றிருந்த இயக்கத்திற்கு எதிராக, புதிய இயக்கம் வலிமை பெற ஆண்டுகள் பல செல்லும். இடையில் தடைகள் வாராதிருக்க வேண்டும். இந்தத் தடைகள் பிரிட்டிஷார் மூலமும், காந்தி - காங்கிரஸ் மூலமும் தொடர்ந்து இருந்தன. காந்தியின் சீடர்கள் பல அடி முன்னே பாய்ந்து சென்று இதைச் செய்தார்கள்.

2. இந்திய மக்கள் - முக்கியமாக கிராமப்புறத்து மக்கள், உழவர்கள், சமய நம்பிக்கை நிறைந்தவர்கள். கடவுள் நம்பிக்கை, அவதார நம்பிக்கை, துறவிகளிடம் அளவுகடந்த மரியாதை - இப்படிப் பழக்கப்பட்டவர்கள். காந்தி அவதார பெருமையோடு பிரச்சாரம் செய்யப்பட்டு மக்கள் மனத்தில் இடம் பெற்றார். காந்தி பின்பற்றிய எளிய வாழ்க்கை, காந்தி முதன்மைப்படுத்திய அறநெறி, மதம் முதலியவை காந்திக்கும், மக்களுக்கும் இடையில் விளக்க இயலாத இணைப்பை ஏற்படுத்தின. மதம் என்பதே அபின், மூடநம்பிக்கை; ஆளும் வர்க்கம் மக்களை அடக்கி வைக்க வகுத்த சித்தாந்தம்; அறநெறி முதலியவை மேற்கட்டு சார்ந்தவை. காந்தி கருத்து முதல்வாதி; சமயவாதி என்ற வகையான கருத்துக்களை முன்வைத்துப் பேசி, காந்தியின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை மார்க்சியவாதிகள் தகர்க்க முடியவில்லை. எளிய வாழ்க்கை முறையை மேற்கொண்ட ஹோசிமின், அறநெறிகளுக்கு முக்கியத்துவம் தந்த மாவோ போன்றவர்கள் இந்தியச் சூழலில் அதிகம் வெற்றி பெற்றிருக்கக் கூடும். மேனாட்டு வழியே வந்திறங்கிய மார்க்சியத்தை ஆங்கிலத்தில் படித்துவிட்டு, இந்தியச் சூழலில் வைத்துப் பார்க்காமல், அப்படியே ஆங்கிலத்திலும் அரைகுறையான இந்திய மொழியிலும் வாந்தி எடுத்த மார்க்சியம் இங்கு மக்களைக் கவராததில் வியப்பில்லை. வெறும் கருத்துமுதல்வாதம், பொருள் முதல்வாதம் பற்றிய அரிச்சுவடிப் பாடங்களில் இந்திய மக்கள் அக்கறை கொள்ளவில்லை. இந்தியாவோடு ஒட்டாதது மார்க்சியம் என்ற பிரச்சாரம் வெற்றி பெறுவதற்கு மார்க்சியவாதிகளும் காரணம். மதம், அறவியல் ஆகியவற்றை மேற்கட்டில் சேர்த்து வைத்து, இவை இந்தியர்களின் வாழ்வில் கொண்டிருந்த முக்கியத்துவம் பற்றி கவலைப்படாதவர்கள் பற்றி இந்திய மக்களும் கவலை கொள்ளவில்லை. காந்தி முன்வைத்த இந்துமதம் நிச்சயமாக சனாதனிகளின் இந்துமதம் இல்லை. சில அறநெறிகளின் தொகுப்புத்தான் காந்தியிடம் இந்துமதப் பெயரில் இருந்தது. மத

வடிவத்திற்குள்ளும் சமூக மாற்றத்திற்கான இயக்கச் சக்திகள் செயல்படும் என்பது மார்க்சியம் கற்றுத்தரும் பாடம்தான். மதம் என்றைக்குமே ஆளும் வர்க்கத்தின் கருவிதான். அறவியல் என்பது சமூகக் கட்டமைப்பின் மேல் கட்டைத்தான் சார்ந்தது. அடித்தளம் மாறும்போது அறவியல் அறவே மாறும். புரட்சிக்கு எது பயன்படுமோ அதுவே அறவியல். மனித நேர்மை முக்கியமில்லை. வரலாற்றுக்குத்தான் நேர்மையாக இருக்கவேண்டும் - இப்படிப் பேசுவதன்மூலம் மார்க்சியம் இங்கு கேவலப்படத்தான் செய்யும். இந்த மார்க்சியம் இந்தியச் சூழலில் இன்னும் தன் அடிப்படைகளை, ஆதாரங்களைத் தேடிக் கண்டடையாத மார்க்சியம். வெறும் அறநெறிகளில் மனிதர்கள் வாழ்ந்துவிட முடியாது. வாழ்வுக்கான அடித்தளம் சரியாக அமைய வேண்டும். அந்த சரியான அடித்தளத்தோடுதான் அறநெறிகள் நிலைத்து நிற்கும் என்ற முறையில் மார்க்சியவாதிகள் பேசியதில் தவறில்லை.

3. காந்தி முன்வைத்த நிர்மாணத்திட்டங்கள் பற்றி, கம்யூனிஸ்டுகள் (அன்றுபோலவே இன்றும்) கருத்துச் செலுத்தவில்லை. சோசலிச சொர்க்கம் வந்தால் எல்லாமே சரியாகிவிடும் என்ற நம்பிக்கையோடு இடைக்கால நிவாரணம் பற்றிய கவலையின்றி இருந்தனர். வறுமைத்தீயில் வெந்து கொண்டிருப்பவர்களுக்கு இடைக்காலத்தில் கஞ்சிக்காவது வழி காணவேண்டும் என்று இவர்கள் கவலை கொள்ளவில்லை. காந்தி கூறிய ராமராஜ்யம், சர்வோதயம், கிராமப் புனர் நிர்மாணம் முதலியவை வரலாற்றில் பின்னடைவுக்கு வழி செய்யும் என்று இவர்கள் நம்பினர். வரலாற்றுச் சக்கரத்தை காந்தி பின்னோக்கித்தான் தள்ளுகிறார் என்று கருதினர். விஞ்ஞானம் - தொழில்நுட்பம் முதலிய அற்புத சக்திகள் பற்றி காந்தி அக்கறை கொள்ளாததை குறை கூறினர். இன்று பார்க்கும்போது சில உண்மைகள் நமக்கு தெளிவுபடுகின்றன. வரலாற்றுச் சக்கரத்தை யாரும் நிரந்தரமாகப் பின்னகர்த்திவிட முடியாது. வரலாறு முன்னோக்கிச் செல்லும்போது, பழங்காலத்தியவை போல் தோற்றம் ஏற்பட்டாலும், தோற்றமே உண்மையாகி விடாது. பழையது போன்ற தோற்றத்திற்குள் புதிய உள்ளடக்கம் மறைந்திருக்கும் என்பது மார்க்சியத்தின் ஒரு விதி. காந்தி கூறிய சர்வோதயம், கிராம ராஜ்யம் ஆகியவை இந்தகைய பார்வையில் பார்க்கத் தக்கவை. சமயச்சாயலில் இவை தோன்றியது கொண்டே இவற்றை இவர்கள் மறுத்துவந்தனர். உற்பத்தி சக்திகளுக்கே முதன்மை கொடுத்து இதனாலேயே விஞ்ஞானம், தொழில்நுட்பம், இயந்திரப் பெருக்கம் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் தந்து பேசியபோது இயந்திர ஆதிக்கம் - நகர வளர்ச்சி - அதிகார வர்க்கப் பெருக்கம் பற்றிய காந்திய



விமர்சனங்கள் உண்மையாயின. எல்லாத் தொழில்களையும் அரசே எடுத்து நடத்த வேண்டும் என்ற கோரிக்கை நடைமுறைக்கு வரும்போது, அரசு - அதிகார வர்க்க முதலாளியம்தான் வளரும் என்ற உண்மை அந்நாளில் புரியவில்லை.

4. ரஷ்யாவுக்கு லெனின் செய்தது மாதிரி இந்தியப் பொருளாதாரம், இங்கு மேலோங்கிய வர்க்கம் முதலியவை பற்றிய மார்க்சிய ஆய்வு நெடுங்காலம் இங்கு நடைபெறவில்லை. இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்கு பிரிட்டிஷ் அரசு தடையாக இருந்தது. பாட்டாளி வர்க்க வளர்ச்சி பெருமளவில் ஏற்படவில்லை. படித்த மத்திய வர்க்கம், அரசின் சேவைக்கே தன்னை ஆட்படுத்திக் கொண்டது. இந்தியாவின் பெரும்பகுதி மக்கள் உழவர்கள். இவர்களைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரட்ட முயற்சி இல்லை. ரஷ்யப் புரட்சியே இந்தியாவுக்கு முன் மாதிரி என்ற நம்பிக்கையில், சுயமான படிப்பும் அனுபவமும் பற்றி இங்கு அக்கறையில்லை. இந்தியப் புரட்சிக்கு மையமாக இருப்பது உழவர் புரட்சி என்ற கோட்பாடே இல்லை, மார்க்சியப் படிப்பாளிகளுக்கு இந்திய வேர் இல்லை. சாதியம் வேர் கொண்டிருக்கும் நாட்டில், வர்க்கப்பிரிவினை ஆக்கம் நடைபெறவில்லை. தேசிய இனப்பிரச்சினை பற்றி அன்று தேவையான கவனம் ஏற்படவில்லை. இவற்றுடன் கம்யூனிஸ்டுகள் தனியான சக்தியாக என்றைக்கும் நிற்க இயலாத நிலைமை. இத்தனை பாதகமான நிலைமைகளில் மக்களைத் திரட்டுவது எவ்வாறு சாத்தியம்?

இக்குறிப்புகளிலிருந்து என்ன அறிகிறோம்? தன்னைச் சுயவிமர்சனம் செய்துகொண்டு, இந்தியச் சூழலுக்கு ஏற்பத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளாத மார்க்சியம், இந்தியாவுக்குத் தேவையான புரட்சிகரமான சமூக மாற்றத்தை செய்யமுடியாதது போலவே காந்தியம் பற்றியும் மதிப்பீடு செய்வதில் வெற்றி பெற முடியவில்லை. தன்னைப்பற்றிய சுயவிமர்சன அணுகல் முறையோடு இந்தியச் சூழலுக்கு ஏற்றதாகத் தன்னைத் திரட்டிக் கொள்ள விரும்பும் மார்க்சியம், காந்தியிடமிருந்து - காந்தியத்திலிருந்து மீட்டுக்கொள்ளக்கூடிய அம்சங்கள் உண்டா என்று கேட்டுக் கொண்டு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்திய விடுதலைப் போராட்ட அனுபவங்களிலிருந்து காங்கிரஸ் இயக்கத்திற்கு வெளியில் நடைபெற்ற மக்கள் இயக்கங்களிலிருந்து காந்தி தொடர்ச்சியாகச் சில படிப்பினைகளைக் கற்று வந்தார். தொடக்க கால காந்தியம், இறுதிக்கால காந்தியம் ஒரே நபரல்லர். இடைக்காலத்திலும்

கடுமையான உள் முரண்களோடுதான் காந்தி இருந்து வந்தார், இயங்கினார். பலமுறை அவரது உள்ளுணர்வு தனக்கு வழிகாட்டத் தவறியதை உணர்ந்தார். இறைவனே உண்மை என நம்பியவர், உண்மையே இறைவன், உண்மை உண்மைதான் என்ற கருத்திற்கு வந்தார். இறைவழிபாடு, தியானம் முதலியவற்றில் அவர் மனம் ஈடுபட்டிருந்தாலும் தன் அறிவும், அனுபவமும் கொண்டு நிரூபணம் செய்வதாக, இறைவன் இல்லை. மக்களின் வன்முறைக்கான நியாயத்தை அவர் காலந்தாழ்ந்தே ஏற்றுக் கொண்டார். நஷ்ட ஈடு இல்லாமல் ஏகாதிபத்திய உடமைகள், ஜமீன்தார் சொத்துக்கள் முதலியவற்றை மக்கள் பறிமுதல் செய்வதை காந்தி மறுக்கவில்லை. இயந்திரத் தொழில் முற்றாக அரசுடமை ஆவதை காந்தி ஏற்றுக் கொள்வதன் மூலம் தர்மகர்த்தாக் கொள்கையைக் கைவிட்டார். அரசியல்வாதிகள் சொத்துக்கள், சுகங்களில் புரள்வதை அவர் ஏற்கவில்லை. காந்தியின் சுதேசியம் என்ற கோட்பாடு, அந்நியத் தொழில் நிறுவனங்கள், பன்னாட்டு மூலதனங்களுக்கு எதிரானதுதான். உழவர்களை முதன்மைப்படுத்துவதை – அதுபோலவே மக்களுக்கு இறுதி அதிகாரங்கள் போய்ச் சேருவதை காந்தி மறுக்கவில்லை. ஒருவேளை காந்தி உயிரோடு இருந்திருந்தால், தீவிரமான உறுதியான சத்தியாக்கிரகம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி அதன்மூலம் சிறைவாழ்க்கையை மீண்டும் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும். அல்லது அரசின் வன்முறைக்குப் பலியாகியிருக்கக் கூடும். காந்தி போற்றிய அற உணர்வு நிலைப்பாடுகள், மார்க்சியவாதிகள் வெறுக்கத்தக்கதல்ல. ரஷ்யாவில் வலிமைபெற்ற ஸ்டாலினிசத்தை நாம் மார்க்சிய – லெனினியத்தின் மொத்த தூய வடிவமாக மதிப்பிட வேண்டியதில்லை. கம்யூனிஸ்டுகளின் வன்முறை பற்றிப் பேசியதில் உள்ள ஒரு பகுதி நியாயத்தை அங்கீகரிப்பதால் மார்க்சியவாதிகள் கேவலப்பட்டுவிட மாட்டார்கள். காந்திக்கு படிப்பறிவு, உலக வரலாற்றியக்கம் பற்றிய அறிவு போதாது என்பதில் ஐயமில்லை. அவர் சோதனை செய்து கண்டுபிடித்ததாகக் கூறும் பல உண்மைகள் வரலாற்றில் உண்மையில்லை. அதற்காக காந்தியின் இடைவிடாத பரிசோதனைகளை நாம் இகழ வேண்டியதில்லை. மார்க்சியமும் தன்னைத் திரும்பத் திரும்ப சோதனை செய்துதான் தனக்கான உண்மையைக் கண்டு கொள்ள வேண்டும். காந்திய நெறி என்றால் எப்பொழுதுமே அகிம்சைவழி என்பது பொய். எதிர்கால உலகம் மார்க்சியத்திற்குத்தான் என்பதை நாம் இன்னும் சரிவர நிரூபணம் செய்து கொள்ளவில்லை. சீனாவில் கலாச்சாரப் புரட்சி நிகழ்ந்த காலத்தில் சர்வோதயவாதிகள் அதனை வரவேற்று எழுதியதை நினைவில் கொண்டால், எதிர்கால இயக்கத்தில் மீண்டும் சிலமுறை நம் வழியில் காந்தியைப் புதிய உள்ளடக்கத்தோடு சந்திக்க நேரலாம். காந்தியம் வகுக்க விரும்பிய நெறி கம்யூனிஸத்திற்கும் முதலாளியத்திற்கும் அப்பாற்பட்டதல்ல. முதலாளிய முறைக்குள்ளேயே கலகம் செய்து அதை மாற்றும் முயற்சி. மார்க்சியம் இல்லாமல் காந்தியம் அதனைக் கடக்க முடியாது.



இயந்திரங்களை – பெருந்தொழில்களை அரசுடைமையாக்கும் கோட்பாடு சோசலிசமாகி இறுதியில் அதுவே கம்யூனிசமாகப் பரிணமித்து விட முடியாது என்பதை நாம் இப்பொழுது அறிய வருகிறோம். அரசுடைமை என்பது, அதிகார வர்க்க – அரசு உடமைக்குத்தான் வழிவகுக்குமே ஒழிய மக்களுடைமையாவதற்கு வழிவிடாது. அரசு முதலாளியம் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து தராது. இங்கு நடைபெறும் கட்சி சர்வாதிகாரம் என்பது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஆகாது. மார்க்சியம், சோசலிசம் என்ற வாய்பாடுகளை உச்சரித்துக்கொண்டே அரசு முதலாளியத்தில் வீழ்ந்து விடும் ஆபத்தை நாம் பார்த்து வருகிறோம். வர்க்கம், வர்க்கப் போராட்டம், வரலாற்றுப் பொருள் முதலியல் கண்ணோட்டம் முதலியவை பற்றி எல்லாம் தெரியும் என்று பேசிக் கொள்ளும் மார்க்சியவாதிகளுக்கே இப்படி ஒரு விபத்து ஏற்படும்போது, காந்தியை – காந்தியவாதிகளைக் குற்றப்படுத்துவது பரிதாபம்! மாவோ கூறிய ஓர் உண்மைதான் திரும்பத்திரும்ப நினைவில் எழுகிறது : வரலாற்றில் முதலாளியமா, சோசலிசமா எது இறுதி வெற்றியைப் பெறும் என்பது இன்னும் நிரூபணம் ஆகவில்லை என்பதை உண்மையான மார்க்சியவாதி என்றும் நினைவில் கொள்ள வேண்டும். கட்சிக்குள்ளும் இருவழிப்பாதை என்ற உண்மை, காந்தியத்திற்குள்ளும் செல்லுபடியாகும். காந்தியத்தின் தோற்றம் – வளர்ச்சி பற்றிய வரலாற்றை, இதன் பின்னணியிலிருந்தே வரலாற்றுச் சக்திகளை விளக்க முடியாத மார்க்சியம், இந்தியாவில் வெற்றி பெறுவதற்கான சாத்தியம் பற்றி நாம் கவலையோடு தான் சிந்திக்க வேண்டும். இதனால் காந்தியம் போலவே தான் மார்க்சியமும் காலங்கடந்த தத்துவம் – காலத்தில் வெற்றி பெறாத தத்துவம் என்று யாரும் கூறிவிட முடியாது. காந்தியத்தை இனி முற்றான நெறியாக யாரும் புதுப்பிக்க முடியாது. ஆனால் மார்க்சியம் நூறுமுறை தடுக்கி விழுந்தாலும் திரும்பத்திரும்ப புதிய பலத்தோடு எழும். திரும்பவும் சொல்கிறோம், மார்க்சியத்தின் துணையில்லாமல் காந்தியம் உடமை வர்க்க எல்லையைக் கடக்க முடியாது. அதுபோலவே இந்திய வரலாற்றில் காந்தியம் பெற்ற செல்வாக்குக்கான மூலங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்வதன்மூலம் மார்க்சியமும் சரியான அடிப்படைகளில் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முடியும். ●

<u>இக்கட்டுரைக்குப் பயன்பட்ட சில நூல்கள் :</u>

1. J.D. Sethi - 'Gandhi Today' - Vikas, 1978
2. KanwarLal - 'Good bye, Mr. Gandhi' - Arts & Letters, Publishing House, Delhi, 1967
3. R.P. Saraf - 'The Indian Society', 1970
4. மகாத்மா ஒரு மார்க்சிய மதிப்பீடு – NCBH, 1978.
5. K. Damodharan - 'Indian Thought' Asia Publishing House, 1967.
6. Ved Mehta - 'Gandhi and His Apostles' Penguin, 1976
7. Bastiaan Wielenga - 'Marxists Views on India', Christian Literature Society, 1976
8. புள்ளுவான – 'காந்தியும் மார்க்சும்' சர்வோதயப் பிரசுரம், 1964
9. Ulgasnovsky - The Present day Problems in Asia and Africa' - Progress Publishers, 1978
10. J.B. Kripalani - 'The Gandhian Thought' - 1961.
11. Lokia - Marx, Gandhi and Socialism', 1963


குறிப்பு : 1980 களின் தொடக்கத்தில் திருச்சி, தூய பவுல் இறையியல் கல்லூரியில், அருள்திரு. ச.தே. செல்வராக அவர்கள் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட கட்டுரை.



# இருத்தலியல்

எக்சிஸ்டென்சியலிசம் என்று இருபதாம் நூற்றாண்டில் கீர்கேகார்டின் மூலம் பெயர் தெரியவந்த மெய்யியல் அல்லது மெய்மியல் போக்கு. வரலாற்றில் எல்லாச் சமூகங்களிலும் நெடுங்காலமாக தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். மனிதன் தனக்கு வாழ்க்கை என்று கருதும் களத்திற்குள் அறிவும் உணர்வும் இன்னும் பல சக்திகளும் செயற்படுகின்றன. மனிதன் ஒரு சமூக / வரலாற்றுச் சூழலில் இருக்கிறான். இயற்கையிலிருந்து அவன் உணவு முதலியவற்றைப் பெற வேண்டும். வரலாற்றுக் காலம் முழுவதும், அரசு அமைப்பு உற்பத்தி முறை, உடைமை முறை, இராணுவம், தொழில்நுட்பங்கள் முதலியவை செயல்பட்டு வருகின்றன. இவற்றோடு மனிதன் ஏதாவது சில / பல வகைகளில் உறவு கொண்டாக வேண்டும். மனிதன் தான் வாழ்வதற்காக இவையனைத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளாமல் இவற்றின் மூலம் செயல்பட முடியாது. இவற்றை உருவாக்க முடியாது. மனிதன் வாழ்வதற்கான இயற்கைச் சூழலின் எல்லை என பேரண்டத்தைக் குறிப்பிடலாம். நெடுங்காலத்திற்கு முன்னரே கடவுள், மதம், சடங்குகள், சாதி முதலியனவும் தோன்றி மனித வாழ்வுக்குள் செயல்படுகின்றன. இந்தச் சூழல்தான் மனிதன் வாழ்வதற்கான சூழல். இவைதான் மனிதனை ஆக்குகின்றன, அழிக்கின்றன. இந்தச் சூழலில் மனிதனுக்குள் எழும் அல்லது மனிதன் எதிர்கொள்ள நேரும் கேள்விகள் பல.

வரலாற்றின் சிக்கலான காலகட்டங்களின்போது இக்கேள்விகள் உச்ச அளவில் எழுகின்றன. மனிதனுக்கு வரும் நோய்கள், முதுமை, மரணம், விபத்து, வறுமை, ஊனங்கள் ஆகியவை இத்தகைய சிக்கலான வரலாற்றுச் சூழல்களில் பேரளவில் அதிகரிக்கின்றன. இவற்றின் இருப்பு தவிர்க்க முடியாதது போலத் தோன்றவும் செய்கின்றன.

விலங்கையும் மனிதனையும் எந்த அம்சம் பிரிக்கிறது? இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு என்ன? பேரண்டத்திற்கும் மனிதனுக்கும் உறவு உண்டா? மனித வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்திகள் எவை? இந்தச் சக்திகளுக்குக் கட்டுப்பட்டது மனித வாழ்க்கையா? மனித வாழ்வுக்கு என்ன அர்த்தம்? பொருளோடு மனிதனுக்கு என்ன உறவு? வரலாற்றுக்குள் வந்துவிட்ட அரசு முதலிய நிறுவனங்களுக்கும் மனிதனுக்குமான உறவுகள் என்ன? பொருளுக்கும் அதிகாரத்திற்கும் மனித வாழ்க்கை உட்படுமானால் உண்மையில் வாழ்வது யார்? பொருளா? அதிகாரமா? மனிதனா?

இலட்சியங்கள் என்று மனிதன் காண்பதும் கடைப்பிடிப்பதும் உண்மையில் எவருடையவை அல்லது எவற்றினுடையவை? மனிதனுக்கு சுதந்திரம் உண்டா? அல்லது மனிதனை நிர்ணயிக்கும் சக்திகளின் கையில் மனிதன் ஒரு கருவியா? மனிதனுக்காக செயல்படுபவை என்று கூறிக்கொள்ளும் அந்த அமைப்பின் உற்பத்தி முறை, இராணுவம் முதலியவை மனித நலத்திற்கானவையா? மனிதனின் சுதந்திரத்தை வளர்க்கக் கூடியவையா? மனிதன் தன் அறிவு கொண்டு தன் வாழ்வைப் புரிந்துகொள்ள முடியுமா? அண்டத்தையும் இயற்கையையும் விலங்குகளையும் பறவைகளையும் புரிந்து கொள்ளமுடியுமா? இறுதியில் தன்னையே புரிந்து கொள்ள முடியுமா? தான் என்பது என்ன? கடவுளுக்கும் மனிதனுக்கும் என்ன உறவு? கடவுள் மனிதனைப் படைத்தானா? அல்லது மனிதன் கடவுளைப் படைத்தானா? இந்த விளையாட்டுக்கு என்ன அர்த்தம்? மதங்கள் மனிதனைப் படைக்கின்றனவா? அல்லது அழிக்கின்றனவா? சடங்குகளுக்கு என்ன தேவை? கலைகளுக்கு என்ன தேவை? சமூகச் சூழலில் மனிதனுக்கான உறவுகள் என்ன? அரசு முதலியவை மனிதனை அடிமைப்படுத்துகின்றன என்றால் இந்த அடிமைத்தனத்தின் வரலாற்றுத் தேவை என்ன? மனிதன் புலன்களுக்கு கட்டுப்பட்டவனா? தன் வேட்கைகளை மனிதன் வெல்லக் கூடியவனா? உடம்பை மனிதன் புறக்கணிக்க முடியுமா? உடம்போடு அவனுக்கு என்ன உறவு? புலன்களை மறுக்கும் துறவுக்குப் பொருள் உண்டா? ஆண், பெண் உறவுக்கு என்ன தேவை? மனிதன் அறிவுக்கும் விஞ்ஞானத்திற்கும் தொழில்நுட்பங்களுக்கும் இயந்திரங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தரும் முதன்மையின் மூலம் தன்னை ஆக்கிக் கொள்கிறானா? அல்லது அழித்துக் கொள்கிறானா? அன்பு, காதல், நேசம், தியாகம் ஆகியவற்றை, அறிவைக் கொண்டு விளக்கமுடியுமா? மனிதனுக்குள் செயல்படும் உள்ளுணர்வை அறிவு விளக்குமா? தீர்க்கதரிசிகளின் தரிசனங்களை அறிவு விளக்குகிறதா? விலங்குகளும், பறவைகளும் மனிதனுக்காக படைக்கப்பட்டனவா? இயற்கையை மனிதன் அழிப்பதற்கான நியாயம் என்ன? உயிர்களை மனிதன் வதைக்கலாமா? கொல்லலாமா? மனிதனை மனிதன் அடக்கி ஆள்வதும் சுரண்டுவதும் கொலை புரிவதும் தேவைதானா? இவற்றைச் செய்யாமல் மனிதன் வாழ முடியுமா? வாழ்க்கை என்றால் என்ன? நான், நீ என்று பேசும்பொழுது எதைக் குறித்து இவ்வாறு பேசுகிறோம்? புலன்கள், சூழல் முதலியவற்றை வைத்து மனிதனுக்குப் பொருள் சொல்லமுடியுமா?

இவ்வாறெல்லாம் நூற்றுக்கணக்கான கேள்விகள் மனிதன், வாழ்க்கை என்று சிந்திக்கும்போது எழுகின்றன. வரலாற்றுக்காலம் முழுவதும் இவை



எத்தனையோ வடிவங்களில் கேட்கப்பட்ட கேள்விகள் என்பது நமக்குத் தெரியும். இவையனைத்துமே மெய்யியல் வகைப்பட்ட கேள்விகள். மேற்கத்திய சமூகங்களுக்கு மட்டுமல்லாமல் உலகின் எல்லாச் சமூகங்களும் இத்தகைய கேள்விகள், இவற்றுக்கான பதில்கள் மூலந்தான் வாழ்ந்து வருகின்றன. கேள்விகளுக்கான சரியான பதில்கள் கிடைக்கின்றனவா? எப்பொழுதாவது கிடைக்குமா? கேட்கப்படும் கேள்விகள் சரியான கேள்விகள்தானா? பதில்களைத் தேடுவதற்கான கருவிகள் சரியானவைதானா? இவை போன்று மேலும் பல சிக்கல்கள் எழுகின்றன. சரியான பதில்கள் இல்லாமல் வாழ்க்கை இயங்கவில்லையா? வரலாறு இயங்கவில்லையா? என்ற கேள்வியை நாம் சேர்த்துக் கொள்ளலாம். இவையனைத்துமே இருத்தலியல் எழுப்பும் கேள்விகள். இத்தகைய கேள்விகள் எழும் வரலாற்று – சமூகச் சூழலை நினைவில் வைத்துக் கொண்டால் சிக்கலின் கடுமை நமக்குத் தெரியவரும். உற்பத்தி முறை இல்லாமல், உடைமை முறை இல்லாமல், அரசு அமைப்பு இல்லாமல், அறிவுத் தொகுப்பு இல்லாமல், கருவிகள் இல்லாமல், அரசர் இல்லாமல், படை இல்லாமல், மதம் இல்லாமல், அடக்குமுறை இல்லாமல், துறவு இல்லாமல் வரலாற்றில் மனித வாழ்க்கை இயங்கியதில்லை ; வளர்ச்சி பெறவுமில்லை. அடக்குமுறை செய்பவனும் மனிதன், அடக்குமுறைக்குள்ளாகுபவனும் மனிதன். இயற்கையை அழிக்காமல் மனிதனுக்கு வாழ்க்கை இல்லை. இயந்திரங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. இயந்திரங்களின் வழியே மனிதன் இயங்குவதன் மூலம் மனிதன் கருவியாகின்றான். உற்பத்தியைப் பெருக்கி மூலதனத்தைப் பெருக்குவதன் மூலம் பொருளுக்கு அடிமையாகிறான்.

இருத்தலியல், மனித அவலம் / மனிதத் துயரம் பற்றி முதன்மையாகப் பேசுகிறது. மனிதன் தன் துயரத்திலிருந்து, வேதனையிலிருந்து, வீழ்ச்சியிலிருந்து விடுபட வழி தெரியாதவனாக இருக்கிறான். மனிதன் தானே உருவாக்கிக் கொண்ட சூழலுக்குள் மாட்டிக் கொண்டான். தனக்குள் தானே உருவாக்கிக் கொண்ட சூழலுக்குள் மாட்டிக் கொண்டான். தனக்குள் தானே அன்னியமாகிப் போனான். தன்னை விடுவித்துக் கொள்ளும் ஒவ்வொரு முறையும் மேலும் அதிகமான வீழ்ச்சிக்கு உள்ளாகிறான். இவனுக்கு சுதந்திரம் இல்லை. இவன் அசலான மனிதன் அல்ல. பொருளும் அதிகாரமும் இவனுக்குள் இடம்பிடித்துக் கொண்டன. இயற்கையோடும் மனிதர்களோடும் இவனுக்கு இயல்பான உறவு இல்லை. தன் வாழ்வுக்கான நெறிகளை – வாய்ப்புகளை

தீர்மானித்துக் கொள்ளும் திறனற்றவனாக இருக்கிறான். இவன் தன் வேர்களை இழந்துவிட்டான். இவன் தனக்காக இல்லை. இவன் வாழ்க்கையை பிறர் அபகரித்துக் கொண்டனர். பிறர் இவனுக்குள் வாழ்கிறார்கள். இவ்வாறு இருத்தலியல், மனிதனின் இருத்தலியல் அவலத்தைச் சொல்லுகிறது. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டு உலகப்போர்கள் மனித வாழ்க்கையைக் கடுமையாக பாதித்துள்ளன. குறிப்பாக மேற்கத்திய மனிதனின் வாழ்க்கையை இவை மிகக் கடுமையாக பாதித்தன. ஜெர்மனியில் ஏற்பட்ட நாசிசமும், சோவியத் யூனியனில் ஏற்பட்ட கம்யூனிசமும் மனிதன் மீது அதிகாரத்தை, அடக்குமுறையை பெருமளவு திணித்தன. இரண்டு நூற்றாண்டுகளாக வலுப்பெற்று வரும் தொழில்முறை, முதலாளியப் போக்கு, இவனை இயந்திரத்தின் பகுதியாக்கி விட்டன. தொடர்ந்து பெருகிவரும் வணிகக் கலாச்சாரம் இவனை வெறும் நுகர்பவனாக மாற்றின. இவனது புலன்களின் வேட்கையைத் தூண்டி இவன் முன் பொருட்களைக் குவித்து அவற்றை நோக்கி இவன் ஆசைகளைத் தூண்டி இவற்றின்மூலம் வணிகக் கலாச்சாரம் இவனைச் சிறைப்பிடித்தது. தனக்குள் சிதைந்துபோன இந்த மனிதன் கடுமையான மனநோய்களுக்கு ஆட்பட்டான். காமத்திலிருந்து இவனுக்கு விடுதலை இல்லை என்று உளவியல் இவனுக்கு சொல்லியது. சில நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த விஞ்ஞானம், முதலில் அண்டத்துக்கு வெளியில் கடவுளைத் துரத்தியது. பின்னர் கடவுள் செத்துவிட்டான் என்று அறிவித்தது. அறிவின் ஆட்சி மனிதனை விடுவிக்கும் என்று விஞ்ஞானம் கூறியது உண்மையாகவில்லை. ஆக அதிகாரம் ஏகாதிபத்தியமாக உருவெடுத்து போர்களை உருவாக்கி, ராணுவத்தைப் பெருக்கி கோடிக்கணக்கான மனிதர்களை அழித்தது. தொழிற்புரட்சியின்மூலம் உருவாகும் என நம்பிய மறுமலர்ச்சியும் ஒளியும் மனிதனுக்கு கிட்டவில்லை. மாறாக இவன் வாழ்வுக்குள் இருள் வந்து நிறைந்தது. இத்தகைய இருபதாம் நூற்றாண்டுச் சூழல்தான் இருத்தலியல் என்ற மெய்யியலை முன்னுக்குக் கொண்டுவந்தது. அறிவின் அடக்குமுறைக்கு உள்ளாகியிருந்த மனிதனின் உள்ளுணர்வு - அதர்க்கம் விழித்துக் கொண்டது. அறிவின் மூலம் மனிதனுக்கு விடுதலை இல்லை என்று இருத்தலியல் அறிவித்தது. மனிதன் மீண்டும் தன் அடிப்படைகளை நோக்கி திரும்ப வேண்டும் என்று இருத்தலியல் கூறியது. பழங்கால கிரேக்க சமூகத்தை - மனிதனும் இயற்கையும் பிரிவுபடாத, அறிவும் உணர்வும் பிரிவுபடாத சமூகச் சூழலை - இருத்தலியல் மீண்டும் மனிதனுக்கு நினைவுபடுத்தியது. ஏகலை பற்றி மீண்டும் பேசியது.



பிளேட்டோ காலம் முதற்கொண்டு மேற்கத்திய சிந்தனையில் அறிவு மரபு மேலோங்கித் தெரிகிறது. பிளேட்டோவை அடுத்து வந்த அரிஸ்டாட்டில் நெடுங்காலம் தன் அறிவு மரபை தக்கவைத்துக் கொண்டார். மறுமலர்ச்சிக் காலத்திலும் அடுத்துவந்த தொழிற்புரட்சிக் காலங்களிலும் விஞ்ஞானம் என்ற வடிவத்தில் அறிவுமரபு ஆதிக்கம் வகித்தது. பேக்கன், டெக்கார்தே முதலியவர்கள் அறிவு மரபினர். இந்த அறிவு மரபின் தொடர்ச்சியில்தான் ஹெகலும், மார்க்சும் இடம் பெறுகிறார்கள். முதலாளியம், பாசிசம், ஸ்டாலினியம் ஆகியவை அறிவின் ஆதிக்கத்தோடு உறவுடையவை. மேற்கத்திய சிந்தனையில் இந்த அறிவு மரபு ஆதிக்கத்திற்கெதிரான சிந்தனை மரபும், சாக்ரடீஸ் கால முதற்கொண்டே இயங்குகிறது. ஸ்பினோசா, பாஸ்கல் முதலியவர் இதன் தொடர்ச்சி. பெர்க்சன், பிராய்டு, யங் போன்றவர்கள் அறிவுக்கெதிர் மரபினர். இருத்தலியலாளர், உள்ளுணர்வு - அனுபூதி மரபைப் போற்றியவர். இவர்கள் மரபு தீர்க்கதரிசிகளின் மரபு. மேற்குலகில் தாந்தே, கதே, சேக்ஸ்பியர் முதலிய கலைஞர்கள் அறிவினாலும், ஆதிக்கத்தினாலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிய மனித வாழ்வின் சார்பில் தோற்றம் கொண்டவர்கள். சேக்ஸ்பியரின் ஹாம்லெட்டை ஒரு இருத்தலியலாளன் என்பது பொருந்தும். வாழ்க்கை என்பது ஒரு முட்டாள் சொன்ன கதை. ஆவேசமும், கூச்சலும் நிறைந்த பொருளற்ற கதை. மாக்பெத்தில் வரும் இக்கூற்று, இருத்தலியல் நிலைபாட்டைச் சொல்கிறது. கலிவரின் பயணங்கள், டான்குவிக்சாட் ஆகிய படைப்புகளிலும், வில்லியம் பிளேக், வேர்ட்ஸ் வொர்த், காலரிட்ஜ் ஆகியவர் கவிதைகளிலும் இருத்தலியல் சிந்தனைப் போக்கை ஆய்வாளர் எடுத்துக்காட்டுகின்றார். பிகாசோ, வான்கோ ஆகியவர் ஓவியங்கள் இருத்தலியல் உணர்வு கொண்டவை. கலைஞர்கள் - வாழ்வோடு இயற்கையோடு நெருக்கமான உறவு உடையவர்கள். அறிவுக்குள் இவர்கள் தம்மைப் புதைத்துக் கொள்ளவில்லை. கணித வடிவங்களுக்குள் பிரபஞ்சத்தை இவர்கள் அடக்கவில்லை. விஞ்ஞானக் கோட்பாடுகளுக்குள் வாழ்க்கையைத் திணிக்கவில்லை. வாழ்க்கையை நிதர்சனத்தில் தரிசிக்கும் இவர்கள் சிக்கலான வாழ்க்கையின் நெருக்கடிகள் பற்றியும், இருத்தலியல் துயரம் பற்றியும் உணர்வு கொண்டிருந்தார்கள். இருபதாம் நூற்றாண்டில் இருத்தலியலாளர்கள் எனத் தெரியவந்த சில முக்கியமான மெய்யியலாளர்களை இங்கு பார்க்கலாம் :

## 1. சோரன் கீர்க்கேகார்டு (1813 - 55)

இருத்தலியலில் நமக்குத் தெரியவந்த தனிமனிதன், சுதந்திரம்,

வாய்ப்புக்கள், தேர்வு, பதற்றம் ஆகிய பல கருத்தாக்கங்களுக்கு இவர் உரியவர். தன் தனிப்பட்ட வாழ்வில் பலவகையான துயரங்களுக்கு உள்ளானவர். தன் காதலி ரெஜினாவை தான் துறந்தபோது, சமய வாழ்வை இவர் தேர்ந்து கொண்டார். இல்லற வாழ்வை இவர் வெறுத்தவரல்ல. ஹெகலியம் என்ற கருத்தமைப்பினுள் வாழ்க்கையை விளக்க முடியாது என்றும், கத்தோலிக்க நிறுவன அமைப்புக்குள் சமய வாழ்க்கை இல்லை என்றும் இவர் கண்டார். அனாதியின் பார்வையில் வாழ்வைத் திறந்துகொள்ள வேண்டும். அழகியல் வாழ்வைவிட அறவியல் வாழ்க்கை சிறந்தது. அறவியல் வாழ்க்கையின் தொடர்ச்சி சமயவாழ்வு. ஏக தேர்ந்துகொண்டது அனாதியின் பார்வையிலான சமயவாழ்வு. இத்தகைய தேர்வின் மூலம் மனிதன் பாதுகாப்பை உதறிக் கொள்கிறான். சுதந்திரத்தைப் பெறுகிறான். இந்தச் சுதந்திரம் பதற்றம் நிறைந்தது. அதாவது நிறுவனம், கருத்தமைப்பு, வாழ்க்கைப் பாதுகாப்பு என்பவற்றிலிருந்து மனிதன் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். கிடைக்கும் வாய்ப்புகளில், பதற்றம் நிறைந்த வாழ்வைத் தேர்ந்து கொள்ள வேண்டும். ரெஜினாவைத் துறந்ததன் மூலம் கீர்க்கே கார்டு உடலியல் வாழ்க்கையைத் துறந்தார். இறைவன் கேட்டுக் கொண்டபடி தன் மகனை ஆபிரகாம் இறைவனுக்கு பலியிட விரும்பினார். இத்தகையது சமய வாழ்வு. இதில் தன்னலம் இல்லை.

## 2. நீட்சே (1844 - 1900)

நீட்சேவின் கருத்தாக்கங்களில் காணப்படுவது அதிமனிதன், சக்தி, சாதனை முதலியவை. கடவுள் இறந்துவிட்டார் - அவரைப் புதைக்க வாருங்கள் என இவர் உரக்கக் கூவினார். கடவுளின் இறப்பு என்பது இவரைப் பொறுத்தவரை ஒரு கதறல். கடவுள் இறந்த சிம்மாசனத்தில் மனிதனை வைக்க வேண்டுமென்பது இவரது பேரவா. நன்மை - தீமைகள் என்ற உணர்வுகளில் தன்னை இழந்து பலம் குறைந்தவன் கிறிஸ்தவன். இந்த யேசுநாதர் நமக்கு வேண்டியதில்லை. நமக்கு தேவை அதிமனிதன். நன்மை தீமைகளைக் கடந்த அதிமனிதன். அறிவிலும், ஆற்றலிலும் நமக்கு தேவை சக்தி, சாதனை. இவ்வாறு விரும்பியவர் நீட்சே. மண்ணோடு தம்மை இணைத்துக் கொண்டிருக்கிற சாதாரண மனிதர்களை மந்தை என இவர் வெறுத்தார். இவரது ஜாராதுஷ்டிரன், மலைச் சிகரங்களை நோக்கி பயணம் செய்பவன். ஆனால் ஓயாமல் சித்திரக் குள்ளனால் இவன் வாதனைகளுக்குள்ளாகிறான். இந்தச் சித்திரக் குள்ளன் மந்தைகளில் ஒருவன். இந்த மந்தையுடன் - இருளுடன் இறுதிவரை இவர் போராடினார்.



இவரது அதிமனிதன் இந்தப் போராட்டத்தின்போது வெறிபிடித்தவனாகிறான். ஒளியும், இருளும் ஓயாமல் போராடுகின்றன. நன்மையால் தீமையை வெற்றிகொள்ள முடிவதில்லை. தீமை என்பது மண், எதார்த்தம், மந்தை. இத்தகையது அல்ல தரிசனம்.

## 3. மார்ட்டின் ஹைடேக்கர் (1889 - 1973)

ஹைடேக்கரின் சிந்தனையில் டாசய்ன், இறை வீழ்ச்சி, மௌனம் ஆகிய கருத்தாக்கங்கள் அடிப்படையானவை. மனிதன் தன்னைச் சூழ உள்ள தானும் அடங்கிய அனைத்திலுள்ளும் வேர்கொண்டவன். அதாவது மனிதன் தன்னைக் கடந்த நிலையில் உள்ளவன். இவன் டாசய்ன். இடைக்காலத்தில் பொருள்களுக்கு - அறிவுக்கு முதன்மை ஏற்பட்ட பொழுது மனிதன் வீழ்ச்சி அடைந்தான். இறை என்பது கடவுளல்ல. இறை என்பது பிரபஞ்சம், இயற்கை. இவற்றோடு இவன் கொள்ளும் உறவு, மௌனம். தனிமனிதன் தன்னை அனைத்திலுள்ளும் கரைத்துக் கொள்ள வேண்டும். பொருளின் ஆதிக்கத்திற்கு இவன் உட்படும்பொழுது வீழ்ச்சி அடைகிறான் ; இறையிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்கிறான். இவன் வாழ்க்கை அவலம்மிக்கது. ஹைடேக்கரின் நிலைப்பாட்டை ஒரு இந்தியன் என்ற முறையில் நான் புரிந்துகொள்ள முடியும்.

## 4. மார்ட்டின் ப்யூபர் (1878 - 1965)

யூதச் சிந்தனையாளரான இவர் இஸ்ரேலிலிருந்து வெளியேற்றப்பட்டு அமெரிக்காவில் வாழ்ந்தார். இவரது சிந்தனையில் நான் / நீர் டெஷ்வா ஆகிய கருத்தாக்கங்கள் அடிப்படையானவை. டெஷ்வா என்பது வீழ்ச்சி. நான் இல்லாமல் நீவிர் இல்லை. நீவிர் இல்லாமல் நான் இல்லை. நீவிர் என்பது மரியாதைப்படுத்தும் சொல். மனிதர் அனைவரோடும், மரங்கள், பறவைகள், இயற்கை முதலிய அனைத்தோடும் இத்தகைய உறவு கொள்ள வேண்டும். பொருளின் ஆதிக்கம், அரசு ஆதிக்கம், வணிகம், வேசித்தனம் ஆகியவை மனிதனைப் பொருளாக மாற்றுகின்றன. இந்த உறவு மனிதனுக்கு வீழ்ச்சி. ஹைடேக்கரின் 'இறையில் வேர்கொள்ளுதல்' என்ற கருத்துக்கு ஒத்தது பியூபரின் கருத்து.

## 5. நிக்கோலாஸ் பெர்டியேவ் (1874 - 1948)

ரஷ்யப்புரட்சியை பெர்டியேவ் வரவேற்றார். கிறித்தவத்திற்கு இந்த தண்டனை தேவை என்றார். உண்மையான கிறித்தவ நெறி என்பது

புரட்சியை ஏற்கக்கூடியது என்றார். புரட்சிக்குப் பின்னர் செயல்பட்ட அடக்குமுறையை இவர் மறுத்தார். ரஷ்யாவை விட்டு வெளியேற்றப்பட்டார். கடவுளும், மனிதனும் இணைந்து செயல்படுவதில்தான் விடுதலை கிட்டுமென்றார். பூர்ஷ்வா உலகத்தை இவர் வெறுத்தார். Mysticism எனப்படும் அருள்நெறியை - தரிசனத்தை இவர் தன் நெறியாகக் கொண்டிருந்தார். தன் உலகம் ஆன்மீக உலகம் என்றார். இவர் எப்போதும் பதற்றத்தில் வாழ்ந்தார்.

## 6. கார்ல் யாஸ்பர்ஸ்

உளவியல் மருத்துவராகிய இவர் தனிமனிதனின் மனச்சிதைவு என்பது மனிதன் தனக்கான தனித்துவத்தை தேடிப் பெறுதலின் தொடக்கநிலை என்னும் கருத்துடையவர். ஆழ்ந்த மன அதிர்ச்சி, கடுமையான நோய், சாவு, கழுவிக் கொள்ள முடியாத குற்ற உணர்வு ஆகிய மனநிலைகளை விளிம்பு நிலை என்று கூறுகிறார் இவர். இந்த விளிம்பு நிலைகளின்போதுதான் இருத்தல் பற்றியும், கடவுள் பற்றியும் மனிதன் புரிதலைப் பெறுகிறான். விளிம்பு நிலையின்போது அவன் தரிசிக்கும் பூச்சிய நிலையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

## 7. ஆல்பர்ட் காம்யூ (1913 - 1960)

சார்த்தருடன் இணைந்து ஜெர்மானிய ஆக்கிரமிப்பை முறியடிக்கப் பாடுபட்ட காம்யூ 'சிசிபஸின் புராணிகம்' என்ற கட்டுரையில் தன் நிலைப்பாட்டைத் தெரிவிக்கிறார். அறிவுரீதியாகப் பார்த்தால், பேரண்டம் அறிவற்றது. வரலாற்றுக்கும் அர்த்தமில்லை. அர்த்தமில்லாத இந்த வாழ்க்கையில் தற்கொலைதான் அறிவுரீதியாகச் செய்யக்கூடிய செயல். மனிதன் இப்படிச் செய்ய வேண்டியதில்லை. அர்த்தமில்லாதது வாழ்க்கை என்ற அபத்த நிலையை ஒப்புக் கொள்ளவேண்டும். வாழ்க்கையை கௌரவமான முறையில் ஏற்க வேண்டும். சிசிபஸ் தனக்கு தரப்பட்ட தண்டனையை இவ்வாறு ஏற்கிறான். ஆல்பர்ட் காம்யூவின் 'கலகக்காரன்' வன்முறைக்கு எதிரான வன்முறையை ஏற்பதில்லை. புரட்சி என்பது வன்முறை. கொலைக் குற்றத்திற்கு விதிக்கப்படும் கொலைத் தண்டனையை காம்யூ ஏற்பதில்லை. 'கொள்ளை நோயி'ல் வரும் டாக்டர் ரியோ தன் சொந்தத் துயரத்தை ஒதுக்கி வைத்துவிட்டு பொது இன்பத்திற்காக உழைப்பதன் மூலம் மனித கௌரவத்தைக் காப்பாற்றுகிறார். 'அந்நியன்' நாவலில் வரும் மெர்சோ தனக்கு விதிக்கப்பட்ட கொலைத் தண்டனைக்காக மனத்தில் சலனம் கொள்ளவில்லை. வாழ்வின் அபத்தத்தைப் பற்றி பேசியவர் காம்யூ. இதனால் கலகம் பற்றியும் பேசுகிறார். சாதாரண மனித வாழ்க்கையை இவர் கௌரவிக்கிறார். தன்னை இருத்தலியலாளன் என்று சொல்வதை இவர் ஏற்கவில்லை.



## 8. ழான் பவுல் சார்த்தர் (1905 - 1980)

நாசிகளுக்கு எதிரான போரில் சார்த்தர் தன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொண்டார். இவரது தனி மனிதன் முழு முற்றான தனி மனிதன். இவனுக்கு முன்னும் எதுவுமில்லை. பின்னும் எதுவுமில்லை. பொருளை - அதிகாரத்தை இவன் ஏற்பதன் மூலம் இவன் பொருளாகிறான். இது மோசடி ; தவறான நம்பிக்கை. தனக்குள் இந்தத் தனிமனிதன் சந்திப்பது வெறுமை. முழுமையான வெறுமையின் போதுதான் தனிமனிதன் தனக்கான சுதந்திரத்தைப் பெறுகிறான். நாஜிக்கெதிரான போரில் தாங்கள் அனுபவித்த முழுமையான சுதந்திரம்பற்றி சார்த்தர் சொல்லுகிறார். தனிமனிதன் ஒரு திட்டத்தின் மூலம் - செயலின்மூலம் தன் சுதந்திரத்தைப் பெறுகிறான். பேரண்டம், வாழ்க்கை ஆகியவை அர்த்தமற்றவை. தனிமனிதன் தன் திட்டத்தின் மூலம் தன் ஆளுமையைப் பெறுகிறான். தன் வாழ்வுக்கான அர்த்தத்தைப் பெறுகிறான். மார்க்சியம் இருத்தலியலைத் தனக்குள் ஏற்க வேண்டும் என்கிறார் சார்த்தர். அன்றாட வேலை, குடும்பம் ஆகியவற்றினுள் செயல்படும் உளவியலைக் கண்டறிவதன்மூலம் மார்க்சியம் தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்ள முடியும் என்கிறார். பற்றாக்குறை நிரந்தரமானது என்கிறார். இயந்திரம் முதலியவற்றுக்குள் முடங்கக் கூடாது என்கிறார். மனிதனின் அபத்த நிலையை ஒத்துக் கொள்கிறார். மனித கௌரவம் பற்றியும் பேசுகிறார்.

## இருத்தலியலாளர் நிலைப்பாடு :

1. தனிமனிதன் - தேர்வு - வாய்ப்பு - சுதந்திரம் - அசலான வாழ்க்கை ஆகியவைபற்றி கீர்க்கேகார்டு, சார்த்தர் போன்றவர் சிறப்பாகச் சொல்லுகின்றனர். சார்த்தர், வெறுமை - திட்டம் ஆகியவற்றையும் சேர்த்துச் சொல்லுகிறார். பேரண்டம் - வரலாறு - மனித வாழ்க்கை ஆகியவற்றை அபத்தம் என்றும் இதற்கு அர்த்தம் தருவது மனிதனென்றும் காம்யூவும் சார்த்தரும் பேசுகின்றனர்.

2. 'ஹைடேக்கர் இறை வீழ்ச்சி, டாசய்ன் ஆகிய கருத்துகளுக்கு முதன்மை தருகிறார். மார்டின் பியூபர், நான் / நீவிர் / அது / வீழ்ச்சி என்ற

பேசுகிறார். இந்த இருவர் கருத்துக்களும் நெருக்கமானவை. கடவுள் என்பதை மறுத்தாலும் இவர்களுக்குள் கடவுள் தன்மை என்பது இயங்குகிறது. இவர்களின் சிந்தனைகள் இந்தியருக்கு நெருக்கமானவை. கடவுளும், மனிதனும் இணைந்து செய்வது புரட்சி என்ற மார்டின் பியூபர் கருத்தையும் இதற்கு நெருக்கமாகச் சொல்லலாம். பூர்ஷ்வாவின் பொருளாதிக்கத்தை இவர்கள் புரிந்து மதிப்பிட்டிருக்கின்றனர். ஹைடெக்கரின் பார்வை பாசத்தை நோக்கித் திரும்புகிறது என்று சொல்லவேண்டியதில்லை.

3. கடவுள் இறந்துவிட்டார், ஆகவே மனிதன் எதுவும் செய்யலாம் என்ற நீட்சேவின் கூற்றை நாம் எதிர்மறையாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அந்த இடத்தில் மனிதனை வைக்கவேண்டும் என்கிறார். ஓர் ஆதிமனிதனைக் கற்பனை செய்கிறார். இந்த ஆதிமனிதன், நன்மை – தீமைகளைக் கடக்க விரும்பினாலும் கடக்க முடியாதவன். குள்ளன், மலையடிவாரத்தை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கிறான். இந்த குள்ளன் அடிமை, உழைப்பாளி, மண்ணோடு உறவுடையவன். இவன் இருள். இவனை அழிக்க முடியாது. இந்த நீட்சேயின் பார்வை ஒரு Tragic Vision என்று சொல்லலாம். நீட்சேயின் கலையியல் கோட்பாட்டை இந்தப் பார்வை சிறப்பாக விளக்குகிறது. இந்த டிராஜிக் விஷன் அனேகமாக கீர்க்கேகார்டு, ஹைடெக்கர், பெர்டியேவ் ஆகியவரிடத்திலும் பதற்றம் என்ற உணர்வோடு இயங்குகிறது. காம்யூவிடம் இந்தப் பதற்றம் இல்லை. காம்யூ ஏற்பது மனிதநேயம், அன்பு முதலியவை.

எந்த ஒரு மெய்யியலும், குறிப்பாக சிலவற்றைப் பற்றி தன் நிலைப்பாட்டை – தன் பார்வையை முன்வைக்கவேண்டும்.

(1) அண்டம், இயற்கை, உயிர்வகைகள், மனிதன், இவற்றுக்கிடையிலான உறவு பற்றி சொல்ல வேண்டும். இந்த அண்டம் இறைவனது படைப்பு என்று நாம் பேசிக் கொண்டிருக்க முடியாது. அண்டத்தின் தொடர் இயக்கத்தின்போது உலகம், உயிர்வகைகள், மனிதன் ஆகியவை தோற்றம் கொண்டன என்பதை நாம் மறுக்க வேண்டியதில்லை. மனிதன் அண்டத்தோடும் இயற்கையோடும், உயிர்வகைகளோடும் கொள்ள வேண்டிய உறவு என்ன என்பது பற்றி மெய்யியல் சொல்ல வேண்டும். இவற்றுக்கிடையில் பொருள்வகையில் மனிதன் உறவு கொள்கிறானா, வேறு எந்த வகையில் உறவு கொள்கிறான் என்று சொல்ல வேண்டும். அண்டத்திற்கும் மனிதப் பிரக்ஞைக்கும் அதாவது மனித மனத்திற்கும் உள்ள சிக்கலான உறவு, மெய்யியலின் ஒரு பகுதி.



(2) மனிதன் சமூகச் சூழலில் வாழ்கிறான். அரசு அதிகாரம், தொழில், வேளாண்மை, உற்பத்தி, பலவகை நிறுவனங்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இவற்றோடு வாழ்கிறான். இவற்றுக்கிடையில் என்ன உறவு? நாகரிகமின்றி வாணிகமின்றி போக்குவரத்து சாதனத் தொடர்புகளின்றி, உற்பத்தியின்றி, அரசு அதிகாரமின்றி மனிதனால் வாழ முடியாது. மனிதன் உழைக்க வேண்டும். அறிவைப் பெற வேண்டும். நிர்வாகத்தில் பங்கு பெற வேண்டும். குடும்பம் என்ற அமைப்பில் உறுப்பினனாக இருக்க வேண்டும். உறவுகள் சிக்கலானவை. இந்த சிக்கல்களோடுதான் மனிதன் வாழவேண்டும். இவையனைத்தும் மனிதனை அழிக்கின்றனவா, வளர்க்கின்றனவா என்பது பிரச்சினை. மனிதன் அதிகாரம் செய்ய வேண்டும். நிர்வாகம் செய்ய வேண்டும். உறவுகளை சரிசெய்துகொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் உறவு கொள்ள வேண்டும். அதிகாரியாகவும், அடங்குபவனாகவும், படைப்பவனாகவும், நுகர்பவனாகவும், கற்றுத் தருபவனாகவும் கற்றுக் கொள்பவனாகவும் மனிதன் இருக்கிறான். இந்த உறவுச் சிக்கலை எப்படி எதிர்கொள்வது என்று மெய்யியல் சொல்ல வேண்டும். இராணுவம், போர்கள், இயந்திரங்கள், கருவிகள் இவற்றோடு கொண்டுள்ள உறவிலும் வைத்துச் சொல்ல வேண்டும்.

(3) மனிதன், அண்டம், உலகம், இயற்கை, நிறுவனங்கள், மனிதர்கள், இறுதியில் தான் இவற்றை எப்படி புரிந்து கொள்கிறான், ஏற்றுக் கொள்கிறான்? புற உலகம் இவன் அகத்தை எப்படி சந்திக்கிறது? அகம் புறத்தைப் பாதிக்கிறதா? அகமும் புறமும் எந்தக் கோலத்தில் போரிடுகின்றன அல்லது இணைகின்றன? இவனது அகம் எவ்வாறு உருவாயிற்று? அது எவ்வாறு இயங்குகிறது? அறிவைக் கொண்டு இவற்றைப் புரிந்துகொள்ள முடியுமா? இவனுக்கு அன்பு, நட்பு, மகிழ்ச்சி, பரவசம், விடுதலை, கற்பனை, கதை, பாட்டு முதலியவை தேவை. புலன்கள் வழியே இவன் புற உலகத்தோடு தொடர்பு கொள்கிறான். புலன்கள் எவ்வாறு இயங்குகின்றன? புலன்கள் உலகத்தை இவனுக்கு சரிவர காட்டுகின்றனவா? உள்ளுணர்வு, தரிசனம் ஆகியவற்றின் பங்கு என்ன? இவை பற்றியும் மெய்யியல் சொல்ல வேண்டும். இங்குதான் கடவுள், ஆன்மா, புராணங்கள், சடங்குகள், சாத்திரங்கள் பற்றியும் பேசுகிறான்.

(4) எந்த மெய்யியலும் தன் வரலாற்றுச் சூழல் பற்றி, தனக்குள் இயங்கும் வரலாற்றுச் சக்திகள் பற்றி, தன் முன்னைய வரலாறுகள் பற்றி, வரலாற்றுச் சூழலில் தனக்கான தேவை பற்றி புரிதல் கொண்டிருக்க வேண்டும். ஒரு மெய்யியல் தன்னை மெய்யியல் என்று தகுதிப்படுத்திக் கொள்ள இந்த

அம்சம் பற்றியும் ஏதாவது சொல்ல வேண்டும். தன் கால வரலாற்றுச் சூழலில் தனக்குள் செயல்படும் அறிவு யாருடைய அறிவு? யாருக்கான அறிவு? யாருடைய நலன்கள் தனக்குள் இடம் பெற்றிருக்கின்றன? யாருடைய நலன்களுக்குத் தான் பாதகமாக இருக்கிறோம் என்பது பற்றியும் மெய்யியலுக்கு தெரிந்திருக்க வேண்டும். வரலாற்றுச் சூழலைத் தன்னால் கடந்து செல்ல முடியுமா, தம் வரையறைகள் என்ன என்பது பற்றிக்கூட ஒரு மெய்யியல் சொல்ல வேண்டும். எந்த ஒரு மெய்யியலும் தன் கால முரண்களை முழுமையாகத் தனக்குள் கொண்டிருக்க முடியாது. சிலவற்றை மறைக்கும். சிலவற்றை முக்கியப்படுத்தும். நாம் பேசும் எந்த ஒரு குறிப்பிட்ட மெய்யியலும் இதுபற்றி ஏதாவது சொல்லமுடியுமா? இப்படியும் நாம் பார்க்க வேண்டும். தன்னைப்பற்றிய சுயமதிப்பீடு என்று இதைச் சொல்லலாம்.

இருத்தலியலை ஒரு மெய்யியல் என்று நாம் கொள்ள முடியுமானால், மெய்யியலின் பொதுவான அக்கறைகளில் சிலவற்றைப்பற்றி அழுத்தமாக இருத்தலியல் சொல்லுகிறது என்று சொல்லலாம். அண்டத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பற்றி இருத்தலியல் சொல்லுகிறது. கடவுள் பற்றி, தன் காலத்திற்கான மதிப்பீடு ஒன்றை இருத்தலியல் கொண்டுள்ளது. சமூகத்தில் செயல்படும் சக்திகள் பற்றி இருத்தலியல் அதிகம் பேசுவதில்லை. உலகம், சமூகம் ஆகியவற்றின் சிதைவை வாழ்வின் சிதைவாக இருத்தலியல் காண்கிறது. மனிதன் பொருளுக்கு அடிமைப்பட்டிருப்பது பற்றி இருத்தலியல் சொல்லுகிறது. அறிவைத் தவிர மனிதனுக்குள் இயங்கும் உள்ளுணர்வு - தரிசனம்பற்றி இருத்தலியல் அழுத்தமாகப் பேசுகிறது. சிக்கலான சந்தர்ப்பங்களில் மனிதனுக்குள் ஏற்படும் வெறுமை பற்றியும், இந்த வெறுமைக்குள் வைத்து மனிதன் தனக்கான தேர்வை செய்து கொள்வது பற்றியும் இருத்தலியல் சொல்கிறது. வாழ்க்கையின் அர்த்தம் இருத்தலியலில் ஒரு முக்கியப்பகுதி. அர்த்தம் கெட்ட வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது? வாழ்வின் அர்த்தங்களை அழிக்கும் சக்திகளை எவ்வாறு எதிர்கொள்வது? புரட்சி தேவையா? வன்முறை தேவையா? சீர்திருத்தம் போதுமா? என்பது பற்றியும் இருத்தலியல் சொல்கிறது.

வரலாற்றில் ஒரு சிக்கலான காலகட்டத்தில் தோன்றியது இருத்தலியல். இருத்தலியல் மூலம் வரலாற்றின் சில அம்சங்கள் வெளிப்படுகின்றன. அல்லது தெளிவு பெறுகின்றன. அறிவாளிகளில் ஒரு சாரினர் இருத்தலியல் பற்றிப் பேசுகின்றனர் என்ற போதிலும், தம் கால சமூகச்



சூழலின் பொதுவான சில நிலைமைகள் பற்றித்தான் இவர்கள் சொல்கின்றனர். இவர்கள் மூலம் வரலாற்றின் சிக்கல்கள் சில வெளிச்சத்திற்கு வருகின்றன. விஞ்ஞானம், தொழிற்புரட்சி, இயந்திர நாகரிகம், வணிகக் கலாச்சாரம், கொடுங்கோன்மை ஆகியவற்றின் கடுமையான விளைவுகள், தீமைகள் ஆகியவற்றை இருத்தலியல் வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறது. இவற்றால் மனிதன் அடைந்துள்ள பேரழிவு பற்றி - மனிதனின் பேரவலம் பற்றி இருத்தலியல் சொல்லுகிறது. சமூகத்தை இந்தப் பேரழிவிலிருந்து காப்பாற்றவல்ல சக்தி தனக்கு இல்லை என்பதை இருத்தலியல் புரிந்திருக்கிறது. இன்னொருவகையான இராணுவத்தைக் கொண்டு இன்னொரு வகையான தொழிற்புரட்சியைக் கொண்டு - இந்தப் பேரவலத்திலிருந்து மனிதர்களை விடுவிக்கமுடியாது. சமூகம் தன்னை, வேறொரு வகையில் திரட்டிக் கொள்வது பற்றி இருத்தலியல் எதுவும் சொல்வதில்லை. புரட்சிபற்றி இருத்தலியம் பேசவில்லை. தனிமனித விமோசனம் பற்றித்தான் இருத்தலியல் சொல்லுகிறது. நாஜிசம், ஸ்டாலினியம் ஆகியவற்றின் சூழலில் இருத்தலியல் இதைத்தான் சொல்லமுடியும். சூழலியல் மாபெரும் சிக்கலாகிவிட்ட நம் கால நிலைமைகளில் இருத்தலியல் பார்வைகளோடு விலங்குகளோடும் தாவரங்களோடும் மனிதன் உறவு கொள்வதைப் பற்றி இருத்தலியல் பேசும். ஹிப்பிகளை இருத்தலியல் பொருள்படுத்தும். சன்னியாசிகளை மதிக்கும். இந்த சூழலில் வாழ்க்கை வேண்டாம் என்று தற்கொலையைத் தேர்ந்து கொள்பவர்களையும் இருத்தலியல் பொருள்படுத்தும். அபத்தம் என்பது இருத்தலியலின் ஒருவகை வாழ்க்கை நோக்கு. அத்துடன் கலை வெளிப்பாடு. Tragic Vision / அவல தரிசனம் என்பது இருத்தலியலின் கலைநோக்கு. கலைஞர்களுக்கு இருத்தலியல் நெருக்கமானது. சார்த்தர் சொல்வது மாதிரி தன் செயலுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் இராணுவவீரன் இருத்தலியல்பற்றி பேசமுடியும். சமூகத்தின் கடுமையான நெருக்கடிக்குள் - சிக்கலுக்குள் தான் மாட்டி கொண்டுள்ளதைப் பற்றிய உணர்வுடையவர்களும் வழிகள் அடைபட்ட நிலையில் வெளிச் செல்ல ஏதாவது வழி உண்டா என்று உண்மையாகத் தேடுபவர்களும் இருத்தலியலாளர்கள். கடவுள், மதம், சடங்கு, கோயில் வழிபாடு, புதிய கோயில்களைத் தோற்றுவித்தல், புதிய தேவதூதர்கள் பற்றிய அக்கறை - இவைப் பற்றிப் பேசுவதற்கும் இருத்தலியலுக்கும் உறவு இல்லை. இவையனைத்தும் மோசடிகள் ; அல்லது தவறான நம்பிக்கைகள் ; போலி நம்பிக்கைகள். இவற்றிலிருந்து மனிதன் விடுபட வேண்டும். இந்த வகையில் அடிமைப்பட்டாலும் அவன் இருத்தலியலாளனாக இருக்க முடியாது. அதிகாரத்தை இவன் ஏற்றுக்கொள்ள முடியாது. இவனுக்குள்

இவன் அறியாமல் அதிகாரம் செறிந்திருக்கலாம். சக்திசாதனை என்று இவன் தீவிரம் கொள்ளும்போது இவனுக்குள் அதிகாரம் செறிவதைப் புரிந்து கொள்ள முடியும். இறையில் வேர்கொள்ளுதல் என்பதுகூட கண நேர தரிசனம் மட்டுமே. இது நீடிக்க முடியாது. பொருளாக மாட்டேன் என்று மனிதன் நீர்ம நிலையில் இருக்க முடியாது. அதிகாரம் விட்டு வைத்திருக்கும் வாய்ப்புகள்தான் இவனுக்கு உரியவை. எந்த ஒரு வாய்ப்பையும் அதிகாரம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராமல் விட்டு வைக்காது. இப்படி விட்டுவைத்தல்கூட தன் அதிகாரத்திற்குத் தேவை என்று கருதினால் மட்டுமே அது விட்டுவைத்திருக்கும். சார்த்தர் பேசும் வெறுமை அனேகமாக சாத்தியமில்லை. இது கூட ஓர் இலட்சிய மனநிலைதான். இருத்தலியலாளர் கூறும் "நான்" ஏதேனும் ஒருவகையில் கட்டமைக்கப்படுவதுதான் என்று சொல்லலாம். படிப்பாளியின் "நான்", சமூகத்தை மாற்றக் கூடிய ஏதாவது ஒரு அமைப்புக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளமுடியாத "நான்". குடும்ப வாழ்வைப் பொறுத்தவரை கணவன் மனைவி என்ற உறவு, இருத்தலியல் நெறியிலான தேர்வு அல்ல. ஒரு பெண்ணுக்கு இருத்தலியல் பார்வை என்பது என்னவாக இருக்கமுடியும் என்று தெரியவில்லை. இருத்தலியலை ஒரு பூர்ஷ்வா மெய்யியல் என்று குற்றம் சாட்டுபவர்களுக்கு அரசியல் உள்நோக்கம் இருக்கக்கூடும். பூர்ஷ்வா பொருளுற்பத்தி, அதிகாரம் ஆகியவற்றை இருத்தலியல் ஏற்கவில்லை. அதேசமயம் கடுமையாக எதிர்க்கவில்லை என்பதையும் நாம் சேர்த்துச் சொல்லலாம். எதிர்க்கவில்லை என்பதைக் கொண்டு இவர்களைக் குற்றவாளிகளாக்க வேண்டியதில்லை. அறிவை இவர்கள் மறுக்கிறார்கள் என்பதுகூட இவர்கள் குற்றச்சாட்டு இல்லை. பூர்ஷ்வா விஞ்ஞான வடிவில் வெளித் தெரியவரும் அறிவையே இவர்கள் மறுக்கிறார்கள். மேற்கிலும் அறிவுக்கெதிரான மரபு உண்டு. கிழக்கில் இந்த மரபின் பரவல் அதிகம் என்று சொல்லலாம். மேற்கத்தியவனைக் காட்டிலும் இருத்தலியல் கிழக்குலகத்தவனை அதிகம் கவரும். தாவோ, ஜென் ஆகியவற்றைப் பற்றிய புரிதல்கள் உள்ளவருக்கு இருத்தலியல் மிக எளியவகை மெய்யியல். மனித அனுபவ உலகத்தை அறிவியலால் புரிந்து கொள்ள முடியாது. அறிவியல், தொழில்நுட்பத்தின் வழியே மனிதனை வாழ்வுக்குள்ளிருந்து வெளியேற்றி அவனைப் பொருளாக - இயந்திரமாக - கருவியாக - அறிவாக மாற்றியிருக்கின்றது. வாழ்விலிருந்து பிரிக்கப்பட்ட மனிதன், தன் முகமிழந்து - அடையாளமிழந்து தவிக்கிறான். உலகம் தனக்கானதில்லை. வாழ்க்கை தனக்கானதில்லை. தன் புலன்கள் தனக்கானதில்லை. திசைகளற்று வெட்டவெளியில் நிற்கிறான் மனிதன். எந்த வகையிலாவது தன்னை மீட்டுக் கொள்ள முடியுமா என்று



திணறுகிறான். தற்கொலைதான் தீர்வு என்றும் நினைக்கிறான். கடவுள் தன்னைக் கைவிட்டுவிட்டார். மதம் தன்னைக் கைவிட்டுவிட்டது. இந்த உலகத்தை தன்னால் மாற்றி அமைக்க முடியாது. உலகை இயக்கும் சக்திகள் அசுரத்தனமானவை. அறிவின் மூலம் தனக்கு தீர்வைத் தேட முடியாது. அறிவு என்பது பொருள்களைப்பற்றிய - கருவிகளைப்பற்றிய அறிவு. இந்த அறிவு வாழ்க்கை பற்றியதல்ல. வாழ்க்கையை வெட்டி, கூறுகளாக்கி ஒவ்வொன்றையும் பகுத்து அறிவு ஆராய்ந்தறிகிறது. பின்னங்களுக்குள் வாழ்க்கை இல்லை. பின்னங்களை ஒருங்கிணைக்க வேண்டும். முழுமை காணவேண்டும். உள்ளுணர்வின் மூலம் முழுமையைத் தேட வேண்டும். தரிசனம் தனக்கு முழுமை பற்றிய காட்சியை வழங்க முடியும். வாழ்க்கையிலிருந்து எவையெல்லாம் பிரிக்கப்பட்டனவோ அவற்றையெல்லாம் மீண்டும் வாழ்க்கைக்குள் இணைக்க வேண்டும். பொருட்களுக்குள் சிறைப்பட்டவனை விடுவிக்க வேண்டும். மனிதனை இயல்பாக மாற்ற வேண்டும். மனிதன் வேறு எதற்கும் தன்னையிழந்து விடக்கூடாது. எதன் ஒட்டுறவிலும் தன்னைக் காணக்கூடாது. தன்னைத் தானாக தரிசனம் கொள்ள வேண்டும். எல்லாச் சமயத்திலும் இது சாத்தியமில்லை. கடுமையான நோய், அதிர்ச்சி, மரணத்தை எதிர்கொள்ளும் தருணம் ஆகிய சந்தர்ப்பங்களில் தன் உணர்வுகள் உச்ச அளவில் தீவிரம் கொள்ளும்பொழுது தன்னைப் பற்றி, தான் செய்யவேண்டிய தேர்வு பற்றி - தன் சுதந்திரம் பற்றி புரிதல் பெற முடியும். மனிதன் தனக்குள் காணும் மனச்சிதைவு என்பது ஒரு நோய் அல்ல. தன்னைப்பற்றிய ஒரு தேடல். தேடலின் ஒரு தொடக்கம். தொடர்ந்து தேடும்பொழுது தன்னை உருவாக்கிக் கொள்ள முடியும். தன் சூழல்களை, தன்னைச் சிறைப்படுத்தியிருக்கும் சக்திகளை மனிதன் கடக்கமுடியும். தனக்குள் கடவுளைக் கண்டுகொள்ள முடியும். ●

# இருத்தலியல் வழியே தமிழ் இலக்கியம்

இருத்தலியல் பார்வையை தமிழ் இலக்கியத்திற்குள் செலுத்திப் பார்ப்பதற்கு முன்பு இந்திய வாழ்க்கைக்குள் ஏதாவது தட்டுப்படுகிறதா என்று பார்க்கலாம். இருத்தலியல் வேதனை அல்லது அவலம் என்பது இருத்தலியலின் ஒரு அடிப்படைப் பண்பு. போர்க்களத்தில் தனக்கான நீதியை நிலைநாட்டிக் கொள்வதற்காக உறவினர்களையும் ஆசிரியர்களையும் கொல்லத்தான் வேண்டுமா என்று அர்ச்சுனன் தடுமாறுகிறான். ஒரு நீதியை நிலைநாட்ட இன்னொரு நீதியை அழிக்க வேண்டும் என்று கண்ணன் அவனுக்கு வழிகாட்டுகிறான். என்ன வழி? நீ உடலைத்தான் கொல்கிறாய். ஆன்மாவைக் கொல்லவில்லை. இங்கு ஆன்மா என்பதை நீதி என்று பொருள்படுத்தலாம். உடல் என்பதை நிகழ்கால உறவுகள் என்று பொருள்படுத்தலாம். இங்கு அர்ச்சுனனின் வேதனை இருத்தலியல் வேதனை. மகாபாரதத்தில் இவ்வகை வேதனைகள் நிறைய சொல்லப்படுகின்றன. கர்ணனை ஓர் அவலவீரன் என்று இந்நோக்கில் சொல்லலாம். அம்புப்படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் பீஷ்மர் இன்னொரு அவல வீரர். பாரதப்போர் முடிந்தபிறகு பாண்டவர் சந்திப்பது ஒரு பாழ்நிலை, வெறுமை. ஆட்சி புரிவதற்கு ஏதுமில்லை. சொர்க்கத்தை நோக்கி செல்லும்போது, தருமன் தவிர மற்றவர் அங்கங்கே விழுந்து சாகின்றனர். எதற்காக இந்த வெற்றி என்ற கேள்வி எழும்போது இருத்தலியல் அவலத்தை இங்கு சந்திக்கிறோம்.

இராமன் மனிதனுக்குள் வந்த இறைவன். வாலி வதை என்பது இராமனை ஒரு இருத்தலியல் அவலத்திற்கு உரியவனாக ஆக்குகிறது. இவன் சீதையை தீக்குளிக்கச் சொல்லுகிறான். அரச கௌரவத்திற்காக சீதையை இவன் காட்டுக்கு அனுப்ப நேர்கிறது. தன் மக்களோடு போர் தொடுக்கிறான். இறுதியில் சரயு நதியில் விழுந்து சாகிறான். அவனது இறைமை, நீதி ஆகியன என்னவாகிறது? உலகச் சூழல் இவனை வெற்றி கொள்கிறது. மனிதனுக்குள் வந்த கடவுள் உலகத்தின் தண்டனைக்கு உள்ளாகிறான். புதுமைப்பித்தனின் சீதை நன்றாகத்தான் ராமனை விமர்சனம் செய்தாள். ராமன் தந்த விமோசனத்தை தூக்கி எறிவதன் மூலம் தன் மனித கௌரவத்தை அவள் காப்பாற்றிக் கொள்கிறாள்.

புத்தரின் தத்துவம் மனிதனின் துயரைக் களைவது எவ்வாறு என்பது பற்றியது. வாழ்க்கையில் காணப்படும் மரணம், முதுமை, நோய்கள்



இவற்றைப் புரிந்துகொள்ளவும் இவை இல்லாமல் செய்யவும் கிளம்பிய புத்தர் இவையற்றிய ஞானத்தைப் பெற்றார். வாழ்க்கை துக்கமயமானது. துக்கம் தீர்க்க என்ன வழி சொல்கிறார்? விஷ அம்பினால் தாக்கப்பட்ட ஒருவனை முதலில் காப்பாற்ற வேண்டும். அம்பு எய்தவன் யார், அம்பு எதனால் செய்யப்பட்டது என்ற விசாரணை வேண்டாம் என்கிறார். இந்த விடை போதுமானதுதானா! சிலசமயம் துயரங்கள் எங்கிருந்து தொடங்கின என்று ஆராயாமல் துயரங்களைத் தீர்க்க முடியாது. ஆராய்ந்து கொண்டே இருந்தாலும் தீர்க்க முடியாது. தீர்ப்பதற்குள் சம்பந்தப்பட்ட மனிதன் செத்துப் போவான். தொழுநோயாளிக்கு முன் ஜே.கே. தடுமாறுவதை இப்படித்தான் புரிந்துகொள்ள முடியும். சோசலிசம் வந்தால் பிச்சைக்காரர்கள் இருக்க மாட்டார்கள். பிச்சை கொடுப்பதன்மூலம் பிச்சைக்காரனை ஒருவன் பிச்சையெடுக்கத் தூண்டுகிறான். இப்படி முல்லைக் கல் விவாதிக்கக்கூடும். இப்பொழுதைக்கு பிச்சையாவது தராவிட்டால் இந்த மனிதன் இறந்துபோவான். சோசலிசம் என்று சொல்லி இவனைச் சாகடிக்கக்கூடாது. இந்த நிலை ஒரு முரண். இந்த முரணை உடனடியாகத் தீர்க்கமுடியாது. ஒருபக்கம் இடறித்தான் தீரவேண்டும். இது இருத்தலியல் அவலம். புத்தருக்கு இந்த அவலம்பற்றி தெரியுமா? நமக்குத் தெரியவில்லை. சங்கரன் அத்வைதம் பேசினான். சவுந்தரிய லாகிரி எழுதினான். சிவபெருமான் நஞ்சைத் தன் கண்டத்தில் நிறுத்தினான். ஒருவகையில் இது, இருத்தலியல் நெறியில் ஒரு தீர்வு அல்லது தேர்வு. இது சுதந்திரம். இது அசலான வாழ்க்கை. மேலும் செல்லமுடியாது, கீழும் இறங்க முடியாது. அந்தரத்தில் தொங்க வேண்டும். இது சொர்க்கமா? நரகமா? வாழ்க்கையின் புதிர்நிலைக்கு இந்த திரிசங்கு சொர்க்கம் ஒரு எடுத்துக்காட்டு. ஏசு தன்னை தேவகுமாரன் என்று சொல்லிக் கொண்டார். தேவகுமாரனுக்கும் சாவு வந்தது. ஏசு பந்து சிலுவையில் மாண்டான் என்ற பாடலில் பாரதி ஏசுவையும், இராமனையும், கிருஷ்ணனையும் ஒன்றுபடுத்தி சொல்லி இருக்கிறார். ஆழ்ந்து பார்த்தால் இவை இருத்தலியல் முரண்நிலைகள் அல்லது புதிர்கள்.

இனி தமிழிலக்கியத்திற்குள் அங்குமிங்கும் என கொஞ்சம் பார்வை செலுத்தலாம். சிலப்பதிகாரத்தில் தொடங்கி முன்னும் பின்னுமாக பயணம் செய்யலாம். ஒரு பொற்கொல்லன், பின்விளைவுகள் இவ்வளவு பெரிதாகிவிடும் என்று தெரியாமல் ஒரு தவறு செய்தான். விளைவுகள் ஒன்றைபடுத்து மற்றது என்ற முறையில் தொடர்ந்து ஒரு பிரளயத்தையே தோற்றுவித்தன. கோவலன் சாவு, அரச அழிவு, மதுரை நகர அழிவு, இறுதியில், வடநாட்டு அரசர் அழிவு என்று விளைவுகள் தொடர்ந்தன.

இதே மாதிரி ஒரு பார்வையை இளங்கோவடிகளும் கொண்டிருந்தார். மாதவி பாடிய கானல் வரி, கனக விசயரின் முடித்தலையை நெரித்தது என்று பாடலமைறயோன்மூலம் கூறுகிறார். ஒரு மலரைக் கிள்ளும்போதே தொலைதூரத்திலுள்ள நட்சத்திரங்களை சலனத்திற்குள்ளாக்கும் நிகழ்வுகள் மலர்கின்றன. வாழ்வின் இருத்தலியல் முரண் இத்தகையது. "கொங்கைத்தீ"யில் இந்திரா பார்த்தசாரதி இவ்வகை இருத்தலியல் முரண்களை விரிவாகவே சொல்லுகிறார்.

மணிமேகலை உதயகுமாரனை காதலிக்கத்தான் செய்தாள். உதயகுமாரன் நிதானமாக அணுகியிருந்தால் அவன் காதலைப் பெற்றிருக்க முடியும். 'இதுவோ அன்னாய் காமத்தியற்கை' என்று பளிக்கறை மண்டபத்தில் உதயகுமாரன்மேல் ஏற்பட்ட காதலை வியப்போடு, வேதனையோடு மணிமேகலை தெரிவிக்கிறாள். உதயகுமாரன் வெட்டப்பட்டதற்கு நியாயம் உண்டா? இல்லை. அப்பொழுதும் மணிமேகலை அவனைத் தழுவிக் கொள்ள நினைக்கிறாள். முற்பிறப்பில் இவர்கள் கணவன் மனைவியர். வாழ்வின் அவலம்பற்றி சாத்தனார் எவ்வளவு விரிவாக, கூர்மையாகப் பேசுகிறார்? சிலப்பதிகாரத்தில் கண்ணகியைப் பொறுத்தவரை வீடுபேறு பெற்றவள். சாத்தனார் பார்வையில் கண்ணகிக்கு வீடு பேறு இல்லை. கோபத்தால் மதுரையை அழித்தாள்; பலர் சாவுக்குக் காரணமானாள். ஆகவே இவள் இன்னும் பல பிறப்புகள் எடுத்து, தீவினை குறைந்து பின்னர் புத்தர் அருளுரை பெற்று நிர்வாணம் அடையவேண்டும். இங்கும் இருத்தலியல் துயரம்.

வாழ்வின் அவலச் சூழ்நிலை பற்றி வள்ளுவர் நுட்பமாகவே பேசியிருக்கிறார். இரு வேறு உலகம் என்கிறார். மெய்வருத்தக் கூலிதான் கிடைக்கும் என்கிறார். நல்லவை தீயவையாகும், தீயவை நல்லவையாகும் என்கிறார். அழுக்காறு உடையவனுக்கு ஆக்கம் பெருகும், நல்லவனுக்கு வறுமை வந்துசேரும் என்கிறார். பொய் உண்மையாகும், உண்மை பொய்யாகும் என்கிறார். அறத்திற்குத்தான் அன்பு ஆதாரம் என்பதில்லை, மறத்திற்கும் அன்பு ஆதாரம் என்கிறார். சிவிகையில் அமர்ந்திருப்பவன் அறத்தின் விளைவாக அமர்ந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது பிறரைச் சுமக்கச் செய்வதன்மூலம் பாவம் செய்கிறான். அதேபோல பல்லக்குச் சுமப்பவர் இப்பொழுது பெறுவது தண்டனை. முற்பிறப்பில் செய்த தீமையின் விளைவு எனினும் இப்பொழுது அனுபவிக்கும் தண்டனைக்காக இவர்கள் மகிழ்ச்சி அடையலாம். மகிழ்ச்சிக்கு இடையிலும் மனக்கவலை கொள்ளலாம்: இன்னொரு பிறப்பில் மீண்டும் சுமக்க வேண்டிவரும். ஆக,



சங்கிலித்தொடர் மாதிரி மாறி மாறி இன்பங்களும் துன்பங்களும் வருகின்றன. இன்ப ஒளிக்குள் துன்ப இருள் தெரிகிறது. அறநெறியை எப்படி விளக்கமுடியும்? வள்ளுவர் திண்டாடத்தான் செய்கிறார். இந்தத் திண்டாட்டம் குறளின் சொற்களினூடே தெரிகிறது. மனத்துக்குள் வைத்திருக்கிற வரைக்கும்தான் அறம் அறமாக இருக்க முடியும். செயல்வழியே வெளிப்படும்போது மறம் கலந்துவிடும். இது தவிர்க்க முடியாதது. விளம்பரத்தன்மை என்.:து, ஒருவகை மறம். புகழ் பெறுவதற்காக அறம் என்பது இன்னொருவகை மறம். அறம் செய்தால் ஒருவன் அழிந்துபோவானா? ஆம், அழிந்து போவான். ஆக்கம் பெறுவதுபோல அழிவு நேரும். அழிவுக்குள் ஆக்கம் பெருகும் என்பதையும் காண்கிறார் வள்ளுவர். நடு ஊரில் மரம் பழுத்தால் பழங்களை இழப்பதோடு கல்லடியும் கிடைக்கும். இருத்தலியல் அவலத்தைக் கடக்கும் நெறி இது. 'ஊழி பெயரினும் தான் பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்' என்பது ஒரு குறள். வள்ளுவர் நெடுவழிப் பயணம் செய்திருக்கிறார். முயல் எய்த அம்பைக் காட்டிலும் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது என்கிறார். மேல் உலகம் இல் எனினும் ஈதல் நன்று என்கிறார். நடுவு நிலைமை உடையவனின் வறுமையை வாழ்த்துகிறார். வள்ளுவரின் நூல் முழுவதும் இவ்வாறு வாழ்க்கை பற்றிய முரண் நிலையும், புதிர்நிலையும் கடக்கும் நெறியும் சிறப்பாகவே சொல்லப்படுகின்றன. சமூகச் சூழலில் நீதி பற்றிய ஈடுபாடு கொள்ளும் ஒருவர்க்கு இப்படி பார்வை கூர்மை அடைந்திருப்பதில் வியப்பில்லை.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தான். அவன் சாவிலுள்ள நியாயத்தை நாம் புரிந்திருக்கிறோம். கரிகாற்சோழனின் வேல் முதுகில் பட்டு சேரலாதன் உயிர்நீத்தான். கரிகாலனைக் காட்டிலும் சேரலாதன் பெருமைக்குரியவன் என்கிறார் வெண்ணிக்குயத்தியார். அதியமான் இறந்தபொழுது அவ்வையார் புலம்புகிறார் : இனி பாடுநரும் இல்லை, பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் இல்லை. நக்கீரர் உண்மை சொல்கிறார் : 'உண்பது நாழி உடுப்பவை நான்கு முழம்'. செல்வத்துப்பயன் ஈதல், துய்ப்போம் எனவே எனினே தப்புந பலவே', பேரியாற்று வெள்ளத்தில் அடிபட்டுச் செல்கிறது ஒரு புணை. சமுகத்தில் இப்படி மாற்றங்கள் கரை உடைத்துக் கொண்டு செல்கின்றன. இந்தப் பிரளயத்தின் போது சிலர் இருப்பது உயர்ந்த இடம். சிலர்க்கு தாழ்ந்த இடம். ஆகவே 'பெரியோரை வியப்பதந்கில்லை, அதைவிட சிறியோரை இகழ்வதற்குமில்லை' இப்படி மதிக்கிறார் கணியன் பூங்குன்றனார்.

அகத்திணைப் பாடல்களில் வாழ்வின் முரண் அல்லது புதிர் - இருத்தலியல் துயரம் தென்படுகிறதா? அதிகம் தென்படவில்லை. ஏன் என்பது ஆய்வுக்குரியது. சந்தனம் மலையில் பிறந்தாலும், எங்கிருந்தோ அனுபவிப்பதற்கு உரியது. கடல் தன் முத்தை அனுபவிக்கமுடியாது. பிறர்க்கு விட்டுத் தரவேண்டும். இப்படி இழப்பதில்தான் பெருமை. களவுக்காலத்தில் பாரியின் பனிச்சுனை நீரை இனிது என்றவன் கற்புக் காலத்தில் பூங்கட்டியும் கசக்கிறது என்கிறான். பொய் சொல்லிப் பிரிந்தவன் மலையில் எப்படி அருவிகள் விழலாம்? இப்படியும் சில துயரங்கள். துயரங்களுக்கிடையிலும் ஒளி நிறைந்த பார்வைகள். பரத்தையின் மார்பில் தோய்ந்து திரும்பியவன் மருவத்தான் நேர்கிறது. மறுக்கமுடியவில்லை.

பக்திப் பாடல்களுக்கு இப்பொழுது வரலாம். மனிதனின் பெரும் அவலங்களும் முரண்களும் பக்திப் பாடல்களில் நிறையவே கொட்டப்பட்டிருக்கின்றன. வானாகவும், மண்ணாகவும், வளியாகவும், ஒளியாகவும், ஊனாகவும் இருப்பவன் இறைவன். அவன் கோனாகவும் இருக்கிறான். அவன் உள்ளவன்தான். அப்புறம் அவன் இல்லாதவன். அவன் நம்மைக் கூத்தாட்டுகிறான். யான் எனது என்ற ஆணவத்திற்குள்ளும் உடைமைக்குள்ளும் ஒருவனைச் செலுத்தி கூத்தாட்டுகிறான். உடமையைத் தந்து அப்புறம் பிடுங்கி இரண்டு நிலையிலும் கூத்தாட்டுகிறான். கூத்தை இவன் நம்புகிறான். இறைவன் ஏன் இப்படிச் செய்கிறான்? அவனுக்குப் புரியவில்லை. அவன் இல்லாதவன். இல்லாதவன் கூத்தாட்டுகிறான். இருப்பதாக வைத்துக் கொண்டால் வாழ்க்கை. இல்லையென்றால் ..? இறைவன் இருக்கிறானா? வானமும் - மண்ணும்-வளியும்-ஒளியும் இருக்கின்றன. இறைவன் எங்கிருக்கிறான்? இவனை என்ன சொல்லி வாழ்த்துவது? இவன் எனக்கு என்ன செய்தான்? இப்படிச் சொல்லுகிறது மாணிக்கவாசகர் பாட்டு. இறைவனுக்குத் தன்னை இழந்து, இறைவனுக்குத் தன் சக்தியை, அழகைத் தந்து, அவன் உருவம் பெருக்கி, அவனை அழகுபடுத்தி, தன் அழகிழந்து, தன் சக்தியழிந்து, இறைவனை நம்பவும் முடியாமல், ஒதுக்கவும் முடியாமல், மனிதன் அவலத்தில் ஆழ்கிறான். காரொளி வண்ணனிடம் கதறுகிறார் ஆழ்வார். ஊரையும் உறவையும் ஒதுக்கி வந்தவர்க்கு இப்பொழுது களைகண் இல்லை. இறைவன் உறவாக இல்லை. துயர் தீர்க்கவில்லை. ஆழ்வார் வெறுமையில் கதறுகிறார். பாடலுக்குள் ஆழ்ந்து பார்த்தால் மனிதத்துயரம் தெரிகிறது. இறைவனைக் காணமுடியவில்லை. இறைவனை நம்பி, மனிதன் கதறும் வேதனை நெரிகிறது. அனேகமாக இருத்தலியலாளர்கள் இம்மாதிரி ஒரு இறைவனைச் சொல்லவில்லை. இறைமை பற்றித்தான் அவர்கள்



பேசுகிறார்கள். மனிதனுக்குள் கலந்திருக்கும் இறைமை பற்றித்தான் பேச்சு வருகிறது. அண்டத்திற்கு வெளியிலிருந்து அண்டங்களையும், மனிதர்களையும் ஆட்டுவிக்கும் இறைவனைப் பற்றி அவர்கள் பேசவில்லை. அப்படி ஒரு இறைவன் இல்லை. மனிதனுக்குள் நிறைவுபெறும் இறைமை பற்றித்தான் அவர்களது பேச்சு.

பெரியபுராணத்தில் மனுநீதிச் சோழன் எடுக்கும் தேர்வு, இருத்தலியல் துயரத்தைக் கடக்கும் ஒரு நெறி. மெய்ப்பொருள் நாயனாரும் இத்தகைய நெறியாளர்.

தற்காலத் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை அறுபதுகளில் இருத்தலியல் அறிமுகமாயிற்று. இந்திரா பார்த்தசாரதியின் 'தந்திரபூமி', இருத்தலியல் நோக்கைச் சொல்லும் முறையில் முதல் நாவல். ஜெயகாந்தனின் 'ரிஷிமூலம்' நாவலையும் அதைத்தொடர்ந்து அவர் எழுதிய பிற நாவல்களிலும் குறிப்பாக 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'ஒரு வீடு, ஒரு மனிதன், ஒரு உலகம்' ஆகிய நாவல்களிலும் அவர் இருத்தலியல் என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும் இருத்தலியல் சிக்கல்கள் இடம்பெற்றன. ஆதவனின் 'காகித மலர்கள்' இன்னொரு முக்கியமான நாவல். 'கசடதபற' மூலம் இருத்தலியல் தமிழ் வாசகர்களுக்கு பெரிதும் அறிமுகமாயிற்று. '75-ல் எஸ்.வி.ராஜதுரையின் 'எக்ஸிஸ்டென்சியலிசம்' முதற்பதிப்பு வெளியாயிற்று. தமிழ்நாட்டில் படைப்பாளிகள் நோக்கில் இந்த மெய்யியல் பார்வை பலரைப் பாதித்தது என்று சொல்லலாம். ஆத்மாநாம் கவிதைகளில் இந்தப் போக்கு பெரிதாவு காணப்படுகிறது. பசியாகவின் 'மீறல்' ஒரு முக்கியமான தொகுப்பு. தொடர்ந்து ஆராய்ந்தால் அனேகமாக பெரும்பாலான கவிஞர்கள் - படைப்பாளிகளுக்கு இடையில் இப்போக்கின் சாயலை நாம் காணமுடியும். வண்ணநிலவன், பிரபஞ்சன் ஆகியவர்தம் நாவல்களில் மனிதர்கள் தம் வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ள அன்பில் மையம் கொள்ளவேண்டும் என்று விரிவாகப் பேசப்படும் கருத்து. இருத்தலியல் நோக்கில் புரிந்துகொள்ளக் கூடியது. சுந்தர ராமசாமியின் சில சிறுகதைகளில் இருத்தலியலை இனம் காணலாம். அவருடைய 'ஜே.ஜே. சில குறிப்புகளி'ல் இருத்தலியலைக் கண்டு தோதாத்ரி விரிவாக விமர்சனம் செய்திருக்கிறார். தமிழ்நாட்டில் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகள், ரஜனீஷின் சிந்தனைகள் அண்மைக்காலத்தில் செல்வாக்கு பெற்றுள்ளன. இருத்தலியல், படைப்பாளிகளிடையே செல்வாக்குப்பெற்றதின் தொடர்ச்சி என இதை மதிப்பிடலாம். இவை பற்றி இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம்.

'தந்திர பூமி'யில் வரும் கஸ்தூரி தன் அறிவுத்திறம் கொண்டு டெல்லிச் சூழலில் வாழ நுழைகிறான். டெல்லிச் சூழலுக்கு இத்தகைய அறிவாளிகள் தேவை. பாரம்பரிய மதிப்பீடுகளில் கஸ்தூரிக்கு அக்கறை இல்லை. மகேஷிடம் 'லயசன்' வேலை பார்க்கும்பொழுது நேர்மையற்ற செயல் ஒன்றில் அவன் விருப்பமறியாமல் ஈடுபடுத்தப்படுகிறான். கஸ்தூரியின் 'நான்' இதை ஏற்கவில்லை. இன்னொரு அலுவலகத்திலும் இதேமாதிரி அனுபவம். நட்சத்திர ஓட்டலில் அரபு மன்னரை சூரியல் தொட்டியில் வைத்து பார்த்துக் கொண்டிருப்பதோடு, ராஜஸ்தானில் மான் வேட்டையாடுவதற்கும் அவருக்காக ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. இப்படிதான் விலை பேசப்படுவதற்கும் விற்கப்படுவதற்கும் கேவலமான செயல்களில் ஈடுபடுத்தப்படுவதற்கும் கஸ்தூரியின் 'நான்' ஒப்புக்கொள்ளவில்லை. முதல் நாளில் அவனது படுக்கையறைக்கு வந்த மீனா, அவனது 'நான்' என்ற ஆணவத்தை தொடர்ந்து சுட்டிக் காட்டுகிறாள். வாழ்வுக்கா மீனா, கபூரின் அழைப்புக்கு இணங்க வேண்டியிருக்கிறது. இன்னொருவனை ஒரு வசதிக்காக திருமணம் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. மீனாவுக்கு ஆணவமில்லை. அவளுக்கு அன்பு தெரியும், தன் சூழல் தெரியும். அவள் யாரையும் ஆக்கிரமிக்க மாட்டாள். இவளைத் தேர்ந்து கொள்வதன்மூலம் கஸ்தூரி தன் நானை ஒதுக்கிவைக்கும் வாய்ப்பைத் தேர்ந்து கொள்ளலாம். கஸ்தூரியின் அறிவுத்திறனை சக்தி சாதனையின் ஒரு வடிவமாகக் கொண்டால், இதுவே அவன் வாழ்க்கையை பாதிக்கும் அம்சமாகவும் மாறுவதை நாவலிலிருந்து அறியலாம். அறிவுத்திமிர் அழிந்து 'நான்' அன்பில் கரைகிறது என்று கொண்டால் ஒருவகையில் இதை இருத்தலியல் தேர்வு என்று மதிப்பிடலாம். கஸ்தூரி, மீனா இருவரையுமே மரபு ஆதிக்கம் கொள்ளவில்லை. இறுதியில் இருவரும் கணவன் மனைவி என்ற உறவுக்குள் முற்றாக முடங்குவதாகவும் தெரியவில்லை. இ.பா.வின் நாவல்கள் – நாடகங்கள் அனைத்திலும், இருத்தலியலும், மார்க்சியமும் ஏதாவது சில அம்சங்களில் ஒத்துப் போவதைக் காணமுடியும். இ.பா. பற்றி நிறைய விவாதிப்பதற்கு இடமிருக்கிறது.

அசோகமித்திரனின் 'தண்ணீரில்' வரும் ஜமுனா தன் பிரச்சினைகளுக்கு மேற்கொள்ளும் தீர்வை இருத்தலியல் தேர்வு என்று கூறலாம். பாஸ்கரராவ் அவளை சினிமா ஆசை காட்டி அவள் வீட்டுச் சூழலிலிருந்து பிரித்து வந்தான். குடியிருக்கும் வீட்டில் தண்ணீர் பெரும் பிரச்சினை. மேலும் பல சிக்கல்கள். தற்கொலைக்கும்கூட முயற்சி செய்கிறாள். ஏன் இப்படி ஏழையாக இருக்கிறாய்? அடுத்தவர் ஆதரவு



உனக்கு ஏன் தேவை? உன்னிடமுள்ள பலத்தை நீ ஏன் கண்டுகொள்ளவில்லை? அடுத்தவரின் விமர்சனங்கள் உன்னை ஏன் பாதிக்க வேண்டும்? இப்படி பல கேள்விகள் கேட்பதன்மூலம் ஜமுனாவுக்குள் ஒரு விழிப்பைத் தோற்றுவிக்கிறாள். அவள் வயிற்றில் மூன்று மாதம். பாஸ்கராராவுக்கு இனி இவள் இடம் தரமாட்டாள். தன் காலில் அவளால் நிற்கமுடியும். குழந்தையைப் பெற்று அவளால் வளர்க்கவும் முடியும். நம் சமூகச் சூழலில் ஆதரவற்ற ஆண்களின் அழைப்புக்கு இடம் தரவேண்டிய அவலம் கடுமையானது. இதற்குள்ளிருந்து விடுதலை தேவை. ஜமுனாவின் தேர்வு குறைந்த அளவு ஒரு தற்காலிக விடுதலை.

'ரிஷிமூல'த்தில் வரும் ராஜாராமன், காவிரிக்கரையில் வேகும் பிணத்தோடு சேர்ந்து தானும் எரிந்து கொண்டிருக்கிறான். தொடர்ந்து தன் வேஷங்களை இவன் கலைத்துக் கொண்டான். இப்பொழுது வேஷம் போடுபவர்களைப் பார்க்கும் போது சிரிப்பாய் சிரிக்கிறான். கங்கையும் காவிரியும் இப்போது இவனுக்கு ஒன்று. காசியும் இராமேசுவரமும் இவனுக்கு ஒன்று. பீடி இவனுக்கு போதும். கிடைத்தபோது உண்கிறான். ஆடை, அழுக்குபற்றி இவனுக்கு கவலையில்லை. தமிழ்நாட்டு மரபில் இவன் ஒருவகையில் சித்தன். இவனுக்குள் இருப்பது சித்தர் மரபு. இளமையிலிருந்து இவனைத் துரத்திவரும் செக்ஸிலிருந்தும் இவன் விடுபட்டுவிட்டான். நல்லது – கெட்டது என்ற வேறுபாடு இவனுக்கு அற்றுப் போய்விட்டது. 'நான்' இவனிடம் இல்லை. இருத்தலியல், 'நானை' ஆராதிக்கிறது என்பது உண்மைதான். 'நான்' அற்றுப் போவதையும் இருத்தலியல் தேர்வு எனக் கொள்வதிலும் தவறு இல்லை.

கல்யாணி தன் வாழ்க்கையை நாடகமாகப் பார்க்கத் தெரிந்தவள். எல்லா மனிதர்களுமே நாடகத்தின் அங்கங்களாகத்தான் இயங்குகிறார்கள். அசோகமித்திரனின் பல படைப்புகளில் இருத்தலியல் இழையைக் காணலாம். 'காகித மலர்களி'ல் ஆதவன், டெல்லிச் சூழலில் குடும்பங்கள் – அலுவலகங்களில் பல இடங்களில் மனிதர் தரித்திருக்கும் முகமூடிகள், பேதங்கள்பற்றி நிறைய பேசுகிறார். மனிதர் தொடர்ந்து தம் வேஷங்களைக் கலைத்துக் கொள்கிறார்கள் அல்லது புதிய முகமூடிகள் தரித்துக் கொள்கிறார்கள். இதனால் துன்புறுகிறார்கள், இன்புறுகிறார்கள். விசுவம் வேஷம் கட்டிக்கொள்ள விரும்பாதவன். இவனை மையமாக வைத்து நிறைய மனிதர்களின் கதைகளை ஆதவன் சொல்லுகிறார். முகமூடி களைதல் என்பது ஆதவனின் நிரந்தரமான பிரச்சினை. எல்லாவற்றையும் களைந்துகொள்ள முடியுமா, களைந்துகொண்ட பின் என்ன மிஞ்சி

இருக்கும் என்பது பற்றி இவர் என்ன சொல்கிறார் என்பது தெரியவில்லை. சார்த்தர், காம்யூ ஆகியவர்களின் மனிதர்கள் மாதிரி இவர்கள் கலகக்காரர்களாக எழுச்சி பெறுவரா என்று தெரியவில்லை. இவளுக்கு போம் பேசத் தெரியாது. ஒரு குடிசையில் குடியிருக்க நேர்ந்தாலும் சில ரோஜாச் செடிகள் இவளுக்கு போதும். ஒரு கணவன் என்ற முறையில் ரங்கா இவளை ஆதிக்கம் செய்ய நினைக்கிறான். இவனுக்குள் இருக்கும் நடிகனை - கதாநாயகனை கல்யாணி கண்டுகொள்கிறாள். கல்யாணி இவனை வெறுக்கவில்லை. விவாகரத்துக்குப்பின் தான் நாம் நண்பர்களாக வாழமுடியும் என்கிறாள். கல்யாணி ஏற்கிறாள். கல்யாணி தனது 'நான்' பற்றி சொல்லுகிறாள். கல்யாணியின் நான் யாருக்கும் இடையூறு இல்லை. அவள் தன் 'நானை' விட்டுக் கொடுப்பதுமில்லை. ரங்கா இறுதியில் அவளைப் புரிந்து கொள்கிறான்.

'ஒரு வீடு, ஒரு மனிதன், ஒரு உலகம்' நாவலில் வரும் ஹென்றி அன்பில் ஊறியவன். அன்பைத் தருபவன். வேஷங்களை கலைத்துக் கொண்ட இவன் நிர்வாணமாகக் குளிக்கிறான். இவனுக்கு மின் விளக்குகள் தேவையில்லை. 'அகல் விளக்கு' போதும். தன் அப்பாவின் நினைவாக அவர் விட்டுச்சென்ற வீட்டைப் புதுப்பிக்கிறான். புத்தி பேதலித்த பேபி, இவன் அன்பின் பார்வையில் மீண்டும் பெண்ணாகிறாள்; மனுசியாகிறாள். வெட்ட வெளியில் வேஷங்கள் களைந்து மனிதர்கள் இயல்பாக வாழ்தல் வாழ்வின் சிறந்த அர்த்தம். வாழ்க்கை இவ்வளவு இயல்பாக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் இறுகக் கட்டிக்கொண்ட நம் சமூகச் சூழலில் இத்தகைய வாழ்க்கை பற்றிய பார்வைக்குத் தேவை இருக்கிறது. 'நான்' அற்றுப்போவது இந்தியாவின் தத்துவ மரபு. 'இருத்தலியல் கலை'யில், இருத்தலியல் அவலம் பற்றி தீவிரமாகப் பேசும் கலையை எதிர்மறைக் கலையென்றும், இருத்தலியல் அவலத்திலிருந்து ஒரு சரியான தேர்வின் மூலம் விலகிச் செல்வதை உடன்பாட்டுக் கலையென்றும் காலின் வில்சன் குறிப்பிடுகிறார். இந்த ஹென்றி சில சூழல்களில் கலகக்காரனாக மாறுவான். 'விழுதுகள்' நாவலில் வரும் ஓங்கூர்ச்சாமியையும் இங்கு நினைவு கூறலாம். தன்னிடம் வரும் ஒரு பெண்ணுக்கு தன் சீடன் மூலம் ஒரு குழந்தை தேவை. அந்தப் பெண் உடலை விற்று வயிறு பிழைக்கிறவள். அவள் விருப்பத்தை ஒப்புக்கொள்ள மறுக்கும் சீடனைப் பார்த்து சாமியார் சிரிப்பாய்ச் சிரிக்கிறார். ஒரு பெண் தாய்மை அடையும் விருப்பத்தை மதிக்கிறவர் குரு. பிறவற்றை அவர் பொருட்படுத்துவதில்லை. ஜே.ஜே. தொழுநோயாளியின் முன்னிலையில் நெடுநேரம் தடுமாறுகிறான். இறுதியில் அவனைத் தேடிச் சென்று காக



போடுகிறான். இவன் மனைவி சாரம்மா தன் பெண்ணை அடித்து வதைப்பதைப் பார்க்கும்போது செயலற்று நிற்கிறான். பசு மாட்டின்மீது வெற்றிலைச் சாற்றை ஒருவன் துப்பியதைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறான். வாழ்வின் அவலம் ஜே.ஜே. வை பதற்றம் கொள்ளச் செய்கிறது. இந்த மனிதர்கள் ஏன் இப்படி ஆனார்கள்? இவர்களுக்குள் செயல்படுவது என்ன? என்பது பற்றி சிந்திக்கிறபொழுது ஜே.ஜே. நடுக்கம் கொள்கிறான். தன் வேதனை இருத்தலியல் வேதனை. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவன் கலைஞனாகவே இருந்திருக்கலாம்; சிந்தனாவாதி ஆனதுதான் இவனுக்கு அவலமாகிவிட்டது என்று மேனன் கூறுவதை நாம் புரிந்து கொள்ளலாம். ஓமனக்குட்டியை இவன் காயப்படுத்தியிருக்க வேண்டாம். முல்லைக்கல்லின் எதிர்மறை அம்சங்களில் இவன் கவனம் குவித்திருக்க வேண்டாம்; உலகின் அவலத்தை தன் அவலமாக சுமந்து திரிந்திருக்க வேண்டாம். சம்பத்தின் கனவை இவன் ஓவியமாக வரைகிறான். மிக அழகான ஓவியம். பத்மநாப சுவாமி கோவில் படிக்கட்டில் காந்தி. சுற்றிலும் சிறுவர் சிறுமியரும் விவசாயிகளும். காந்தியைப் போல் மற்றவரின் உடம்பிலும் துணியின் அளவு குறைவு. அழகான சூரிய உதயம். சூரிய ஒளியில் இந்த எளிய மனிதர்கள். எளிமையின் படிவமாகத் திகழும் காந்தி மற்றும் எல்லோருமே அற்புத அழகோடு தெரிகிறார்கள். வாழ்க்கையை இப்படி எளிய வடிவத்திற்கு ஜே.ஜே. இறக்கிவிட்டிருக்க வேண்டும். ஜே.ஜே. தனக்குள் சிந்தனாவாதி ஆகும் மலைச்சிகரத்தின் மீது தன்னை ஏற்றிக் கொண்டிருக்கிறான். தொலைதூரத்தில் மலையின் சிகரம். இவனால் ஏறி உச்சியை அடைய முடியாது. வாழ்வில் இதற்கான வாய்ப்புகள் இல்லை. சிந்தனைகளை மூட்டையாகச் சுமக்கும் கனம் அவனை அழுத்துகிறது. இறுதியில் தற்கொலையைத் தேர்ந்துகொள்கிறான். தற்கொலைத் தேர்வு இருத்தலியல் தேர்வு என்று சு.ரா. கருதியிருக்கலாம். காம்யூ தற்கொலையைத் தேர்வாகக் கருதவில்லை. வாழ்க்கை அர்த்தமற்றது என்பதை காம்யூ புரிந்துகொண்டிருந்தார். அர்த்தமற்ற வாழ்க்கையை தற்கொலையின் மூலம் முடித்துக் கொள்வது அறிவார்ந்த முறை என்றும் காம்யூ சொல்கிறார். ஆனால் காம்யூ அறிவற்ற இந்தச் சூழலிலும் வாழ்வுக்கு அர்த்தம் தருவதை விரும்புகிறார். மனித கவுரவத்தை நிலைநிறுத்த விரும்புகிறார். இருத்தலியல் தீர்வு என்று தற்கொலையைச் சொல்லமுடியுமா? மனித கவுரவத்தை நிலைநாட்டுவதென்பது இருத்தலியல் தேர்வு. 'நான்' பெருத்து ஜே.ஜே. சாகிறான்; நானை அழித்துக் கொள்வதற்காக தற்கொலை செய்து கொள்கிறான். ஒருவகையில் இது எதிர்மறைத் தேர்வு.

மனித வாழ்வு, உள்ளே உடைந்து சிதறி ஒன்றிணைக்க இயலாததாகிறது. அன்புதான் இந்த வாழ்வுக்கு ஏதாவது அர்த்தம் தரமுடியும். இணைப்பைத் தரமுடியும். இந்த நோக்கில் பல நாவல்கள் எழுதிய ஐரிஸ் மர்டாக், இருத்தலியலாளர் என போற்றப்படுகிறார். நம் சமூகச் சூழலில் வாழ்வுக்குள் சிதைவுகள் அதிகம். இந்தக் காலத்தில் இவற்றுக்குள் இணைவைத் தேட முடியாது. வண்ணநிலவனும், பிரபஞ்சனும், பாவண்ணன் போன்றவர்களும் தம் படைப்புகளில் மனிதர்களை அன்பில் நிறைக்கிறார்கள். இருத்தலியல் சிக்கல்களைத் தொடர்ந்து தோண்டித் துருவி ஆராய்வதை இவர்கள் தொடரவில்லை. இது ஒரு குறை என்பதில் ஐயமில்லை.

நாடகங்களைப் பொறுத்தவரை பாதல் சர்க்காரின் 'பிறகொரு இந்திரஜித்', 'ஊர்வலம்' முதலிய நாடகங்கள் இருத்தலியல் அவலம் சொல்கின்றன. இந்திரஜித் தன் ஆளுமை இழந்து வலிமை இழந்து கவிதை செத்து வாழ்க்கைச் சட்டகங்களில் அகப்பட்டு முகமற்றுத் திரியும் மனிதர்களில் ஒருவனாகிவிடத்தான் வேண்டும். எல்லா மனிதர்களும் ஏதாவது ஒருசில ஊர்வலங்களில் சுற்றிச் சுற்றி வருவதில் இணைந்து திரிகிறார்கள். இவர்களுக்கு முகமில்லை. பெயர்கள் இல்லை. வீடு இல்லை. தம் இருப்பிடம், பெயர் முதலியவற்றைத் தொலைத்துவிட்டு இவர்கள் அலைகிறார்கள். முத்துசாமி நாடகங்களில் இருத்தலியல் அம்சங்களை பார்க்க முடியும். நிரபராதிகளின் காலம் என்ற ஜெர்மானிய நாடகத்தை இந்த நோக்கில் நாம் பெரிதும் ரசிக்கமுடியும். ●

குறிப்பு : கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை சார்பாக நடைபெற்ற கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட கட்டுரை.



# ஞானவெளியில் ஜே. கிருஷ்ணமூர்த்தி

ஜே.கே. என்று சுருக்கமாகச் சொல்லப்படுகிற ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வாழ்வியல் விவரங்கள் பலரும் அறிந்தவை. 12-வது வயதில் அன்னிபெசன்ட் அவரை, அவரது முக ஒளி கண்டு இவனொரு அவதார புருஷன் என்றுணர்ந்து, எதிர்காலத்தில் இவன் உலகுக்கே ஆசானாக விளங்குவானென்று வேட்கை கொண்டு அவரைத் தத்து எடுத்துக்கொண்டார். 18 ஆண்டுகாலம் அவரை இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருக்கவைத்து ஆன்மீகம் உட்பட அனைத்துக் கல்வியையும் அவரைக் கற்க வைத்தார். தன் மகனைத் திரும்பப் பெற கிருஷ்ணமூர்த்தியின் தந்தை தொடுத்த வழக்கிலும் இறுதியில் அன்னிபெசன்ட் வெற்றி கண்டார். தன் தம்பியை இழந்த சோகம் கிருஷ்ணமூர்த்தியை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. பிரம்மஞான சங்கத்திலும் தொடர்புகொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியைத் தலைவராகக் கொண்டு நட்சத்திர சங்கம் (Order of Star) எனப் பல்லாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட உலகளாவிய சங்கத்தை அன்னிபெசன்ட் அமைத்துக் கொடுத்தார். கடுமையான ஆன்மீகப் பயிற்சிகளையும் இடைக்காலத்தில் கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டிருந்தார். 1929-இல் தலைவர் என்ற முறையில் நட்சத்திரச் சங்கத்தைக் கலைத்தபோது அவர் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகளைக் கீழே காண்போம் :

"உண்மை என்பது பாதையற்ற ஒரு பிரதேசம். எந்தப் பாதை வழியாகவும் அதை அடைய முடியாது. எந்தச் சமயமும் அல்லது சமயப் பிரிவும் அதை நெருங்க இயலாது. முழுமையாகவும், எந்த நிபந்தனை இன்றியும் இந்த நோக்கை நான் கொண்டுள்ளேன். எல்லையற்றதும், வரையறைகளுக்கு உட்படாததும், அடைய முடியாததுமாகிய உண்மையை அமைப்பு ஆக்க முடியாது. எந்தக் குறிப்பிட்ட பாதை வழியாகவும் பிறரை செலுத்தி இதை (உண்மையை) அடைய முடியாது. நம்பிக்கை என்பது தனிநபர் சார்ந்தது. உண்மையை அமைப்பினுள் அடக்க முயன்றால் அது இறந்ததாகிவிடும். சுருக்கப்பட்ட வடிவில் இது மதமாகிறது, மதப்பிரிவாகிறது, நம்பிக்கையாகிறது. பிறர்மீது செலுத்துவதற்குரிய வடிவமாகிறது. இதைத்தான் உலகம் முழுவதிலும் பலர்செய்ய முயற்சி செய்கின்றனர். உண்மை, பலவீனமானவர் கைகளில் விளையாட்டுக் கருவி ஆகிறது. தற்காலிகமாக மன அமைதி இழந்தவர்களுக்கு உரியதாகிறது.

"உண்மையை அமைப்பின் வழியே கீழிறக்கிக் கொண்டுவர முடியாது. தனி மனிதர் மட்டுமே மேலேறிச் சென்று இதை அடைய முடியும். மலை உச்சியை பள்ளத்தாக்கிற்குக் கொண்டுவர முடியாது. இந்த சங்கத்தைக் கலைப்பதற்கான எனது முதற்காரணம் இது. இதன்பிறகு வேறு அமைப்பை நீங்கள் உருவாக்கலாம். என்னைப் பொறுத்தவரை எந்த அமைப்பிலும் நான் இணையமாட்டேன். இப்படி உருவாக்கப்படும் எந்த அமைப்பும் ஒரு கூண்டு, ஒரு தளை. தனிமனிதனை அது முடமாக்கிவிடும். தனது தனித்தன்மையைக் கண்டறிய விடாமல் அவனைத் தடுத்துவிடும். முழுமையானதும் வரையறைகளுக்கு உட்படாததுமாகிய உண்மையை அடையவிடாமல் அவனைத் தடுத்துவிடும். ஆகவே, இந்த அமைப்பைக் கலைப்பதற்கு இது இன்னொரு காரணம்.

"இது பெருமைப்படுகிற ஒரு செயலன்று. எனக்கு சீடர்கள் வேண்டாம். இன்னொருவரைப் பின்பற்றத் தொடங்கிய உடனே நீங்கள் உண்மையை நெருங்கத் தவறுகிறீர்கள். நீங்கள் நான் சொல்வதைக் கேட்கிறீர்களா, இல்லையா என்றெனக்குத் தெரியாது. உலகில் ஒன்றை நான் செய்ய விரும்புகிறேன். இதை உறுதியோடும் தீர்க்கத்தோடும் செய்ய விரும்புகிறேன். மனிதனை விடுவிப்பது மட்டுமே எனது ஒரே நோக்கம். எல்லாக் கூண்டுகளிலிருந்தும், எல்லாவகை அச்சங்களிலிருந்தும் மனிதனை விடுவிக்க விரும்புகிறேன். இதற்காக ஒரு சமயத்தை நான் உருவாக்க விரும்பவில்லை. புதிய கோட்பாடுகளை படைக்கவும் விரும்பவில்லை. பின் உலகம் முழுவதும் நான் ஏன் பயணம் செய்கிறேன் என நீங்கள் கேட்கலாம். சீடர்களை உருவாக்குவது - இன்னொரு அமைப்பை உருவாக்குவது எனது நோக்கமல்ல. எனக்கு சீடர்களில்லை. தூதுவர்களில்லை. செல்வத்தையோ, வசதியான வாழ்க்கையையோ நான் விரும்பவில்லை. இதுவரையிலான எனது செயல்பாடுகளுக்கு இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன். குழந்தைத்தனமான விவாதங்களில் ஈடுபட நான் விரும்பவில்லை.

"பல்லாயிரம் பேர்களைக் கொண்ட இந்த வசதியான அமைப்பைக் கலைத்தபிறகு எல்லாவற்றையும் இழந்த நிலையில் நான் என்ன செய்யமுடியும் என்று கேட்கலாம். என்னுடைய பேச்சை இனி யாரும் கேட்க மாட்டார்கள். நான் எப்படி வாழமுடியும் என்றும் என்னைக் கேட்கலாம். ஒரு ஐந்துபேர் நிரந்தரத்தைத் தேடித் தம் முகங்களைத் திருப்புவார்கள் என்றால் எனக்கு அது போதும். எதையும் புரிந்து கொள்ளாத ஆயிரம் பேர்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது? புதியது எதையும் விரும்பாத - விருப்பு



வெறுப்புக்களோடு வாழ்கிற - வரும் புதியது எதையும் தம் வசதிக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்கிற இந்த ஆயிரம் பேர்களை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? மலட்டுத்தன்மையும் தேக்கமும் நிறைந்த பக்குவப்படுத்தப்பட்ட இந்த மனிதர்களைக் கொண்டு என்ன செய்ய முடியும்? முழுமையான உண்மையோடுதான் நான் உறவு கொள்ள விரும்புகிறேன். பகுதிகளோடு எனக்கு உறவில்லை. என்னைப் புரிந்து கொள்ளுங்கள். என்னோடு அமர்ந்து சுதந்திரமாக உரையாடுபவர்களையே விரும்புகிறேன். என்னை யாரும் பின்பற்ற வேண்டாம். எனது வழியாக ஒரு கூண்டை அவர்கள் தயாரிக்க வேண்டாம். மதம் என்னும் அச்சத்திலிருந்தும், விமோசனம் என்ற அச்சத்திலிருந்தும், ஆன்மீகம், அன்பு, சாவு, பொதுவாக வாழ்க்கை எனும் அச்சங்களிலிருந்தும் விடுதலை பெற விரும்புபவர்களையே நான் நாடுகிறேன். ஒரு ஓவியன் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்காக ஓவியம் வரைவதைப்போல நானும் இயங்க விரும்புகிறேன். நான் எதையும், யாரிடமிருந்தும் பெற விரும்பவில்லை.

"நீங்கள் அதிகாரத்திற்குப் பழக்கப்பட்டவர்கள். ஆன்மீகத்திற்கு குருவின் அதிகாரம் உங்களை வழிநடத்தும் என்று நீங்கள் நம்புகிறீர்கள். அசாதாரணமான சக்திகளைக் கொண்ட இன்னொருவர் உங்களை சுதந்திரத்திற்கும், இன்பத்திற்கும் அழைத்துச் செல்வார் என்று நம்புகிறீர்கள். வாழ்வு பற்றிய உங்கள் கண்ணோட்டம், அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. மூன்றாண்டுகள் என் பேச்சை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஒருசிலர் தவிர உங்களிடம் எந்த மாற்றமும் இல்லை. நான் சொல்வதைப் புரிந்து கொள்ளுங்கள். திறனாயும் உணர்வோடு இருங்கள். அப்பொழுதுதான் முழுமையாகவும், அடிப்படையாகவும் நீங்கள் புரிந்து கொள்ள முடியும். பதினெட்டு ஆண்டுகளாக என்னை உலகின் ஆசானாகப் பார்க்க விரும்பி எவ்வளவோ செய்தீர்கள். உங்கள் அறிவுக்கும், உணர்வுக்கும் புதிய எழுச்சியை நான் தருவேனென்று எதிர்பார்த்தீர்கள். புதிய தளத்தை நோக்கி உங்கள் வாழ்வை உயர்த்தவல்ல ஒருவரை எதிர்பார்த்தீர்கள். இப்பொழுது என்ன நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இந்த நம்பிக்கை உங்களை என்னவாக மாற்றியிருக்கிறது? வாழ்வுக்குத் தேவையில்லாத எவற்றைக் கைவிட இந்த நம்பிக்கை உங்களைத் தூண்டியிருக்கிறது? இந்த அளவுகோல் கொண்டுதான் இப்பொழுது தீர்வு சொல்லமுடியும் : எந்த வகையில் நீங்கள் சுதந்திரம் மிக்கவர்களாக இருக்கிறீர்கள்? ஒரு பொய்யான - தேவையில்லாத வாழ்க்கை வசதிகளோடு கூடிய எந்தச் சமூகத்திற்கு நீங்கள் ஆபத்தானவர்களாக மாறியிருக்கிறீர்கள்? இந்த நட்சத்திர சங்கம்

எந்த வகையில் பிற அமைப்பிலிருந்து வேறுபட்டிருக்கிறது? ஆன்மீகத்திற்காகவும், இன்பத்திற்காகவும், அறிவு மலர்ச்சிக்காகவும் இன்னொருவரை நீங்களும் எதிர்பார்த்தீர்கள். அறிவு மலர்ச்சிக்கு உங்களுக்குள்ளேயே பாருங்கள். இதன்மூலமே களங்கமற்றவராக, ஒளி மிக்கவராக நீங்கள் மாறமுடியும் என்று நான் கூறினேன். ஒருவர்கூட இதைச் செய்யவில்லை. இதற்காக ஏன் ஒரு அமைப்பு? வெளியிலிருந்து எவரும் விடுதலை உடையவராக உங்களை மாற்ற முடியாது. கடிதம் எழுத ஒரு தட்டச்சுப்பொறியை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். ஆனால் அதை ஒரு பீடத்தில் வைத்து நீங்கள் வழிபடுவது இல்லை. அமைப்புக்களை இப்படித்தான் நீங்கள் வழிபடுகிறீர்கள். இன்ப உலகத்திற்குள் உங்களை அழைத்துச் செல்வதற்கான திறவுகோல் இன்னொருவர் கையில் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்கள். உங்களிடம்தான் அந்தத் திறவுகோல் இருக்கிறது. ஆன்மீகத்தின் படிகளில் உங்களை வழிநடத்த, உங்களின் ஆன்மீகத்தரத்தை மதிப்பிட ஒரு குருவை நம்புகிறீர்கள். இப்படித் தீர்மானிக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. உங்களுக்கு நீங்களேதான் ஒளியாக இருக்க முடியும். இப்படி சில காரணங்களுக்காக, இரண்டாண்டுகளுக்கு மேல் பலமுறையும் எண்ணியே நான் இந்த அமைப்பைக் கலைக்கிறேன்".

இப்படி கிருஷ்ணமூர்த்தி அறிவித்தபோது 'அம்மா' என்று அவர் இறுதிவரை மதித்துப் போற்றிய அன்னிபெசன்ட் அதிர்ச்சி அடைந்தார். பல்லாயிரம் பேர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. நெருங்கிய நண்பர்கள்கூட அவரைக் கைவிட்டனர். 1986–இல் 90வது வயதில் அவர் இறக்கும்வரை தன் பாதையில் இருந்து அவர் பிறழவில்லை. அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா என்று பல நாடுகளிலும் அவர் இடையறாது பயணம் செய்தார். தன்னை ஒரு ஆசான் என்று பலர் அழைப்பதை அவர் வரவேற்கவில்லை. தான் படைப்பது ஒரு தத்துவம் என்று அவர் சொல்லவில்லை. பலரோடு சேர்ந்து நான் உரையாடுகிறேன் என்றார். நாம் பகிர்ந்து கொள்கிறோம் என்றார். சிந்தனை / சிந்தித்தல் என்பதை கடந்து செல்வதில் அவர் காட்டிய முனைப்பு தீவிரமானது. எனினும், கிருஷ்ணமூர்த்தியின் எண்ணங்கள் முதலியவற்றைக் குறித்துப் பெயரிடும்பொழுது, தத்துவம் என்ற சொல்லை அல்லது ஞானம் என்ற சொல்லை அல்லது குறைந்த அளவுக்கேனும் சிந்தனைகள் என்ற சொல்லை பலர் பயன்படுத்துகின்றனர். என்னதான் கிருஷ்ணமூர்த்தி விரும்பாவிட்டாலும், அவருக்கும் சீடர்கள் உருவாகினர். அவர் பெயரிலும் நிறுவனங்கள் உருவாயின, செயல்படுகின்றன. கிருஷ்ணமூர்த்தியின் நெறியில் கல்வி நிறுவனங்களும் செயல்படுகின்றன.



இவை பற்றி உடனடியான மதிப்பீட்டிற்கு இப்பொழுது நாம் செல்ல வேண்டியதில்லை.

கிருஷ்ணமூர்த்தியின் ஞானத்தைப் புரிந்து கொள்ள அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றிப் பிறர் எழுதியுள்ள சில நூல்கள் நமக்குப் பயன்படுகின்றன. கிருஷ்ணமூர்த்தியை சந்திக்கவும், அவரோடு உரையாடி அறிவு மலர்ச்சி பெறவும் உலகம் முழுவதும் சமயவாதிகளும், விஞ்ஞானிகளும், சிந்தனையாளர்களும் அவரைத் தேடி வந்தவண்ணம் இருந்தனர். அவர்களோடு நடத்திய உரையாடல்கள் பல பதிவு செய்யப்பட்டு நூல் வடிவில் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றைவிட கிருஷ்ணமூர்த்தி எழுதி வைத்துள்ள குறிப்பேடுகள், கிருஷ்ணமூர்த்தியை அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படும் ஆதாரங்கள். கவித்துவம் நிரம்பியவர் கிருஷ்ணமூர்த்தி. இயற்கைச் சூழலில் எப்பொழுதும் அவர் கரைந்து விடுபவர். இயற்கை பற்றி அற்புத வர்ணனைகளோடு அவர் கண்ட காட்சிகள், சந்தித்த மனிதர்கள், அவர்களோடு நடத்திய உரையாடல்கள் பற்றி எல்லாம் இந்தக் குறிப்பேடுகளில் அழகான நடையில் செறிவாகவும், சிறப்பாகவும் கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ளார். எந்த மொழி இலக்கியத்திற்கும், இந்தக் குறிப்பேடுகள் தனித்தன்மையோடு கூடிய பங்கைச் செலுத்துபவை. கிருஷ்ணமூர்த்தி குறித்தும், அவரது சிந்தனைகள் குறித்தும், பிறர்மீது 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அவரது தாக்கம் குறித்தும் சில நூல்கள் வெளிவந்துள்ளன. அவர் இறந்தபிறகு அவரது பாலியல் வாழ்க்கை குறித்த விவரிப்புகளோடு வெளிவந்த நூல் ஒன்று பலருக்கு அதிர்ச்சி அளிக்கத்தான் செய்தது. தமிழிலும் அவரது கட்டுரைகளும், நூல்களும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அவரது சிந்தனைகள் இன்று ஆயிரக்கணக்கானவர்களால் விருப்பத்தோடு கற்கப்படுகின்றன. கிருஷ்ணமூர்த்தி இவர்களுள் பெரும் கிளர்ச்சி ஏற்படுத்துகிறார். இத்தகைய கிளர்ச்சியை அவர் விரும்பவில்லை. தன் தேடலில், தன்னோடு இணைபவர்களைத்தான் அவர் நாடினார். தன்னைப்பற்றி, தன் வாழ்க்கை குறித்து அவர் எதையும் பேசக்கூட விரும்பவில்லை. தான் என்பதை முற்றிலுமாகக் கைவிட்டதாக அவரை நாம் பார்க்க முடியும். 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில், அவரது சிந்தனையின் தீவிரம் மதிக்கத்தக்க தாகத்தான் இன்றும், நாளையும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கிருஷ்ணமூர்த்தி 18 ஆண்டுகள் ஆன்மீகப் பயிற்சி உட்பட அனைத்துவகை அறிவார்ந்த அனுபவங்களில் விளைந்தவர்.

கிருஷ்ணமூர்த்தி பற்றிப் பேசும்போது அவரது சொற்களிலேயே நம்மால் பேசுவதுகூட சாத்தியமில்லை. அவர் எப்பொழுதும் விடுதலை என்றும், உண்மை என்றும், விழிப்புணர்வு என்றும் பேசுவார். அறிவு அல்லது சிந்தனை என்பதை அவர் எப்பொழுதும் ஒதுக்கினார். பல்லாண்டுகளாக மனிதனின் மனத்தை சிந்தனைகள் உருவாக்கியுள்ளன. சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்ட மனம் என்பது கட்டுப்பட்ட மனம், பக்குவப்படுத்தப்பட்ட மனம். கட்டுப்பட்ட மனம் விடுதலை நோக்கி இயங்க முடியாது. இந்த மனத்திற்குள் உண்மை வசப்படாது. உயர்ந்தது - தாழ்ந்தது, நல்லது - கெட்டது முதலிய பிளவுகளைக் கொண்டது இந்த மனம். பிளவுபட்ட மனத்திற்கு உண்மை என்ற முழுமை அகப்படாது. பல்லாயிரம் ஆண்டுகளாக உருவாகி வந்துள்ள மதங்களும், நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் தர்க்கம் முதலியனவும் மனித மனத்திற்குள் சுமையாகத் தங்கியுள்ளன. இறந்த காலம்தான் மனம் செயல்படும் காலம். இறந்த கால அனுபவங்கள் மற்றும் நினைவுகளில் இருந்தே எதிர்காலம் கட்டமைக்கப்படுகிறது. இலட்சியங்களும், நோக்கங்களும் உருவாகின்றன. காலத்திற்குக் கட்டுப்பட்ட மனம், காலத்தைக் கடந்து செல்ல முடியாது.

ஒவ்வொருவரும் குழந்தைப்பருவம் முதல் பெற்றோர் முதலியவர்களால் தனக்குள் செலுத்தப்படுகின்ற மதம், கொள்கைகள், சிந்தனை முறைகள் ஆகியவற்றோடு தான் வாழ்கிறார். மனிதன் பெறும் அனுபவங்கள் என்பவை கற்றுக் கொடுக்கப்பட்ட உணர்வுகள் முதலியவற்றின் மூலமே அமைகின்றன. கடவுளர் முதலிய உணர்வுகளும் இவ்வாறுதான் மனத்திற்குள் சென்று தங்குகின்றன. கடவுளர் பற்றிய இந்த உணர்வு திரும்பத் திரும்ப நினைவின் மேல் தளத்திற்கு கொண்டுவரப்படுவதன் மூலம் ஒரு இன்பக் கிளர்ச்சி கிடைக்கிறது. இந்தக் கிளர்ச்சியை திரும்பத் திரும்ப பெற மனிதன் விரும்புகிறான். இதற்காகவே மந்திர உச்சாடனங்கள், சடங்குகள் முதலியவற்றை மேற்கொள்கிறான். இந்த இன்பக் கிளர்ச்சியை மேலும், மேலும் பெற, வரையறுக்கப்பட்ட தியானத்தை வழங்கும் குருக்களை நாடிச் செல்கிறான். தன் மனத்தைத் தானே வசியப்படுத்திக் கொண்ட மனிதனுக்கு இத்தகைய இன்பக் கிளர்ச்சிகளும், குருமார்களும், புத்தகங்களும் தேவைப்படுகின்றன. இவற்றில் புதியது இல்லை. இது ஒருவகையான போதை என்பதைத் தவிர சொல்வதற்கு வேறு இல்லை. மதம் இப்படித்தான் மனிதனை சுய மயக்கத்திற்கு உள்ளாக்கி வைத்திருக்கிறது. மதமோ, குருமார்களோ உண்மைக்கு வழிவிட மாட்டார்கள்.



கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளில், அவர் கூறும் உண்மையை உணர்வதற்கான முதற்படி என்று, அவர் குறிப்பிடும் விழிப்புணர்வை நாம் கருதமுடியும். முற்றிலும் நிகழ்வில் / நிதர்சனத்தில் இருத்தல் என்பது தான் இந்த விழிப்புணர்வு. இறந்த காலம், பழையது, எண்ணங்கள் என்பவைகளிலிருந்து முற்றிலும் ஒருவர் விலகி நிற்க வேண்டும். விழிப்புணர்வின் தொடர்ச்சியில் முதற்கட்டம், தன்னறிவைப் பெறுதல். நான் என்பது பற்றிய அறிவு தன்னறிவு. மனிதன் பல்லாயிரம் ஆண்டு வாழ்வனுபவங்கள் வழியே தன்னை ஆன்மாவென்றோ, தன்னை இந்தியன் / தமிழன் என்றோ, தன்னை இந்து / முகலிம் என்றோ அடையாளப்படுத்தி இருக்கிறான். இந்த அடையாளங்கள் அவனை சிறைப்படுத்தி இருக்கின்றன. சில இலட்சியங்களில் மனிதன் தன்னைக் காண்கிறான். சமயவாதம் போலவே, முதலாளியம், கம்யூனிசம் என்பனவும் இந்த இலட்சியங்கள். நான் சான்றோன் என்று தன்னை மதிப்பதும் ஒரு இலட்சியம். உயர்ந்தது, தாழ்ந்தது முதலிய வரையறைகளோடுதான் இந்த அடையாளப்படுத்தல்கள் முதலியன அமைகின்றன. உயர்ந்தது என்பது தாழ்ந்தது என்பதை ஒடுக்குகிறது. இந்தியன் தமிழனை ஒடுக்குகிறான். மனத்தின் இத்தகைய இயங்குதலில் வன்முறை உருவாகிறது. போர் முதலியன இதன் வெளிப்பாடுகள். இன்பநாட்டம் என்பது மனத்தின் இன்னொரு இயல்பு. பாதுகாப்பு என்பதும் ஒரு இயல்பு. தனக்கின்பம் வேண்டும். தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக மனிதன் அமைப்புக்களை உருவாக்குகிறான். குடும்பம், அரசு, முதலாளியம் முதலியனவும் இத்தகைய அமைப்பு முறைகள். இவை அனைத்துமே மனிதனை சுருக்கக் கூடியவை. இவற்றோடுதான் மனம் இயங்குகிறது. சிந்தனைகள் மற்றும் உணர்வுகள் மற்றும் நினைவுகளின் தொகுப்புத்தான் மனம். இந்த மனம் என்பது காலத்தில் உருவானது. இறந்த காலத்தின் உருவாக்கம் இந்த மனம். இவற்றிலிருந்து 'நான்' என்பதைப் பிரித்துக் காணமுடியுமா? ஆகவே நான் என்பதன் தேட்டத்தின் வழியே மனத்தைக் கடந்து செல்ல வேண்டும். எண்ணங்களால் உருவாக்கப்பட்ட மனத்தை எண்ணத்தைக் கொண்டு கடக்க முடியாது. மனத்தை / எண்ணங்களைத் துறந்த நிலையில்தான் உண்மையின் ஒளி நமக்குக் கிட்டும்.

கிருஷ்ணமூர்த்தி இடைவிடாமல் கூர்ந்து நோக்கல், கூர்ந்து கேட்டல் பற்றிப் பேசுகிறார். கூர்ந்து நோக்கல் என்பது முழுமையாக நோக்கல். வேறு எதுவும், எந்தச் சிந்தனையும் இடையில் வரக்கூடாது. ஒரு பொருளைச் சரியாகப் பார்த்தல் என்பது இத்தகைய கூர்ந்து நோக்கலின் வழியேதான் சாத்தியம். விஞ்ஞான முறையில் காண்பது என்று கூட இதை

அவர் குறிப்பிடுகிறார். முழுமையாகப் பார்க்கும்போது பார்க்கப்படுவது எதுவோ அதுமட்டுமே இருக்கும். பார்ப்பவர் – பார்க்கப்படும் பொருள் என்ற வேறுபாட்டுக்கு இடம் இல்லை. பார்க்கப்படுவது மட்டுமே இருக்கும். கிருஷ்ணமூர்த்தியின் குறிப்பேடுகளிலிருந்து ஒரு காட்சியை இங்கு குறிப்பிடலாம். இயற்கைக் காட்சிகள் நிறைந்த ஒரு மலைப்பாதை வழியே கிருஷ்ணமூர்த்தி செல்கிறார். பறவைகளின் பல்வேறு ஓசைகள் அவர் செவியில் விழுகின்றன. பாதையில் கார்கள் ஒலி எழுப்பிக்கொண்டு செல்கின்றன. தொடர்ந்து நடந்து செல்லும்போது, வெட்டவெளியை முழுவதும் நிறைப்பதைப் போன்று மஞ்சள்நிறப் பூக்கள் மலர்ந்துள்ள ஒரு வெட்ட வெளியை அவர் காண்கிறார். அதை உற்று நோக்குகிறார். இப்படி நோக்கும்பொழுது கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகிறார் : மஞ்சள்வெளி மட்டும் இருந்தது. பறவையின் ஒலி இல்லை. கார்களின் ஒலியும் இல்லை. அதுமட்டுமே இருந்தது. உற்றுநோக்கல், முழுமையாகக் காணல் என்பது இது. இங்கு நானில்லை. கிருஷ்ணமூர்த்தியின் கருத்துப்படி ஆன்மா இல்லை. பரமாத்மா இல்லை. நானைக் கடந்தால் மட்டுமே உண்மை. புத்தகங்களில் இருந்து, குருமார்களிடமிருந்து இதைப் பெற முடியாது. கிருஷ்ணமூர்த்தி புத்தகப் படிப்பை நம்புவதில்லை. வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, பைபிள் என்று பிறர் மேற்கோள் காட்டுவதை அவர் ஏற்பதில்லை. ஒவ்வொருவரும், தானே அதை உணர வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத்தானே ஒளியாகிறார். இந்த ஒளியை அமைப்புக்களில் அடைக்க முடியாது, சிறைப்படுத்த முடியாது. இதை விற்க முடியாது, வாங்க முடியாது. தியானம் என்று கிருஷ்ணமூர்த்தியும் பேசுகிறார். இன்பக் கிளர்ச்சிகளை ஒவ்வொரு நாளும் ஊட்டிக் கொள்வதற்காகச் செய்யும் தியானம் அவருக்கு உடன்பாடில்லை. தியானம் என்பது அவரைப் பொறுத்தவரை முழுமையாக நோக்கல் ; உண்மையை உணர்தல்.

உண்மைகள் பல என்று கிருஷ்ணமூர்த்தி சொல்வதில்லை. அவருக்கு ஒன்றுதான் உண்மை. மனம் என்பதன் பிளவுகளைக் கடந்து உற்று நோக்கும்பொழுதுதான் உண்மை தென்படுகிறது. அந்த உண்மையை அன்பென்று சொல்கிறார், கருணை என்று சொல்கிறார், அதற்குப் பெயர் இல்லை, எல்லை இல்லை. அது பூரணம். எங்கும் நிறைந்தது. கிருஷ்ணமூர்த்தியிடம் உரையாட வந்த ஒரு வேதாந்தி, நீங்கள் சொல்லும் "The unknown' – அறியப்படாதது, 'The Nameless' – பெயரில்லாதது', 'The Immeasurable' – அளவிடமுடியாதது – என்பதைத்தானே வேதங்களும், உபநிடதங்களும் கூறியிருக்கின்றன என்று கேட்கும்பொழுது



அவர் மறுக்கிறார். கிருஷ்ணமூர்த்தியிடம் மதச்சார்பு அறவே இல்லை. தன்னை இந்துவாகவும் ஒருபோதும் கருதவில்லை. பிரம்மஞான சங்கத்தின் செயற்பாடுகளில் அவருக்கு உடன்பாடு இல்லை. கிருஷ்ணமூர்த்தி சிலசமயம் உள் ஒளி (Insight) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். எண்ணங்களிலிருந்து முற்றாக விடுபட்ட நிலையில் செயல்படுவது உள்ஒளி. ஆப்பிள் தரையில் விழுந்தபோது புவியின் ஈர்ப்பு மட்டுமல்லாமல் அண்டம் முழுவதும் இயங்குவதாகிய ஈர்ப்பு விசையை நியூட்டன் கண்டறிந்தது இத்தகைய உள்ஒளி மூலம் என்று கிருஷ்ணமூர்த்தி ஆய்வாளர் ஒருவர் எழுதுகிறார். Intuition – உள் உணர்வு என்பதை கிருஷ்ணமூர்த்தி ஏற்கவில்லை. மனத்தை மேல் மனம், அடிமனம் என்று பிரிப்பது அவருக்கு உடன்பாடில்லை. மனத்தைப் பிளக்கும் முயற்சி இது என்கிறார் அவர். உடலும், மனமும் ஒன்றாக இணைந்தே செயல்படுகின்றன. மன ஆரோக்கியம் போலவே உடல் நலமும் முக்கியம். நேரிய எண்ணங்களால் உலகியல் சிறக்கும் என்பதை அவர் மறுக்கவில்லை. எண்ணங்கள் இப்படி நேரிய முறையில் செயல்படும்போதே, எண்ணங்களிலிருந்து / அறிந்தவைகளில் இருந்து விடுபடல் தேவை என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. வன்முறையை எந்த வடிவிலும் அவர் ஏற்பதில்லை. பொருளையும், அதிகாரத்தையும் குவிப்பதற்கு எதிரானவர் கிருஷ்ணமூர்த்தி. இன்ப நுகர்வு நாட்டத்தை அவர் ஏற்கவில்லை.

மனம் வீரியமுடையதாக இருக்க வேண்டும். இந்த வீரியத்தின் இயங்குதலில்தான் விழிப்புணர்வு சாத்தியம். போட்டி, பொறாமை, அரட்டை, வெட்டி விவாதங்கள், சதி, வஞ்சகம் முதலியவை மனத்தின் வீரியத்தை குறைக்கின்றன / அழிக்கின்றன. மது, போதை முதலியனவும் மனத்தை மந்தமாக்குகின்றன. மந்திர உச்சாடனங்கள், குருவழிபாடு, கடவுள் வழிபாடு முதலியனவும் மனத்தின் வீரியத்தைக் குறைத்து சுற்றுப்புற உலகத்தோடு மனிதனை ஒத்தியங்க வைக்கின்றன. உண்மையை மனிதன் தேடிச் செல்ல விடாது இடைவழியில் மனிதனை இவை தடுக்கின்றன. மனிதனின் பயணத்தை இவை தடம் மாற்றுகின்றன. கடைத்தெருவின் கூச்சல்களுக்கு இடையிலும், புல்லாங்குழல் வாசிப்பதில் ஒன்றியிருக்கும் ஒரு உழைப்பாளி பற்றி அவர் குறிப்பிடுகிறார். உழைப்பாளிகள் பலரும் அவரைச் சூழ அமர்ந்து புல்லாங்குழல் இசையில் தம்மை மறக்கின்றனர். இத்தகைய உணர்திறன் உழைப்பாளிக்கு இருக்கிறது; நிறைய பொருள் சேர்த்து குவித்தவனிடம் இல்லை என்று குறிப்பிடுகிறார் கிருஷ்ணமூர்த்தி. இத்தகையவர்களை நோக்கி, நீங்கள்தானே உலகில் போர்களையும், வன்முறைகளையும் தூண்டுகிறீர்கள் என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டு

வைக்கிறார். பொருள் மற்றும் பல வகைப் போதைகளுக்கு இடம் கொடுப்பதன் மூலம் மனம் எவ்வாறு பதப்படுத்தப்படுகிறது என்பது குறித்துப் பேசும் கிருஷ்ணமூர்த்தி, இத்தகைய பதப்படலில் (Conditioning) இருந்து நம் குழந்தைகளை விடுவிப்பதாகிய கல்விமுறை குறித்துப் பேசினார்.

மேலும் ஒன்று : மனத்திலிருந்து பெறும் விடுதலை ஒரு பாய்ச்சலாக கணத்தில் நிகழ்கிறது. அன்பு / கருணை பொங்குகிறது. அன்பையும், கருணையையும், உடனடியாக செயல்படுவதிலிருந்து பிரிக்க முடியாது. அன்பு தான் தோன்றிய கணத்திலேயே செயல்படும். இப்படிச் செயல்படுவதைத் தள்ளிப் போடுவதற்காகவே சித்தாந்தங்கள் என்கிறார் கிருஷ்ணமூர்த்தி. தன் தங்கையின் திருமணத்திற்காகப் பெருஞ்செலவு செய்ய விரும்பும் ஒருவன் வறுமையில் வாடும் ஏழை ஒருவனைக் காணும்பொழுது, என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டியதில்லை. அன்பு செயல்படும். நமக்குள் பொங்கி எழும் சோகம் (Sorrow) பற்றியும் கிருஷ்ணமூர்த்தி அடிக்கடி பேசுகிறார். புத்தரின் சோகத்தோடு கிருஷ்ணமூர்த்தியின் சோகத்தை ஆய்வாளர் அடையாளப்படுத்துகின்றனர். இது மாபெரும் சோகம். இந்த சோகத்தை நீக்குவதற்காக போதி சத்துவர் தன் நிர்வாண நிலையில் இருந்து கீழிறங்கி வந்தார் என்று நாம் படிக்கிறோம். கிருஷ்ணமூர்த்தியும் சங்கத்தைக் கலைப்பதற்கு முன்பு சமாதி நிலையை அடைந்தார் என்று சிலர் கூறுவதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். அமைப்புக்கள் அதிகார நிறுவனங்களாக மாறி சமூகத்தின் அமைதியை சீர்குலைப்பது குறித்து கிருஷ்ணமூர்த்தி அறிந்திருக்கிறார். மைத்ரேயி என்ற அவதாரத்தை கிருஷ்ணமூர்த்தியின் வழியே எதிர்பார்த்தார் அன்னிபெசன்ட். ஆனால், அமைப்பைக் கலைத்த நிலையில், அந்த அவதாரத்தின் சில கூறுகள்தான் கிருஷ்ணமூர்த்தியின் வழியே தெரிகின்றன; அவர் முழுமையான அவதாரமில்லை என்றும் அன்னிபெசன்ட் கூறினார்.

கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளை ஒருவாறு இப்படித் தொகுத்துக் கொள்கிறோம். இது நமக்கான தொகுப்பு. நம் பார்வையின் வழியே இடம்பெறும் தொகுப்பு. கிருஷ்ணமூர்த்தியை சிலசமயங்களில் நம்மால் எட்டித் தொட முடிவதில்லை. கிருஷ்ணமூர்த்தி குறித்து எத்தகைய புரிதலுக்கும், மதிப்பீட்டுக்கும் நாம் வரும்பொழுது நமது வரையறைகள் குறித்தும் நாம் கவனமாகத்தான் இருக்க வேண்டும். 20-ஆம் நூற்றாண்டுச் சூழலில் கிருஷ்ணமூர்த்தியின் ஆக்கம் மற்றும் இடம் குறித்து இனிப் பார்க்கலாம்.



20-ஆம் நூற்றாண்டு, முன்னைய எந்த நூற்றாண்டைக் காட்டிலும் தொழில் பெருக்கமும், அரசு அதிகாரமும், பொருளாதார நெருக்கடிகளும் கடுமையான போர்களும் நடைபெற்ற நூற்றாண்டு. இந்த நூற்றாண்டில் நுகர்வியம் உச்ச அளவில் தூண்டப்படுகிறது. நவீன அறிவியலும், தொழில்நுட்பமும் இந்த நூற்றாண்டில் கண்ட வேகம் பிரமிப்புக்குரியது. அதேசமயம் போர்க் கொடுமைகளுக்கும், அரசு அதிகாரப் பெருக்கத்திற்கும் இந்த அறிவியலும், தொழில்நுட்பங்களும் காரணமாக அமைகின்றன. பெரும் அளவில் விஞ்ஞானிகளையும் அரசு அதிகாரிகளையும், அறிவாளிகளையும் கலைஞர்களையும் இந்த நூற்றாண்டு தோற்றுவித்தது. இவர்கள் அனைவரும் அரசு ஆதிக்கத்துக்கும், பொருள் பெருக்கத்திற்கும் உதவியாக இருந்தார்களேயொழிய இவற்றுக்கு எதிராக இவர்கள் செயல்படவில்லை. நுகர்வியத்திற்கு இவர்கள் தம்மை பலியிட்டுக் கொண்டார்கள். பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசு அதிகாரப் பெருக்கம் நேர்ந்த அளவுக்கு மத நிறுவனங்களும் தம்மைப் பலப்படுத்திக் கொண்டன. மக்கள் மனத்தில் புதிய பிரம்மைகளை இவர்கள் தோற்றுவித்தார்கள். அணுவின் தகர்ப்பை அடுத்து பிரபஞ்ச அளவில் சக்தியின் ஆதிக்கத்தை இவர்கள் கொண்டாடினார்கள். மத நிறுவனங்கள் தம் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டனவே ஒழிய வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு எதிராக இவர்கள் செயல்படவில்லை. கடவுளர்களைக்கூட இவர்கள் கைவிட்டார்கள். பணமும், அதிகாரமுமே இவர்களுக்குக் கடவுளராயின. கடவுள் இறந்துவிட்டார் என்ற குரல் முன்னைய நூற்றாண்டில் எழுந்து, இந்த நூற்றாண்டில் பலம் பெற்றது. உளவியல் ஆய்வில் புதிய போக்குகள் எழுந்தன. கலைத்துறையிலும், சிந்தனை முறையிலும் எத்தனையோ புதிய போக்குகள். வன்முறையை உள்ளடக்கியதாகத்தான் பகுத்தறிவு முதலியனவும் செயல்பட்டன.

சோவியத் யூனியனில் புரட்சி ஏற்பட்டு சோசலிசம் என்ற புதிய போக்கு உலக வரலாற்றுக்கு அறிமுகமாயிற்று. சோசலிசம் உலக அமைதியைக் கொண்டுவரும் என எல்லோரும் நம்பினர். எதிர்பார்த்த நம்பிக்கைகள் உருப்பெறவில்லை. முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டது சோசலிசம். விழிப்புணர்வின் ஒரு கட்டத்தில் மனிதனுக்குள் நேர்வது சோகம். இதன் மறுபக்கம் கருணை. கருணை உடனடியாக செயல்பட வேண்டும். உலகில் வறுமை, போர் முதலிய கொடுமைகளிலிருந்து மனித சமூகத்தை விடுவிக்க வேண்டும். இந்த ஞானம் வந்தவுடன் கிருஷ்ணமூர்த்தி என்ன செய்ய வேண்டும்? புதிய அமைப்பை ஏற்படுத்தவா? அதற்குள்ளும் அதிகாரம் இடம்பெறுமே. என்ன செய்வது? இது கிருஷ்ணமூர்த்திக்குரிய இடமன்று.

கிருஷ்ணமூர்த்தி வெளியில்தான் நிற்பார். புதிய ஒளி எப்பொழுதும் அவர் முகத்தில் தவழும். கிருஷ்ணமூர்த்தியின் ஒளி ஊடுருவலோடு நாம் தான் மேற்செல்ல வேண்டும். மிக கவனமாக - பொறுப்போடு - விழிப்புணர்வோடு நாம் செல்ல வேண்டும்.

இறுதியாக, இன்னுமொன்றை நாம் சொல்ல வேண்டும். எண்ணங்கள்தான் மனத்தைப் பிளக்கின்றன, வன்முறையைத் தூண்டுகின்றன என்பது கிருஷ்ணமூர்த்தியின் 'ஆதாரக் கருத்து. இயற்கையோடு மனிதன் ஒன்றியிருந்த அந்த ஆதிப்பொதுமைச் சமூகச் சூழலில், எண்ணங்கள், சிந்தனைக் கட்டமைப்புக்கள் இல்லை. ஏற்றத்தாழ்வுகள், வர்க்க வேறுபாடுகள், உடைமை, அரசு, குடும்பம் எனத் தொடர்ந்து பெருகிய சூழலில்தான் சிந்தனைகளும், கருத்தியல்களும், இவற்றுக்கிடையில் மோதல்களும் ஏற்பட்டன. உயர்வு - தாழ்வு முதலிய வேறுபாடுகள், முரண்பாடுகள் முதலியனவெல்லாம் மனிதனைக் கூறுபோட்டது இந்தச் சூழலில்தான். இப்பொழுதுதான் மனிதன் தனக்குள் முழுமையை இழந்தான். பகுதிகளாகப் பிளவுண்டான். வரலாறு இப்படித்தான் தொடர்ந்தது; தொடர்கிறது. ஆழ்ந்து பார்த்தால் பிளவுகள் முதலியவற்றை நியாயப்படுத்துவதில் எண்ணங்கள் செயல்படுகின்றன. பிளவுகளை அதிகரிப்பதற்குக்கூட எண்ணங்களின் தொகுப்பாகிய கருத்தியல்கள் காரணம். ஆனால் எண்ணங்கள் தனியே இயங்குவதில்லை. எண்ணங்களைத் தோற்றுவிக்கவும், ஒழுங்கமைக்கவும் ஆதாரமான சக்திகள் பொருளியல் தளத்தில் செயல்படுகின்றன. எண்ணம் என்பதன் இழைகளை ஒருவேளை அமீபாவுக்குள் நாம் காணலாமோ என்னவோ. ஆதி மனிதனுக்குள்ளும் இப்படி சில இழைகள் / உணர்வுகள் இருக்கக் கூடும். எந்தவகை மத நிறுவனமும் எத்தகைய பிரமைகளை தொடர்ந்து பெருக்கி நிலைநிறுத்துவதன் மூலம் தன்னை இன்றியமையாததுபோலக் காட்டிக் கொள்கிறது என்பதை கிருஷ்ணமூர்த்தியை முன்வைத்து நாம் திறனாய்வு செய்ய முடியும். புத்தரைத் தவிர வேறு எந்த மதத் தலைவரையாவது கிருஷ்ணமூர்த்தி பாராட்டினாரா என்று நமக்குத் தெரியவில்லை. புத்தரின் ஞானத்திற்கு இவர் மிகவும் நெருக்கமாகச் சென்றார். ஒரு தேரைச் சுட்டிக்காட்டி எந்தப் பகுதி தேர் என்று சொல்லமுடியாது. ஒவ்வொன்றும் தனிப் பெயரோடு கூடியவை. தேர் என ஒன்று இல்லை. பெயர்தான் தேரை உருவாக்குகிறது. இப்படித்தான் நான் என்று எதுவும் இல்லை. நான் அற்ற 'அது' இருக்கிறது. இதை பிரம்மம் என்று சொல்ல முடியாது. பிரம்மம் என்றவுடன் ஆன்மா பற்றிப் பேசியாக வேண்டும். அப்புறம் ஆன்மாவும் பிரம்மமும் ஒன்று அல்லது பல என்று பேசி



தரிசனங்களை உருவாக்க வேண்டும். அப்புறம் நிர்க்குண பிரம்மம், சகுண பிரம்மம் என்று சொல்லி மதங்களை உருவாக்க வேண்டும். புத்தருக்கு இந்தப்போக்கு உடன்பாடில்லை. எனினும் இங்கு நாம் ஒன்றைச் சொல்ல வேண்டும். 'நான்' என்பது பற்றிய ஆய்வில் நானும் அற்றுப்போவது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

கிருஷ்ணமூர்த்தியின் 'தத்துவத்தை' விளக்கும் 'உட் அவுஸ்' என்பவர் நீண்ட ஒரு விளக்கத்தைத் தருகிறார். இயற்கை, பிரபஞ்ச அளவில் விரிந்தது. மனிதன் இயற்கையின் ஒரு பகுதி. இயற்கையின் இயக்கம் மனிதனுக்குள்ளும் தொடர்கிறது. மனிதனின் பார்வை இயற்கையின் இயக்கத்தில் தன்னைக் கரைத்துக் கொள்ள வேண்டும். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையில் யதார்த்தம் என்ற உலகம் இருக்கிறது. இயற்கையையும் மனிதனையும் இது பிரிக்கிறது. பிளவுபடுத்துகிறது. இயற்கையை பெருமளவு வசப்படுத்திக் கொண்ட யதார்த்தம் மனிதனின் கண்ணிலிருந்து இயற்கையை மறைக்கிறது. யதார்த்தம் தன்னையே முழுமையெனக் காட்டிக் கொள்வதன் மூலம் மனிதனை சுருக்குகிறது. யதார்த்தத்தின் சில இடைவெளிகளில் மட்டுமே இயற்கை மனிதனுக்குத் தென்படுகிறது. இயற்கையின் இயக்கத்தோடு யதார்த்தம் முரண்படுகிறது. அதாவது இயற்கை, அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமானது; இடம் தருவது; அனைத்து உயிர்களின் மூலம் இயங்குவது. யதார்த்தம் இதை மறைக்கிறது. அதாவது உடைமை, அரசு, மதம் முதலியவற்றை தமக்குரியதாகச் செய்துகொண்ட ஆதிக்கவாதிகள், அனைத்து மனிதர்களுக்கும் உரியது இயற்கை என்பதை மறைத்து விடுகின்றனர். இயற்கையின் இயக்கத்திற்கு ஒத்ததாக யதார்த்தத்தை மாற்ற வேண்டும். இதுதான் கிருஷ்ணமூர்த்தியின் தத்துவம் என்கிறார் 'உட் அவுஸ்'.

இவரது கருத்தை நாம் இப்படிப் புரிந்து கொள்ளலாம். அந்நியமாதல் முழு அளவில் அற்ற நிலையில் இயற்கையோடும், சமூகத்தோடும் மனிதன் பிரிவின்றி, பிளவின்றி ஒத்தியங்குவான். இதுவே மனிதனுக்கான விடுதலை. இதற்குப் பெயர் சமதர்மம் / கம்யூனிசம். இப்படித் தத்துவப்படுத்தலை கிருஷ்ணமூர்த்தி ஏற்க மாட்டார். கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளின் வழியே பயணம் செய்யும்பொழுது இப்படி ஒரு தத்துவத்தை அவரிலிருந்து பிரித்தெடுப்பதைத் தவறென்று சொல்லவும் முடியாது. கிருஷ்ணமூர்த்தியை ஆக்க முறையில் பொருள்படுத்துவது என்பது இப்படி இருக்கமுடியும். சோவியத் யூனியனில் எப்படி ஆதிக்கம் உருவாயிற்று

என்பது குறித்து கிருஷ்ணமூர்த்தி என்ன கருதினார் என்று நமக்குத் தெரியவில்லை.

கிருஷ்ணமூர்த்தியின் பாதிப்புக்கு உள்ளாகியவர்களில் குறிப்பிடத்தக்கவர் சோசலிசவாதியான அச்சுதபட்வர்த்தன். சோசலிசம் என்ற கருத்தியலைக் கைவிடாமலேயே கிருஷ்ணமூர்த்தியைத் தனக்குள் இவர் கொண்டு வருகிறார். கிருஷ்ணமூர்த்தி அடிக்கடி புரட்சி என்றும் பேசுவார். அடிப்படையான புரட்சி என்பது மனிதன் தன்னைப் புதியதாக, முற்றிலும் புதியதாகப் படைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் புத்துயிர்ப்புத்தான் அடிப்படையான புரட்சி என்பது கிருஷ்ணமூர்த்தியின் கருத்து. சோசலிச உலகில் மனிதனின் புத்துயிர்ப்பு இப்படி நிகழவில்லை. முற்றிலும் எண்ணங்களிலிருந்து விடுபடல் என்பதன்மூலமே இத்தகைய புத்துயிர்ப்பு சாத்தியம். எண்ணங்கள் பழமை சார்ந்தவை. சரியாகச் சொன்னால் உடைமை, அரசு, மதம், குடும்பம் எனப் பலவற்றைச் சார்ந்தவை உண்மைதான். பழைய இத்தகைய போக்குகளில் இருந்து முழுமையான பாதை ஒன்று திறக்கவில்லை. புதிய மனிதன் சோசலிச உலகில் பிறக்கவில்லை.

20–ஆம் நூற்றாண்டு அறிவியல் தொழில்நுட்பத்தின் விளைவாக ஒளி பொருந்திய நூற்றாண்டாக, மக்களுக்கு விடுதலை தரும் நூற்றாண்டாக இருக்க முடியும் என்ற கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் பொய்யாயின. பிரமைகளில் இனி வாழ முடியாது. மாயைகளை இனி முற்றாகக் களைந்துகொள்ள வேண்டும். அமைப்புக்கள் எல்லாமே அதிகாரத்தை உள்வாங்கியனவாக இருக்கின்றனவே ஒழிய மக்களின் உரிமைகளை மதிப்பதாகவோ, வளர்ப்பனவாகவோ இல்லை. அமைப்புக்களில்லாமல் முடியாது என்ற போதிலும், பெரிய அமைப்புக்கள் நமக்குச் செய்யும் நாசத்தை நாம் புரிந்து கொள்ளாமலும் இருக்க முடியாது. தேசியத்தின் பெயராலும் போர்களும், கலவரங்களும் நடைபெறுகின்றன. மதங்களுக்கு இடையிலும் மொழிகளுக்கு இடையிலும், கலாச்சாரங்களுக்கு இடையிலும் மோதல்கள் எழுகின்றன. எந்தவகை மோதலுக்கும் உரியதாக சித்தாந்தங்கள் உருவாக்கப்படுகின்றன. இப்படி சித்தாந்தங்களை உருவாக்குவதில் அறிவாளிகள் முன் நிற்கின்றனர். மக்களிடம் விழிப்புணர்வு இல்லை. தேடல் இல்லை. எல்லாவற்றையும் முதலாளிகளும், அரசும் படிப்பாளிகளின் உதவியோடு கட்டமைக்கின்றன. நல்லது எது, தீயது எது என்ற மதிப்பீடுகளை யெல்லாம் ஆதிக்கவாதிகளே உருவாக்கி மக்களுக்குள் இதமாகத் திணிக்கின்றனர். இவர்களோடு கலைஞர்கள்



ஒத்துழைக்கின்றனர். நவீன உளவியல் மருத்துவ முறைகளும் கண்டறியப்படுகின்றன. மருந்துகள் மூலம் மனநோய்களை குணப்படுத்த முடியும் என்று இவர்கள் கூறுகின்றனர். மக்களின் உணர்வுகளை - அறிவை முடமாக்குவதில் இவர்கள் எல்லோரும் சேர்ந்து செயல்படுகின்றனர். இத்தகைய சூழலுக்கான எதிர்வினைகளில் ஒன்று என நாம் கிருஷ்ணமூர்த்தியின் இயக்கத்தைக் காணமுடியும். மதத்திற்கும் மதவாதிகளுக்கும் எதிரான இவருடைய இயக்கத்தை நாம் பெரிதாக மதிக்க முடியும். பிரம்மஞான சங்கம் மட்டுமல்லாமல் எத்தகைய சமய நிறுவனமும் மனித விடுதலைக்கு உதவாது என்று இவர் அழுத்தமாகப் புரிந்து கொண்டார். மதவாதிகளின் பொய்மைகள் அனைத்திற்கும் இவர் எதிரானவர். கிருஷ்ணமூர்த்தி தனக்கென உருவாக்கப்பட்ட மாபெரும் நிறுவனம் மற்றும் தலைமைப் பதவியிலிருந்து வெளியேறியது ஒரு புரட்சிகரமான செயல்பாடு என்று நாம் உறுதியாகச் சொல்லலாம். காமம் முதலியவை ஆற்றல் மிகுந்த உணர்வுகள். இவற்றின் ஆதாரத்தில் மனிதனுக்குள் இயக்கம் நிகழ்கிறது. பணம், அதிகாரம், காமவெறி, ஆடம்பரம், ஆணவம், புகழ்வேட்கை, ஆதிக்கம், பக்தி, தேசம் என்றெல்லாம் வலுவான உணர்வுகள் வரலாற்றுக்குள் வந்துவிட்டன. இவற்றையெல்லாம் எண்ணங்கள் தோற்றுவித்தன என்று சொல்ல முடியாது. சிந்திப்பதற்கு முன்பு மனிதன் உண்ண வேண்டும் என்ற வரையறை எளிமைப்படுத்தப்பட்ட ஒரு வரையறை. எனினும், இதில் உண்மை உண்டு. கிருஷ்ணமூர்த்தியைப் பொறுத்தவரை எண்ணங்களிலிருந்து விடுதலை என்பது அவரது முற்றான கருத்து. இதே வடிவில் இதை நாம் ஏற்க முடியாது. வரலாறு குறித்து, கிருஷ்ணமூர்த்தி மறுக்கத்தான் செய்வார். இவற்றையெல்லாம் ஆய்வதில் அவருக்கு ஈடுபாடு இல்லை. வரலாறு என்பது நினைவுகளின் சுமை என்று அவர் ஒதுக்கிவிடுவார். அன்றியும், உண்மை என்பதன் ஒரு முகத்தைத்தான் கிருஷ்ணமூர்த்தி காண்கிறார். வரலாற்றின் வழியே மனித இயக்கம் கிருஷ்ணமூர்த்தியிடம் ஆய்வுப் பொருளாக இல்லை. எண்ணங்களிலிருந்து விடுதலை என்பதை, உடைமையிலிருந்து - ஆதிக்கத்திலிருந்து - குடும்பம் முதலிய ஆதிக்க அமைப்புக்களிலிருந்து விடுதலை என்று நாம் பொருள்படுத்தலாம். இதற்கு சமதர்மம் என்றுதான் பொருள்.

பொருளோடும், அதிகாரத்தோடும் தம்மை இணைத்துக் காண்கிற உடைமையாளர்களும், அதிகாரிகளும், மதவாதிகளும் தம் மனத்தின் வீரியத்தை இழந்தவர்கள். இவர்கள் மந்த புத்தி உடையவர்கள். இவர்களிடம் அன்பு இல்லை, கருணை இல்லை; இவர்களிடம் மனிதன்

குறித்த ஆழ்ந்த சோகம் இல்லை. இவர்களின் வாழ்க்கையில் அழகு இல்லை. இவர்களும் மனிதத் தரத்திற்குக் கீழானவர்கள். இவர்களோடு ஒத்துப் பேசுபவர்கள் படிப்பாளிகள், அறிவாளிகள், மத்தியதர வர்க்கத்தினர். இவர்கள்தான் கிருஷ்ணமூர்த்தியைப் படிப்பவர்கள், கொண்டாடுபவர்கள். மதம், ஆதிக்கம் முதலிய உணர்வுகளை முற்றாக ஒதுக்கிவிடாமல் கிருஷ்ணமூர்த்தி என்ற பெருநெருப்பைத் தம் படிப்பறைகளில் ஒளி குறைத்து ஏற்றிக் கொள்பவர்கள் இவர்கள். கிருஷ்ண மூர்த்தியை இவர்கள் சரியாகக் கற்பார்கள் என்றால், இவர்கள் தம் ஆணவத்தை – ஆதிக்கத்தை – உடைமை முதலிய பற்றுக்களை உதறிக்கொள்ள வேண்டும். கிருஷ்ணமூர்த்தி ஒரு பேரொளி. இவர் வழியே சமதர்மத்தை நாம் ஆழமாக முன்னெடுக்க முடியும். ●

குறிப்பு :

இந்தக் கட்டுரை எழுதுவதற்குப் பயன்பட்ட ஆதார நூல்கள் சில. Commentaries On Living தொடர்வரிசை நூல்கள் (Krishnamurthi Foundation, India) ஆகியவற்றோடு குறிப்பாகப் பயன்பட்ட பிறநூல்கள் :

1 **The years of Awakening** - by Mary Lutyens (1983)

2. **The mind of J. Krishnamurthi** - Editor Luis S.R. VAS (1971) Jaico Publishing House

3. **Within The Mind** - Krishnamurthi Foundation India (1982).

கோவையில் திரு. எஸ்.டி என்று மரியாதையோடு அழைக்கப்பட்ட அமரர் தேவசகாயம் அவர்கள் வெளியிட்ட இந்தியத் தத்துவங்கள் பற்றிய நூலில் இடம்பெற்ற கட்டுரை. தொகுப்பாசிரியர் செ. ஞானன்.



# பெர்னார்ட் ஷா என்னும் விஞ்ஞானி

அண்ணாமலைநகர்
3.11.65

நண்பர் துரை,

தங்கள் மடல் இன்று கண்டேன். தங்கள் மனக்கவலை என்னை அரிக்கிறது. தங்களுக்கு நிறைய எழுதவே விரும்புகிறேன்.

ஜே.டி. பெர்னால் எழுதிய கட்டுரை ஒன்று, "Shaw the Scientist" என்ற பெயருடைய கட்டுரை. நான் மொழிபெயர்க்க வேண்டும் என்று நமது மதிப்புக்குரிய நாகராசன் ஒரு முறை எனக்கு எழுதியிருந்தது தங்களுக்கு நினைவிருக்கலாம். மொழி பெயர்த்தலுக்கு நேரம் மிகுதியும் ஆகும். ஆகவே அந்தக் கட்டுரையின் கருத்துக்களை மட்டும் இரண்டு மூன்று கடிதங்களில் தங்களுக்கு தொடர்ந்து எழுதலாம் என்று கருதுகிறேன். பெரும்பாலும் இவ்வார முடிவிற்குள் இக்கட்டுரைத் தொடர் முடிவடைந்து விடும். தங்களுக்கு இத்தகைய மடல்கள் ஊக்கம் தரும் என்பதால் எழுதுகிறேன்.

❖ ❖ ❖

நாம் அனைவரும் ஷாவின் மாணவர்கள். பல தலைமுறைகளுக்கு ஷாவின் கருத்துக்கள் அதிர்ச்சியைத் தருவனவாகவே இருக்கும். ஷாவின் கருத்துக்கள், மனிதனின் மனஅமைதியைக் குலைப்பனவாகவே இருக்கும்.

ஷாவின் காலத்திற்கு முற்பட்ட காலம் விக்டோரியன் சகாப்தம். விக்டோரியச் சகாப்தத்திலிருந்து தமது காலத்தை விடுவிக்கும் புரட்சியைச் செய்தவர் ஷா. ஆகவே நமது கால அறிவுலகத்தின் அடிப்படைக்குள் ஆழமாக நின்று இயங்குபவர் ஷா. நமது கருத்துக்கள் பலவற்றிற்குள் ஷா தான் உருக்கொண்டு விளங்குகிறார்.

விஞ்ஞானத்தைப் பற்றி ஷா நிறைய எழுதியிருக்கிறார். பல நாடகங்களில் விஞ்ஞானத்தையே கருப்பொருளாக்கியிருக்கிறார். லமார்க் கூறிய கூர்தல்அறக் கொள்கையை (- பரிணாமம்) ஷா பலமாக ஆதரித்தார். நோய்கள் உண்டாவதற்கு காரணம் நோய்க்கிருமிகள் என்ற

கொள்கையை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் விஞ்ஞானத்தை அடியோடு புறக்கணித்த முட்டாள்கள் & யோகிகள் கூட்டத்தில் ஷாவை சேர்க்கலாமா? அவ்வாறு செய்தல் இயலாது. விஞ்ஞானத்திற்கே உயிர்ப்பாக இருப்பது, ஐயுறவுதான். பகுத்தறிவை விடாப் பிடியாகக் கொண்டு எதையும் ஐயத்துடன் பார்க்கும் பார்வை. தோரணையுடன் வரும் எத்தகைய கருத்தையும் ஒப்புக் கொள்ளாமையும், எளிமையாகவும் நேர்முகமாகவும் அடிப்படையாகவும் தோன்றுவது தவிர பிறவற்றை மறுத்தலும் அறிவின் அடிப்படைகள்: இவற்றை ஷா விடாப்பிடியாக கொண்டிருந்ததால் ஷா, நமது கவனத்திற்குள்ளாகிறார்.

புறத்தில் பார்த்தால் விஞ்ஞானத்தை எதிர்ப்பவர் போலக் காணப்பட்டாலும் அகத்தில் விஞ்ஞானப் பண்பு மிகக் கொண்டவர் ஷா. ஆகவேதான், விஞ்ஞானிகள் அனைவரும் ஷாவை எவ்வளவு இகழ்ந்துரைத்தாலும், ஷாவின் கொள்கைகளை எவ்வளவு மறுத்துரைத்தாலும், அவர்களைத் தம்மவராகவே கருதினார் ஷா. ஷா தமது கொள்கையைக் காட்டிலும் பெரியவர். மனித வரலாற்றில் குழப்பம் மிக்க காலங்களில் மாற்றத்தை கொண்டு வந்த சக்திகளுடன் இடைவிடாத – உறுதி வாய்ந்த தொடர்பு கொண்டிருந்தவர்களில் ஷா ஒருவர். எதிர்காலத்தை வகுத்துரைத்து, தாம் வகுத்துரைத்தவாறே எதிர்காலம் அமைவதைக் கண்ணாரப் பார்த்தவர் ஷா. வயதில் இளையவராகிய நாம், ஷாவை விளங்கிக் கொள்ளுதல் அரிது: அவரைப் போலவே வயதும் அறிவும் பெற்றால்தான் அவரை நாம் விளங்கிக் கொள்ளுதல் கூடும். இறந்த காலத்துடன் நிகழ்காலம் கொள்ளும் தொடர்பை ஷா மட்டுமே அறிவார்.

ஷாவை விளங்கிக் கொள்ள வேண்டுமானால் அவரை இயக்கிய சக்திகளையும் அவரது இளமைக்கால வரலாற்றையும் நாம் அறிந்தாக வேண்டும்.

டார்வின் காலத்திற்கு முற்பட்ட காலத்தை நினைவு கூர்ந்து கூறுபவர் ஷா. டார்வினுக்கு முற்பட்ட காலத்தில் இயற்கை வரலாறு படைத்தவர் Baffen என்பவர்: அவரது நூல்களை மக்கள் விரும்பிப் படித்த காலத்தை சேர்ந்தவர் ஷா.

டார்வினுடைய கொள்கை – தோற்றம் பெற்ற பொழுது தோற்றம் பெற்ற உடனே தீவிரமாக மறுக்கக் கிளம்பியவர் ஷா. டார்வினியத்தை



அவர் மறுத்தார் என்றால், அவர் விஞ்ஞானத்தையே மறுக்கக் கிளம்பினார் அல்லது விஞ்ஞான முறையில் மறுத்தார் என்றும் பொருள் கொள்ள இயலாது (Neither Anti Scientific, Nor Scientific). டார்வினியத்தை ஒப்புக் கொண்டால், அதிலிருந்து தொடர்ச்சியாக அரசியல், சமூக நிலையிலும் சில கொள்கைகளை ஒப்புக் கொண்டவர்களாவோம் என்பதாலும், சமுதாய ஒருமைப்பாட்டை மறுத்தவர்களாவோம் என்பதாலும், விலங்கு – மனிதர் என்ற வேறுபாட்டை மறுத்து எல்லா உயிர் பொருள்களுக்கு இடையிலும் ஒருமைப்பாடு காணும் தத்துவத்தை மறுத்தவர்களாவோம் என்பதாலும் ஷா டார்வினியத்தை பலமாக எதிர்த்தார்.

டார்வினியம் தவிர ஷா வேறு சில கொள்கைகளையும் தீவிரமாக எதிர்த்தார்: பாஸ்டியர் கொள்கைகளை மறுத்தார்: மருத்துவ ஆய்வுக்காக உடலை அறுத்தலை மறுத்தார். அம்மைப்பாலை உடலுக்குள் புகுத்தலை மறுத்தார். அவர் எடுத்துக் கொண்ட போராட்டம் தோல்வியடையத்தான் செய்தது: காரணம் மருத்துவர்கள் தமது பொருளற்ற, மனிதப் பண்பற்ற மருத்துவ முறைகளை விட்டு விடவில்லை. ஆனால் அத்தகைய மருத்துவ முறைகளே இல்லாமல் ஷா உடல் நலத்துடன் வாழத்தான் செய்தார்.

இச்சமயத்தில், ஷா ஒரு சமயம் தொழில் முறை விஞ்ஞானியாக -Professional Scientist ஆக – இருந்தார் என்பதையும் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். இலண்டனில் முதல்முறையாக, 1880ல் அமைக்கப் பெற்ற தொலைபேசி நிலையத்தில் அலுவலராக வேலை பார்த்தவர் ஷா. தாம் படைத்த முதல் நாயகரைக் கூட, ஒரு விஞ்ஞானியாகத்தான் படைத்தார். தொடர்ந்து, விஞ்ஞானம் பற்றிய வாதப் பிரதிவாதங்களில் ஆர்வம் கொண்டிருந்தவர் ஷா. ஆயினும், வெப்ஸ் போன்றவருடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும் கணக்கியலில் அவர் ஆர்வம் கொள்ளவேயில்லை. தாம் விளங்கிக் கொள்ளாவிட்டாலும், கணக்கியலின் மகத்துவத்தைக் குறை கூறவில்லை. கார்ல் பியர்ஸன், உயிரியல் – சமூகவியல் ஆகியவற்றை முழுமையான விஞ்ஞானங்களாக உருவாக்குவதற்காகப் புள்ளியல் முறைகளை அறிந்து கூறியபோது, ஷா அவற்றை பலமாக ஆதரித்தார். அவர் கொள்கைகள் பெரு வெற்றி பெற்றன.

(முன்னுரை போல இவ்வளவு கூறிய பிறகு, ஷா ஆதரித்த அல்லது மறுத்த' ஒவ்வொரு விஞ்ஞானக் கொள்கையையும் எடுத்துக் கொண்டு ஆய்கிறார் பேர்னால்.)

டார்வின் இயற்கைத் தேர்வைக் கூறியவர், லமார்க் என்பவர் ஆக்கவியல் கூர்தல் அறம் கூறியவர். லமார்க்கின் கொள்கையைத்தான் ஷா ஒப்புக் கொண்டார். Back to Methuselah என்ற நாடகத்தில் வியக்கத் தக்க தெளிவுடனும் முட்டாள் தனத்துடனும் இவற்றை விவாதிக்கிறார். சாமுவேல் பட்லர் என்பவர் விக்டோரிய சகாப்தத்தைச் சேர்ந்தவர். அவருடைய கொள்கைகளை மிகமிக உறுதியாக - பயங்கரமான உறுதியுடன் பின்பற்றினார் ஷா. இந்நூலின் முன்னுரையில், டார்வினுடைய கொள்கைகளுக்கு மூலமான - சமுதாய நிலைமைகளுக்கு மூலமான சமுதாய நிலையையும், டார்வின் கொள்கைகளை ஒப்புக்கொண்டால் சமுதாயத்தில் ஏற்படும் விளைவுகளையும் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். தடையற்ற போட்டி என்ற பொருளாதாரக் கொள்கையை உயிரியல் ஆய்வுக்குள் டார்வின் நுழைந்திருப்பதை ஷா தெளிவாக உணர்ந்து கூறினார்.

கடவுள் என்றதோர் தத்தவத்தைக் கூறி, பொறுக்கவியலாத மனத்துன்பங்களை உலக மக்களுக்குத் தந்த தத்தவத்திலிருந்து மனித சமுதாயத்தை விடுவித்தவர் டார்வின் என்ற ஷா, டார்வினைப் புகழாமலில்லை. உலகத்தில் தீமைகள் வெளிப்பட்டு நிற்கின்றன: அவற்றிக்கு கடவுளே காரணமாக இருக்க வேண்டும் அல்லது கடவுள் அவற்றைக் கட்டுப்படுத்தும் திறனற்றவராக இருக்க வேண்டும். இவ்வாறு மக்கள் மனக் கவலைகளில் சிக்கி உழன்றபோது மக்களை விடுவித்தவர் டார்வின் என்று ஷா எழுதினார்.

டார்வினை கடவுள் தத்துவ அழிப்புக்காகப் புகழ்ந்த ஷா, அதே மூச்சில் கடவுள் தத்துவத்தை மறுத்தும் இகழ்ந்தும் உரைத்த Pally, shelly ஆகியவரையும் மறுத்துரைக்காமல் இல்லை. உலக அழகையும் அறிவையும் சிறப்பையும் மறுத்துரைத்தற்காக அவர்களை ஷா இகழ்ந்தார்.

டார்வினியத்தை ஷா மறுத்தார் என்றால், மறுப்பு என்பது உணர்ச்சியிலிருந்து கிளம்பியதே தவிர அறிவுடன் கூடிய மறுப்பாக தோன்றவில்லை. டார்வினை முற்றும் மறுக்க இயலாது என்பதும் ஷாவுக்குந் தெரியும். கூர்தலறத்தின் ஒரு சில பகுதிகளை மட்டும் விளக்கும் முறையில் டார்வினியம் உண்மைதான் என்றும், கூர்தலறத்தை முழுமையாக விளக்க டார்வினியத்தால் இயலாது என்றும் ஷா கருதினார்.



டார்வினியத்தை மறுத்து, அந்த இடத்தில் லமார்க்கின் கொள்கையை ஏற்றவர் ஷா. லமார்க்கின் கொள்கை, Functional adaptation - ஏற்மையைபு என்பது. இது பிற்காலத்தில் Creative Evolution ஆகியது. இக்கொள்கையை மறுத்தலும் எளிதன்று. இக்கொள்கையை ஷா ஏற்றுக் கொண்டதற்கு இரு காரணங்கள் கூறலாம். ஷா தான் வளர்ந்த காலத்தில் மத்திய கால உலகக் கொள்கைகளுடன் வளர்ந்தவர். தவிர உலக உயிர்கள் அனைத்துக்கும் இடையில் ஓர் ஒருமைப்பாடும் ஒரு தேவையும் இருக்க வேண்டும் என்று ஷா நம்பினார். உயிர் வகைகளுடன் உறவு கொண்டாடியவர் ஷா. உயிர்கள் தமது வாழ்வைத் தாமே அமைத்துக் கொள்ள இயலும் என்று கருதினார் ஷா. தமது ஆக்கத்திற்கு உயிர்கள் தாமே காரணமாகக் கூடும் என்றும் நம்பியவர் ஷா. கூர்தல் அறம் என்பதே, ஒவ்வோர் உயிரும் நான் மாறவேண்டும் - வளரவேண்டும் என தானே தன் மனத்தால் விரும்பி, விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முறையில் தானே வளர்ச்சி பெறுதல்தான் என்று கருதினார் ஷா. Oken என்பவர் ஓர் இயற்கையியல் விஞ்ஞானி. கிறித்தவ வேதத்தில் கூறப்படுகின்ற புனித ஆவியும் உலகமும் இடைவிடாமல் பெறுகின்ற மாற்றங்கள் (Transmutations) தான் இயற்கை விஞ்ஞானம் என்பது என்ற கருத்துடையவர் Oken.

எக்காரணத்தாலோ, ஷா Oken-ஐ ஒரு விஞ்ஞானி என்று கருதாமல் ஒரு தத்துவஞானி என்றே கருதினார். புறத்திலிருந்து வரக்கூடிய தாக்குதல்களால் ஏற்படும் கூர்தலறத்தைக் காட்டிலும் உளத்தூண்டலால் ஏற்படும் கூர்தலறமே அவருக்கு உண்மை எனத் தோன்றியது.

"குழந்தை பிறந்ததும் என்ன செய்கிறது? கோபத்துடன் கத்துகிறது. அந்தக் கதறல்தான் சேக்ஸ்பியர் போன்ற புலவர்களுக்கு, கதறல்களிலேயே துன்ப இயல் மிக்க கதறலாகத் தோன்றியது. கதறலின்போதே மூச்சு விடும் செயலும் தோன்றி விடுகிறது. தனது இருதயத்தைக் கொண்டு இரத்தத்தைக் குழாய்களுக்குள் செலுத்திக் கொள்கிறான். இரத்தம் உடலின் பல பாகங்களுக்கும் சென்று விடுகிறது. உணவை உண்ணுகிறான். மிகமிகச் சிக்கலான இராசயன மாற்றங்கள் உடனே தொடங்கி விடுகின்றன. பற்களை உண்டாக்கிக் கொள்கின்றான். பின் அவற்றைப் புறக்கணிக்கிறான். புதிய பற்களை படைத்துக் கொள்கிறான். இத்தகைய செயல்களுடன் ஒப்பிடும்போது, நடத்தல், சைக்கிள் விடுதல் ஆகிய காரியங்கள் மிகமிகச் சிறியவை.

நிற்பதற்கும் நடப்பதற்கும் எவ்வளவு முயற்சியோடு பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது! இவற்றை விடச் சிக்கல் மிகுந்த பல காரியங்களை மனிதன் தன் உணர்வின்றியே செய்கிறான் என்றால் அது எப்படி கைகூடுவதாயிற்று?"

மூச்சு விடுதல், இரத்த சுழற்சி, உணவு செரித்தல் முதலிய செயல்கள் இன்று மிக எளிய பழக்கங்களாகி விட்டன. இவற்றை ஒரு காலத்தில் உயிர்கள் மிக முயன்று பழகித்தான் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று ஷா நம்பினார். விலங்கியல் என்ற பகுதி, இதைத்தான் விளக்க வேண்டும் என்று அவர் கூறினார். இயற்கை முழுவதிலும், தன் உணர்வோடு செயல்படும் சக்தியின் செயல்தான் இவ்வாறு மலர்கிறது எனக் கருதினார். மரங்களுக்கும் தன் உணர்வு உண்டு என்று ஷா கருதினார். டார்வினியர்கள் இதை மறுத்தனர். ஷா தன் கொள்கையை விடாப்பிடியாக வற்புறுத்தினார்.

ஷாவின் இத்தகைய கொள்கைகள் கண்டு விஞ்ஞானிகளுக்கு ஆத்திரம் உண்டாகலாம். "கண்ணுக்குத் தெரியக் கூடிய – விளைவுகளைத் தாக் கூடிய பரிசோதனைகளாக மாற்ற இயலாத வெறும் மன உணர்ச்சிகளைப் பற்றி எங்களுக்கு அக்கறை கிடையாது" என்று அவர்கள் கூறலாம். ஆனால் ஷா என்ன நோக்கத்தோடு இத்தகைய கொள்கைகளைக் கொண்டிருந்தார்? நல்ல விளைவைத் தாக்கூடிய இனிய வாழ்க்கைக்கு அடிப்படையான ஒரு சமயத்தை அவர் தேடினார் ; இத்தகைய கொள்கைகளுக்கு இடையில் தாம் தேடிய சமயத்தைக் கண்டறிந்தார். கொடிய கடவுளர் கூட்டத்திலிருந்து சமயம் விடுதலை பெறுவதை அவர் மிகப் போற்றினார்.

ஷா, ஒரு விஞ்ஞானியல்லர் ; ஆனால் விஞ்ஞானிகளுள் பலர் அவரைக் காட்டிலும் அதிக அளவில் பொருளற்ற (அறிவற்ற) பலவற்றைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஷாவும் ஒரு விஞ்ஞானியாக இருந்திருப்பாரானால் அவர் தமக்கு எத்தகைய நம்பிக்கைகளை விஞ்ஞானம் தா வேண்டுமென்று விரும்பினாரோ அத்தகைய நம்பிக்கைகளுக்கு விஞ்ஞானத்தில் ஆதாரங்கள் – சான்றுகள் இல்லை என்று பிற விஞ்ஞானிகள் கூறியிருப்பர். ஆனால் ஷா விஞ்ஞானியல்லவே! தமது காலத்திலிருந்த நம்பிக்கைகளுக்குள்ளே அறிவுத் தெளிவு மிகுந்ததும் அருமையானதுமான ஒரு நம்பிக்கையை அவர் தேர்ந்தெடுத்தார் என்றுதான் ஷாவைச் சொல்ல வேண்டும்.

★ ★ ★



அன்புத் துரை !

இதுவரை 6 பக்கங்கள் (மூல நூலின் பக்கங்கள்) மட்டும் தந்திருக்கிறேன். இன்னும் ஒன்பது பக்கங்கள் மீதியிருக்கின்றன. நாளை தொடர்ந்து எழுதுகிறேன்.

துரை ! வருந்தாதீர்கள்; நாகராசன் எப்படியிருக்கிறார்?

திரு. இராசியண்ணன் முதலியவர்களுக்கு இக்கட்டுரையைக் காட்டுக. தங்கள் கருத்து – விளங்காத இடங்கள் எழுதுக.

★ ★ ★

அண்ணாமலை நகர்
4.12.65

நண்பர் துரை,

'ஷா, ஒரு விஞ்ஞானி' என்ற கட்டுரையைத் தொடர்ந்து இன்னும் எழுதுகிறேன். கட்டுரை பற்றித் தங்கள் கருத்தைத் தெரிவித்தால்தான் மேலும் எழுதுவதற்கு ஊக்கமாக இருக்கும்.

★ ★ ★

கட்டுரையின் தொடர்ச்சி

கூர்தலறம் பற்றியும் மருத்துவம் பற்றியும் ஷா கொண்ட கருத்துக்கள் நெருங்கிய தொடர்புடையவை. மனிதர்க்கும் விலங்குகளுக்கும் இடையிலுள்ள நீங்காத தொடர்பு – இரண்டும் வேறல்ல என்ற கருத்துக்கள்தான், இவர் கொண்ட கருத்துக்களுக்கே ஆதாரமாக இருக்க வேண்டும். மனிதர்க்கு நாம் செய்யும் ஒரு செயலை தீங்கு என்று கூறும் போது அதே செயலை விலங்குகள் பால் செய்வதும் தீமைதான் என்று அவர் கருதினார். அவர் மரக்கறி உணவு மட்டுமே உட்கொண்டதற்கும், விலங்குகளைக் கொண்டு அறுவைச் சோதனைகள் நடத்தக் கூடாது என்று அவர் இடைவிடாமல் உறுதியாக வற்புறுத்தியதற்கும் ஆதாரக் கருத்து – தர்க்க ரீதியிலான கருத்து இதுதான்.

Killing for sports என்ற கட்டுரையில் ஷா குறிப்பிடுகிறார் ; "பலர் எண்ணுவதைக் காட்டிலும் எனக்கு விலங்குகளிடம் நெருங்கிய உறவுண்டு ; விலங்குகளிடம் பேசுவதற்கென்றே நான் வகுத்துக் கொண்ட கொடுமொழி கொச்சை மொழியை விலங்குகளிடம் பேசுவது

எனக்கு இன்பம் தருகிறது : விலங்குகளுக்கு என் பேச்சை புரிந்து கொள்ளும் அறிவுத் திறன் இல்லை; ஆனாலும், தம்பால் மனிதர் அன்புகொண்டு தம்மிடம் பேசுவதை அவை மிகமிக விரும்புகின்றன. வேறு எந்த வகையிலும் விலங்குகளைப் பறறி என்னால சிந்திக்க இயலவில்லை."

Butlers Ere Whomians செய்தது போல் - விலங்கின் இறைச்சியை உண்ணுவதில்லை என்ற முடிவை மேற்கொண்ட அவர்கள், நாளடைவில், காய் கறிகளும் உண்ணமாட்டோம் என்று முடிவு செய்து கொண்டது போல, ஷா செய்யவில்லை. விலங்கிடம் தமக்குள்ள அன்பை மட்டும் ஷா இவ்வாறு குறிப்பிட்டாரே ஒழிய, இதை அவர் ஒரு தத்துவமாக்க விரும்பவில்லை. . விளையாட்டுக்காக விலங்குகளைக் கொல்வதையும், மனிதர் தாம் அறிவு பெறுவதற்காகக் கொல்வதையும் அவர் எதிர்த்தார்; (பாம்பு போன்ற) சில விலங்குகளைக் கொல்லத்தான் வேண்டும் என்று கூட ஷா கருதினார்.

ஒரு நாடகத்தின் முன்னுரையில் ஷா உடலறுப்பைக் கண்டித்து அருமையாக விவாதித்திருக்கிறார். வாழ்வதற்கு உரிமை இருப்பது போலவே அறிவைப் பெறுவதற்கும் மனிதர்க்கு உரிமை உண்டு என்பதை முதலில் ஒப்புக் கொள்கிறார். வாழ்வதற்குள்ள உரிமை, நிபந்தனை / கட்டுப்பாடு அற்றது அன்று : மற்றவர் வாழ்வுக்கு ஊறு செய்வதால்தான் வாழ இயலும் என்று யாரும் விவாதிப்பதில் பொருள் இல்லை. அறிவதற்குரிய உரிமையும் அத்தகைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதுதான். ஜெர்மானியர் பிற்காலத்தில் மக்களைக் கூடாரத்தில் அடைத்து வைத்து எவ்வாறெல்லாம் கொலை செய்யலாம் என்பதற்கு பரிசோதனைகள் நடத்தினார்களே, அது போல உடலறுப்பை எவ்வாறெல்லாம் செய்யலாம் என்பதற்குப் பரிசோதனை செய்வதையும் ஒப்புக் கொள்வதற்கில்லை.. அறிவை அறிதற்கு அது பயன்படலாம் : ஆனால் உடலை அறுத்து அறிவைப் பெறும் உரிமை மனிதனுக்கு இல்லை.

"தாயை எரித்துத்தான் அறிவை அடையலாம் என்றால் அறிவை வேண்டாம் என்று தான் மறுக்க வேண்டும் என்று அறிவற்றவரும் கூறுவர் : அதுபோல ஒரு நாயைச் சித்திரவதை செய்துதான் அறிவை அடையவேண்டும் என்றால், அத்தகைய அறிவு வேண்டாம் என்றுதானே அறிஞர் கூற வேண்டும்?"



உடலறுப்பை வேண்டாம் என்று விட்டுவிட்டால், உடலறுப்பு மூலம் பெறக் கூடிய அறிவைப் பெறாமல் விட்டுவிடலாமா? இதற்கு ஷா பதில் கூறுகிறார்: "அறிவைப் பெறுவதற்கு இதுவரை பல வழிகள் கண்டறியப்பட்டுள்ளன. உடலறுப்பைக் கைவிட்டதனால் இனி வேறு வழியே கண்டறிய இயலாது என்பதை அறிஞர் யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்."

ஷா வின் இத்தகைய விவாதங்களுக்கு நாம் பதில் கூற இயலுமா என்று பார்ப்போம்.

மனிதர் யாவரும் - விஞ்ஞானிகள் யாவரும் ஷா கூறுவது போல நேர்மையும் பேரறிவும் உடையவர்களாக இருந்திருப்பார்கள் என்றால், விலங்குகளின் உடலறுப்பைத் தவிர வேறு வழிகளில் வேண்டிய அறிவைப் பெற்றிருப்பார்கள் : இதுவரை விலங்குகளின் உடலறுப்பைக் கொண்டு செய்த சோதனைகளில் பெரும்பாலானவை எந்த அறிவையும் தந்ததாகக் தெரியவில்லை. மனிதன் அறிவிலும் இரக்கத்திலும் குறைவுடையவன். இத்தகைய நிலையில் விலங்குடலை நேரடியாக அறுத்துத்தான் அவனால் அறிவைப் பெற இயலும். சுற்றி வளைத்துச் செல்லும் வேறு வழி அவனுக்கு இன்று உதவாது. இந்தக் காலத்தறிவைக் கொண்டு விஞ்ஞானத்தின் தொடக்க காலத்திலிருந்து ஆராய்ந்து பார்ப்பதென்றால், பழைய காலத்தவர் கையாண்ட நெறிகளுக்குக் கொஞ்சம் கடுமை குறைந்த நெறிகளைப் பின்பற்றக் கூடும்.

பழங்காலத்தவர் விலங்குகளிடம் மட்டுமா கடுமையாக நடந்து கொண்டார்கள் ! தம்மையொத்த மனிதரிடத்தும் தம்மிடத்துமே கடுமையாக நடந்து கொண்டார்கள். பரிசோதனைகளின் போது உடலுக்கு எத்தகைய துன்பங்கள் நேருகின்றன என்பது இன்று நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. உடலுக்கு நேரும் துன்பங்களைக் குறைக்கவும் நாம் இன்று வழிமுறைகள் தெரிந்து வைத்திருக்கிறோம். இவ்வாறு நாம் விவாதிப்பதை ஷா ஒப்புக் கொள்ளவா செய்வார்? ஒப்புக் கொள்ளத்தான் மாட்டார். துன்பமில்லாமல் உடலறுப்பைச் செய்வதைப் பார்த்த பின்னும் ஷா தன் கருத்தைக் கைவிட மாட்டார் என்பது உண்மைதான்.

உடலறுப்பை மறுத்து எவ்வளவு வெறுப்போடு ஷா விவாதிக்கிறாரோ அதே வெறியுடன் அம்மை குத்துதல் ஆகிய தடுப்பு

மருத்துவத்தையும் விவாதிக்கிறார். 1911-ல் நோய்க்கிருமிகளின் இயலையே (Bacteriology) வெறும் மூடநம்பிக்கை என்று அடியோடு மறுத்துப் பேசுகிறார். கிருமி என்பது நோய்க்கு காரணமாக இருக்க இயலாது. நோய் ஏற்பட்டதன் விளைவாக இருக்கலாம் என்று ஷா கருதினார். ஷா, இப்படி அடியோடு மறுத்ததற்கும் காரணம் இல்லாமலில்லை. பாஸ்டியருடைய கொள்கை அப்பொழுதான் புதிதாகத் தோன்றியது. பாஸ்டியருடைய கண்டுபிடிப்பை ஏதோ பெரிய தெய்வத்தின் அரும்சாதனை போல விஞ்ஞானிகள் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடினர். எல்லா நோய்களுமே கிருமிகளால்தான் ஏற்பட்டாக வேண்டும். நோய்க் கிருமிகளைக் கொல்வதுதான் முதல் வேலை. அதற்காக எத்தகைய கொடிய முறையையும் பின்பற்றத்தான் வேண்டும். மனித உடலுக்கு அதனால் நேரக்கூடிய ஊறுகூடப் பொருட்படுத்தக் கூடியதன்று. இவ்வாறு மருத்துவரும் விஞ்ஞானிகளும் கண்ணை மூடிக்கொண்டு பாஸ்டியரின் கொள்கையை நம்பினர். நோய்க்கிருமிகள் உடலில் காணப்படவில்லை என்றாலும் நோய்க் கிருமிகள் எங்காவது மறைந்து இருக்கத்தான் வேண்டும். அதற்கென்று ஏதாவது ஒரு தடுப்பு மருந்து கண்டிப்பாக பயன்படுத்தியாக வேண்டும். இத்தகைய கொள்கைகளெல்லாம் அக்காலத்தில் பெருக்கெடுத்திருந்தன. இத்தகைய மிகைப்படுத்தலுக்கும் பொய்மைகளுக்கும் இடையில் உண்மை என்ற சாடும் ஓடத்தான் செய்தது. மிகைப்படுத்தலும் பொய்மையும் ஷாவின் கண்களுக்கு புலப்பட்டனவே தவிர, உண்மையை அவர் உற்றுப் பார்க்கவில்லை கண்ணுக்கு தெரியாத நுண் உயிர்கள் (Viruses) கூட இக்காலத்தில் படமாக பிடிக்கப்படுகின்றன. கிருமிகளிலும் நல்லவை உள்ளன. அவை தீயவற்றை அழிக்கின்றன. இவை இன்று விளங்குகின்றன. ஷாவின் காலத்தில் விளங்கவில்லை.

தடுப்பு மருத்துவத்தை ஷா ஏன் மறுத்தார் ? ஏதாவது மருத்துவ ஆராய்ச்சி கொண்டா மறுத்தார்? இல்லை ; ஒரு தனிமனிதனின் உரிமையில் தலையிடக் கூடாது என்ற கொள்கையைக் கொண்டுதான் மறுத்தார். ஷா கூறிய மற்ற மறுப்பும் அவர் காலத்தில் மிகவும் உண்மையாகத்தான் இருந்தது :

"பெரிய அம்மை அல்லது சிறிய அம்மையை உண்டாக்கும் கிருமிகள் இன்னும் கண்டு அறியப்படவில்லை : (பார்த்து அறியப் படவில்லை). அம்மையால் நுன்புறும் ஒரு மாட்டின் கொப்புளத்திலிருந்து எதையோ நீங்கள் சுரண்டி எடுக்கிறீர்கள். சுரண்டி எடுக்கப்படும் பாலில், நோய்க்கிருமிகள் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்கள். அந்தப் பாலில் வேறு கிருமிகளும் இருக்கலாம்; அவற்றால் உண்டாகும் நோயைத் தடுக்க எத்தகைய தடுப்பையும் நீங்கள் செய்து கொள்ளவில்லை. விளைவு என்னவாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்".



இந்தக் கொள்கையைத்தான் The Doctor's Dilemma வின் கருப்பொருளாக்கியிருக்கிறார். ஷா கூறும் இக்கருத்து முற்றிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதே. நோய்க்கு மூலகாரணம் சமுதாய நிலைதான் என்பதை முதன் முதலில் கண்டறிந்து கூறியவர் ஷா.

மருத்துவ வசதி குறைவு என்பது நோய்க்கு முதற்காரணம் அன்று ; வறுமைதான் முதற்காரணம். மருத்துவ வசதியைக் கூட ஏழை மக்களால் பெறக்கூடுவதில்லை; ஏழைகளுக்கு மருத்துவ வசதியைக் கொடுப்பது அரசாங்கத்தின் முதற்கடமை ; நாடகத்தின் முன்னுரையின் இறுதிப் பகுதியில் ஷா இதை மிக உறுதியாக வற்புறுத்திக் கூறியிருக்கிறார். ஷா கூறிய முறையில், நாட்டின் சட்டமாக இது ஆக்கப்படுகிறது. அவற்றில் ஒரு சில முறைகள் : " காட்டிலும் ஊறுவிளைவிப்பவர் யாரும் இல்லை; கேவலமான ஒரு நிலச் சொந்தக்காரனைக் காட்டிலும், அறிவற்ற மருத்துவர் ஊறு விளைவிப்பவர்"

"நீ நல்லபடியாக பிறப்பதற்கும் உன் தாய் நல்ல உடல் நலத்துடன் இருப்பதற்கும் உனது கல்விச் செலவுக்கும் அரசாங்கத்தையே பொறுப்பாக்கு. " ஷாவிடம் இணைந்திருக்கும் இயற்கையான பகுத்தறிவும், அறிவார்ந்த தீர்ப்பும் விஞ்ஞான ஆதாரமற்ற இயக்கங்களுக்குப் பரிந்து பேசிய திறனும், பரிசோதனைகளால் அடைந்த முடிவுகளைத் தூக்கி எறிந்து பேசும் திண்மையும் – இவரிடத்தில் எங்ஙனம் பொருந்தியிருந்தன என்பது ஒரு விந்தை! இத்தகைய ஓர் இணைப்பு, ஒரு தனிமனித விந்தை என்று கூறுவதைவிட, ஐரோப்பாவின் ஒரு தலைமுறையிருடைய பிரச்சனை என்று கூறுவதே பொருந்தும்.

மனித சமுதாயம் வளர்ச்சி பெறவேண்டுமானால் சோசியலிசம் வேண்டும் என்ற ஷாவின் அசைக்க முடியாத நம்பிக்கை; இத்துடன், விஞ்ஞான ஆய்வுகளால் மாறிவரும் உலகத்தை evolution மூலம் விளங்கிக் கொள்ளும் தீவிர முயற்சி தற்காலத்தவருக்கு வேண்டும். இவ்விரண்டிற்கும் இடையில் மிக நெருக்கமான இணைப்பைச் சாதித்தவரென்று தன்னை நம்பியவர் ஷா. இந்த சாதனையே, அவரை

விஞ்ஞான இயக்கத்திலிருந்தும், அரசியல் இயக்கங்களிலிருந்தும் விலக்கி வைத்தது. இந்த இரண்டின் இணைப்புகளால் மிக போதுண்டவர் ஷா. சில சமயம் விஞ்ஞானத்தையே முற்றும் வெறுத்துச் சமயத்தையே சார வேண்டிய நிலைக்குள்ளானார் ஷா.

"ஐயுறவுக்குத் தாய் சமயம் ; நம்பிக்கைக்குத் தாய், விஞ்ஞானம்; இந்த காலத்தில் விஞ்ஞானம் என்ற பெயரில் எதைக் கூறினாலும் நம்பாதவர் இல்லை; சமயம் என்ற பெயரில் எதைக் கூறினாலும் நம்புவார் இல்லை. நானும் முதலில் இவ்வாறுதான் எண்ணினேன்; ஆனால் இப்பொழுது, விஞ்ஞானக் கருத்து எதையும் பெரும் அவநம்பிக்கையுடன்தான் பார்க்கிறேன்; முன்னறிவாளரும், சமயவாதியரும், கவிஞரும் கூறும் எதனையும் மதித்து மாண்புடன் ஆராயும் சிந்தை இப்பொழுது எனக்கு வாய்த்திருக்கிறது."

சமயத்தை ஷா தேர்ந்தெடுத்ததற்கு அறிவார்ந்த காரணம் என்ன என்று பார்த்தல் நலம்: ஷாவின் இளமைக் காலத்தில்தான் கூர்தலறம் பற்றிய மிகச் சூடான விவாதங்கள் நடைபெற்றன. அவற்றால் அவர் மனத்தில் பதிந்த கருத்துக்கள் சில : விலங்கினத் தோற்றத்தையும் மனித சமுதாயத் தோற்றத்தையும் ஒரே கொள்கை கொண்டு விளக்கிவிடலாம் என்பது பலர் கொண்டிருந்த கொள்கை : அந்தக் கொள்கையை இன்று கூட சில இளம்விஞ்ஞானியரும் தத்துவவாதிகளும் கொண்டிருக்கின்றனர்: இக்கொள்கைக்கு இன்று Biologism – என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இக் கொள்கையை ஒப்புக்கொண்டவுடன், இது சக்தி வாய்ந்த இயக்கம் உடையதாகி விடுகிறது : டார்வினியத்தை நம்பும்பொழுது திறமையுடையவை வெல்லும் – பயங்கரமான போட்டிகள் – தனிப்பட்ட முதலாளிகளின் கொடுமைகள் ஆகியவை எவ்வாறு பேருருவம் கொள்கின்றனவோ, அதுபோலவே Biologism – ஒப்புக் கொள்ளப் பட்டவுடன், தன் உணர்வோடும் விருப்பத்தோடும் செய்யும் செயல்களுக்கு மதிப்பு ஏற்படுகிறது. சமுதாய மாற்றம் தன் உணர்வால் சாதிக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

ஷாவின் இன்னொரு கருத்து கவர்ச்சியுடைய விலங்குகளுடன் அவர் கொண்ட அன்புத் தொடர்பை இது ஆதரிக்கிறது. கிறித்தவ மதத்தில் மனிதனும் விலங்கும் வேறு வேறு படைப்புகள். மனிதனுக்கு மட்டுமே அறிவுத்திறம் வாய்ந்த – அழியாத ஆன்மா உண்டு என்று கூறப்பட்டிருப்பதை, ஷா வால் ஒப்புக் கொள்ள இயலவில்லை. இரண்டு



வகையான கூர்தலறக் கொள்கையரும், விலங்கிற்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள நூற்றுக் கணக்கான வகைத் தொடர்புகளை விளக்கினர்; ஆனால் இருவகைக் கொள்கையரும், மனிதனும் விலங்கும் நடத்தையிலும் சமுதாய அமைப்பிலும் வேறுபடுவதைக் காணத் தவறினர்.

மனிதனையும் விலங்கையும் இணைத்தலும் வேறுபடுத்தலுமாகிய இரண்டு உண்மைகளையும் ஒப்புக் கொண்டு, மனிதச் சமுதாய அமைப்பை – அதிலிருந்து விளக்கிய மற்றோர் இயக்கத்தை ஷா காண மறுத்தார், அல்லது எதிர்த்தார். ஷாவின் இளமைக் காலத்தில் மார்க்சும் ஏங்கல்சும் இங்கிலாந்தில் வாழ்ந்தனர். அவர்கள் இருவர் செல்வாக்குக்கும் ஷா உட்படாமலில்லை; அரசியல் – பொருளாதாரத்துறையில் ஷா, அவர்கள் கருத்தால் கவரப் பட்டார். ஆனால் தத்துவத் துறையில் ஷா, அவர்கள் செல்வாக்குக்கு உட்படவில்லை. மார்க்சின் நூலிலும் ஏங்கல்ஸின் நூலிலும் விவரிக்கப்பட்டுள்ள இயங்கியல் பொருள் முதல் வாதம் பற்றி இகழ்வுரைகளை மட்டுமே ஷா பொழிந்தார். ஏங்கல்சின் நூலை மட்டும் ஷா ஆராய்ந்திருப்பாரானால், தமது சமுதாயக் கருத்துக்களை, தமது உயிர்நூற் கருத்துக்களுடன் மிகமிக நெருக்கமாக இணைத்திருப்பார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் டார்வினியம் சிறிது புகழ் மங்கியது என்பது உண்மை. ஆனால் இன்று அதன் அடித்தளம் பலமாகக் கட்டப்பட்டுவிட்டது. புதிய ஆராய்ச்சிகளால் அதன் அடித்தளம் பலப்பட்டிருக்கிறது. புதிய உயிர் இனங்கள் தோன்றுவதை இன்று நாம் பார்க்கிறோம். எக்ஸ் – கதிர்களைக் கொண்டும் புதிய உயிர் இனங்களை எளிதாக இன்று படைக்கிறோம். புதிய இனப் படைப்பு என்பது இன்று எளிய வேலையாகி விட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் நமது காலம் வரை விஞ்ஞானத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை நாம் கவனிக்க வேண்டும்; பழங்காலத்தவர் தாம் கண்டறிந்த விஞ்ஞான உண்மைகளை, உருவகமாக்கி உரைத்தனர் : அதை நாம் விளங்கிக் கொள்ளாமல், சொல்லுக்குச் சொல் பொருள் பார்த்து, அவர்கள் கூறியன தவறு என்று நிரூபிப்பதிலேயே நாம் காலம் கழித்துக் கொண்டிருக்கிறோம். பழங்காலத்தவரை அறிவற்றவர் என்று நிரூபித்தல் அன்று நம் கடமை ; அவர்கள் கூறியது என்ன என்று விளங்கிக் கொள்வது நம் கடமை.

Aristotle, galen,Aquina ஆகியவர்கள் தாவரத்தின் – விலங்கின் – மனிதர்களின் ஆன்மா பற்றி ஆராய்ந்தனர் ; தாவரத்தின் ஆன்மா ஈரலிலும், விலங்கின் ஆன்மா இருதயத்திலும், மனித ஆன்மா மூளையிலும் இருப்பதாக அவர்கள் கருதினர். Vesaluis, Harvey ஆகியவர்கள் இக்கற்பனையை உடைத்தெறிந்தனர். ஈரல் என்பது உணவைச் சேர்த்து வைக்கும் இடம். இருதயம் இரத்தச் சுழற்சிக்குரிய இடம். மூளை என்பது, நரம்புகளின் இணைப்புக்குரிய தொலைபேசி நிலையம், பதிவு நிலையம் : இவ்வாறு அவர்கள் விளக்கியதோடு நிறுத்திக் கொண்டார்களே ஒழிய, பழங்காலத்தவர் கருத்திற்கு உள்ளுறை என்ன என்பது பற்றி இவர்கள் சிந்திக்கவில்லை. தாவரங்களுக்கு வளர்ச்சியே சிறப்பியல்பு என்பதையும், விலங்களுக்கு உணர்ச்சிகளின் ஆக்கமே சிறப்பியல்பு என்பதையும், மனிதர்களுக்கு சிந்தனையே சிறப்பியல்பு என்பதையும் பழங்காலத்தவர் தம் உள்ளத்தில் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இன்று நாம் இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ளுகிறோம் ; உயிர் வாழும் பொருள்கள் அனைத்திற்கும் ஒரு பொதுத்தன்மை, உடலுக்குள் ஏற்படும் பலவகையான, இரசாயன மாற்றங்கள் – இதைத்தான் தாவர ஆன்மா என்றனர் பழங்காலத்தவர்.

இடம் பெயருகின்ற விலங்குகள் அனைத்திற்கும், சில வகைத் தாவரங்களுக்கும், உணர்ச்சிக் கருவிகள் – இடப்பெயர்ச்சி – விருப்பம் – முயற்சி ஆகியவை பொது இயல்புகள் : இதைத்தான் விலங்கு ஆன்மா என்றனர் முந்தையோர். தாவர – விலங்கு ஆன்மா இரண்டும், ஒரு தலைமுறைக்கு அடுத்த தலைமுறை என்ற முறையிலும், உடல் மாற்றம் என்ற வகையிலும் கூர்தல் அறத்தில் வளர்ச்சி பெற்றன. இவை இரண்டிலும் முற்றும் வேறுபட்டவன் மனிதன். மனிதனைச் சிறப்புப் படைப்பு என்று கூறியதன் கருத்தும் இதுதான். கடவுள் களிமண்ணால் தன்னைப் போல ஓர் உருவம் படைத்து அதற்குள் தன் மூச்சை ஊதினார் என்ற கதையிலும் இக்கருத்துதான் அமைந்திருக்கிறது. முந்தையோர் ஏதோ ஒரு வகையில், மனிதனுக்குத் தன்னிகரற்ற தன்மையைக் கொடுத்திருந்தனர். டார்வின்,

தொடர்ந்து மாலையில் எழுதுகிறேன். இதுவரை எழுதியதை அனுப்புகிறேன். துரை . . . J. Needam புத்தகம் Time - The refreshing river படித்துக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து இது பற்றி எழுதுகிறேன்.

* * *



டார்வினையும் லமார்க்கையும் அடுத்து வந்த கூர்தலறவாதியர், ஈடன் தோட்டம் பற்றிய கதைகளையெல்லாம் வெறும் கற்பனை என்று நிரூபிக்கத்தான் முயன்றார்களே யொழிய, உண்மையைக் காண முயலவில்லை. விலங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதை நிரூபிக்கத்தான் தாங்கள் முழுமுயற்சியையும் செலுத்தினார்கள். விலங்கிலிருந்து தோன்றியவன், தன்மைகளால் முற்றிலுமாக விலங்கிலிருந்து வேறுபட்டு சமுதாய அமைப்பை எங்ஙனம் உருவாக்கினான் என்பதுபற்றி அவர்கள் சிந்திக்காதது, அவர்கள் வெற்றறிவுக்குத் தக்க சான்றாகும். டார்வினியர்களுக்கும் லாமார்க்கியர்களுக்கும் இத்துறையில் சிறிதும் வேறுபாடு காணப்படவில்லை. விலங்குகளுக்கு ஆன்மா இல்லை என்று கண்ட டார்வினியர், மனிதர்களுக்கும் ஆன்மாவைக் கூற ஒப்புக் கொள்ளவில்லை; மூளை பெரிதானது. ஆகவேதான் மனிதன் விலங்கிலிருந்து வேறுபட்டு நிகரற்றவனானான் என்று கதைத்தனர். லமார்க்கியர், விலங்குகளுக்கும் ஆன்மா என்று கூறினர். மனிதர்களுக்கு ஆன்மா இருப்பதைக் கண்ட காரணத்தால், விலங்குகளுக்கும் அவர்கள் ஆன்மாவை படைத்துக் கூறினர்.

இவ்விரண்டு முரண்பட்ட கொள்கைகளுக்கிடையில் ஒரு கொள்கையைத் தேர்ந்து கொள்ள வேண்டிய நிலையில், ஷா, அறிவுத் தெளிவில் குறைந்த – ஆனால் மனிதப் பண்பில் மிக்க லமார்க்கின் கொள்கையைத் தேர்ந்தெடுத்தார்.

ஷாவினுடைய "Back to Methuselah" என்ற நாடகம் நமது கவனத்திற்குரியது. அந்நாடகத்தில் ஈடன் தோட்டத்தில் வாழ்ந்தவர் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்ததாக கதையில் அமைத்திருக்கிறார். இவ்வாறு அமைத்ததுக்கு காரணம் என்னவாக இருக்கக் கூடும்? விலங்கிலிருந்து வெளிப்பட்டவன், உடனுக்குடனே மனித அறிவைப் பெற்றுச் சிறந்து விட இயலாது. நெடுங்காலம் வாழ்ந்த பின்னர்தான், ஒவ்வொன்றாக அறிந்து மனிதனாக மாறியிருக்கக் கூடும். சமூக இயற் கூர்தலறம் வளர்ந்தது எப்படி என்பதை இத்தகைய சிந்தனைகளால் ஷா சாதிக்கப் பார்க்கிறார்.

ஷா, சமூகஇயற் கூர்தல்அறம் என்பதைப் பார்க்கத் தவறியிருக்கிறார். நூற்றுக்கணக்கான ஆண்டு தம் நாடகத்தில் பாத்திரங்களை வாழவைத்ததிலிருந்து, இச்சிந்தனை சிறிய அளவி

அவர் மனதில் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. ஆனால் முற்றிலுமாக பார்க்க அவரால் இயலவில்லை என்பதுதான் உண்மை.

சமுதாய வளர்ச்சிக்கு ஷா செய்த சில தொண்டுகள் மிகமிக பாராட்டுக்குரியவை. நமது காலச் சமுதாயத்தை ஊடுருவி ஆழப் பார்க்க அவர் முயன்றார். சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் பழக்க வழக்கங்களின் ஆதித்தோற்றத்தை - வேர்களை அவரால் அறிய முடிந்தது : வரலாற்று முறையில், பொருளாதாரக் காரணங்களால் அவை எவ்வாறு ஏற்பட்டன என்பதை அவர் நன்றாக அறிந்து கொண்டார். 1856 ஆம் ஆண்டுச் சமுதாயம், 1946 ஆம் ஆண்டுச் சமுதாயமாக வளர்ந்தது என்றால் அதற்கு முக்கிய காரணம் ஷா என்பதை மறுத்தற்கில்லை. சென்ற தொண்ணூறு ஆண்டுகளாக, சமுதாய வளர்ச்சியை முன்கூட்டியே அறிந்து உரைத்தவர் ஷா. விக்டோரிய சகாப்தத்தின் தாராள மனப்பான்மைக் கொள்கையை (Liberalism) வெறும் மன ஆசைக்காக ஆதரிப்பதை ஷா கடுமையாக கண்டித்தார். இறந்து போன காலம் என்பதோடு, அதன் இறப்புக்காக பாடுபட்டவர் ஷா. பழங்கால அழிவுக்காக அவர் பாடுபட்டதோடு, புதுக்காலத் தோற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டார். ஆக்க இயல் கூர்தலறக் கொள்கையால் அவர் உருவாக்கிய சமயப் பார்வையோடு, உலக மாற்றத்திற்காக அவர் உழைத்தவர். பழங்கால முட்டாள் தனத்தை அடியோடு, துடைத்தெறிந்து புதுக் காலத்தில், அறிவும் விரிவும் நம்பிக்கையும் அமைந்த எதிர்காலத்தை அமைக்க நமக்கு அவர் வழி வகுத்தார்.

* * *

தோழர் துரை !

இத்துடன் கட்டுரை முடிகிறது.

The Freedom of necessity என்ற Bernal நூலின் 169 - 184 வரையுள்ள பக்கம் இக்கட்டுரை : 1946ல் Bernal இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்.

●

குறிப்பு : 1965-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் பி.எட் படித்தபொழுது நண்பர் துரை அவர்களுக்கு எழுதிய கடிதம்.



பகுதி 2

## மதங்களும் மனிதமும்

1. மத நல்லிணக்கம் குறித்து இன்றைய சூழலில் கூடுதலாகப்
பேசுகிறோம். மதங்கள் பல என்ற போதிலும் பெரும்பாலான மதங்கள்
இறைவனை ஒப்புக்கொள்கின்றன. அன்பு குறித்துப் பேசுகின்றன.
உலகில் அமைதியும் சகோதரத்துவமும் நிலவவேண்டுமென்று பேசுகின்றன.
இவற்றை எவ்வளவுதான் மக்கள் தம் நெஞ்சில் பதித்துக் கொண்டாலும்
மத உணர்வுகளைக் கிளறி மக்களை எதிர் துருவங் களுக்குத் தள்ளி
மக்களுக்கிடையில் மோதலையும் கலவரங்களையும் உண்டாக்குவது
தொடர்கிறது. கோயில்கள் இடிக்கப்படுகின்றன. கொலைகள் திட்டமிட்டு
நடைபெறுகின்றன. குண்டுகள் வெடிக்கின்றன. அன்பையும்
அமைதியையும் உபதேசிக்கும் மதங்கள் இப்படி ஏன் செய்ய வேண்டுமென
நாம் அதிர்ச்சியடைகிறோம். மதங்கள் என்பனவற்றுள் அரசியல்
நுழைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. தேர்தல் வெற்றிக்காகவும்
மதக்கலவரங்கள் தூண்டப்படுகின்றன. வணிக நிறுவனங்கள்
கொளுத்தப்படுகின்றன. வணிகர்களிடையே உள்ள போட்டியும் இந்த
மோதல்கள் வழியே வெளித்தெரிகின்றன. தேசத்தின் அரசியலை யார
நிர்ணயிப்பது? என்ற முறையிலும் கலவரங்கள் தூண்டப்படுகின்றன
நாடுகளுக்கிடையிலான சச்சரவுகளும் மதக் கலவரங்களில் தெரிகின்றன
அரசு கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படும் மதச்சார்பின்மை ஒரு கேலி
சித்திரமாக மாறுகிறது. சில அரசுகள் தமக்குரிய மதம் என்பதையே
வாழ்வுக்கான விதிமுறைகள் ஆக்கி இருப்பதை இன்றளவும் காண
முடிகிறது. பெண்களும் குழந்தைகளும் இத்தகைய மதக்கலவரங்களா
பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது
இவற்றிற்கெல்லாம் காரணம் மதம் மட்டுமா என்ற கேள்வி எழுகிறது.

2. உபதேசங்கள் / நல்லுரைகள் தற்காலிகமாகப் பயன்படலா
மதக்கலவரங்கள் கொஞ்ச காலம் ஓய்ந்திருப்பது போலத் தோன்றினாலு
மீண்டும் வெடிக்கின்றன. கலவரங்களால் ஏற்பட்ட காயங்க
ஆறுவதில்லை. கலவரங்களின் போது இறைவன் எங்கே போய் விட்டான்
என்று ஐயம் எழுகிறது. நாம் நவீன உலகில் தான் வாழ்கிறோமா
என்றும் நமக்குள் கேள்வி எழுகிறது. இளைஞர்கள் உணர்வேற்றப்பட
நிலையில் எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். நல்லவர்க
ஒதுங்கிக் கொள்ள, முரட்டு மனிதர்கள் முன்வரிசைக்
வந்துவிடுகின்றனர். தன் பகைமைகளை - போட்டி பொறாமைகளை

தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாகவும் இவற்றை சில சக்திகள் பயன்படுத்திக் கொள்கின்றன. சிறிதளவும் பொருட்படுத்தக் கூடியதல்லாத காரணங்களுக்காகத் தோன்றுகின்ற வாய்ச்சண்டை, பின்னர் பெருங்கலவரமாக மாறுவதைப் பார்க்கிறோம். பெரிய மனிதர்கள் பாதுகாப்போடு தங்கியிருக்க, வறியவர்கள் கடுமையான துயரங்களுக்கு உள்ளாகின்றனர். கலவரங்களைக் கட்டுப்படுத்தக் காவல் துறையும் அரசும் உடனடியாகச் செயல்படுவதில்லை. காவலர்களுக்குள்ளும் மத உணர்வுகள் தூண்டப்படுவதை நாம் மறுப்பதற்கில்லை. பொருத்திருந்து தேவையான சமயத்தில் அரசு தலையிடுவதிலுள்ளும் அரசியல் செயல்படுவதைத் தொடர்ந்து பார்க்கிறோம். நடுநிலையோடு செயல்படுவதாக அரசு சொல்வதை நம்மால் நம்ப முடியவில்லை. நீதி விசாரணையும் இத்தகைய அரசியலோடுதான் நடைபெறுகிறது. விசாரணை அறிக்கைகள் மறைக்கப்படுகின்றன; மறுக்கவும் படுகின்றன.

இவ்வாறெல்லாம் நடைபெறுவதைப் பார்க்கும்போது மத நல்லிணக்கம் என்று மட்டும் பேசுவதனால் இந்தச் சிக்கலின் ஆழமும் விரிவும் நமக்குப் புலப்படுவதில்லை. இந்தச் சிக்கலில் மதம் என்பதனோடு தொடர்பில்லாத எத்தனையோ சக்திகள் செயல்படுகின்றன. அல்லது மதம் என்பதைப் பயன்படுத்திக்கொள்ளும் சக்திகளையும் பார்க்கிறோம். ஒன்று வெளிப்படையாகத் தெரிகிறது: மத நல்லிணக்கம் பேசுபவர்களும் காலம் கழித்துதான் செயல்படுகிறார்கள். பெரும்பாலான மக்களுக்கு என்றுமே பாதுகாப்பாக வாழ்வு இல்லை. கூலிகளாகவும் அடிமைகளாகவும் இவர்கள் வாழ்கிறார்கள். சாண்டதுக்குள்ளும் ஒடுக்குமுறைகளுக்குள்ளும் சிக்கியுள்ள இவர்கள், தமக்குள்ளும் தம் மனத்திலுள்ளும் பிளவுபட்டு கோபதாபங்களோடு வாழ்கிறார்கள். இவர்களுக்கு நல்ல கல்வி தரப்படுவதில்லை. வேலை வாய்ப்புகள் இல்லை. சொந்தமாக வீடுகள் இல்லை. முதலாளிகளாலும் அரசதி காரிகளாலும் இவர்கள் கேவலங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் இவர்கள் காயப்படுகிறார்கள். இவர்களின் உணர்ச்சிகளுக்குத் தீ மூட்டுவது எளிது. இவர்களை அரசியல் கட்சிகளோ குழுத் தலைவர்களோ பயன்படுத்த இயலும். இவர்களை வைத்துக் கொள்ளையடிக்க முடியும். இப்படியெல்லாம் இங்கு நடைபெறுவதைப் பலமுறை நாம் பார்த்திருக்கிறோம். மேலும் ஒன்றைச் சொல்லலாம். நமது சமூகமே வன்முறையின் அடிப்படையில் தான் கட்டப்பட்டிருக்கிறது. ஏற்றத்தாழ்வோடு இயங்கும் சமூகம் வன்முறையின்றிச் செயற்பட முடியாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியாது. இத்தகைய சமூகத்தில் எல்லா நிறுவனங்களுமே வன்முறையின் பலத்தோடுதான்



செயற்படுகின்றன. குடும்பத்திலுள்ளும் இந்த வன்முறை செயல்படுகிறது. பெண்களின் மீதும் குழந்தைகள் மீதும் வன்முறை செலுத்தப்படுகிறது. கல்வி நிறுவனங்களிலும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ செயல்படுவது இந்த வன்முறை. பணம் என்பதனுள் இந்த வன்முறை உறைந்திருக்கிறது. உலகளவில் அரசியலையும் பொருளியலையும் தாங்கி நிற்பது இந்த வன்முறை. ஆதிக்கம் எந்த வகையில் செயல்பட்டாலும் அதனுள் இந்த வன்முறையைக் காணமுடியும். இன்று செயல்படுவதாகச் சொல்லிக் கொள்ளும் சனநாயகத்திலுள்ளும் வன்முறை மறைவாகத் தங்கியுள்ளது. அரசென்பது உச்ச அளவில் வன்முறையோடுதான் அமைந்திருக்கிறது. உடைமை என்பதனுள் உறைந்திருப்பது இந்த வன்முறை. பிரமாண்டமான கட்டிடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தொழில்முறைகள், இயந்திரங்கள் முதலியவற்றிலுள்ளும் உறைந்திருப்பது வன்முறை. மத நிறுவனங்களிலுள்ளும் செயற்படும் அதிகாரம், இந்த வன்முறையின் வடிவம் தான். இத்தகைய வன்முறைகளுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுவது தவிர்க்க இயலாதது. இப்பொழுதெல்லாம் சட்டத்தை மக்கள் தம் கைகளில் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று அரசுத் தலைவர்கள் பேசுவதன் உண்மை என்ன? என்பதை நாம் தெரிந்தே இருக்கிறோம். பயங்கரவாதமென்று குற்றம் சாட்டப்படும் இயக்கங்கள் அரசின் வன்முறைக்கு எதிர்வினைகள் என்றுதான் சொல்லமுடியும். பெரிய தேசங்கள், சிறிய தேசங்களின் மீது வன்முறையைச் செலுத்துகின்றன. ஒரு தேசத்திலுள்ளும் இப்படிப் பல படிநிலைகளில் வன்முறைகள் செயல்படுகின்றன.

இப்பொழுது நாம் புரிந்து கொள்ள முடியும். மதக் கலவரம் என்பது ஒரு கொத்துப் பிரச்சனை. அதைப் போலவே மத நல்லிணக்கம் என்பதையும் பல பரிமாணங்களில் அணுகுவதன் மூலமே சாதிக்க முடியும். உடைமையோடும் அதிகாரத்தோடும் இவற்றிற்குள்ள உறவை ஊடாட்டத்தை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். வரலாற்றுக் காலம் முதல் தொடர்ந்து கலவரங்கள் நிகழ்கின்றன. இவற்றில் மதக் கலவரங்கள் ஒரு குறிப்பிட்ட வகைக் கலவரங்கள். மக்களின் ஒரு பகுதியினரை ஒடுக்கி வைப்பதற்காக நடைபெறுபவை இந்தக் கலவரங்கள். ஆதிக்க சக்திகளுக்கு எதிராக மக்கள் சார்பிலும் கலவரங்கள் வெடிக்கின்றன. இறுதியில் சமத்துவம் என்ற முறையில் சமூகத்தின் அரசியலும் பொருளியலும் அமைந்தாலன்றி கலவரங்களுக்கான காரணங்கள் அழிந்து விட மாட்டா. வரலாறு என்பதை வர்க்கப் போராட்டம் என்று மார்க்சியர் கூறுவதை இங்கும் நாம் பார்க்கிறோம். மக்கள் மத்தியில் வர்க்க உணர்வு வளர்ந்து விடக்கூடாது என்ற முறையிலும் ஆதிக்க சக்திகள் மதக்கலவரங்களைத் தூண்டுகின்றன.

இன்று இந்தியாவில் நடைபெறும் மதக்கலவரங்களைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் என்றும் வர்க்கப் போராட்டத்தைக் குறிப்பிட முடியும். சோசலிச ஆக்கத்திற்கான முயற்சிகளை அழிக்கும் முறையில் ஆதிக்க சக்திகள் தொடர்ந்து செயற்படுகின்றன. கம்யூனிஸ்டுகளை எந்த வகையிலும் ஒடுக்கியாக வேண்டும். தொழிற் சங்கங்களை முடக்க வேண்டும். முதலாளிய சக்திகளுக்கு இந்த தேசத்தைப் பத்திரப்படுத்த வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எது காரணம்? என்பதை மக்கள் அறிந்து விடக்கூடாது. வறுமை முதலியவற்றிற்கு யார் காரணம்? என்பதை மக்கள் அறிந்து விடக்கூடாது. உடைமைப் பெருக்கம் இல்லாமல் சமூகம் வாழ முடியாது என்ற உணர்வை மக்களுக்குள் திணிக்க வேண்டும். கரண்டலும் ஒடுக்குமுறையும் எல்லாக் காலங்களிலும் நடைபெறுவது இயல்புதான், இதில் தவறு இல்லை என்று மக்கள் நம்பவேண்டும். அரசும் உடைமையும் இல்லாமல் சமூகம் இயங்க முடியாது என்று மக்கள் நம்பவேண்டும். இராணுவமும் காவல்துறையும் இல்லாமல் சமூகத்தில் அமைதி நிலவமுடியாது என்றும் அவர்கள் நம்பவேண்டும். கட்சிகளில்லாமல் ஜனநாயகம் இல்லை என்றும் அவர்கள் நம்பவேண்டும். தொடர்ந்து மக்கள் தொகை பெருகும் நிலையில் அரசு என்னதான் செய்யமுடியும்? என்று மக்களே வருந்த வேண்டும். சரியான கல்வியை மக்களுக்கு வழங்கக்கூடாது. ஏற்றத்தாழ்வோடுதான் சமூகம் இயங்கும். இவ்வாறெல்லாம் மக்களுக்குக் கற்பித்து மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் அரசியல் - பொருளாதாரம் குறித்து நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். இந்த அரசியலை மக்கள் ஏற்க மாட்டார்கள். கலவரங்களின் போது அரசை எதிர்பார்த்து மக்கள் காத்திருப்பதன்மூலமும் இந்த அரசியல்தான் வெற்றி பெறுகிறது.

மக்களைச் சிறுபான்மை பெரும்பான்மையென்று பிரித்துப் பார்ப்பது இந்த ஆதிக்க அரசியல்தான். இத்தகைய பிரிவினைக்குள் செயற்படுவது: பெரும்பான்மைக்குச் சிறுபான்மை கட்டுப்பட வேண்டும். பெரும்பான்மையினர் வகுத்துத் தரும் வரையறைகளுக்குள் சிறுபான்மையினர் மனமொத்து வாழ வேண்டும். அவர்களுக்குத் தரப்படும் சில சலுகைகளை ஏற்றுக் கொண்டு பெரும்பான்மையினரிடம் நன்றியுணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரிவினைகள் ஒழிந்து ஒரு தேசத்தின் மக்கள் நாம் என்ற முறையில் இவர்கள் இணைந்து விடக்கூடாது. இதற்காக அடிக்கடி நினைவுறுத்தப்படும் இந்தப் பிரிவினை. இதை நிரந்தரப்படுத்தும்படி தனித் தொகுதிகள், தனிச்சட்டங்கள் என்ற வசதிகள். மதச் சார்பின்மை என்று சொல்லிக் கொண்டே, மதநிறுவனங்களின் ஆளுகையில் அரசு தலையிடுவதில்லை என்றும் மத விவகாரங்களில் அரசு தலையிடாது



என்றும் சொல்லிக் கொள்ளும் கொள்கையோடு - மத நிறுவனங்களின் மூலம் நடைபெறும் ஆதிக்கத்தோடு அரசு ஒத்துழைக்கிறது. சனநாயகத்தை மக்கள் மத்தியில் கூடுதலாகக் கொண்டு செல்ல அரசு விரும்பியிருக்குமானால் மத நிறுவனங்களின் விவகாரங்களில் அரசு தலையிட்டிருக்க முடியும். இந்து சமயம் எனும் கட்டமைப்பைக் காப்பாற்ற விரும்புகிறது இந்தியாவின் அரசியல் சட்டம். வழிபாடு செய்யும் உரிமையை அனைத்து மக்களுக்கும் வழங்குவது சனநாயகத்தின் செயல்பாட்டிற்கு வழிவகுக்கும். மதச் சார்பின்மை என்ற கொள்கையோடு மத நிறுவனங்களை - அவற்றின் உடைமை, அதிகாரம் ஆகியவற்றோடு காப்பாற்ற விரும்புகிற அரசு, மதம் குறித்த ஆழமான விமர்சனங்களையும் தடுக்கத்தான் செய்கிறது.

இந்தியாவின் சாதிய அமைப்பைத் தகர்ப்பதில் அரசுக்கு அக்கறையில்லை. சாதியமைப்பைத் தகர்த்தால் ஒழிய மக்கள் தம் நலன்களை மேம்படுத்த முடியாது. இவ்வகை அமைப்புகள் வழியே ஏற்றத்தாழ்வுகள் நிலைநிறுத்தப்படுகின்றன. இத்தகைய ஏற்றதாழ்வுகளை ஏற்றுக்கொண்ட பிறகுதான் மத நல்லிணக்கம் என்றும் நாம் பேசமுடியும். மதங்களுக்கு அப்பால் மக்களின் நல்லிணக்கம் என்று நாம் பேசவேண்டும். ஏற்றத்தாழ்வு என்ற கட்டமைப்பைத் தகர்க்கும் முறையில் இந்து - முஸ்லிம் என்ற வேறுபாடுகளை மறுத்துவிட்டு மக்கள் என்ற முறையில் அனைவரும் தமக்குள் இணக்கம் காணவேண்டும். நாம் சகோதரர்கள் என்ற முறையில் வேறுபாடுகளை ஒதுக்கிவைக்க வேண்டும். வேறுபடுத்துபவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும். ஒரு மதத்தைக் கடைப்பிடித்து கொண்டே இன்னொரு மதத்தோடு நல்லிணக்கம் என்பது சாத்தியமில்லை. தற்காலிகமாக இப்படிப் பேசலாம். இது மேலோட்டமான பேச்சு. இது நிலைக்காது. மத நல்லிணக்கம் என்று இன்று பேசுகின்ற மதச்சார்பினருக்கு அவரவர்க்குரிய கோயில்கள், கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், மதத் தலைவர்கள், மறைநூல்கள், சடங்குகள் வேண்டும். கோயில்களுக்குத் தனிஉடைமைகளும் அரசுப் பாதுகாப்பும் வேண்டும். இவை நிலைபெற வேண்டுமானால் மக்கள் தமக்குள் பிரிந்திருக்க வேண்டும். எங்கள் மதம், எங்கள் கோயில், எங்கள் தலைவர் என்று பெருமையோடு பேசவும் வேண்டும். பிற மதங்களை நாம் அவமதிக்கக் கூடாதென்று நல்ல வார்த்தை சொல்லிக்கொள்ள வேண்டும். கடவுள் ஒன்று; ஆனால் எனக்கு என் கடவுள், என் கோயில், என் மத நூல் என்று பேச வேண்டும். இதனால் மதம் நிலைபெறும். தத்துவங்கள் என்னவாகும்? தத்துவம் கருதி மதங்கள் தம் வரையறைகளை ஒதுக்கி வைக்கக் கூடாதா?

## மதமா? மனிதமா?

1. மத நல்லிணக்கம் என்று பேசும்பொழுது மதம் குறித்த ஆய்வில் ஈடுபடுவது தேவையாக இருக்கிறது. மதம் என்பதே மூடத்தனம் என்று பேசும் நாத்திகவாதம், மத நல்லிணக்கத்திற்கு உதவுமென்று தோன்றவில்லை. மதம் குறித்து ஆய்வு தேவையில்லையென்றும் மதவாதிகள் கூறலாம். இறைவனால் தூதுவர் மூலம் அருளப்பட்டது மதம். இதை எப்படி ஆய்வுக்குட்படுத்த முடியும் என்று அவர்கள் கருதலாம். வழிவழியாக வந்தது எங்கள் மதம்; எங்களின் முன்னோர் கடைப்பிடித்த மதத்தை இப்பொழுது கேள்விக்குள்ளாக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர்கள் கூறலாம். மதத்தைக் கேள்விக்குட்படுத்துவதின்மூலம் எங்கள் வாழ்வியலையும் ஒழுக்கங்களையும் நீங்கள் கேள்விக்குட்படுத்துகிறீர்கள் என்றும் எங்கள் வாழ்வுக்குள் தலையிட உங்களுக்கு உரிமையில்லையென்றும் அவர்கள் கூறலாம். அவரவர் மதத்தோடு தொடர்புடையதாகத் திருமணம் முதலிய எத்தனையோ சடங்குகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் உதறிவிடக்கூடாது என்றும் அவர்கள் கருதக்கூடும். இவர்களின் நெறியை நாம் ஒப்புக்கொண்டால் மத நல்லிணக்கத்திற்கு நாம் போய்ச் சேரமுடியாது.

2. மதம் குறித்து நாம் ஆய்வு செய்யத்தான் வேண்டும். இந்த ஆய்வின்மூலம் மனிதத்திற்கு நாம் வழிதிறந்து விடுகிறோம். இதன் காரணமாகத்தான் நாம் ஆய்வு செய்கிறோம். மதம் என்பது கடவுளின் தொடர்பில் வைத்து எல்லாவற்றையும் விளக்கக்கூடியதாக அமைந்திருக்கிறது. கடவுள்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார். உயிரினங்கள் தொடங்கி மனிதர்வரை எல்லோரையும் படைத்தவர் கடவுள். ஒரு நோக்கத்தோடுதான் அவர் இந்தப் படைப்பைச் செய்திருக்க முடியும். எல்லா உயிரினங்களுக்கும் கடவுள் எல்லா வாய்ப்புக்களையும் வழங்கியிருக்கிறார். நல்லவராகவோ தீயவராகவோ வாழ்வதற்கான சுதந்திரத்தையும் கடவுள் தந்திருக்கிறார். உயிரினங்களின் செயற்பாடுகள் கடவுளைப் பாதிப்பதில்லை. அவர் எல்லாவற்றையும் கடந்து நிற்கிறார் - இப்படித் தொடங்கி கடவுள் குறித்து மதம் ஒவ்வொன்றும் தனக்குரிய முறையில் வேறுபட்ட விளக்கங்களைத் தருகிறது. கடவுளை ஒப்புக் கொள்ளாத மதங்களும் அந்த இடத்தில் எல்லாம் வல்லதாக அறம் என்பதையோ, வினை என்பதையோ, பொருள் அல்லது இயக்கம் என்பதையோ முதன்மைப்படுத்துகின்றன. பொருளுக்கு இயக்கம் இல்லை. சடப்பொருளிலிருந்து இயக்கம் தோன்ற முடியாது. உயிர் இயக்கம் தந்தது



கடவுள். ஆன்மா என்பதனுள் கடவுள் தங்கியிருக்கிறார். இறுதியில் எல்லா ஆன்மாக்களும் இறைவனை வந்து சேரவேண்டும். இறைவனை வந்தடைய வேண்டுமென்றால் துன்பங்களை ஏற்றுக்கொண்டு தவம்செய்து தீமைகளிலிருந்தும் பிறகு நன்மைகளிலிருந்தும் விலகி நிற்கவேண்டும். வினைகளிலிருந்து இப்படி விடுபடும்போதுதான் உயிர் இறைவனை அடைய முடியும். இப்படிச் சொல்லும் மதங்களும் இருக்கின்றன. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு பல வகைகளில் அமைகிறது. இறைவனும் உயிரும் ஒன்று; இறைவனும் உயிரும் வேறுவேறு. இரண்டுக்கிடையில் ஊடாட்டமும் உண்டு. இப்படியும் சில நிலைப்பாடுகள். இறைவன் கருணை மிக்கவன்; பல வடிவங்கள் தரிப்பவன். உயிர்களோடு உறவாடுபவன். அவதாரங்கள் எடுத்து உயிர்களை ஈடேற்றுபவன். ஓர் அறிவுயிர் எனத் தொடங்கி ஆறறிவு வாய்த்த மனிதனாகும்போதுதான் இறைவனை உணரும் அறிவு வாய்க்கிறது. இறைவனை அறிவதே கல்வியின் பயன்.

இவ்வாறெல்லாம் மதங்கள் மனித வாழ்வை மையப்படுத்திப் பிரபஞ்ச அளவில் உறவு கொண்டனவாய் இயங்குகின்றன. சுருக்கமாகச் சொன்னால் அறிவியலின் பெரு வளர்ச்சிக்கு முன்பு மத்தியகாலம் அல்லது இருண்ட காலம் என்று சொல்லப்படுகிற காலமுழுவதும் மனித அறிவின் குவிமையமாக இருந்தது மதம்.

3. மேற்குலகில் பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் அறிவியலும் தொழிற்புரட்சியும் அரசியலும் பெரும் வளர்ச்சி கண்டன. அதுவரையில் அறிவின் குவி மையமாக இருந்த மதம் அறிவியலுக்கு இடங்கொடுத்துப் பின்னடைவுக்கு உள்ளாயிற்று. முன்பு பிரபஞ்ச இயக்கம் - உயிர்களின் தோற்றம் - வளர்ச்சி - மனித வாழ்வில் இன்ப துன்பங்கள் முதலிய அனைத்தையும் மதம் தனது நெறியில் விளக்கியது. பரிணாமம் என்ற விதிமுறை கொண்டு, பிரபஞ்ச இயக்கம் முதலிய அனைத்தையும் அறிவியல் இப்போது விளக்கத் தொடங்கியது. மனிதர்களின் இன்ப துன்பங்கள் பொருளியல் சிக்கல்களால் ஏற்படுகின்றன. இவற்றைத் தீர்க்கும் வகையில் அரசியல் செயற்பட வேண்டும். பிரபஞ்ச இயக்கம் முதற்கொண்டு மனித வாழ்க்கை வரை எத்தனையோ புதிர்களில் கடவுள் தங்கியிருந்தார். இந்தப் புதிர்களை அறிவியல் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடும். இப்படியெல்லாம் அறிவியக்கம் வளர்ச்சி பெற்ற நிலையில் மதத்தின் ஆதாரங்கள் கேள்விக்குள்ளாகின. அதுநாள்வரை மதகுருமார்தான் அரசியல் களத்திலும் அதிபதியாக இருந்தனர். இப்பொழுது மதம் வேறு அரசியல் வேறு என்ற பிரிவினை ஏற்பட்டது.

மதத்தின் எல்லை இப்பொழுது தேசம் என்ற அளவில் குறுகியது. கல்வி, மருத்துவம், அறிவியல் முதலிய அனைத்தும் மதத்தின் எல்லைக்குள் இருந்து விடுபட்டன. பிறப்பு இறப்பு முதலியவை இப்பொழுது கடவுளால் தீர்மானிக்கப்படுவதாக இல்லை. இப்படித் தொடங்கிய மாற்றங்கள் மேற்குலகிலிருந்து அனைத்துலகிலும் தொடர்ந்து பரவின. இன்னும் இந்தப் போக்கு தொடர்கிறது.

4. இப்பொழுது எல்லாவற்றையும் நாம் மறு ஆய்வுக்கு உட்படுத்துகிறோம். மதங்கள் இல்லாமல் மனிதன் வாழ்வில்லை. தன்னுடைய வாழ்வைப் புரிந்து கொள்வதற்காகத்தான் சூழலைப் புரிந்து கொள்ள வேண்டியவனாகிறான். இதற்காகத்தான் இயற்கை முதலியவற்றை உள்ளடக்கிய பிரபஞ்சத்தைப் புரிந்தவனாகிறான். தன் வாழ்வுக்குரியதாக உலகச் சூழலை அவன் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இத்தகைய முயற்சியின் ஒரு நெறியாகத்தான் மதம் என்பதை அவன் கண்டறிந்தான். மனிதன்தான் கடவுளைக் கண்டுபிடித்தான். இவன் கண்டுபிடித்த கடவுள் இவனைப் போலத்தான் பெரியதாக - பேரறிவு உடையதாக - பெரும் கருணை உடையதாக இருந்தார். இவனுக்குப் பேரறிவு தேவை; பெரும் கருணை தேவை; வானமும் கதிரவன் நிலா முதலியனவும் நிலம், கடல், மழை முதலியனவும் இவன் வாழ்வுக்கு ஆதாரங்கள். காற்றும் நீரும் தீயும் இவனுக்கு இன்றியமையாதவை. கருவிகளும் படைப்புகளும் இல்லாமல் இவன் இல்லை. தாயும் தந்தையும் குருவும் இல்லாமல் இவன் இல்லை. இவை அனைத்தும் இவனைப் படைக்கின்றன. மனிதன் கண்டறிந்த கடவுளுக்குள் இவை அனைத்தும் இயங்குகின்றன. எதற்கும் ஒரு தோற்றம் இருந்தாக வேண்டும். ஆகவே எல்லாவற்றிற்கும் முன்பிருந்தவர் கடவுள். இவர்தான் எல்லாவற்றையும் படைத்து இயக்குகிறார். அழிவு என்பதனுள்ளும் ஆக்கம் இருக்கிறது. மனிதன் கண்டறிந்தது இப்படியொரு தர்க்கம். இந்த தர்க்கம்தான் கடவுளையும் படைத்தது. இந்த தர்க்கம் இறைவன் தந்த தர்க்கம் என இவன் சொல்லிக் கொண்டாலும், தன் வாழ்வியல் அனுபவங்கள் என்ற வரையறைக்குள்தான் இந்த தர்க்கத்தைப் படைத்துக் கொண்டான். இந்த தர்க்கம் போதாதென்றாலும் இந்தத் தர்க்கமே இவனைத் தொடர்ந்து படைக்கிறது. இயற்கையின் கருணையில்லாமல் இவனால் வாழமுடியாது. வாழ்வியலுக்குள் சிலசமயம் இவன் குரூரமாக நடந்து கொள்கிறான் - தண்டிக்கப்படுகிறான். நன்மை தீமை என்ற எதிர் முரணுக்குள் சிக்கித் தவிக்கிறான். கடவுளோடு ஒரு பிசாசும் இவனுக்குத் தேவைப்படுகிறது. கடவுளுக்கும் இந்தப் பிசாசுக்கும் என்ன உறவு இருக்குமென்று



சிந்திக்கிறான். மாற்றி மாற்றிப் போட்டு இந்த உறவை வரையறை செய்கிறான்; குழம்புகிறான்.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பிறகு அவன் விடை கண்டறிவது என்பது ஒருபுறம் இருக்கட்டும். முன்னைய இருண்ட காலச் சூழலுக்குள் வெளிச்சமாய் இருந்தவர் கடவுள்; அருளாக - அறிவாக இருந்தவர் கடவுள். இயற்கையை - இயக்கத்தை இப்படித்தான் கடவுளாக அவன் கண்டறிந்தான். பிரபஞ்சம் மட்டுமல்ல, தன்னைப் படைக்கிற சமூகமும் பல்வேறு உறவுகளும் கடவுள் தன்மை உடையவை. இவற்றுக்குள் கடவுள் இயங்குகிறார். கடவுள் என்பது மூடத்தனத்தின் விளைவு அல்ல; அறிவின் விளைவு; அறிவின் ஆக்கம். இந்தக் கடவுளுக்குள் இருந்தவன் மனிதன். மனிதனை மையப்படுத்தித்தான் கடவுளை, மதத்தை, கோயிலை, வழிபாட்டை, சடங்குகளை, மந்திரங்களை, திருவிழாக்களை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இப்பொழுது சொல்லலாம்; மதத்திற்குள் இருக்கும் மனிதத்தை நம்மால் இன்று விடுவித்துப் பார்க்க முடியும். கடவுள்தான் எல்லாவற்றையும் படைத்தார், தன் குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் வழங்கினார் என்று மதம் சொல்லும்போது, இயற்கை - இந்த உலகம் எல்லோர்க்கும் உரியது என்பதாக நாம் புரிந்துகொள்ள முடியும். சமத்துவம் என்பதுள்தான் நம்முள் கடவுள் ஆட்சி தழைக்க முடியும். இயற்கையோடு நாம் ஒன்றியிருக்கிறோம். இயற்கைக்குள் நாம் இருக்கிறோம். கடவுளுக்குள் நாம் இருக்கிறோம். கடவுள் நமக்குள் இருக்கிறார். நமக்குள்ளும் இறைவனை எழுப்பிக் கொள்ள முடியும். இறைவனுக்கு நாமும் திருக்குமாரன் ஆகமுடியும், தூதுவராக முடியும். இப்படியெல்லாம் தான் மதத்திற்குள் இருக்கும் மனிதத்தை நாம் பெறுகிறோம். இன்று வளர்ந்துள்ள வரலாற்றறிவும் சமூகவியல் அறிவும், மதம் குறித்த இந்தத் தெளிவை நமக்கு ஏற்படுத்த முடியும்.

நிறுவனமாக்கப்பட்ட மதம் இந்த மனிதத்தைத் தனக்குள்ளிருந்து வெளியேற்றிவிட்டு மதவாதமாகிவிடுகிறது. இப்படியெல்லாம் மதம் குறித்த விளக்கம் தருவதை மதவாதம் ஏற்காது. குருமார்களென்றும் புரோகிதர்களென்றும் நாங்கள் இருக்கும்போது மதத்திற்கு நீ விளக்கம் தரமுடியாது. வேத நூல்களுக்கும் நான்தான் விளக்கம் சொல்லத் தகுதியுடையவன். கோவில்களையும் சிலைகளையும் நான்தான் நிறுவுகிறேன். கடவுளின் அருளைப் பெற்று உங்களுக்கு நான்தான் வழங்குகிறேன். மண்டியிடுவதும் வணங்குவதுமே உங்கள் கடமை. நீங்கள் தவறு செய்கிறீர்கள். உங்களைக் கடவுள் தண்டிக்கிறார். உங்கள் பாவங்களைக் கழுவ கடவுளிடம் மன்றாடுங்கள். காணிக்கைகளைக்

கொடுங்கள். இப்படியெல்லாம் சொல்பவர் குருமார் / புரோகிதர். இறைவனருளைப் பெற்றவன் அரசன்; செல்வமுடையவன். இவர்களை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இவர்களின் ஆளுகையை நீங்கள் மதிக்கவேண்டும் – இப்படியும் குருமார் சொல்லுகிறார்கள்.

உடமையாளரோடும் அரசியலாளரோடும் இப்படி மதம் ஒத்து இயங்குவதை நாம் புரிந்து கொள்ள முடியும். மதத்தினுள்ளும் வர்க்கப் போராட்டம் நடைபெறுகிறது என்று எங்கல்ச கூறியதை இப்படித்தான் புரிந்து கொள்ள முடியும். மதத்திற்குள் இருந்து ஆதிக்கம் செய்பவர்கள் – அவர்களால் அடிமைப்படுத்தப்படுபவர்கள் ஆகியவர்களுக்கிடையில் இப்போதும் உராய்வுகள் நேருகின்றன. மதத்தைவிட்டு மக்கள் வெளியேறுவது இதனால்தான். மதத்திற்குள் எப்பொழுதும் கலகங்கள் நடைபெறுகின்றன. மதம் மனிதனுக்கு ஒளியை வழங்குவதற்கு மாறாக இருளை வழங்குவதை வேறு எப்படி விளக்க முடியும்? மதவாதம் முன்னுக்கு வரும்போது மனிதம் தடுமாறுகிறது. சீர்குலைகிறது. கதறுகிறது. மதவாதிகள் கடவுளைச் சிறைப்பிடித்து வைத்திருக்கிறார்கள். தங்கள் மொழியில் அவரைப் பேச வைக்கிறார்கள். தங்களைப்போல அவரையும் பெருமைப்படுத்துகிறாகள். அலங்காரம் செய்கிறார்கள். மக்களிடமிருந்து அவரைப் பிரித்து வானத்தில் வைக்கிறார்கள். பெரிய கோவிலை உருவாக்கி அவற்றில் வைக்கிறார்கள். ஆரவாரத்தோடு அவருக்கு அலங்காரம் செய்கிறார்கள். அவரை எந்த அளவிற்கு உயர்த்துகிறார்களோ அந்த அளவுக்கு மக்களைத் தாழ்த்துகிறார்கள்; மக்களைப் பூச்சிகளாக்குகிறார்கள்; குற்றவாளிகளாக்குகிறார்கள்; அவர்கள் உண்பது உறங்குவதைக்கூட குற்றப்பட்டியலில் சேர்த்து விடுகிறார்கள். புலன் இன்பம் பாவம் என்கிறார்கள்; சுய சிந்தனை தவறு என்கிறார்கள். தாங்கள் கற்றுக் கொத்த மந்திரங்களைத்தான் அவர்கள் திரும்பத் திரும்ப ஆயிரம்முறை சொல்லவேண்டும். இப்படியெல்லாம் செல்பவை மதவாதம். இறைவனிடமிருந்து மக்களைப் பிரித்து வைப்பவர்கள் மதவாதிகள்.

மதவாதம் நமக்கு வேண்டாம். மதத்தை ஆழமாக நம்மால் புரிந்து கொள்ள இயலுமானால் அதனுள்ளிருந்து மனிதத்தை மேம்படுத்தலாம். இவ்வகையில்தான் மதங்களுக்கிடையிலுள்ள முரண்பாடுகள் தீரும். சமத்துவமும் சகோதரத்துவமும் பெருகும். உடமையாளரோடும் ஆதிக்கவாதிகளோடும் ஒத்துழைக்கும் மதவாதம் நமக்கு வேண்டாம். இறைவனை நமக்குள் தேடுகிறோம். கண்டடைகிறோம். இறைவனை நமக்குள் விடுவிக்கிறோம். நமக்கு நாமே விடுதலை வழங்கிக் கொள்கிறோம். உலகை, வாழ்வை இப்படித்தான் நாம் உரிமைப்படுத்துகிறோம்.



## வகுப்புவாதத்தின் வேர்கள்

மதவாதம் அண்மைக்காலத்தில் இந்திய சமூகத்திற்குப் பேராபத்தாக எழுந்திருக்கிறது. குறிப்பாக இந்துத்துவம் என்ற பெயரில் பெரும்பான்மை மக்களை அரசியல் நோக்கில் திரட்டும் முறையில் இந்து வகுப்புவாதம் எழுந்துள்ளது. இந்தியாவின் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவது இந்துமதவாதத்தின் முதன்மையான குறிக்கோள். அன்றியும் இந்து மதவாதம், இஸ்லாமியர் மத்தியிலும் எதிர்வினை என்றமுறையில் இஸ்லாமிய மதவாதத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இவற்றில் எந்த மதவாதம் வரலாற்று ரீதியில் முதலில் தோன்றியது என்ற ஆய்வு நமக்கு இப்போது பயன்படாது. ஒரு பெரிய சமூகத்தின் அமைதிக்கும், ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கும் சிறுபான்மை மக்களைக் காட்டிலும் பெரும்பான்மை மக்கள் பொறுப்பேற்றுக் கொள்வது அவசியம் என்றமுறையில், இந்துமதவாதம்பற்றி நம் கவனத்தைக் குவிக்கவேண்டி இருக்கிறது. இந்த நோக்கில் மதவாதத்தின் – குறிப்பாக இந்துமதவாதத்தின் வேர்களைக் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கம்.

பாபர் மசூதி தகர்க்கப்பட்ட நிகழ்ச்சி இன்று மட்டுமல்லாமல் இன்னும் ஒரு நூற்றாண்டுக்கேனும் நம்மை வெகுவாகப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. பாபர் மசூதியைத் தகர்ப்பதில் பாரதிய ஜனதாவுக்கும் அவர்களின் கூட்டாளிகளுக்கும் மட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சிக்கும் பங்கு உண்டென்பது, இன்று வெளிப்படையாகத் தெரிந்திருக்கின்ற உண்மை. மசூதி தகர்ப்பிற்கு, காவல்துறையும் ராணுவமும் இடம் கொடுத்தன என்பதும் உண்மை. மைய அரசே விரும்பி இருந்தாலும் மசூதித் தகர்ப்பைத் தவிர்த்திருக்கவும் முடியாது. கள்ளத்தனமாக மசூதியின் ஒரு பகுதியில் முன்பு நுழைக்கப்பட்ட ராமரின் சிலையை மீண்டும் அதே இடத்தில் அமர்த்தி இன்றும் வழிபாட்டைத் தொடர்வது என்பதும் தற்செயலான நிகழ்வு அல்ல. இவ்வாறு மசூதியைத் தகர்ப்பதும், மீண்டும் வழிபாட்டிற்கு வழி செய்வதும் அடிப்படை மதவுணர்வு என்றோ அதிலும் குறிப்பாக இந்துமத உணர்வென்றோ விவாதிப்பது பொருந்தாது. அடிப்படையில் மதம் என்பது பல்வேறுபட்ட மனிதர்களுக்கிடையில் அன்பையும் நல்லுணர்வையும் வளர்ப்பதாகத்தான் இருக்க முடியும். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த குறிக்கோள்தான் மதவுணர்வின் மையம் மட்டுமல்ல, ஆரோக்கியமான சமூகத்திற்கும் அவசியமானதாகும். இந்த உண்மை பற்றி, பாபர் மசூதித் தகர்ப்பில் தொடர்புடைய அனைவரும் அறிவார்கள். குறிப்பாக இந்துமதவாதிகள் இந்த உண்மையை

மறுப்பதற்கான நியாயங்கள், அவர்கள் போற்றும் மறைநூல்களில் இல்லை. அப்படியானால் இந்தத் தகர்ப்பு எப்படி நேர்ந்தது?

மசூதித் தகர்ப்பிற்கு முன்னர் மண்டல் குழுவின் அறிக்கை, இந்திய அரசியல் வரலாற்றில் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. உயர்சாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட மக்களோடு மட்டுமல்லாமல், பிற்பட்ட சமூகத்தோடும் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு இசைவாக இல்லை. இது சாதிப் பிரச்சனை மட்டுமல்ல, பொருளியல் பிரச்சனையாகவும் இருக்கிறது என்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும். இந்தியாவின் தொழில்துறை மற்றும் நிலவுடமை சார்ந்தவர்கள் உயர்சாதி இந்துக்கள். அரசு அதிகாரப் பகிர்வு என்பது நாளடைவில், பொருளியல் வளங்களையும் பகிர்ந்து கொள்வது என்பதில் முடிவுபெறும் என்பதையும் இவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

ஏற்கனவே சோவியத் யூனியனில் சோசலிசக் கட்டமைப்பு தகர்ந்துவிட்டது. சோசலிசம் இனி உலகை உய்விக்க முடியாது என்ற குரல், முதலாளிய சக்திகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இனி சந்தைப் பொருளாதாரம்தான் உலகத்தைக் காப்பாற்றும் என்றும், மக்களியத்திற்கும் சுதந்திரத்திற்கும் சந்தைப் பொருளாதாரம்தான் தகுந்த நெறி ஆகுமென்றும் இவர்கள் தொடர்ந்து கூறிவந்தார்கள். சோவியத் யூனியன் தகர்வு, இவர்களுக்கு மாபெரும் வாய்ப்பாக வந்துசேர்ந்தது. இந்தியாவில் மார்க்சிய – லெனினிய புரட்சியியக்கங்களை மட்டுமல்லாமல், பொதுவாகவே மார்க்சிய இயக்கங்களையும் சோசலிச சக்திகளையும், தொழிற்சங்கப் போராட்டங்களையும் மறுத்துவந்த இவர்கள், இந்தச் சூழலைப் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள முனைந்தனர். நேருவின் அரைகுறை சோசலிசத்தைக்கூட இவர்கள் ஏற்கவில்லை என்பதையும் நாம் இங்கு நினைவு கொள்ளவேண்டும். இந்திய அரசியலில் சில பத்தாண்டுகளாகவே சோசலிச நோக்கில் சமூகமாற்றம் என்ற திசைவழி ஒரு முக்கிய போக்காகப் பதிந்திருக்கிறது என்ற உண்மையை இவர்கள் அறியாதவர்கள் அல்ல. தக்கசமயம் வாய்க்கும்போது சோசலிச சக்திகளை முற்றாகக் களைந்துவிட வேண்டும் என்பதும் இவர்களின் குறிக்கோளாக இருந்தது.

இந்திய அரசியலில் கடந்த சில பத்தாண்டுகளில் ஏற்பட்ட அழுத்தமான இன்னொரு போக்கையும் நாம் கவனிக்கவேண்டும். இந்தியாவின் அரசியல் கட்டத்தை உள்ளிருந்தே தொடர்ந்து சிதைப்பதில் அரசியல்வாதிகள் முனைந்திருந்தார்கள். கூட்டாட்சி என்ற கோட்பாடு இந்திய அரசியல் சட்டத்தில் அழுத்தமாக இடம்பெறவில்லை. இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்ட சோசலிச சமுதாயம் என்ற கொள்கை, தொடர்ந்து கைவிடப்பட்டது. மாநிலங்களின் அதிகாரங்களை மையஅரசு தொடர்ந்து அபகரித்து வந்தது. ராணுவம் பேரளவில் வலுப்படுத்தப்பட்டது. இந்திய முதலாளிகளுக்கு மட்டுமல்லாமல் ஏகாதிபத்திய நாடுகளின் நலன்களுக்கும் ஒத்தமுறையில் இந்தியாவின் பொருளியலை மறு உருவாக்கம் செய்வது தொடர்ந்தது. மக்களாட்சி விரிவுபடுத்தப்படுவதற்கு மாறாக மக்களிடமிருந்து தொடர்ந்து உரிமைகள் பறிக்கப்பட்டன. அரசு நிறுவனங்கள் ஊழல் என்ற சகதியில் ஊறிப் பெருத்தன. நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் உள்ளிருந்தே அழிக்கப்பட்டன. மக்களின் வாழ்வுரிமைகள் மற்றும் குடியுரிமைகள் தொடர்ந்து அழிக்கப்பட்டன.

முதலாளியமும் அரசு அதிகாரமும் கைகோர்த்துக் கொண்டு, மக்கள்மீது கரண்டலையும் ஒடுக்குமுறையையும் திணிக்கின்ற இந்தச் சூழலில், இதற்கு எதிர்வினையாகத் தொடர்ந்து சிலவகை இயக்கங்கள் எழுந்தன. இவற்றில் குறிப்பாக தேசிய இன உணர்வு எழுச்சியைக் குறிப்பிடவேண்டும். உண்மையில் கூட்டாட்சியும் சோசலிச ஆக்கமும் தொடர்ந்து செயல்பட்டிருக்குமானால் இத்தகைய எழுச்சிக்குத் தேவை ஏற்பட்டிருக்க முடியாது. மையத்திலிருந்து மாநிலங்களுக்கும் மக்களுக்கும் அதிகாரம் பரவிச் செல்வதை கூட்டாட்சி முறை உறுதிப்படுத்தியிருக்கும். இதற்கு நிகரான முறையில் இந்தியாவின் பல ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவான பொருளியல் உற்பத்தி, மக்கள் மத்தியில் பரவலாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்கும் வறுமையும், நோய்நொடிகளும் அறியாமையும், வேலையின்மையும் தீர்வதற்கான திசைவழி உறுதிப்பட்டிருக்கும். பொதுத்துறைகள் மேலும் பெருகுவதோடு அதன்செயல்பாட்டுத்திறம் அதிகரித்திருக்கும். வல்லரசு நாடுகளின் பொருளியல் ஊடுருவல் இந்திய எல்லைக்குள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். கல்வியும் கலையும் மேம்பட்டிருக்கும். இப்படி எதுவுமே நேராமல், மக்களின்மீது கரண்டலும் ஒடுக்குமுறையும் திணிக்கப்பட்ட சூழலில்தான், மைய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வது என்ற முறையில் தேசிய இன விடுதலை இயக்கங்கள் தோன்றலாயின.

இந்து மதவாத எழுச்சியின் வேர்கள் எங்கு இருக்கின்றன என்ற முறையில் நாம் ஆய்ந்து செல்லும்பொழுது, இப்படிச் சில வேர்களை நாம்

கண்டறிகிறோம்: 1. மண்டல் குழுவிற்கு எதிர்ப்பு, 2. சோசலிசத்திற்கு எதிர்ப்பு, 3. தேசிய இன விடுதலைக்கு எதிர்ப்பு. பாரதிய சனதா, பஜ்ரங்தளம், ஆர்.எஸ்.எஸ். இயக்கம் என்று பலபெயர்களில் இந்த எதிர்ப்பு இயக்கங்கள் செயல்பட்டாலும், இவற்றின் கூர்முனை மக்கள் விடுதலைக்கு எதிராகத்தான் இருக்கின்றது. மைய அரசை இதுவரை நிருவகித்த காங்கிரஸ் கட்சி தொடர்ந்து பலவீனப்படுகிற சூழலில், மைய அரசைக் கைப்பற்றுவது பாரதிய ஜனதாவின் நோக்கம். மண்டல்குழுவை பாரதிய ஜனதா மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை. சோசலிசம் மட்டுமல்லாமல் மக்களாட்சி முறைகூட இந்தியக் கலாச்சாரத்திற்கு எதிரானது என்கிறது பாரதிய ஜனதா. இந்தியச் சமூகத்தை நெறிப்படுத்துபவர்கள், ரிஷிகள் / துறவிகள் என்று கூறுவதன்மூலம் மக்களாட்சி முறைக்கு எதிராக இந்துமதத் துறவிகளை ஏற்கிறது பாரதிய ஜனதா. இந்திய நாகரிகம் என்பதை இந்து நாகரிகம்தான் என்று அழுத்திச் சொல்கிறது பாரதிய ஜனதா. இந்து நாகரிகம் வேதங்களில் தொடங்குகிறது மற்றும் சமஸ்கிருத மொழியில் விளைந்திருக்கிறது என்றெல்லாம் கூறுவதன்மூலம், இந்திய நாகரிகத்தின் பன்முகப் போக்கை பாரதிய சனதா மறுக்கிறது. ஆரிய இனத்தை மேம்படுத்துவதன்மூலம் திராவிட இனத்தைத் தாழ்த்துகிறது. சமஸ்கிருத மொழியிலிருந்து வேறுபட்டுத் தோன்றிய தமிழ்மொழியின் தனி ஆளுமையையும் தொன்மையையும் பாரதிய சனதா ஒப்புக் கொள்வதில்லை. தமிழகத்தைப் பொருத்தவரை திராவிட இயக்கத்தின் கடவுள் மறுப்பு முதலிய கோட்பாடுகளில் பாரதிய சனதாவுக்கு உடன்பாடில்லை. காஷ்மீர், பஞ்சாப் முதலிய தேசிய இனங்களின் போராட்டங்களை எந்த விலை கொடுத்தேனும் அடக்கி ஒடுக்க வேண்டும் என்கிறது பாரதிய சனதா. இதற்காக இராணுவத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் என்கிறது. மொழிவழி மாநிலப் பிரிவு தவறு என்றும் சொல்கிறது. சோசலிசம் இந்து கலாச்சாரம் அல்ல என்று கூறுவதோடு முதலாளியத்தைத் தழுவிக் கொள்கிறது பாரதியஜனதா. இந்தியா முதலில் தன்னைப் பொருளியல் ரீதியில் வலுப்படுத்திக் கொண்ட பிறகு அமெரிக்கா ஐரோப்பா முதலிய நாடுகளோடு பொருளாதார ரீதியில் உறவுகொள்ள வேண்டும் என்கிறது பாரதிய சனதா. இந்தக் கூற்றின் பொருள் வெளிப்படையானது. மைய அரசு, வங்கி, பொதுத்துறை - ஆயுள் காப்பீடு நிறுவனம் முதலியவற்றைத் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும். வளர்ச்சிதான் தொழிற்சங்கங்களின் நோக்கமாக இருக்கவேண்டும். இந்திய / இந்து முதலாளிகளுக்கு இந்திய வளங்கள் தாரை வார்த்துத் தரப்படவேண்டும். இந்திய முதலாளி தன்னை மேலும் வலுப்படுத்திக் கொண்டு, அன்னிய நாட்டு முதலாளிகளோடு உறவு கொள்ளவேண்டும். உலக வங்கியிடமிருந்து, சர்வதேச நாணய



நிதியத்திலிருந்து கடன் வாங்கலாமா? வாங்கலாம். நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்து கொள்ளலாமா? செய்து கொள்ளலாம். அப்பளமோ, உருளைக்கிழக்கு வறுவலோ தயாரிக்க அன்னியத் தொழில்நுட்பங்கள் தேவையில்லை. அணுவின் உற்பத்திக்கு மருந்து மற்றும் இரசாயன உற்பத்திக்கு அன்னிய தொழில் நுட்பம் தேவை. இந்தியாவின் இயற்கையை முழுஅளவில் பயன்படுத்துகிற அல்லது நாசம் செய்கிற உரிமை இந்திய முதலாளிக்கு இருக்க வேண்டும். இந்திய மக்களின் வாழ்விற்கு ஆதாரமான காடுகள், நிலங்கள், நீர்நிலைகள், கடல்கள் மற்றும் இந்திய மக்களின் உடல்வளம் - மனவளம் ஆகியவற்றை முழுஅளவில் திரட்டிப் பயன்படுத்துகிற / நாசம் செய்கிற உரிமை இந்திய முதலாளிக்கு மட்டுமே இருக்கவேண்டும். காஷ்மீரில் இந்திய முதலாளி நுழைந்து நிலத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும். அசாமின் நிலவளங்களை இந்தியர்கள் (இந்துமுதலாளிகள்) அபகரித்துக் கொள்ளவேண்டும். தமிழ்நாட்டில் மார்வாடிகள் கொள்ளையடிக்கலாம். இந்திய முதலாளி எதையும் செய்யலாம். இதற்குப் பெயர் சுதேசித்திட்டம். இந்திமொழிதான் இந்தியாவின் ஆட்சிமொழி, சமஸ்கிருதம் இந்தியாவின் தேவமொழி, தெய்வமொழி. மாநிலங்களை அடக்கிவைக்கிற வலுவான மைய அரசு தேவை. இத்தகைய வலுவான மைய அரசுதான் இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றும். இந்தியா அணுகுண்டு தயாரிக்க வேண்டும். இப்படிச் செல்கிறது பாரதிய சனதாவின் அரசியல் மற்றும் பொருளியல் திட்டங்கள்.

÷ ÷ ÷

பாரதிய சனதாவும் அதன் கூட்டாளிகளும் முன்வைக்கிற இந்துத்துவம் என்ற மதவாத அரசியலை இப்படித்தான் நாம் புரிந்துகொள்ள முடியும். பாரதிய சனதா, மைய அரசைக் கைப்பற்றுவதற்கான அரசியலாக, இந்துமதவாதத்தை மாற்றியிருக்கிறது. இந்துத்துவம் என்பது முதன்மையாகவும் முற்றாகவும் மதவாத அரசியல். இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் இந்துக்கள் என்ற முறையில், இவர்களின் மத உணர்வுகளில் தீமூட்டித் தன்னை அரசியல் அரங்கில் நிலைநிறுத்திக்கொள்ள முனைந்திருக்கிறது பாரதிய ஜனதா. இதன் காரணமாக மதவாதத்தை முன்னுக்குத் தள்ளுகிறது. இஸ்லாம் எதிர்ப்பு என்ற அதன் மதவாத அரசியலை முன்னிறுத்துவதன்மூலம், மறைமுகமாக இந்திய / இந்து முதலாளிகளுக்கு அது சேவை செய்ய விரும்புகிறது. மார்க்சிய - லெனினியப் புரட்சிகர இயக்கங்களை ஒடுக்க விரும்புகிறது. தேசிய இன விடுதலை இயக்கங்களை ஒழிப்பதன்மூலம், இந்திய

முதலாளிகளுக்கு அரணாக இருக்க முனைகிறது. இராணுவப் பெருக்கம் - அணுஆயுத உற்பத்தி - வலுவான மைய அரசு முதலிய திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் நாளடைவில் ஒரு கொடூரமான பாசிச அரசை ஏற்படுத்த விரும்புகிறது. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் இதை இன்றளவும் பாராட்டுகின்றனர். நாசிகளின் இனவாதத்தின் இன்னொரு வடிவம் ஆரிய இனவாதம். உண்மையில் இந்தியாவின் அனைத்துத் தேசிய இனங்களுக்கும் இந்துக்கள், முஸ்லீம்கள், கிருத்தவர்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் எதிரானது இவர்களின் பாசிசப்போக்கு. இஸ்லாமியரை எதிர்ப்பதன் மூலம் இந்துக்களைத் திரட்டுவது இவர்களின் முதல்கட்ட நோக்கம். இதற்காக இந்துமதப் பீடங்களை இவர்கள் பயன்படுத்திக் கொள்ள முனைந்திருக்கிறார்கள். இந்துமதப் பீடங்களுக்கும் இவர்களின் ஆதரவுக் கரங்கள் இன்றியமையாது தேவைப்படுகிறது. மதபீடங்கள் கடவுளென்றும், கோயிலென்றும், திருவிழா என்றும், சடங்குகள் என்றும், மக்களின் செல்வத்தையும் அறிவையும் சுரண்டுகிறார்கள். மதபீடங்களின் வசம் இன்று கோடிகோடியாக உடமைகள் முடங்கிக் கிடக்கின்றன. உழுபவர்களுக்குத் தேவையான நிலச்சொத்துக்களை இவர்கள் தம் ஆதிக்கத்தில் முடக்கி வைத்து இருக்கிறார்கள். கடவுளையும் மதத்தையும் காப்பாற்றுவது தங்கள் கடமை என்ற பொய்யுரையின் மூலம், சோசலிச உணர்வுக்கு எதிராக மக்களை இவர்கள் திரட்டுகிறார்கள். மதபீடங்களின் காலடியில் முதலாளிகள் காணிக்கைகளைக் கொட்டுகிறார்கள். சோசலிசத்திற்கு எதிராக மக்களைத் திரட்டி நிறுத்துவதில் தங்களுக்கு அனுசரணையான சக்திகள் என மதபீடங்களை முதலாளிகள் மதிப்பிடுகிறார்கள். சோசலிசம் நோக்கிய சமுதாய மாற்றத்தை புரட்சிகர இயக்கங்கள் சாதிக்க இயலாத அவலநிலையில், மக்களும் தமக்கு வேறு கதியில்லை என்பதால் மதபீடங்களையும், முதலாளிகளையும் சரணடைந்திருக்கிறார்கள்.

இஸ்லாமியர் இந்திய நாட்டிற்கு விசுவாசமாக இருக்கவேண்டும் எனத் தொடங்கி பாரதிய சனதாவினர் பலபடியாகப் பேசுகிறார்கள். இஸ்லாமியப் படையெடுப்புக்களால் ஏற்பட்ட அழிவு, ஆங்கிலேயர் செய்த அழிவைக் காட்டிலும் கூடுதல் என்கிறார்கள். இந்திய வரலாற்றை, இந்து வரலாறு என மாற்றி எழுத விரும்புகிறார்கள். இங்கு நாம் ஒன்றை அழுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது. உண்மையில் இந்துத்துவம் என்பது இந்து மதத்திற்கு எதிரானது. ஏற்கனவே கூறியபடி இந்துத்துவம் என்பது அரசியல்; மதவாத அரசியல். இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் மத உணர்விலிருந்து சிலவற்றை எடுத்து, திரட்டி மதவாதமென்ற வெடிகுண்டாக



மாற்றியிருக்கிறார்கள். இந்த வெடிகுண்டை எந்த நேரத்திலும் வெடிக்கச் செய்யலாம். இந்துமதம் என்பது ஒரு மதமல்ல என்பதை அறிஞர் பலரும் சொல்லி இருக்கிறார்கள். சரியாகச் சொன்னால் இந்துமதம் என்பது பல மதங்களின் தொகுப்பு. இந்தத் தொகுப்பை ஆழ்ந்த முறையில் நாம் பொருள்படுத்த முடியும். இப்படி ஆழ்ந்தமுறையில் அர்த்தப்படுத்தினால் இறைவன் ஒருவன். இவன் எல்லா மதங்களுக்கும் பொதுவானவன். இவனுக்கு ஆயிரம் பெயர்கள் ஆயிரம் உருவங்கள். இவனுக்கு உருவம் உண்டு. அதேபோல் உருவமில்லை. இவனை எல்லா இடங்களிலும் வழிபடலாம். எல்லா முறைகளிலும் வழிபடலாம். இவன் அண்டங்களாகவும் உள்ளான். அணுவாகவும் உள்ளான். எல்லா உயிர்களாகவும் இருப்பவன் இவன். உயிர்களின் உள்ளே இருப்பவன் இவனே. இவனை நெஞ்சால் நினைத்தாலும் போதும். சூன்யமும் இவனுக்கொரு வடிவம். இறைவன் இல்லை என்பவருள்ளும் இவன் இருக்கிறான். இப்படிச் சொல்லுகின்றன இந்துமதம் பற்றிய விளக்கவுரைகள்.

இந்துமதம் என்ற தொகுப்பினுள் மாறுபட்ட மற்றும் முரண்பட்ட எத்தனையோ கொள்கைகள், கோட்பாடுகள், போக்குகள் இணைந்திருக்கின்றன. இவை இணைந்து முரண்பட்டும் இருக்கின்றன. சாங்கியம், யோகம், வைசேடிகம், மீமாம்சம் என்று வைதிகத்திற்கு முரண்பட்ட பல போக்குகள். பௌத்தம், சமணமாகிய நெறிகளிலிருந்து எடுத்துக்கொண்ட பல கொள்கைகள். இந்துமதமென்னும் தொகுப்பினுள் இப்படி முரண்பட்ட பலவற்றை இணைத்துக் கொள்ளமுடியும். அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்துவைதம், சைவம், வைணவம் என இப்படியும் பல போக்குகள். விவேகானந்தர் இந்து மதத்திலிருந்து அத்வைதம் என்ற போக்கை எடுத்து அதை சோசலிசம் என்பது வரை பொருள்படுத்தினார். பாரதியும் இப்படிப் பொருள் கண்டார். சென்ற நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டிலும் இந்து மதம் என்பதற்கு எத்தனையோ விளக்கவுரைகள் எழுந்துள்ளன. இராஜாராம் மோகன்ராய் முதல் அரவிந்தர், இராதாகிருஷ்ணன் வரை இந்து மதம் பற்றி ஆழ்ந்த விரிவுரைகள் எழுதப்பட்டன. இந்தியா அடிமைப்படுத்திய ஆங்கிலேயரின் மேற்கத்திய நாகரிகத்திற்கு எதிராக இந்து நாகரிகம் முன்னிறுத்தப்பட்டது. வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை முதலிய நூல்கள், சமகால தேவைகளை ஒட்டிப் பல புதிய விளக்கங்கள் பெற்றன. வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு எதிரான போரில் பகவத் கீதை நிறுத்தப்பட்டது. வர்க்க ஏற்றத்தாழ்வு அற்ற வேதகாலம் காணப்பட்டது. மறுமுக புத்தரென சங்கரன் காணப்பட்டான். பக்கிம் சந்திரர், திலகர், காந்தி ஆகியவர்கள் விடுதலைப்

போராட்டத்திற்கான உற்சாகத்தை இந்து மதத்திலிருந்து திரட்டிக் கொண்டனர்.

இவ்வாறு இந்து மதமென்பதைப் பன்முகத் தன்மையில் பொருள்படுத்துவதற்கு மாறாக பாரதிய ஜனதாவும் அவர்களது கூட்டாளிகளும், இந்துமதத்தை ஒற்றைப் பரிமாணம் என்ற முறையில் பொருள்படுத்துகிறார்கள். இந்தியாவின் பலவகைக் கலாச்சார முகங்கள் அழிக்கப்பட்டு ஒருமுகப்படுத்தப்படுகிறது. இந்துமதம் என்ற ஆக்கத்தில் இணைந்தும் முரண்பட்டுமிருக்கின்ற பலவகைக் கோட்பாடுகள் அழிக்கப்படுகின்றன. தொடர்ந்து இப்படிச் செய்து இராமன் ஒருவனையே இறைவன் ஆக்குகிறார்கள். இந்துமதமும், இஸ்லாமியமும் இணைந்ததன் விளைவாகக் கபீர் எழுந்தார்; சீக்கிய மதம் எழுச்சி பெற்றது. மீண்டும் ஒரு பக்தி இயக்கம் இந்தியாவில் பரவியது. சாதி அமைப்புகள் தேவையில்லை என்ற குரல் எழுந்தது. விதவைத் திருமணத்திற்கு மத ஆதரவு கிடைத்தது. இந்து மதத்தின் சீர்திருத்த இயக்கங்கள் எழுந்தன. இந்து மதத்தில் புத்தாக்கம் விவேகானந்தர், இராதாகிருஷ்ணன், காந்தி முதலியவர்களைத் தோற்றுவித்தது.

இத்தகைய புதுப்போக்குகள் அனைத்தையும் புறக்கணிக்கும் வகையில் இந்துத்துவம் என்ற மதவாத அரசியலை ஆர்.எஸ்.எஸ் இயக்கம் உருவாக்கி பாரதிய சனதா கட்சிக்குக் கொடுத்துள்ளது. இப்போது விவேகானந்தர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் சேவகர் ஆகிறார். திருவள்ளுவர் முதல் பாரதிவரை இப்படி மாற்றப்படுகிறார்கள். சாதி, மதம், சடங்குகள் முதலியவற்றை மறுத்த சித்தர்களுக்கு இப்போது மரியாதை இல்லை. அன்பே சிவம் என்னும் கூற்று இப்போது புறக்கணிக்கப்படுகிறது. இப்படி உருவாக்கப்படும் மதவாத அரசியல் மதவுணர்வுடையவர்களுக்கு / இந்துமத உணர்வுடையவர்களுக்கு எதிரானது என்பதில் ஐயமில்லை.

❖ ❖ ❖

இந்து வகுப்புவாதம் மட்டுமல்லாமல் இஸ்லாமிய வகுப்புவாதமும் நமக்கு உடன்பாடில்லை. இந்து வகுப்புவாதத்திற்கு எதிர்நிலையெடுத்துப் பேசும் பலர் இந்துத்துவத்திற்கு எதிராகப் போராடுகிறோம் என்று நம்பி, மதத்திற்கு எதிர்நிலை எடுப்பதன்மூலம் இந்து மதவுணர்வுடையவர்களை இந்துத்துவத்தின் காலடியில் தள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதன்மூலம் பாரதிய சனதாவிற்கே இவர்கள் வலிமை சேர்க்கிறார்கள். இப்படிச்



செய்பவர்கள் பெரியாரியர் மட்டுமல்லாமல் மார்க்சியராகவும் இருக்கின்றனர். மதம் என்பது மக்களுக்கு அபின் என்பது பெரியாரியத்திற்குப் பொருந்தி வரலாம். ஆனால் இக்கூற்று மார்க்சியத்திற்குப் பொருந்தாது. அதைச் சற்று இங்கு விளக்கலாம்.

மதம் பற்றிய மார்க்ஸின் ஆய்வுரையை இங்கு தொகுத்துரைக்கலாம். மதம் என்பது ஒடுக்கப்பட்ட மனிதனின் ஏக்கப் பெருமூச்சு; அதேசமயம் ஒடுக்கப்பட்ட குரலுக்கு எதிரான கலகம். மதம் என்பது ஆன்மா அற்ற உலகின் ஆன்மா. இதயமற்ற உலகின் இதயம். மதம் என்பது மக்களுக்கு அபின். தெய்வங்களுக்கிடையில் நடைபெறும் கலவரங்கள் என்பவை உண்மையில் மனிதர்களுக்கு இடையில் ஏற்படும் கலவரங்கள். மதம் என்பது மனிதனுக்கு இடப்பட்டுள்ள கைவிலங்குகளை மறைக்கும் மலர்மாலை. மத விமர்சனம் என்பது மலர் மாலைகளை அகற்றிக் காட்டுவதாக இருக்க வேண்டும். கூடியவரை மார்க்சின் ஆய்வுரையிலிருந்து விலகாத எங்கல்சின் கருத்துப்படி, மதத்திற்குள்ளும் மதங்களுக்கிடையேயும் நடைபெறும் போராட்டங்கள் என்பன உண்மையில் வர்க்கங்களுக்கு இடையேயான போராட்டங்கள். மதம் என்னும் போர்வையை விலக்கிப் பார்த்தால், அடியில் நடைபெறும் வர்க்கப் போராட்டங்கள் வெளித்தெரியும்.

மார்க்சின் ஆய்வுரையை ஆழ்ந்து நோக்கும் போது, மதம் பற்றிய அவரின் கருத்து இயங்கியல் வகைப்பட்ட கருத்து என்பதைப் புரிந்து கொள்ளலாம். மதம் என்பதைப் பொருளியல் சூழலிலிருந்து பிரித்து பார்க்கவும் முடியாது. அன்றியும் அபின் என்பது போதை மட்டுமல்ல மருந்தும் ஆகும். மதம் என்பது மாயை உணர்வுதான். திரிபடைந்த உலகம் தனக்கு போர்த்துக் கொள்கிற மாயை, மதம். லெனினைப் பொருத்தவரை அபின் என்பதைப் போதை என்று மட்டுமே பொருள்படுத்தினார். இதயமற்ற உலகின் இதயம் என்ற வாசகம், மருந்து என்பதன் குணத்தைப் புலப்படுத்துகிறது. தவிரப் பொருளியல் சூழலை மாற்றுவதன் மூலமே, மதத்தின் ஆற்றலை அழிக்கமுடியும். அதேசமயம் மதம் ஒரு மாயைதான் என்ற விமர்சனமும் தேவைப்படுகிறது.

மதம் பற்றிய மார்க்சிய ஆய்வுரைகளை மேலும் விவாதிக்க இடம் இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியும். மதம் பற்றிய மார்க்சியத் திறனாய்வையும், பெரியாரியத் திறனாய்வையும் சமப்படுத்த முடியாது. மார்க்சியத் திறனாய்வோடு பெரியாரியம் இரண்டொரு அம்சங்களில் ஒத்துப் போகவும் முடியும். அதேசமயம் இந்துமதம் பற்றி, மார்க்சுக்குத் தெரியாது

என்று சொல்லி, மதம் பற்றிய மார்க்சிய பார்வையைக் குறைத்துப் பேசுவதும் சாத்தியமில்லை. இத்தகைய புரிதலோடு நாம் எடுத்துக்கொண்ட பிரச்சனையைப் பார்ப்போம்.

இந்தியச் சமூகசூழலில் மக்கள் மீது சுரண்டலும், ஒடுக்குமுறையும் தொடர்ந்து செலுத்தப்படுகின்றன என்பதைப் பார்த்தோம். இத்தகைய கொரூரமான சூழலிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான இயக்கங்கள் தீவிரப்படவில்லை; வெற்றிபெறவில்லை. இத்தகைய சூழல்தான் மக்களிடத்தில் ஆழ்ந்த துயரங்களையும் மன நெருக்கடிகளையும் உருவாக்குகின்றன. மனிதர்களின் உழைப்புத்திறன்கள் உறிஞ்சப்படுகின்றன. மனிதன் பலவகையான கேவலங்களுக்கு உள்ளாக்கப்படுகிறான். தனக்கு எதிராக இயங்கும் சூழலை மாற்றும் வலிமை அவனுக்கு இல்லை. தன்னை இழந்த நிலையில் அவலத்திற்கு ஆட்படுகின்றான். தனக்கு யார் விடுதலை தருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் தேடுகின்றான். இந்த நிலையில்தான் கடவுள், கோயில், வழிபாடுகள், சோதிடர், சாய்பாபாக்கள் என்று பலர் அவனை அடைத்துக் கொள்கின்றார்கள்.

இந்தியாவில் பெரிய தெய்வங்கள், சிறிய தெய்வங்கள் வகைவகையான கடவுளர்கள், வழிபாடுகள் இப்படித்தான் மக்களை ஆக்கிரமித்து உள்ளன. இந்தக் கடவுளர்களைப் புனிதப்படுத்துகிற பணியை மதவாதி செய்கின்றான். முதலாளிகளும், வணிகர்களும், அரசியல்வாதிகளும் மதவாதிகளோடு சேர்ந்து கொள்கிறார்கள். இவர்கள் கடவுளை நம்புவதைவிட பணத்தை நம்புகிறார்கள். அதிகாரத்தை நம்புகிறார்கள்.

உண்மையில் நிறுவனப்படுத்தப்பட்ட மதம்தான் புரோகிதர்களை வளர்க்கிறது. புரோகிதர்களிடமிருந்து சித்தர்கள் என்றுமே விலகி நிற்கிறார்கள். ஒன்றே குலம் - ஒருவனே தேவன் என்பார்கள் இந்த சித்தர்கள். அன்பே சிவம் என்பவர்களும் இவர்கள் தான். நிறுவனத்திலிருந்து மதத்தை விலக்கிப் பார்க்கமுடியும். மனிதர்கள் மத்தியில் சாதி வேண்டாம் - அன்பு தேவை - சமத்துவம் தேவை என்று வற்புறுத்தும் சித்தர்கள், சமூகச் சூழலுக்கு எதிரான கலகம் செய்கிறார்கள். புத்தர் ஏசு முதலியவர்களை இந்துமதத்தில் சித்தர்கள் போலவே இஸ்லாமியத்தில் "சூபிகள்" செயல்பட்டார்கள். கிறித்துவம் தனக்குள்ளிருந்து விடுதலை இறையியலை எழுப்பிக் கொண்டது. இந்து மதம், தனக்குள்ளிருந்து விவேகானந்தரைத் தோற்றுவித்திருந்தது.



வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு எதிராக இந்துமதம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முற்பட்டது. பக்கிம் சந்திரரும், திலகரும், காந்தியும் விடுதலைக்கான போராட்டத்தில் மதவுணர்வுகளைப் பயன்படுத்தினர். இரேன் முகர்ஜி ஆய்ந்து கூறியதைப்போல, வெள்ளையருக்கு எதிரான போராட்டங்கள் தீவிரப்பட்ட காலங்களில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் வேற்றுமையுணர்வு அற்றுப்போனது. ஆனால் போராட்டங்களில் பின்னடைவு நேர்ந்த காலங்களில் பகை உணர்வு ஏற்பட்டது. இரேன் முகர்ஜியின் ஆய்வறிவை நம் காலத்திற்கும் பொருத்திப் பார்க்க முடியும். கூட்டாட்சி, சோசலிசம் என்ற முறையில் இந்திய சமூகம் முன்னோக்கி சென்று இருக்குமானால் இந்துத்துவம் என்ற போக்கு ஏற்பட்டிருக்க முடியாது. உடமைகள் பறிக்கப்பட்டிருக்கும் நிலையில் மதபீடங்கள் தம்மை தக்கவைத்துக் கொள்ளமுடியாது. உற்பத்தியிலும், நுகர்விலும் ஆட்சி அதிகாரத்திலும் மக்களுக்கான உரிமைகள் நிலைநிறுத்தப்படும் சூழலில், ஊழல்களுக்கும் சுரண்டலுக்கும் இடமிருக்க முடியாது.

இவற்றையெல்லாம் நாம் செய்து கொள்ளத் தவறினோம். இயக்கங்கள் இவற்றைச் செய்யவில்லை. நாம் செய்யத் தவறிய குற்றங்களுக்கான தண்டனையை இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். மதங்களைச் சரியான விமர்சனத்திற்கு உட்படுத்தினால் அவற்றுக்குள்ளிருந்தே சோசலிசவுணர்வை நாம் திரட்ட முடியும். கடவுள் என்பது வரலாற்றில் மனிதர்கள் உருவாக்கிய ஒரு கருத்தாக்கம். மனிதர்கள் தமக்குள் அன்போடும், சமத்துவத்தோடும் வாழ்வதற்கான பேராசையைக் கடவுள் என்ற படிமத்துக்குள் பொதிந்து வைத்திருக்கிறார்கள். கடவுளின் குழந்தைகள் என்ற முறையில் அனைத்து மக்களும் தமக்குள் ஏற்றத்தாழ்வின்றி வாழவேண்டும். இந்த உலகம் அனைத்து மக்களுக்கும் பொதுவானது - கடவுளெனும் கருத்தாக்கத்திற்குப் பெரியார் இப்படி விளக்கம் தந்தார். கடவுள், ஆன்மா, மேலுலகம், நரகம், மறுபிறப்பு முதலியவற்றையும் இன்று நாம் கட்டுடைத்துப் பார்க்கமுடியும். சோசலிச உணர்வை மையப்படுத்தாமல் இன்று நாம் வரலாற்றில் முன்னோக்கி இயங்க முடியாது. இஸ்லாமியமும் இந்த உணர்வைப் பெற்றாக வேண்டும்.

இறுதியாக இப்படிக் கூறலாம். வகுப்புவாதத்தின் வேர்கள் இந்தியாவின் பொருளியல் மற்றும் அரசியல் சூழலில் இருக்கின்றன. சோசலிசம் நோக்கிய சமூக மாற்றத்தைத் தடுக்கும் பேராயுதமாக இன்று வகுப்புவாதம் செயல்படுகிறது. மதவாதிகள் உடமையாளர்களோடு ஒத்துச்

செயல்படுகிறார்கள். மதத்தை தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என வெளியில் சொல்பவர்கள், உண்மையில் இதுவரை சமூகத்தில் தங்களுக்கு இருக்கும் இடத்தையும் உடமைகளையும் அதிகாரத்தையும் காத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். கடவுள் இவர்களுக்குத் தேவையில்லை. இவர்களுக்குத் தேவை, உடமை மற்றும் அதைக் காத்து வளர்த்துக் கொள்வதற்கான அதிகாரம். இந்த மதவாதிகளும் சரி, உடமைவாதிகளும் சரி, தமக்குள் தாம் சிதைந்திருப்பதைக் காணத் தவறுகிறார்கள். இவர்கள் சேவகம் செய்வது கடவுளுக்கு அல்ல; பிசாசுகளுக்குத்தான் இவர்கள் சேவகம் செய்கிறார்கள். இந்துத்துவம் என்பதும் ஒருவகையில் பிசாசு. பாசிச சடாமுனி. இந்தப் பிசாசின் கைகளுக்குள் அகப்பட்டு எல்லா மக்களும் துன்புறுகிறார்கள். இந்தப் பிசாசுகளிடமிருந்து நம் இந்தியாவை காப்பாற்றவேண்டும். தமிழகத்தைக் காப்பாற்றவேண்டும். பிசாசுகள் நமக்குள்ளும் புகுந்து நம்மை அதன் சேவகர்களாக மாற்றவும் செய்யலாம். அரசு அதிகாரத்திற்கும், முதலாளியத்திற்கும், அப்புறம் ஏகாதிபத்தியத்திற்கும் சேவை செய்வதற்கு நாம் முற்பட்டோமென்றால் இந்தப் பிசாசு நம்மை வெற்றி கொள்ளும். சோசலிசம் தவிர நமக்கான வேறு திசைவழியில்லை. இந்து மதத்தின் உள்ளிருந்தும் இஸ்லாமியத்தின் உள்ளிருந்தும் விடுதலை இறையியல் எழவேண்டும்.

குறிப்பு : மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் மெய்யியல் விரிவுத்துறை ஏற்பாடு செய்த கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட கட்டுரை.



# வேண்டாம் மதவாதம்

மத நல்லிணக்கம் என்று பேசும்பொழுது மதம் என்பதையும் மதவாதம் என்பதையும் வேறுபடுத்திப் பார்க்க நமக்குத் தெரியவேண்டும்.

பெரும்பாலான மதங்கள் கடவுளை ஒப்புக் கொள்கின்றன. சமணமும் பௌத்தமும் கடவுளை ஏற்பதில்லை. ஆன்மா என்ற கருத்தை பௌத்தம் மறுக்கிறது எனினும் பௌத்தம் ஒரு மதம்தான். ஆன்மா குறித்து அழுத்தமாகப் பேசுகிறது சமணம். கடவுள் நிலைக்கு அறத்தை பௌத்தம் உயர்த்துகிறது. சார்வாகம் தவிர எல்லா மதங்களும் மோட்சம் அல்லது முக்தி குறித்து அக்கறை கொண்டுள்ளன. இதற்காக வாழ்வியலில் சில / பல அறநெறிகளை எல்லாச் சமயங்களும் வற்புறுத்துகின்றன.

உருவ வழிபாட்டை ஒப்புக் கொள்ளாமலும் ஒரு மதம் இருக்க முடியும். கடவுளுக்கு ஆயிரம் பெயர்களை சில மதங்கள் சொல்லுகின்றன. மதத்திற்கு மதம் வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் வேறுபடுகின்றன. எல்லா மதங்களும் அன்பை வற்புறுத்துகின்றன.

சாங்கியம் - வைசேடிகம் - மீமாம்சம் முதலிய தரிசனங்கள் தொடக்கத்தில் கடவுளை ஒப்புக்கொள்ளவில்லை. நாளடைவில் இவற்றிலுள்ளும் கடவுள் கருத்து இடம் பெறலாயிற்று. புத்தனும் அருகனும் கூட கடவுள் ஆயினர்.

இப்படி மதம் என்பதற்குச் சில வரையறைகள் காணலாம். வரலாற்றுச் சூழல் முதலியவற்றுக்கு ஏற்றவாறு மதங்கள் தோன்றுகின்றன, மாறுகின்றன. எல்லாக் காலத்திலும் மதங்களை மறுக்கின்ற கருத்துக்களும் இருந்தே வந்திருக்கின்றன.

மதவாதம் என்றால் என்ன என்பது குறித்து இப்போது பார்க்கலாம். எங்கள் மதம்தான் உண்மையான மதம். எங்கள் கடவுள்தான் உண்மையான கடவுள் என்று தொடங்கிப் பேசுவது மதவாதம்.

எங்கள் வழிபாட்டு முறைதான் கடவுளுக்கு உகந்தது. முக்தியை நீங்கள் சொல்கிற நெறியில் பெறமுடியாது என்பது மதவாதம். நீங்கள்

வைத்து வழிபடுவது தெய்வமாக இருக்கமுடியாது. பிசாசைத்தான் வழிபடுகிறீர்கள் என்பது மதவாதம். இப்படி விவாதம் தொடங்கி பேச்சில் கடுமைகூடி ஆயுதங்கள் கொண்டு விவாதத்துக்கு முடிவு கட்டலாம் என்பது மதவாதம். உலக வரலாற்றில் மதவாதம் செய்த கொடுமைகளுக்கு அளவு இல்லை.

நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்று தொடங்கும் மதம், மக்கள் மத்தியில் வேற்றுமைகள் கிளப்பமுடியாது. ஏற்றத்தாழ்வுகளை ஏற்கமுடியாது. சாதி வேற்றுமைகளைப் பாராட்ட முடியாது. கடவுளின் குழந்தைகள் என்ற முறையில் நாம் அனைவரும் சகோதரர்கள் - சமத்துவமானவர்கள் என்று நம்பும் மனிதர், நிறவேற்றுமை கற்பிக்க முடியாது. நாடுகளுக்கிடையேகூட பகைமையை ஊட்டமுடியாது. கடவுள் நமக்காகத்தான் எல்லாவற்றையும் படைத்தார் என்று நம்புகிறவர்கள், எல்லாவற்றையும் எல்லார்க்கும் உரியதாகத்தான் செய்வார்கள். பிரபஞ்சம் முதலியவற்றைப் படைத்தவர் ஒருவராகத்தான் இருக்கமுடியும் என்று நம்பும் மனிதர், ஆயிரம் பெயர்களில் ஆயிரக்கணக்கான முறைகளில் வழிபாடுகள் நடைபெற்றாலும், இவற்றைக் கொண்டு தமக்குள் வேற்றுமை பாராட்ட மாட்டார்கள். எல்லா உயிர்களும் இறைவன் படைப்பு என்று நம்புபவர்கள், உயிர்க்கொலைகளில் - வன்முறைகளில் ஈடுபடமாட்டார்கள், வழிபாட்டுக்கு முதன்மை தருவதைக் காட்டிலும் இவர்கள் எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்வார்கள். கடவுள் இல்லையென்று சொல்பவர்களிடமும் இவர்கள் வேற்றுமை பாராட்ட மாட்டார்கள். எல்லா மனிதரும் கடவுளை அவரவர் மொழியில் வழிபாடு மேற்கொள்வதை இவர்கள் ஏற்பார்கள். எல்லோரிடமும் கடவுள் தன்மையைக் காண்பவர்கள் யாரையும் ஒடுக்க மாட்டார்கள். எத்தகைய பொருளையும் அதிகாரத்தையும் போற்றமாட்டார்கள்.

ஆனால் மதவாதம் பேசுகிறவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதை நாம் இங்கு விவரிக்க வேண்டியதில்லை. இவர்கள்தான் கோயிலைப் பெரிதாக எடுக்க வேண்டும் என்பவர்கள்; கடவுளுக்கு உடைமை வேண்டும்; நிலம் வேண்டும்; வருமானம் வேண்டும் என்பவர்கள்; கடவுளுக்கு பெரிய அளவில் விழாக் கொண்டாட வேண்டும். கடவுளுக்கு ஏராளமான வல்லமைகளைக் கற்பிப்பவர்களும் இவர்கள்தான். கடவுளுக்காக நாம் எதையும் செய்யவேண்டும் என்பது மதவாதம். மன்னர்களின் வடிவில் கடவுளைக் கண்டவர்கள் மதவாதிகள். மாற்று மதத்தவரைக் கொன்றொழிப்பது நம் கடவுளுக்கு உகந்த செயல்



என்பவர்கள் மதவாதிகள். மாற்று மதத்தவரின் நாடுகளையும் கோவில்களையும் கொள்ளையடித்தவர்கள் மதவாதிகள். உண்மையை ஆராய்ந்து பார்த்தால் மதவாதிகளுக்கு மதம் என்றால் என்னவென்று தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். அன்பே கடவுள் என்ற உண்மையை இவர்கள் அறிய மாட்டார்கள். எங்கும் எதிலும் யாவரிடத்தும் கடவுள் இருக்கிறார் என்பதை இவர்கள் ஏற்க மாட்டார்கள். இயற்கையின் எல்லா ஆற்றல்களினுள்ளும் கடவுள் செயல்படுகிறார் என்பதைக்கூட இவர்களால் ஏற்க முடியாது. கடவுள் கருணை மிக்கவர், தம் குழந்தைகளை அவர் கொல்லமாட்டார் என்பது இவர்களுக்குப் புரியாது. எல்லார்க்கும் உரியது இந்த உலகம் என்றால் இவர்கள் ஏற்கமாட்டார்கள். உடைமைகளும் அதிகாரங்களும் கடவுள் அருளால் வந்தவை என்று நம்பி உடைமையாளர்களிடமும் ஆதிக்கவாதிகளிடமும் இவர்கள் கடவுளைக் காண்பார்கள் கடவுள் பெயர் சொல்லிவரும் எவனையும் இவர்கள் காலில் விழுந்து பணிவார்கள். மதங்களும் கடவுளர்களும் வரலாற்றுச் சூழலில்தான் தோன்றுகின்றன என்ற வரலாற்றை இவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இவர்களுக்கு உடைமைகள் வேண்டும்; உயர்ந்த பதவிகள் வேண்டும்; ஏற்றத்தாழ்வுகள் வேண்டும்; சாதிகள் வேண்டும்; ஆதிக்கமும் அடிமைத்தனமும் வேண்டும். கடவுளிடம்கூட அடிமைகளாகத்தான் நடந்து கொள்வார்கள். புரோகிதர்களை இவர்கள்தான் போற்றுகிறார்கள் நாம் மீண்டும் சொல்லலாம்: மதம் என்பது வேறு. மதவாதம் என்பது வேறு. மதவாதம் நமக்குத் தேவையில்லை. வரலாற்றில் மதங்கள் இன்னும் நெடுங்காலத்திற்கு இருக்கும். மதம் என்பதே மூடத்தனம் என்று சொல்வதில் பொருள் இல்லை. வரலாற்றுச் சூழலில் தோன்றியவை மதங்கள். சடங்குகள் இல்லாமல் எந்த இனமும் வாழவில்லை. ஏற்றத்தாழ்வோடுதான் வரலாறு இதுவரை வந்திருக்கிறது. கடவுள் என்ற கருத்தாக்கத்தினுள்ளும் மனிதரின் ஆர்வங்கள் ஆசைகள் முதலியவற்றின் பெருக்கத்தைத்தான் நாம் காண்கிறோம். கதிரவன் முதலிய இயற்கை ஆற்றல்கள் நம்மைப் படைக்கின்றன, நம்மை வாழ்விக்கின்றன. இவற்றின் உயர் ஆற்றலை உள்ளடக்கியதாகத்தான் கடவுள் என்ற கருத்தாக்கமும் அமைந்திருக்கிறது. சமூகத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும் போதெல்லாம் கடவுளரும் புதிய பிறப்புக்கள் எடுக்கின்றன. முக்தி மோட்சம் என்ற கருத்தாங்களினுள் மனித விடுதலைக்கான கருக்கள் இருக்கின்றன. இதயமற்ற உலகின் இதயமாக மதம் இருக்கிறது. மதத்தினுள்ளும் வர்க்கப் போராட்டத்தை நாம் காண முடியும். அபின் என்று சொல்லி மதத்தை நாம் குறைத்துப் பேசமுடியாது. கடவுளை வழிபட்டால்தான் கடவுள் அருள் கிட்டும் என்றுகூட மதங்கள் சொல்வதில்லை. உயிர்களுக்கு அன்பு

செய்பவனிடம் கடவுள் வந்து தங்கியிருப்பார் என்று மதங்கள் கூறுகின்றன. மதத்தோடு என்றும் ஒரு உரையாடல் தேவையென்பதை நாம் மறுக்க வேண்டியதில்லை.

மதம் தனக்குள் இறுகும்போதுதான் மதவாதம் தோன்றுகிறது. உடைமையாளர்களும் அரசு அதிகாரங்களும் மதத்தைத் தன்வசப்படுத்தும் போது மதவாதம் தோன்றுகிறது. மத நிறுவனங்கள் என்பனவும், உடைமைகளையும் அதிகாரத்தையும் இம்முறையில்தான் சேர்த்துக் கொள்கின்றன. ஆதிக்க சக்திகளில் ஒன்றாக மதவாதம் இப்படி உருவாகிறது. மதவாதம் மக்களுக்கு விடுதலை தராது. அதிகாரத்தோடு மதவாதிகள் ஒத்துழைக்கின்றனர். இவர்கள் தம் அதிகார எல்லைகளுக்குள் கடவுளரையும் முடக்கி வைக்கின்றனர். இவர்கள் நலன்களுக்காகக் கடவுள் சேவை செய்யவேண்டும். இந்தக் கடவுள்களைக் காட்டிலும் புரோகிதர்கள் வலிமையுடையவர்கள். இந்த கடவுளர்களுக்குச் சாதி வேண்டும், பலி வேண்டும், மனிதர்க்கிடையில் சண்டைகள் வேண்டும். இந்தக் கடவுளர்கள் புரோகிதர்களின் கடவுளர்கள்; அதிகாரிகளின் கடவுளர்கள். மத அடிப்படைவாதிகள் அனைத்தையும் மதவாத எல்லைக்குள்தான் வைத்துப் பார்க்க முடியும். மதவாதம் இன்று அரசியல் வடிவம் எடுத்துள்ளது. இந்த அரசியலோ மதவாதமோ சமுதாய நலத்துக்கு எதிரானது. மத நல்லிணக்கம் விரும்புவோர் மதவாதங்களை மறுக்கத்தான் வேண்டும். சமத்துவம்தான் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை வளர்க்கும். உடமையாளர்களுக்கும் ஆதிக்கவாதிகளுக்கும் சேவை செய்கிற மதவாதம் நமக்கு வேண்டாம்.



## மதவாதம் தேவையில்லை

1. மதம் என்பதும் மதவாதம் என்பதும் வேறு வேறானவை. அன்றியும் முரண்பட்டவை.

2. மதம் மனிதனுக்குத் தேவையாக இருக்கலாம். ஆனால் மதவாதம் தேவையில்லை என்பது மட்டுமல்ல, மனிதனுக்கு ஆபத்தானது. அன்றியும் மதத்திற்கும் அழிவு தரக்கூடியது.

மதம் என்பது கடவுள், கோயில், உருவச்சிலை, வழிபாடு, சடங்குகள், குருமார் முதலியவை சார்ந்தது. இவை தவிர ஆன்மா, மோட்சம்; பாவ புண்ணியம், விதி முதலியவற்றையும் சார்ந்ததாக மதம் இருக்கிறது.

இந்தக் கூறுகள் அனைத்தும் மதம் என்பதற்கு இன்றியமையாதவை அல்ல. இவற்றில் சில / பல கூறுகளைச் சில மதங்கள் ஒத்துக் கொள்வதில்லை. தவிர, இந்தக் கூறுகள் ஒவ்வொன்று குறித்தும் வெவ்வேறு மதங்களில் வெவ்வேறான விளக்கங்களும் உள்ளன. இவற்றோடு மதம் என்பதனுள் அறம், ஒழுக்கங்கள் முதலியனவும் இணைந்திருக்கின்றன.

3. மனிதனின் தொடக்கக் காலத்தில் மதம் இல்லை. தொடக்கத்தில் ஆவி குறித்த நம்பிக்கைகள் இருந்தன. நாளடைவில் ஆவி நம்பிக்கை, கடவுள் நம்பிக்கையாக மாறியது. அதிலும் பல கடவுள் கருத்துகள் தொடக்கத்தில் இருந்தன. பிறகுதான் ஒரு கடவுள் என்ற கருத்து உருவாயிற்று.

வரலாற்றில் பார்க்கும்பொழுது கடவுள் முதலிய மதத்தின் கூறுகள் குறித்த நம்பிக்கைகளும் கருத்துகளும் தொடர்ந்து மாறி வந்திருக்கின்றன. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலம் முதல் கொண்டே கடவுள் மறுப்பு என்ற கருத்தும் தோன்றியிருக்கிறது. இவை பற்றிய ஆய்வுகள் விரிவானவை. அன்றியும் சிக்கலானவை. ஆனால் ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். மனிதன்தான் கடவுளைத் தோற்றுவித்தான். மனிதன்தான் மதங்களைப் படைத்தான். வரலாற்றின் சில குறிப்பிட்ட கட்டங்களில் தான் மதம் தோன்றுகிறது – மாறுகிறது – அழிகிறது – மதத்தின் கூறுகளாகிய கடவுள் முதலியன்வ மனிதன் படைத்துக் கொண்ட கருத்தாக்கங்கள். கருத்தாக்கங்கள் என்ற வழியில் மனிதன் இயற்கையையும் தன்னைச்

சூழலுள்ள சமூகத்தையும் தன்னையும் புரிந்து கொள்வதற்கான கருவிகள் என்று இவற்றைச் சொல்ல முடியும்.

கடவுள், ஆன்மா, மோட்சம் முதலிய கருத்தாக்கங்களுக்குள் மனிதனின் ஆர்வங்கள், இலட்சியங்கள் முதலியவை தெரிகின்றன. வரலாற்றுச் சூழலுக்கு ஏற்ற வகையில் மாறி வரும் கடவுள் முதலிய கருத்தாக்கங்களுக்குள் மனித சமூகத்தில் நிலவுகிற ஏற்றத்தாழ்வுகள், போராட்டங்கள் முதலியவற்றையும் நாம் காணமுடியும்.

4. அர்த்தசாத்திரம் தொகுத்த சாணக்கியர் ஒன்றைத் தெளிவாகக் கூறியுள்ளார். அரசாட்சி உறுதியாக நிலைபெற வேண்டுமென்றால் கடவுளை / புதிய புதிய கடவுளைக் கண்டுபிடி. அவற்றிற்குக் கோயில் கட்டு. உருவச்சிலைகள் வை. அவற்றிற்கு மகத்துவம் கற்பி. இப்படிச் சொன்ன சாணக்கியர் இவற்றால் அரசுக்கு வருமானம் பெருகும் என்பது மட்டுமல்ல ஆட்சி உறுதிப்படும் என்றார்.

சாணக்கியர் சாங்கியக் கொள்கை உடையவர். பழங்கால இந்தியாவில் பெரும் வலிமைபெற்ற ஒரு தரிசனம் சாங்கியம். சாங்கியத்தைப் பெருமளவு உள்வாங்கிக் கொண்டதன் மூலம் சாங்கிய தரிசனத்தை பகவத் கீதை மறுத்ததோடு, வேதாந்த தரிசனத்தை நிலைநாட்டியது என்று அறிஞர் கூறியுள்ளனர்.

சாணக்கியரைப் பொறுத்தவரை கடவுள் நம்பிக்கை இல்லாதவர் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் கடவுள் நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமே ஆட்சியாளரின் கரண்டலையும் ஒடுக்கு முறையையும் ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும் என்பது அவரது நம்பிக்கை. கூடவே அரசனுக்குத் தெய்வத்தன்மை கற்பித்துவிட்டால் மக்களை ஆட்சி செய்வது மேலும் எளிதாகிவிடும். இன்றைக்கும் சாணக்கியரது கருத்து எடுபடக்கூடிய கருத்தாக இருக்கிறது. ஆளுகைக்கும் ஆதிக்கத்திற்கும் ஆதரவாக மதம் இருக்கிறது. மதவாதிகள் ஆட்சியாளரோடு ஒத்துழைப்பதும் இதனால்தான் என்பது புரிகிறது.

சாணக்கியர்க்குக் கடவுள் நம்பிக்கை இல்லை என்பதால் ஆட்சியாளர் அனைவருக்கும் கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிட முடியாது. இவர்களில் பெரும்பாலோர் கடவுள் நம்பிக்கை உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். கடவுளையும் இவர்கள் தம் சார்பில் தான் காணுகின்றனர். விதிக்கோட்பாடு / வினைக்கோட்பாடு,



பாவபுண்ணியங்கள் முதலிய கருத்துகள் இவர்களுக்கு அனுசரணையாக இருக்கின்றன. முற்பிறப்பில் பாவம் செய்தவர் இப்பிறப்பில் வறியவர்கள். முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர்கள் இப்பிறப்பில் வசதிவாய்ப் புடையவர்கள். ஆகவே ஆதிக்கம் செய்பவர்கள் மதத்தின் அங்கீகாரத்தைப் பெறுகிறார்கள். சமத்துவம் நோக்கி / ஜனநாயகம் நோக்கி சமூகம் நடைபோடும் காலத்தில் இவ்வகைக் கருத்துகள் தகரத்தான் செய்கின்றன. ஆகவேதான் மதத்திற்கெதிரான கருத்துகள் – செயல்முறைகள் வரலாற்றில் தொடர்ந்து இருப்பதோடு இன்று வளர்ச்சி பெறவும் செய்கின்றன.

5. கடவுள் முதலிய கருத்துகளை மூடநம்பிக்கைகள் என்று சொல்லி இவற்றை ஒழிப்பதற்குப் பகுத்தறிவுப் பார்வை தேவை என்பது பெரியாரிய பார்வை. இப்பார்வைக்கான தேவையை நாம் மறுப்பதற்கில்லை.

கடவுள் முதலிய நம்பிக்கைகள் சமூகத்தின் பொருளியல் சூழலில் தங்கி இருக்கின்றன. ஆகவே பொருளியல் சூழலை மாற்றியமைக்கும் பொழுதே கடவுள் முதலிய மூட நம்பிக்கைகள் மறையும் என்பது பொதுப்படையான மார்க்சியப் பார்வை. இவ்விருவகைப் பார்வைகளையும் ஒன்றுக்கொன்று அனுசரணையாகப் பொருத்தவும் முடியும் அல்லது ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்தவும் முடியும். தமிழகச் சூழலில் இவற்றிற் கிடையிலான எதிர்மறைப் போக்கு சில பத்தாண்டுகளாக மேலோங்கி இருந்தது. இதற்கான காரணத்தை அரசியல் களத்தில் காணமுடியும். இத்தகைய எதிர்மறைப் போக்குக்கு இன்று தேவை இல்லை. இவ்விருவகைப் பார்வைகளையும் இணைக்கிற போக்குதான் இன்று இன்றியமையாததாக இருக்கிறது. எதிர்மறைப் போக்கு இந்துத்துவத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாக அமைகிறது. இந்துத்துவத்தை எதிர்த்து முறியடிக்க வேண்டுமென்றால், பெரியாரியமும் மார்க்சியமும் இங்கு இணைந்தாக வேண்டும். (இது குறித்துப் பிறகு பார்க்கலாம்)

6. மதம் மனிதனுக்குத் தேவைப்படலாம், மதவாதம் தேவையில்லை என்பது குறித்து இங்கு சிலவற்றைச் சொல்லலாம். மார்க்சை பொறுத்தவரை மதம் என்பதற்குத் தந்த சில விளக்கங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. சமூகத்தில் சுரண்டலும் ஒடுக்குமுறையும் தொடர்ந்து நிலவுகின்றன. இவற்றைத் தகர்த்தெறியக்கூடிய கட்சிகளும் இயக்கங்களும் வளர்ச்சி பெறவில்லை. இவை வளரும் பொழுதே ஆதிக்கவாதிகளின் சார்பில் இயங்கும் அரசு இவற்றை ஒடுக்குகிறது. இதன் காரணமாக மக்களின் துயரங்கள் அதிகரிக்கின்றன. எதிர்கால

பற்றிய நம்பிக்கை குறைகிறது அல்லது தள்ளிப்போகிறது. தம்மை விடுதலை செய்யவல்ல இயக்கங்களையும் தலைவர்களையும் மக்கள் கனவு காணுகின்றனர். துரும்பைக்கூடத் தூண் எனப் பற்றிக் கொள்கின்றனர்.

இந்தச் சூழலில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஏக்கப் பெருமூச்சு என்று மார்க்ஸ் மதம்பற்றிக் கூறியதைப் புரிந்துகொள்ள முடியும். அதேசமயம் இந்த ஏக்கப் பெருமூச்சைக் கலகம் என்றும் சொல்லுகிறார். உண்மைதான். இப்படி ஒரு உலகத்தைப் படைத்தவர் கடவுள் என்றால் அவர் அழிந்து போகட்டும் என்ற வள்ளுவரியக் கருத்தை இங்கு நாம் நினைவு கொள்ளலாம். கடவுளே உனக்குக் கண் இல்லையா? என்று மக்கள் புலம்புவது கடவுளுக்கும் எதிரான கலகம்தான். மனிதன் வாழத்தக்கதாக இந்த உலகம் இருக்கவேண்டும். மனிதர் மத்தியில் சமத்துவம் நிலவ வேண்டும், அன்பு நிலவ வேண்டும். இப்படி அன்பும் சமத்துவமும் நிலவும் சமூகம் தான் மனிதர் வாழத்தக்க சமூகம். ஏற்றத்தாழ்வான சமூகத்திலிருந்து அன்பு வெளியேற்றப்படுகிறது. வெளியேற்றப்படும் இந்த அன்பு, கடவுளாக - அவரது கருணையாக மதங்களுக்குள் இடம் பெறுகிறது. இந்தக் கடவுள் மனிதனுக்கு இன்றில்லை என்றாலும் என்றேனும் வாழ்வைத் தருவார் என்கிறது மதம். இதைத்தான் இதயமற்ற உலகின் இதயம் மதம் என்றார் மார்க்ஸ். துயரக் கொடுமைகள் நெருப்பெனத் தகிக்கிற சூழலில் மதம் மனிதனுக்கு மயக்க மருந்தாக, துயரக் கொடுமையைத் தற்காலிகமாக மறந்திருக்கச் செய்யும் மருந்தாக / அபினியாக இருக்கிறது என்றார் மார்க்ஸ்.

ஆகவே சுரண்டலும் ஒடுக்குமுறையும் நிலவுகிற காலம் முழுவதும், சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் அழித்தொழிக்க வல்ல சக்திகள் இல்லாத காலங்களில், இவை குறித்த நம்பிக்கைகள் மக்களிடம் அழுத்தம் பெறாத காலச்சூழலில் மதங்கள் இருக்கும் கடவுளரும் இருப்பார்கள். புதிய புதிய மதங்களும் கடவுளர்களும் தோன்றத்தான் செய்வார்கள். மார்க்ஸ் கூறியதை இப்படி நாம் புரிந்து கொள்ளமுடியும்.

7. பொருளியல் சூழலில் ஏற்றதாழ்வுகள் மக்களின் துயரங்களுக்குக் காரணமாகின்றன. இத்தகையச் சூழல்தான் மனிதர்களுக்கு மதங்களை தேவைப்படுத்துகின்றன என்பது ஒரு விளக்கம். மதத்தையோ கடவுளர்களையோ மக்கள் நம்புவதற்கான காரணங்கள் என இன்னும் சிலவற்றைக் கூறமுடியும்.



விதை இல்லாமல் எதுவும் முளைப்பதில்லை. குயவன் இல்லாமல் பானை இல்லை. இதைப்போல உலகத்தைப் படைப்பதற்கு ஒருவன் வேண்டும். பிரபஞ்ச இயக்கத்திற்கும் ஒருவன் வேண்டும்.

இப்படிப் பலர் விவாதிக்கிறார்கள். பொருள் தோன்றுவதும் இல்லை, அழிவதும் இல்லை. பொருள் என்றைக்கும் இருக்கிறது. பொருளின் வடிவம் மாறலாம். ஆனால் அழிவதில்லை - இந்த அறிவியல் உண்மையை நம் மக்கள் நம்புவதில்லை.

எல்லாவற்றிற்கும் மூலம் என்று ஏதாவதொன்று இருக்க வேண்டும். மூலத்தில் இருந்துதான் எதுவும் தோன்றமுடியும். இப்படி விவாதிப்பது ஒருவகையான தர்க்கம். இந்த தர்க்கத்தில் மக்கள் காலங்காலமாக மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தகர்ப்பது இன்றைக்கும் கடினம்தான்.

இதைப்போலத்தான் உயிரின் தோற்றம். சடத்திலிருந்து உயிர் தோன்றமுடியாது என்பது நெடுங்காலமாக நிலவும் கருத்து. உயிரைத் தோற்றுவித்தவன் இறைவன். இறைவனாலன்றி மனிதனால் உயிர்த்திறனைப் படைக்க முடியாது. உயிர்தோன்றிய பிறகு தொடர்ந்து அது மாறிக்கொண்டிருக்கிறது. இந்த மாற்றத்தைப் பரிணாமம் என்று டார்வின் விளக்கினார். உயிர்களின் பரிணாமம் தொடர்ந்து முன்நோக்கிச் செல்கிறது. இறுதியில் மனிதனின் தோற்றம். பிற உயிர்களுக்கு இல்லாத தன்னுணர்வு மனிதனுக்குப் வாய்த்திருக்கிறது. இப்படி உயிர் இனத்தை முன்னோக்கி இயக்குகிற சக்தி எதுவாக இருக்கமுடியும்? இப்படிக் கேள்வி எழுப்பி இந்த சக்திதான் கடவுள் என்கின்றனர். இதுவும் ஒருவகை தர்க்கம்.

8. நாம் சிலவற்றைத் தொகுத்து சொல்லலாம். பிரபஞ்ச அளவிலும் இயற்கை, வரலாற்றினுள்ளும் மனித வாழ்வினுள்ளும் இன்றும் நம் அறிவுக்கெட்டாத புதிர்கள் எனப் பல உள்ளன. இந்தப் புதிர்கள் கடவுள் மட்டும் மத நம்பிக்கைக்குக் காரணமாக இருக்கின்றன. பொருளியல் சூழலை மாற்றும் பொழுது சில / பல சிக்கல்கள் தீரலாம். தொடர்ந்து அறிவியல் வளரும் நிலையில் இன்று புதிர்கள் எனத் தெரிபவை நாளை விளக்கப்படலாம். எல்லாவற்றையும் முற்றாக விளக்கிவிடக்கூடிய வகையில் அறிவியலின் வளர்ச்சி குறித்து இன்று நாம் உறுதிகூற முடியாது. புதிர்கள் நிலவும் காலமெல்லாம் ஏதேனும் சில வடிவங்களில் மதமும் கடவுளும் வாழத்தான் செய்யும். தவிர வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மக்கள் மனங்களில் பதிந்துவிட்ட தர்க்கத்தை மாற்றுவதும் எளிது அன்று.

இத்தகைய சூழல் மதவாதிகளுக்கு அனுசரணையாகத்தான் இருக்கிறது. முரட்டுத்தனமாக விவாதிப்பதன் மூலம் மக்களின் மன உணர்வுகளை உடனடியாக மாற்றுவதும் சாத்தியம் இல்லை. நெஞ்சில் பதிந்துவிட்ட நம்பிக்கைகளைக் கல்லி எடுக்கும்பொழுதே மக்கள் காயப்படுவதும் ஆதரவற்றுத் தவிப்பதும் ஆகிய நெருக்கடிகள் மக்களுக்கு நேருகின்றன. மக்களை நாம் வெறுக்க முடியாது. நிதானமாகத்தான் மக்களை நெருங்க வேண்டியுள்ளது. ஆகவே உடனடியாக மத நம்பிக்கைகள் அனைத்தையும் களைந்தெறியத்தான் வேண்டும் என்ற ஆத்திரம் நமக்குத் தேவையில்லை. நாம் மேற்கொள்ளும் ஆத்திரம் மக்களின் எதிரிகளுக்குச் சாதகமாகி விடலாம். இப்படி ஒரு நிலை இங்கு நேர்ந்திருப்பதையும் நாம் கவனிக்க முடியும். மக்களுக்குத் தேவைப்படும் காலம்வரை கடவுளும் இருக்கட்டும்; மதமும் இருக்கட்டும். அரசு இருக்கும்வரை அன்னியமாதலும் மதமும் இருக்கும் என்றார் மார்க்ஸ். மதம் தோன்றுவதற்கும் நிலை பெறுவதற்குமான சூழலை மாற்றுவது குறித்துதான் நம் கவனம் பதியவேண்டும்.

இப்பொழுது உடனடியாகச் சொல்லலாம். கம்யூனிஸ்டுகள் சமுதாயத்தை மாற்றுவதாகிய பெருஞ்செயலில் இதுவரை வெற்றி காணவில்லை. ஆகவே மதங்களும் கடவுளர்களும் அழிவதற்கான வாய்ப்பு நேரவில்லை. இதன் காரணமாகவே பெரியாரியர் என்னதான் முயன்றாலும் கடவுளை ஒழிக்க முடியவில்லை. சமூகத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும் விகிதத்தில் கடவுள்களும் மதங்களும் பெருகத்தான் செய்கின்றன. மதங்கள் மனிதனுக்கு இன்றும் தேவைப்படுகின்றன என்பதை இப்படித்தான் புரிந்து கொள்ள முடியும்.

9. மதம் என்றால் என்ன? என்பதை ஓரளவுக்குப் பார்த்தோம். இதிலிருந்து மதவாதம் எப்படி வேறுபடுகிறது என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

எனது மதம்தான் உண்மையான மதம் என்று தொடங்கி என் கடவுள் உண்மையானவர் என்றெல்லாம் பேசுவது – நம்புவது – பரப்புரை செய்வது – இதற்காகக் கூட்டுச் சேர்ப்பது – இறுதியில் வன்முறையைப் பயன்படுத்துவது – இவையனைத்தும் மதவாதம். கடவுள் நம்மைப் படைத்தார். நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் ஆகவே நாம் அனைவரும் சகோதரர் என்று பேசுவது மதம். கடவுள் படைத்த உலகம் நம் அனைவருக்கும் பொதுவானது. சகோதரர்களுக்கு இடையில்



ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. சேர்ந்து உழைப்போம் – பகிர்ந்து வாழ்வோம் என்றும் மதத்திற்குப் பொருள் கூறமுடியும்.

சாதிகள் என்றும், மதங்கள் என்றும், சடங்குகள் என்றும் மக்களுக்கிடையில் பிளவுகள் வளர்ப்பது இறைவனுக்குகந்த நெறி அல்ல. சாதிகளையும் மதங்களையும் தோற்றுவித்தவர், மக்களைப் பிளவுபடுத்தித் தமக்கு ஆதிக்கங்களைத் தேடிக் கொள்பவர். இறைவன் அன்புமயமானவர், ஆதிக்க அரசியல் அவருக்கு உடன்பாடாக இருக்க முடியாது. இப்படியும் மதத்திற்கு நாம் பொருள்காண முடியும். இறைவனுக்கு உருவமில்லை. இறைவனுக்குப் பெயர்கள் இல்லை. எங்கும் இருப்பவன் இறைவன். இதயத்தில் வைத்தும் அவனைக் கொண்டாடலாம். கோவில் கட்டித்தான், உருவச்சிலை வைத்துத்தான் அவனைக் கொண்டாட வேண்டும் என்பதில்லை. இறைவன் அன்பின் வடிவம். அறிவின் வடிவம். மனிதனுக்குள் இறைவன் வாழ்கிறான். இயற்கைக்குள் அவன் செழிக்கிறான். ஆகவே உயிர்களுக்கு அன்பு செய்வது இறைவனுக்குச் செய்யும் பணி. நாம் செய்யும் வழிபாட்டை இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதில்லை – இப்படியும் நாம் மதங்களை விளக்கமுடியும்.

இப்படிச் செல்லும் மதம் இறுதியில் தன்னைத்தானே மறுக்கவும் செய்யும். இந்த நிலையில் சர்வமத சமரசம் பேசவும் முடியும். இப்படிப் பேசியவர்களில் ஒருவர் வள்ளலார். கோராவுடன் நடந்த விவாதத்தின்போது 'உண்மைதான் இறைவன்' என்று காந்தி ஒப்புக்கொண்டார். உடனே கோரா கேட்டார் : உண்மையை மட்டுமே வைத்துக் கொள்ளலாம். இதை காந்தி ஏற்றுக்கொண்டாலும் இறுதிவரை இறைவனை அவர் ஒதுக்க முடியவில்லை. இளமை முதற்கொண்டே மனத்தில் ஆழமாகப் பதிந்த உணர்வு இறைவன். இந்த உணர்வைக் களைந்து கொள்ள முடியவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இதற்காகக் காந்தியை இகழ்வது பொருத்தமில்லை.

10. மதவாதத்திற்கு சாதி தேவை, மதக்கட்டுமானம் தேவை, கோவிலும் உருவவழிபாடும் தேவை, சடங்குகளும் விரதங்களும் தேவை, இவற்றோடு கொண்டாட்டங்களும் ஊர்வலங்களும் தேவை, குருமார் தேவை, புரோகிதர் தேவை, வேதநூல் தேவை. இன்னும் உடைமை தேவை, அதிகாரம் தேவை; வாய்ப்பு நேரும் என்றால் அரசு தேவை. நாடு தேவை. இராணுவம் தேவை. மக்களின் மத உணர்வுகளைத் திரட்டி அதில் தீப்பற்றவைக்கும் வல்லமை இந்த மதவாதத்திற்கு உண்டு.

இந்துத்துவம் இதைத்தான் செய்கிறது. இது மதம் அல்ல. இது மதவாத அரசியல்.

இந்தியா இவர்களது தேசம். வேதங்கள் இவர்களுக்கு மெய்ப்பொருள். சமஸ்கிருதம் இவர்களின் தாய்மொழி. இந்தியா என்பது இந்துக்களின் தேசம். இந்தியாவின் கலாச்சாரம் என்பது இந்துக் கலாச்சாரம். இந்தியா ஒரு தேசமாக இருப்பதற்குத் தேசிய இனங்களின் குரல்வளையை நெரிக்க வேண்டும். இந்து மதத்தின் தலைவர்கள் ரிஷிகள் / துறவிகள். இவர்களின் சொற்படிதான் அரசியல்வாதிகள் செயல்பட வேண்டும். இந்துக் கலாச்சார தேசியத்திற்கு எதிரானவற்றை இங்கு அனுமதிக்க முடியாது. இஸ்லாமியமும், கிறித்துவமும் வெளியில் இருந்து வந்தவை. மார்க்சியமும் வெளியிலிருந்து வந்த தத்துவம். இந்துக் கலாச்சாரத்தை இவை ஏற்றுக் கொண்டாலொழிய இவற்றிற்கு இங்கு வாழ்வுரிமை இல்லை. இந்து மதத்தின் முக்கியக் கூறு வர்ணமும் சாதியும். சாதிகள் இங்கு நிலைபெற வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் இந்துச் சமூகம் இயங்க முடியாது. ஆகவே சமதர்மம் என்பது இந்துக் கலாச்சாரத்திற்கு எதிரானது. பெண்ணின் இருப்பிடம் குடும்பம்.

இப்படியெல்லாம் இந்துத்துவம் தன்னை முன் வைக்கிறது. இராமன்தான் இந்துக்களின் முதல் தெய்வம். இவன் பிறந்த அயோத்தியில் இராமனுக்குக் கோயில் தேவை. பாபர் மசூதி இருந்த இடம்தான் முன்பு இராமன் பிறந்த இடம். பாபர் மசூதியை இடித்தது சரிதான். அங்குக் கோயில் கட்டுவது இந்துக்களுக்குப் புனிதமான கடமை. இந்தியாவின் மீது படையெடுத்து வந்த இஸ்லாமியர்கள் எத்தனையோ இந்துக் கோயில்களைத் தம்வசப்படுத்தி மாற்றியமைத்தனர். அங்கெல்லாம் இந்துக்கோயில்கள் மீண்டும் எழவேண்டும்.

11. இந்துத்துவம் ஒரு தீவிரமான மதவாதம் என்பதில் அய்யமில்லை. ஒரு மதவாதம் இன்னொரு மதவாதத்தைத் தூண்டுகிறது என்ற முறையில் இஸ்லாமியர்களின் மதவாதத்தையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஒன்றுக்கு மற்றது ஆதாரமாகிறது. ஒன்றை மற்றது தோற்றுவிக்கிறது, பலப்படுத்துகிறது. இந்தியாவைப் பொருத்தவரை ஒன்றை உறுதியாகச் சொல்லமுடியும்; இஸ்லாமியரின் அடிப்படைவாதம் சிறுபான்மை மக்களின் மதவாதம். இந்துத்துவம் என்பது இந்துக்களில் பெரும்பான்மையினரின் மதவாதம். இந்த இருவகை மதவாதங்களும் நமக்கு உடன்பாடில்லை.



12. மேலும் ஒன்றை இங்கு நாம் பார்க்க வேண்டும். மதவாதம் என்பது மதத்திற்கெதிரானது என்று கூறினோம். இந்துத்துவம் என்பது இந்து மதத்திற்கு எதிரானது என்பதை இங்கு பார்க்கலாம்.

இந்து மதமும் இந்துத்துவமும் ஒன்றுதான் ஒன்று இந்துத்துவவாதிகள் விவாதிக்கின்றனர். மேற்போக்காகப் பார்த்தால் இது உண்மையென்று தோன்றக்கூடும். "Hinduism" என்ற சொல்லில் 'இசம்' என்பது கொள்கை, தத்துவம் என்று பொருள்படுவதாகக் கொண்டால் "Hinduism" என்பது – இந்துத்துவம் ஆகலாம்.

இந்துத்துவம் என்பது கடந்த சில பத்தாண்டுகளுக்குள் வழக்கில் வந்த சொல். 'இந்து மகா சபை' என்பதன் தோற்றத்தோடு இணைத்துக் காணவேண்டிய சொல். இதற்கு முன்பெல்லாம் "Hinduism" என்பதை இந்துமதம் என்றுதான் மொழிபெயர்த்துச் சொன்னார்கள்.

Hinduism – இந்துமதம் என்பதை ஒரு வாழ்க்கை நெறி என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலியவர்கள் குறிப்பிட்டனர். காந்தியும் இப்படித்தான் கருதினார். பகவத் கீதை இந்து மதத்திற்கு ஆதார நூல் என்று இவர்கள் கருதினார்கள். எந்த உருவத்திலும் பெயரிலும் இறைவனை வழிபடலாம். ஒவ்வொரு வருணமும் அதற்குரிய தருமத்தைச் செய்வதன் மூலம் இறைவனைப் பெறலாம். வேற்றுமைக்குள் ஒற்றுமை காண்பது இந்துமதம். ஆன்மாவுக்கு அழிவு இல்லை. இத்தகைய சில கொள்கைகள் இந்து மதத்தின் ஆதாரக் கொள்கைகள்.

இந்துமதம் என்ற சொல் இஸ்லாமியருக்குப் பிறகு தோன்றிய சொல். ஆங்கிலேயர் ஆட்சியின்போது அதிகார அமைப்புக்குள் இடம் பெற்ற சொல். முன்பு இந்துமதம் இல்லை. பல்வேறு தரிசனங்கள் மற்றும் மதங்கள் இருந்தன. இவற்றையெல்லாம் இந்துமதம் என்ற சொல்லுக்குள் அடைத்தவர்கள் ஆங்கிலேயர்கள். இதற்காக ஆங்கிலேயரை சங்கராச்சாரியார் பாராட்டவும் செய்தார்.

இந்துமதம் என்பது ஒரு மதமல்ல. முரண்பட்ட பல மதங்களின் தொகுப்பு இந்துமதம். முரண்பட்ட கலாச்சாரங்களை ஒருங்கிணைக்க முடியாதபடி திணறுகிற ஒரு தொகுப்பு இந்துமதம். ஒரு தொகுப்பு என்று சொல்வதுகூடப் பொருந்தாது.

கடவுள் உண்டு என்று சொல்வதையும் கடவுள் இல்லை என்று மறுப்பதையும் இந்துமதம் எனும் தொகுப்பினுள் காணமுடியும். கடவுளுக்கு எந்தப் பெயரும் சொல்லலாம். எந்த உருவத்திலும் வழிபடலாம். கடவுளை எந்த முறையிலும் வழிபடலாம். அல்லது வழிபடாமலும் இருக்கலாம். உருவங்களை வைத்துக் கொள்ளலாம். உருவங்களை ஒதுக்கவும் செய்யலாம். இப்படித் தனக்குள் முரண்பட்டுப் பேசுவது இந்துமதம். இதற்குள் புத்தரையும் அடக்க முயற்சிசெய்தனர். இஸ்லாமியமும் கிறித்தவமும்கூட இந்து மதத்திற்குள் சில பாதிப்புகளை ஏற்படுத்தின, இவை ஆரோக்கியமாகவும் இருந்தன. இந்து மதத்திற்கு வெளியில் பஞ்சமரை இருத்திவைக்கும் போக்கை நாம் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இப்படி எத்தனையோ முரண்பாடுகளோடு செயல்படும் இந்து மதம் என்பதற்குப் பல முகங்கள் உண்டு. பல முகங்களையும் அழித்து இந்து மதத்திற்கு ஒற்றை முகத்தை உருவாக்குகிறது இந்துத்துவம். இதன் காரணமாக இந்துக்கள் என்று பெயரிடப்பட்டவர்களின் மத சுதந்திரத்தைக் கூட இந்துத்துவம் அழிக்கிறது. நாத்திகவாதத்தை இந்து மதத்திற்குள் அடக்கமுடியும். ஆனால் இந்துத்துவம் நாத்திகவாதத்தை ஏற்காது. திராவிட இனம் என்பதையோ மூலமொழி தமிழ் மொழி என்பதையோ இந்துத்துவம் ஏற்காது. தேசிய இன விடுதலை என்பதை இந்துத்துவம் ஏற்காது. தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வன்முறையைப் பயன்படுத்துவதில் அதற்கு எத்தகைய தயக்கமும் இல்லை. இதன் காரணமாக இந்துத்துவம் என்பது அரசியல் சனநாயகப் போக்குக்கு எதிரானது. சர்வாதிகாரத்தைத் திறந்து வைப்பது. இந்துத்துவத்திற்கு அன்பு தெரியாது. சமத்துவம் புரியாது. இத்தகைய காரணங்களைக் கொண்டு நாம் உறுதியாகச் சொல்லமுடியும் : இந்துத்துவம் ஒரு மதவாத அரசியல் மட்டுமல்ல. இந்து மதம் என்று நம்புகிற மக்களுக்கும் எதிரானது.



## மத நல்லிணக்கம் : எப்போது, எப்படிச் சாத்தியப்படும்?

அண்மைக்காலத்தில் இந்தியாவில் மதக் கலவரங்கள் அதிகரித்து வருவது குறித்து நாம் பெரிதும் கவலைப்படுகிறோம். மதம் நல்லிணக்கம் தேவையென்ற குரல் எங்கும் ஒலிக்கிறது. இறைவன் ஒருவன்தான். அன்பு வடிவில் இறைவன் இருக்கின்றான். இறைவனின் குழந்தைகள் என்ற முறையில் மனிதர்களுக்கிடையில் சகோதரத்துவம் நிலவவேண்டும். வேறுபாடுகளுக்கு நாம் முக்கியத்துவம் தரக்கூடாது என்ற முறையில் பலரும் பேசுகிறார்கள். மதங்களுக்கிடையில் சமத்துவம் / சமரசம் தேவையென்கிறார்கள்.

இவ்வாறு கூறுபவர்களை, அவர்களின் நல்லெண்ணங்களுக்காக நாம் மதிக்கத்தான் வேண்டும். நல்லெண்ணங்கள் இல்லாமல் இவர்கள் தம் அளவில் நிம்மதியாக வாழவும் முடியாது. வீட்டிற்குள் - அண்டை அயலார்களிடம் - பணித்தளங்களில் நல்லுறவோடு வாழ்வதுதான் எல்லோருக்கும் நல்லது. ஆனால் நல்லெண்ணங்கள் எப்பொழுதும் நிரந்தரமாக நெஞ்சில் தங்குவதில்லை. யாரேனும் உள்ளே நுழைந்து கலவரப்படுத்தும்போது நல்லெண்ணங்கள் சிதைந்து விடுகின்றன. கோபதாபங்களுக்கு - வன்முறைகளுக்கு இடங்கொடுக்க நேருகிறது. காரணம் என்ன? என்பது குறித்து நாம் சற்றுக் கவனமாகப் பார்க்க வேண்டும்.

நம் சமூகத்தில் பெரும்பாலான மக்களுக்கு வாழ்க்கையில் பாதுகாப்பு இல்லை. வேலைவாய்ப்பு பலருக்கு இல்லை. வறுமை - நோய்நொடிகள் பலரைப் பாதிக்கின்றன. சொந்த வீடில்லை. சொந்தமாகத் தொழில் இல்லை. பலருக்குத் தரமான கல்வி இல்லை. இப்படி எவ்வளவோ சிக்கல்களுக்குள் தான் பலரும் வாழ்கின்றனர். நெஞ்சில் நிம்மதி இல்லை. தற்கொலைகளும் எளிதாக நேர்ந்து விடுகின்றன. மனநோய்கள் கூடி விடுகின்றன. அலுவலகங்களில் மட்டுமல்லாமல் எல்லா நிறுவனங்களிலுள்ளும் அதிகாரம் முதலிய கெடுபிடிகள். ஏற்றத்தாழ்வு என்ற கட்டமைப்பு எல்லா நிறுவனங்களுக்குள்ளும் செயல்படுகின்றன. கல்வி நிறுவனங்கள், மத நிறுவனங்களும் இந்தக் கட்டமைப்பில்லாமல் செயற்படுவதில்லை. அரசு அமைப்பும் இத்தகைய ஏற்றத்தாழ்வை வைத்துதான் செயல்படுகிறது.

ஆழ்ந்து பார்த்தால் தனியுடமையும் அரசதிகாரமும் தம்மை வளர்த்துக் கொள்ளும் முறையில் - மக்கள் மீது தம்மை நிறுவிக்கொள்ளும் முறையில் செயற்படுகின்றன. இதன் காரணமாக இவை கரண்டலையும் ஒடுக்குமுறையையும் மக்கள் மீது திணிக்கின்றன. அரசதிகாரம் என்ற முறையில் அரசியல் கட்சிகள் இதனுள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. வன்முறையின்றி தனியுடமையோ அரசதிகாரமோ தம்மை நிறுவிக்கொள்வது சாத்தியமில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை கூட்டாட்சி இல்லை. சோசலிசம் இல்லை. சோவியத் யூனியனில் சோசலிசத்தின் தகர்வை அடுத்து சோசலிச அமைப்பு மனித இயல்பிற்குப் பொருந்தியது அன்று என்றெல்லாம் பேசுகிறார்கள். நுகர்வு வெறி முதலியவற்றிற்குப் பழக்கப்பட்ட நடுத்தர மக்களுக்கு சோசலிசம் என்றாலே கசக்கிறது. இவர்கள் கற்ற கல்வி, முதலாளிய உணர்வைத்தான் இவர்களுக்குள் வளர்த்திருக்கிறது. கவர்ச்சிகரமாகத் தோன்றும் சந்தைப் பொருளாதாரம் தான் இவர்களுக்கு உகந்ததாக இருக்கிறது. அமெரிக்கக் கனவோடு இவர்கள் உலவுகிறார்கள். உலக அளவில் வல்லரசுகளின் வரலாறு குறித்து இவர்கள் அறிய மாட்டார்கள். சமதருமம் என்ற வாழ்க்கை முறை குறித்து ஆசிரியர்களுக்கும் அக்கறை இல்லை. மதத் தலைவர்கள் என்பவர்களும் அக்கறை கொள்வதில்லை.

இதுதான் இன்று இந்தியாவில் நிலவுகின்ற சமுதாயச் சூழல். மதவாதிகள் உட்பட பலரும் அன்பு என்றும் அமைதி என்றும் சகோதரத்துவம் என்றும் வாயளவில் பேசினாலும் உள்ளத்தில் இவர்கள் சமாதானத்தைச் சார்ந்திருக்கவில்லை. தம் ஆதிக்கம் நிலை பெற வேண்டுமானால் சமூகத்தில் வன்முறையின்றி முடியாது. இவர்களுக்கு ஏற்றத்தாழ்வு வேண்டும். ஆண்டான் - அடிமைமுறை இவர்களுக்கு வேண்டும். சாதியில் உயர்வு என்றும் தாழ்வு என்றும் வேண்டும். போட்டி பொறாமைகள் வேண்டும். பொழுதுபோக்குகள் வேண்டும். விருந்து, வேடிக்கை, மதுபானங்கள் வேண்டும். மக்களின் உணர்வை மலினப்படுத்தும் திரைப்படங்கள், பத்திரிக்கைகள் போன்ற கேளிக்கைகள் வேண்டும். ஆங்கிலக்கல்வி வேண்டும்.

இதுதான் இன்றைய சமுதாய நடைமுறையென்றால் சமத்துவத்திற்கு இடம் இல்லாத இந்தச் சமூகத்தில் சகோதரத்துவம் எப்படித் தழைக்கும்? இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்வதால்



மட்டும் நெஞ்சில் அன்பு நிலைபெறுமா? மதவாதிகளைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வு என்ற சமூகக் கட்டமைப்பினுள் இறைவனையும் வார்த்து வைத்திருக்கிறார்கள். பாவம் - புண்ணியம் என்றும் மோட்சம் - நரகம் என்றும் பேசுவதன் மூலம்தான் இந்தக் கட்டமைப்பை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். தனியுடமையையும் அரசதிகாரத்தையும் கூட மதவாதிகள் புனிதப்படுத்தி வைத்திருக்கிறார்கள். மதங்களின் உள்ளும் ஆணாதிக்கம் நிலவுகிறது. எல்லோரும் இறைவனின் குழந்தைகள் என்றால் இதற்கொத்த பொருளியல் கோட்பாடு சமதர்மமாகத்தான் இருக்க முடியும். மதம் தனக்கு உடமையையோ அதிகாரத்தையோ சேகரித்துக் கொள்வது இத்தகையக் கோட்பாட்டுக்கு ஒத்துவராது. மத எல்லைக்குள்ளும் ஆதிக்கவாதிகளும் இவர்களுக்கெதிரான தீர்க்கதரிசிகள் என்றும் இருக்கிறார்கள். முரண்பாடுகள் நிலவும் சமூகத்தில் மதமும் இத்தகைய கட்டமைப்போடுதான் செயல்படுகிறது. வர்க்கப் போராட்டம் என்ற பொதுவிதியை மதம் என்ற அமைப்பினுள்ளும் நாம் காண்கிறோம். இப்பொழுது உறுதியாகச் சொல்லலாம். சமதருமம் என்ற அடிப்படையில் சமூகத்தின் கட்டமைப்பு மாற்றப்பட்டாலொழிய மக்களுக்குள் நல்லிணக்கம் ஏற்படாது. வன்முறையை ஆதாரமாகக் கொண்டு தனியுடமையும் அரசதிகாரமும் இவை சார்ந்த நிறுவனங்களும் இருக்கும் வரை மத நல்லிணக்கங்கள் பேசப்படும், ஆனால் செயற்படாது. மதநல்லிணக்கம் பற்றிய முயற்சிகளும் மதக் கலவரங்களும் தொடர்ந்து மாறிமாறி நிகழும். கலவரங்கள் செய்பவர்கள் குற்றவாளிகளாகவோ, புனிதர்களாகவோ கருதப்பட்டு தண்டனையோ மரியாதையோ பெறுவதும் தொடர்ந்து நிகழும். மத நல்லிணக்கம் பற்றிய முயற்சிகள் வேண்டாம் என்பது நம் கருத்தாக இருக்க முடியாது. நல்லிணக்கம் குறித்து முயற்சியை மேற்கொள்பவர்களும் தம்மைக் குறித்தும் சமூகக் கட்டமைப்பு குறித்தும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இது மட்டுமல்ல, மதம் என்றும் இறைவன் என்றும் இவர்கள் பேசுவது குறித்தும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மதத்திற்குள்ளும் ஆதிக்கம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இறைவனும் இந்தக் கட்டமைப்பினுள்தான் வார்க்கப்பட்டிருக்கிறார். இந்தக் கட்டமைப்பினுள்ளிருந்து மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் இறைவனுக்கும் விடுதலை தேவை. ஆதிக்கத்தோடு செயற்படுபவன் இறைவனாக இருக்க முடியாது. எல்லோருக்கும் எல்லாமாக இருப்பவன் தான் இறைவன். வானுலகில் அல்ல, மண்ணுலகில் மனிதர்களோடும், உயிர்களோடும் பசுமையாய், அன்பாய், தோழமையாய், எளியவனாய் இருப்பவன் இறைவன். இப்பொழுது சொல்லலாம்: ஏற்றத்தாழ்வு என்ற கட்டமைப்பைத் தக்கவைக்க

அவர் மனதில் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது; ஆனால் முற்றிலுமாக பார்க்க அவரால் இயலவில்லை என்பதுதான் உண்மை.

சமுதாய வளர்ச்சிக்கு ஷா செய்த சில தொண்டுகள் மிகமிக பாராட்டுக்குரியவை. நமது காலச் சமுதாயத்தை ஊடுருவி ஆழப் பார்க்க அவர் முயன்றார். சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் பழக்க வழக்கங்களின் ஆதித்தோற்றத்தை - வேர்களை அவரால் அறிய முடிந்தது : வரலாற்று முறையில், பொருளாதாரக் காரணங்களால் அவை எவ்வாறு ஏற்பட்டன என்பதை அவர் நன்றாக அறிந்து கொண்டார். 1856 ஆம் ஆண்டுச் சமுதாயம், 1946 ஆம் ஆண்டுச் சமுதாயமாக வளர்ந்தது என்றால் அதற்கு முக்கிய காரணம் ஷா என்பதை மறுத்தற்கில்லை. சென்ற தொண்ணூறு ஆண்டுகளாக, சமுதாய வளர்ச்சியை முன்கூட்டியே அறிந்து உரைத்தவர் ஷா. விக்டோரிய சகாப்தத்தின் தாராள மனப்பான்மைக் கொள்கையை (Liberalism) வெறும் மன ஆசைக்காக ஆதரிப்பதை ஷா கடுமையாக கண்டித்தார். இறந்து போன காலம் என்பதோடு, அதன் இறப்புக்காக பாடுபட்டவர் ஷா. பழங்கால அழிவுக்காக அவர் பாடுபட்டதோடு, புதுக்காலத் தோற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டார். ஆக்க இயல் கூர்தலறக் கொள்கையால் அவர் உருவாக்கிய சமயப் பார்வையோடு, உலக மாற்றத்திற்காக அவர் உழைத்தவர். பழங்கால முட்டாள் தனத்தை அடியோடு, துடைத்தெறிந்து புதுக் காலத்தில், அறிவும் விரிவும் நம்பிக்கையும் அமைந்த எதிர்காலத்தை அமைக்க நமக்கு அவர் வழி வகுத்தார்.

* * *

தோழர் துரை !

இத்துடன் கட்டுரை முடிகிறது.

The Freedom of necessity என்ற Bernal நூலின் 169 - 184 வரையுள்ள பக்கம் இக்கட்டுரை : 1946ல் Bernal இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்.

●

குறிப்பு : 1965-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் பிஎட் படித்தபொழுது நண்பர் துரை அவர்களுக்கு எழுதிய கடிதம்.



பகுதி 2

## மதங்களும் மனிதமும்

1. மத நல்லிணக்கம் குறித்து இன்றைய சூழலில் கூடுதலாகப் பேசுகிறோம். மதங்கள் பல என்ற போதிலும் பெரும்பாலான மதங்கள் இறைவனை ஒப்புக்கொள்கின்றன. அன்பு குறித்துப் பேசுகின்றன. உலகில் அமைதியும் சகோதரத்துவமும் நிலவவேண்டுமென்று பேசுகின்றன. இவற்றை எவ்வளவுதான் மக்கள் தம் நெஞ்சில் பதித்துக் கொண்டாலும் மத உணர்வுகளைக் கிளறி மக்களை எதிர் துருவங் களுக்குத் தள்ளி மக்களுக்கிடையில் மோதலையும் கலவரங்களையும் உண்டாக்குவது தொடர்கிறது. கோயில்கள் இடிக்கப்படுகின்றன. கொலைகள் திட்டமிட்டு நடைபெறுகின்றன. குண்டுகள் வெடிக்கின்றன. அன்பையும் அமைதியையும் உபதேசிக்கும் மதங்கள் இப்படி ஏன் செய்ய வேண்டுமென நாம் அதிர்ச்சியடைகிறோம். மதங்கள் என்பனவற்றுள் அரசியல் நுழைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. தேர்தல் வெற்றிக்காகவு மதக்கலவரங்கள் தூண்டப்படுகின்றன. வணிக நிறுவனங்கள் கொளுத்தப்படுகின்றன. வணிகர்களிடையே உள்ள போட்டியும் இந் மோதல்கள் வழியே வெளித்தெரிகின்றன. தேசத்தின் அரசியலை யா நிர்ணயிப்பது? என்ற முறையிலும் கலவரங்கள் தூண்டப்படுகின்றன நாடுகளுக்கிடையிலான சச்சரவுகளும் மதக் கலவரங்களில் தெரிகின்றன அரசு கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படும் மதச்சார்பின்மை ஒரு கேலி சித்திரமாக மாறுகிறது. சில அரசுகள் தமக்குரிய மதம் என்பதையே வாழ்வுக்கான விதிமுறைகள் ஆக்கி இருப்பதை இன்றளவும் காண முடிகிறது. பெண்களும் குழந்தைகளும் இத்தகைய மதக்கலவரங்களா பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போ இவற்றிற்கெல்லாம் காரணம் மதம் மட்டுமா என்ற கேள்வி எழுகிறது.

2. உபதேசங்கள் / நல்லுரைகள் தற்காலிகமாகப் பயன்படலா மதக்கலவரங்கள் கொஞ்ச காலம் ஓய்ந்திருப்பது போலத் தோன்றினாலு மீண்டும் வெடிக்கின்றன. கலவரங்களால் ஏற்பட்ட காயங்க ஆறுவதில்லை. கலவரங்களின் போது இறைவன் எங்கே போய் விட்டான் என்று ஐயம் எழுகிறது. நாம் நவீன உலகில் தான் வாழ்கிறோம என்றும் நமக்குள் கேள்வி எழுகிறது. இளைஞர்கள் உணர்வேற்றப்பட் நிலையில் எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். நல்லவர்க ஒதுங்கிக் கொள்ள, முரட்டு மனிதர்கள் முன்வரிசைக் வந்துவிடுகின்றனர். தன் பகைமைகளை - போட்டி பொறாமைகளை

விரும்பும் சக்திகளுக்கு எந்த வடிவிலேனும் கலவரங்கள் தேவை, வன்முறைகள் தேவை. ஆதிக்கத்திற்கு எதிராக மக்கள் தமக்குள் இணைந்துவிடக் கூடாது. மதம் என்றும் சாதி என்றும் சொல்லிக் கலவரங்களைக் கிளப்ப வேண்டும். கட்சிகளுக்கும் இத்தகைய கலவரங்கள் தேவை. மத நல்லிணக்கம் என்று பேசுபவர்களையும் நாம் சற்றுக் கவனமாகப் பார்க்கத்தான் வேண்டும். தனியுடைமையோடும் அரசதிகாரத்தோடும் இவர்கள் கொண்டிருக்கும் உறவு குறித்து நாம் ஆய்வு செய்யத்தான் வேண்டும். ஏற்றத்தாழ்வான கட்டமைப்பு கொண்ட சமுதாயச் சூழலில் தான் நாமும் இருக்கிறோம். நம்மையும் நாமே ஆய்வுக்குட்படுத்தத்தான் வேண்டும். நமக்குள்ளும் தங்கியுள்ள இறைவன் குறித்தும் கூட நாம் ஆய்வு செய்ய வேண்டும். வர்க்கப் போராட்டம் என்பது வரலாற்றுக்குள் - சமூகத்திற்குள் வந்து பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டது. தனிபொருவரைக் குற்றம் சொல்வதற்கில்லை. முதலாளிகள் என்பவர்கள் கூட தாமே விரும்பிக் குற்றம் செய்கிறார்கள் என்றும் கூறுவதற்கில்லை. எல்லோருக்குள்ளும் தான் வன்முறை, போட்டி, பொறாமை முதலிய உணர்வுகள் முட்செடிகளாக வளர்ந்திருக்கின்றன. இந்த முட்செடிகளால் நாம் காயம்பட்டுத்தான் வாழ்கிறோம். அவ்வப்பொழுது அன்பு என்றும் அமைதி என்றும் இறைவன் என்றும் பேசிக் கொள்வதன் மூலம் தற்காலிகமாகக் காயங்களுக்கு மருந்திடுகிறோம்.



# பார்ப்பனீயத்தின் வெற்றி
## நூல் திறனாய்வு

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 'பார்ப்பனீயத்தின் வெற்றி' என்ற இந்த நூல் தமிழுக்கு ஒரு புதுவரவு என்பதில் ஐயமில்லை. அம்பேத்கரின் ஆங்கில நடை ஒரு போறுபோல பெருமிதமான நடை. இந்த நடையின் பெருமிதத்தை, தன் மொழிபெயர்ப்பில் குன்றாமல் கொண்டு வந்திருக்கிற நண்பர் கோவிந்தசாமியை நாம் மனமார பாராட்டலாம். தமிழ் ஆற்றல் மிக்க மொழியாக வளர்ச்சி பெற, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் நூல்களின் மொழியாக்கம் பெரிதும் பயன்படும். இத்தகைய நூலாக்கத்தில் ஈடுபட்டுள்ள தோழர் கருணாமனோகரன் அவர்களுக்கு நம் நன்றிகள் உரியவை.

மார்க்சியம் இன்று உலக அளவில் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. மார்க்சியத்திலிருந்து வேறுபட்ட அணுகல் முறையோடு இந்திய சமூகம் பற்றிய பார்வைகள் இன்று தீவிரமாக முன்வைக்கப்படுகின்றன. இந்தியச் சமூகம் பற்றிய ஆய்வில் இத்தகைய தீவிரமான பார்வை கொண்டிருந்தவர்களில் மிக முக்கியமானவர் டாக்டர் அம்பேத்கர். பார்ப்பனீயத்தின் வெற்றி என்ற இந்த சிறிய நூலைப் படிக்கும்பொழுது, மார்க்சியம் தனக்கென கொண்டுள்ள பார்வை என்ன ஆகிறது? என்ற உணர்வோடு இந்த நூலைப் படித்தேன். படித்து முடிக்கிறபொழுது, மார்க்சியப் பார்வையிலிருந்து அம்பேத்கார் முன்வைக்கிற கருத்தாக்கத்தை எப்படி உள்வாங்கிக் கொள்வது என்ற முறையில் சிந்திக்கிறபொழுது, மார்க்சியத்தை பொறுத்த என்பார்வை வலுப்பெறுகிறது. இதுபற்றி நான் இங்கு சொல்ல வேண்டும்.

கடந்த சில பத்தாண்டுகளில் இந்திய வரலாற்றுச் சூழலில் நமக்கேற்பட்டுள்ள அனுபவங்கள் கடுமையானவை. இயந்திரத் தொழிலோடு கூடிய பாட்டாளி வர்க்கம், மார்க்சிய நோக்கிலான புரட்சியை செய்து முடிக்கும் என்ற நம்பிக்கை நிறைவேறவில்லை. சோவியத் ரஷ்யாவில் 1917-ல் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடைந்தது என்பதனால், புரட்சிக்குரியது இந்த வர்க்கம்தான் என்ற மார்க்சிய வாய்பாடு உண்மையில்லை. சீனத்தைப் பொருத்தவரை பாட்டாளி வர்க்கத்தின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, உழவர்களைத் திரட்டி மாவோ புரட்சியை முடித்தார். கியூபாவில் வேறுவகை அனுபவம். இவ்வகை வேறுபட்ட அனுபவங்களால் மார்க்சியம் பழுதுபடவில்லை.

இந்தியச் சூழலுக்கு வருவோம். கடந்த சில பத்தாண்டுகளில் பசுமைப்புரட்சியின் விளைவாக கிராமப்புற உழவர்கள் பெருமளவு சுரண்டலுக்கு உள்ளாகினர். ஏகாதிபத்தியம் என்பது தன்னைப் பல களங்களில் உறுதியாக நிலைநிறுத்தி உள்ளது. இதன் காரணமாக கிராமப்புறங்களில் வறுமையும், ஒடுக்குமுறையும் உச்ச அளவில் செயல்படுகின்றன. உழவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இவர்களோடு பெண்கள் - இவர்கள் எல்லோரையும் சேர்த்துக் கொண்டால் இந்தியாவில் 80 சதவீதத்தினர் இப்படி சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாகியிருப்பதை அறியலாம். சமூகத்தின் உயர்மட்டத்தில் இருக்கும் முதலாளிகள், அரசு அதிகாரிகள், இவர்களோடு நகர்ப்புறத்தில் வாழக்கூடிய நடுத்தர வர்க்கத்தினரைச் சேர்த்துச் சொன்னால், சுமார் 20 சதத்தினருக்காக 80 சத மக்கள் அடிமைத்தனத்திலும் அறியாமையிலும் வறுமையிலும் நோய்நொடிகளிலும், சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் இடம் கொடுத்து வாழ நேர்ந்திருப்பதை அறியலாம். கடுமையான ஒடுக்குமுறைக்கும் கேவலத்திற்கும் உள்ளாகிய நிலையில் இவர்களை தலித்துகள் என்றுகூட சொல்லலாம். இவர்களைத் திரட்டி செய்வதுதான் இந்தியாவைப் பொறுத்தவரை புரட்சி. இதை எப்படிச் செய்வது என்பது பிரச்னை. பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியாக மாறிக் கொண்டிருக்கிற இயந்திரத் தொழில் சார்ந்த பாட்டாளி வர்க்கத்தை எதிர்பார்த்து இருக்க வேண்டியதில்லை. பொருளாதாரவாதத்திற்கும் தொழிற்சங்கவாதத்திற்கும் இவற்றோடு அரசியல் அதிகாரத்தை தங்கள் கைக்கு மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தோட்டத்திற்கும் இரையாகியிருக்கிற கட்சிகளை நம்பிப் பயனில்லை. அநேகமாக தலித் நிலைக்குத் தாழ்த்தப்பட்ட உழவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட சமூகத்தினர், பெண்கள், ஆதிவாசிகள் இவர்களுக்கானது புரட்சி. இத்தகைய புரட்சிக்குரியதாக மார்க்சியம் தன்னை வார்த்துக் கொள்ளமுடியும். தலித் இயக்கத்தை மார்க்சியம் தனக்குள் காணமுடியும். இதற்கான கோட்பாடு என்ன? நடைமுறை என்ன? கட்சி அமைப்பு என்ன? இவை பற்றி மார்க்சியர் தீர்மானிக்க வேண்டும். புரட்சிக்கு வேறு நெறி இல்லை. இந்த நோக்கில் மார்க்சியம் தன்னை விரித்துக் கொள்ளவேண்டும். ஆழப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியம்தான் இப்பொழுது தகர்ந்திருக்கிறது. மார்க்சியம் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளவும், நிலைநிறுத்திக் கொள்ளவும் புதிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய கண்ணோட்டத்திலிருந்து விலகி, மார்க்சியத்தை பெருமளவு தவிர்க்கிற இன்னொரு கண்ணோட்டத்திற்குள் நாம் செல்ல வேண்டியதில்லை.



இந்த நூலில் டாக்டர் அம்பேத்கார் தலித் மக்களின் பார்வையிலிருந்
இந்திய வரலாற்றைச் சொல்லுகிறார். இப்படி வரலாறு அடித்தள மக்களி
பார்வையிலிருந்து பொருள்படுத்தப்படுவதை மார்க்சியர் ஏற்க முடிய
இப்பார்வையை ஆழப்படுத்துவதன் மூலம் மார்க்சியம் தனக்குள் தலி
இயக்கத்தைக்கண்டு தன்னை வளப்படுத்திக் கொள்ள முடியும். மார்க்சி
கூறும் வர்க்கப் பார்வை இதிலிருந்து வேறுபட்டதும் அல்ல. இந்தியாவி
வர்க்கங்கள் இல்லை, சாதிகள் தான் உண்டு என்ற கூற்று - மார்க்சியத்தி
உள்ளுறை ஆற்றலைப் புரிந்து கொள்ளாதவர் கூற்று.

பார்ப்பனியத்தின் வெற்றி என்ற நூல், சாதியின் தோற்றத்திற்கு அ
மணமுறை என்பதை ஆதாரமாக்குகிறது. சமூக ஆய்வில் ஒரு கண்டுபிடி
என்று மதிப்பிடத்தக்கது அம்பேத்கார் அவர்களின் இந்தப் பார்வை. ஆனா
சாதியத்தின் தோற்றத்தை இந்தக் கண்டுபிடிப்பு மட்டுமே முழுமையா
விளக்கவில்லை. தோழர் கருணாமனோகரன் தான் எழுதியுள்ள "சாதி
சமூக அமைப்பும் தமிழ்த் தேசிய இனப்பிரச்னையும்" என்ற நூலி
சாதியத்தின் தோற்றத்திற்கு சில தொகுப்பான காரணங்களை
குறிப்பிடுகிறார். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் வரலாற்றின் போக்கி
ஏற்பட்ட வேலைப்பிரிவினை, வேலைப்பிரிவினைக்குள் வந்த ஏற்றத்தாழ்
என்பது ஒரு தொகுப்பு. தனிஉடைமை என்று தொடங்கி அரசு அதிகா
வரையிலான காரணிகள் இன்னொரு தொகுப்பு. அகமணமுறை, ம
என்பவை மேலும் இரு தொகுப்புக்கள். வேலைப் பிரிவினை, ஏற்றத்தாழ்
தனிஉடைமை, அரசு அதிகாரம் இவற்றோடு அகமணமுறை என்பவ
வைத்துத்தான் சாதியின் தோற்றம் பற்றிப் பேசமுடியும். இவற்றோ
வைத்துத்தான் மதம் பற்றிப் பேசமுடியும்.

மார்க்சியத்தின் வலுமிக்க ஒரு பகுதி அதன் வரலாற்
பொருள்முதல்வாதம். எந்த ஒரு சிக்கலையும், அதன் வரலாற்றுச் சூழ
பொருளியல் சூழலில் வைத்துத்தான் காணமுடியும். பொருளியல் என்பதை
இயற்கை, நிலம், தட்பவெப்பம், உற்பத்தி முறை, உற்பத்திக் கருவிகள் எ
தொடங்கி தனிஉடைமை, குடும்பம், அரசு, வர்க்கம் என்று பலவற்
உள்ளடக்கி பேச வேண்டும். ஒரு பிரச்னையின் தோற்றம், வளர்ச்சி, தீ
என்பன அதற்கான பொருளியல் சூழலில்தான் நடைபெறுகின்ற
இந்தியாவில் மட்டுமே சாதி உண்டு என்று சிலர் அழுத்திச் சொல்கின்ற
வேலைப்பிரிவினை, ஏற்றத்தாழ்வுகள், தனி உடைமை, அரசு அதிகா
ஆகியவை உலகின் பிற பகுதிகளில் இருந்தபோதிலும், சாதி அ
தோன்றவில்லை என்றும் சொல்கின்றனர். இக்கூற்றை நாம் மறுக்கவில்

அகமணமுறை, இந்தியாவுக்கு மட்டுமே உரியது என்று சொல்லமுடியுமா என்பதுபற்றி எனக்குத் தெரியவில்லை. இப்படி வைத்துக் கொண்டாலும், வேலைப் பிரிவினை - அரசு அதிகாரம் வரையிலான காரணிகளோடு தொடர்புபடுத்தாமல் அகமண முறையைச் சாரமாகக் கொண்ட சாதியை விளக்க முடியாது. சாதியை நிலைநிறுத்துவதற்கு அரசு அதிகாரம் இல்லாமல் முடியாது. இப்படிக் காண்பது மார்க்சியப் பார்வை. சாதி என்ற இந்தப் பிரச்னையின் தோற்றம், வளர்ச்சி, தீர்வு என்பது பற்றிப் பேசும்பொழுது, இதற்குரிய பொருளியல் சூழலில் ஏற்படும் மாற்றங்களோடு வைத்தே பேசமுடியும். பொருளியல் சூழலின் செறிவு மிக்க ஒரு அம்சம்: சமூகத்திலுள்ள பல பிரிவுகள் - இவற்றுக்கிடையிலான உறவுகள் / முரண்கள் - மோதல்கள் / போராட்டங்கள். இப்படி ஒரு விரிவான வரலாற்றுச் சூழலில் வைத்து இந்தியாவில் சாதி தோன்றியது பற்றி டாக்டர் அம்பேத்கார் தன் நூலில் விவரிக்கவில்லை. பார்ப்பனர், சமூகத்தின் பிற பிரிவுகளிலிருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள, உயர்வுபடுத்திக் கொள்ள அகமண முறையைத் தோற்றுவித்தனர் என்று ஆராய்கிறார் அம்பேத்கார். இதைப் பார்ப்பனியத்தின் வெற்றி எனக் குறிப்பிடுகிறார். சதி, விதவைக்கு திருமணமறுப்பு, குழந்தை மணம் ஆகிய செயல்பாடுகள் மூலம் அகமண்முறையை நிலைநிறுத்தியதை டாக்டர் அம்பேத்கர் சிறப்பாக விவரிக்கிறார். மதம் பற்றியும் சொல்கிறார். மனுதர்மம் பற்றிச் சொல்கிறார். அரசு அதிகாரத்தோடு மனுதர்மம் செயல்பட்டதைக் குறிப்பிடுகிறார். பெண்ணை அடிமைப்படுத்தும் முறையில் ஆணாதிக்கம் செயல்பட்டதையும் அம்பேத்கார் தரும் விவரிப்புகளிலிருந்து நாம் புரிந்து கொள்கிறோம். வரலாற்றின் பொருளியல் சூழலிலிருந்து டாக்டர் அம்பேத்கார் இவற்றை வார்த்தெடுக்கவில்லை என்பதுதான் என் விமரிசனம்.

நூலின் இறுதிப்பகுதியில் பார்ப்பனர்களுக்கும் சத்திரியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம் பற்றி குறிப்பிடுகிறார். இந்திய வரலாற்றில் பார்ப்பனர்களும் சத்திரியர்களும் சில நூற்றாண்டுகளேனும் கடுமையாக மோதிக் கொண்டனர். ஒருவரை மற்றவர் அழித்துக் கொள்ளும் இத்தகைய போராட்டத்தின் போது இரு சாராரும் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளத் தொடங்கினர். இப்படி தாம் போரிட்டுக் கொண்டிருந்தால் தம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமாக இருக்கிற வைசியர்களும் சூத்திரர்களும் தம் அதிகாரத்திற்கு உட்படாமல் விடுதலை பெறுவர் அல்லது விலகிச் செல்வர். வைசியர்களையும் சூத்திரர்களையும் வைத்து தாம் செய்யும் சுரண்டல் / ஒடுக்குமுறை மூலம்தான் தமக்கு வாழ்க்கை அமைகிறது. இப்படிப் புரிந்து கொண்ட பார்ப்பனரும் சத்திரியரும் தமக்குள் இணைந்து சமரசம் செய்து



கொண்டதன் மூலம் பிற சமூகங்கள் மீது தம் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் உறுதிப்படுத்திக் கொண்டனர். உண்மையில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் இத்தகைய விவரிப்பிலிருந்துதான் தம் நூலைத் தொடங்கியிருக்க வேண்டும். இங்கும் நாம் என்ன பார்க்கிறோம்? சத்திரியரின் அரசு அதிகாரமும், பார்ப்பனரின் கருத்தியலும் இணைந்து செயல்படுவதன் மூலம்தான் பிற சமூகங்களின் மீது தம் அதிகாரம் நிலைபெற்றது. நாளடைவில் வைசியர்களின் ஒரு பிரிவினராகிய வணிகர் அரசு அதிகாரத்தோடு இணைந்துகொண்டனர். சூத்திரர்கள் என்று இந்த நூலில் சொல்லப்படுபவர் யார் என்ற விளக்கம் இந்த நூலில் இல்லை. கைவினைஞர்கள், சூத்திரர் என்று சொல்லப்பட்டிருக்கலாம். நாளடைவில் விவசாயிகளும், சூத்திரர் என்ற பிரிவுக்குள் அடங்கியிருக்கலாம். தீண்டத்தகாத பஞ்சமர் என்பவர்களை சூத்திரர்கள் எனச் சொல்லலாமா என்பது பற்றித் தெரியவில்லை.

மீண்டும் மார்க்சியத்தின் வழியே நாம் தெரியவந்திருக்கிற இன்னொரு உண்மை பற்றி நாம் சொல்லவேண்டியிருக்கிறது. வரலாற்றை மார்க்சியர் விளக்குகிறபோது, அரசு அதிகாரத்தை ஒரு முக்கியப் புள்ளியாக எடுத்துக் கொள்கின்றனர். அரசு அதிகாரம் என்பதனுள் இந்தியாவைப் பொறுத்தவரை சத்திரியர்கள் என்பவர்களோடு நிலக்கிழார்கள், வணிகர்கள் ஆகியவரும் நாளடைவில் இணைந்து கொள்கின்றனர். அரசு அதிகாரம் என்பது இராணுவம், நிர்வாக இயந்திரம், அதிகார வர்க்கம் முதலியவற்றின் மூலம்தான் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது என்பதில்லை. கருத்தியல் தளத்தில் அரசு அதிகாரம் தன்னைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ள முயற்சி செய்கிறது. வரலாற்றின் ஒரு கட்டத்தில் ஒரு கருத்தியல் மட்டுமே செயல்படுவதில்லை. ஆதிக்கக் கருத்தியல் என்று ஒன்றைச் சுட்ட முயன்றாலும் அதனோடு முழுவதும் ஒத்தும் அங்குமிங்கும் வேறுபட்டும் இயங்குகிற பிற கருத்தியல்களும் உண்டு. ஆதிக்கக் கருத்தியலோடு முற்றாக எதிர்நிலையில் செயல்படுகிற கருத்தியலும் உண்டு. இந்திய வரலாற்றில், எல்லாக் கட்டங்களிலும் பார்ப்பனியம் மட்டும்தான் ஆதிக்கக் கருத்தியலாகச் செயல்பட்டது என்று சொல்வதற்கு ஆதாரமில்லை. வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பார்ப்பனியம் ஆதிக்கக் கருத்தியலாக இருந்தது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

பகவத் கீதை வெளிப்படுத்தும் கருத்தியலை, வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆதிக்க / பார்ப்பனிய கருத்தியல் என்று சொல்லமுடியும். இதற்கான வரலாற்றுச் சூழல்பற்றி நமக்குத் தெரியவில்லை என்றாலும்

டி.டி. கோசாம்பி அவர்களின் வரலாற்று ஆய்விலிருந்து ஒன்றைக் குறிப்பிடலாம். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பாடலிபுத்திரம் தன் முன்னைய பெருமையிலிருந்து சிதைந்தது. முன்பு 60 சதுர மைல் பரப்பளவிலிருந்த பாடலிபுத்திரம், 6 ஆம் நூற்றாண்டுக்குப்பிறகு 6 சதுர மைல் அளவுக்கு குறைந்தது. கிராமப்புறங்களில் சிதைந்து கொண்டிருந்த வேளாண்மையை நிலைநிறுத்துவதற்காக நகர்ப்புறங்களில் குழுமியிருந்த கைவினைஞர்கள், நகர்ப்புறத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, கிராமப் புறங்களில் குடியமர்த்தப்பட்டனர். வேளாண்மைக்கு முற்றிலும் அனுசரணையான 12 வகையான கைவினைஞர்கள் இப்படி குடியமர்த்தப்பட்டனர். நிலக்கிழார்களோடு இவர்கள் சில மாற்றமுடியாத உறவுகளோடு / உரிமைகளோடு குடியமர்த்தப்பட்டனர். அரசு அதிகாரம் இதைச் செயல்படுத்தியது. நம் காலம் வரை நிலவுகிற கிராமப்புற சமூக அமைப்பு இவ்வாறு தொடங்கியது.

இந்திய வரலாற்றின் ஒரு கட்டத்தில் இப்படி நிச்சயம் நிகழ்ந்திருக்க முடியும். சமூகப் பிரிவுகள் பலவற்றுக்குள்ளும் ஏதோ ஒருவகையில் இப்படி ஒரு இணைவு சாத்தியம் இல்லையென்றால் சமூக இயக்கம் சாத்தியமில்லை. இப்படி இணைவு பெறுகிற சமூகப் பிரிவினுள் சமத்துவம் பற்றி நாம் பேசுவதற்கில்லை. மறு உற்பத்தி தொடர்ந்து நடைபெற இப்படி ஒரு இணைவு தேவை. வரலாற்றுக்காலம் முழுவதும் சமூக இயக்கம் இவ்வாறு வன்முறை கொண்டும் கருத்தியல் கொண்டும் ஒழுங்குபடுத்தப்படுகிறது. பகவத் கீதை வெளிப்படுத்தும் கருத்தியல் இப்படி ஓர் ஒழுங்கமைப்பு. ஒவ்வொரு சமூகப் பிரிவும் அதனதன் இடத்திலிருந்து தனக்கென வகுக்கப்பட்ட தொழிலை / கடமையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும். எந்தப் பெயரில் இறைவனை வணங்கினாலும் எத்தகைய சடங்குகளை மேற்கொண்டாலும் அவை இறைவனுக்குப் போய்ச் சேரும். ஞான நெறியிலும் பிரம்மத்தை அடையலாம். கர்மம் அல்லது யோக நெறியிலும் பிரம்மத்தை அடையலாம். பார்ப்பனன், சத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய அனைவரும் தமக்குரிய பணியை – வழிபாட்டைச் சரிவரச் செய்ய வேண்டும். இப்படி தொடங்கி, பகவத்கீதை நிறையச் சொல்கிறது. பகவத் கீதையின் எல்லைக்குள் சமூகத்தின் எல்லாப் பிரிவுகளையும் அடக்கிவிடலாம். எல்லாவகைக் கடவுளரையும் வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் அடக்கிவிடலாம். ஆத்திகனும் நாத்திகனும் பகவத் கீதையின் எல்லைக்குள் இடம்பெற முடியும். புத்தனுக்கும் சமணனுக்கும் இதற்குள் இடம் உண்டு. இப்படி உருவாக்கப்பட்டதுதான் இந்துமதம். இதை உருவாக்கியவர் பார்ப்பனர். அரசர், வணிகர், நிலக்கிழார் முதலியவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இதைச்



செயல்படுத்த முடியாது என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டு
வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வைத்து இத்தகை
கருத்தியலின் தோற்றத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். முன்னை
வரலாற்றிலிருந்து இப்போக்கின் முற்போக்குத் தன்மையையும் நாம் பேசமுடிய
இத்தகைய சமூக அமைப்பு இன்னொரு காலத்தில் வரலாற்றின் வளர்ச்சிக்
தடையாகவும் மாறிவிடலாம். மனுதர்மம் பற்றி மட்டுமே விரிவு
நிகழ்த்துவதன்மூலம் இந்திய வரலாற்றை விளக்க முடியாது. மனுதர்
எல்லாக் காலங்களிலும் எல்லாப் பிரதேசங்களிலும் முழு அளவி
செயல்பட்டதாகவும் சொல்ல முடியாது. இங்கு ஒன்றை உறுதியாக
சொல்லலாம். வேலைப் பிரிவினையைப் பார்ப்பனர் தோற்றுவிக்கவில்லை
ஏற்றத்தாழ்வை பார்ப்பனர் தோற்றுவிக்கவில்லை. தனி உடைமையை
குடும்பத்தை – அரசை பார்ப்பனர் தோற்றுவிக்கவில்லை.

அதேபோல மதம் என்பதனையும் பார்ப்பனர் தோற்றுவித்தன
என்பதற்கில்லை. அதமனமுறை ஒரு வெற்றி எனவும், தோல்வியின் விளை
எனவும் சொல்லமுடியும். சமூகத்தில் திணிக்கப்படும் அடிமை முறை, எந்
சமூகப் பிரிவுக்கும் என்றும் முற்றான அமைதி தருவதாகவும் இல்லை. அடி
முறை / ஒடுக்குமுறை நிச்சயம் கலவரங்களைத் தொடர்ந்து தோற்றுவித்
கொண்டே இருக்கும். இத்தகைய கலவரங்களிலிருந்து சத்திரியராகட்டு
பார்ப்பனராகட்டும் தமக்கு முற்றாக அரண் செய்து கொள்ளமுடியா
உயர்சாதியினர் பெண்ணை அதிக அடிமைத்தனத்திற்கு உட்படுத்தி
பெண்ணின் கலகக் குரல் என்றும் அவர்களின் நிம்மதியை அழித்
கொண்டே இருக்கும். வெறும் கருத்தியலுக்குள் தன்னைப் புதைத்
கொள்ளமுடியாது. முரண்களோடு கூடிய வாழ்வியலுக்கு ஒருவன் வந்
வேண்டும். முரண்களின் நெருக்கடியிலிருந்து எவனும் தப்பமுடியா
பார்ப்பனியமும் அரசு அதிகாரமும் அதிக அளவில் கைகோர்த்
கொண்டதன் விளைவுதான் இந்துமதம். கடவுளைத் தொடக்கத்திலிருந்
மறுத்துவந்த சாங்கியம், நியாயம், வைசேசிகம், யோகம், மீமாம்சம் முத
தரிசனங்களையும், புத்தமதம் போன்ற கடவுள் மறுப்புப் போக்குகளை
தனக்குள் உள்வாங்கிக் கொண்டதன் விளைவுதான் இந்தும
உள்வாங்கிக் கொண்டதன்மூலம் பலவற்றை அழித்தது என்
சொல்லலாம். இந்துமதம் இப்படி 'வேற்றுமைக்குள் ஒற்றுமை' கண்டது.

பிரம்மத்தின் தலையிலிருந்து பார்ப்பனனும், தோள்களிலிரு
சத்திரியனும் . . . இப்படியே வைசியனும், சூத்திரனும் தோன்றினான் எ
வர்ணனை ஒரு உருவகம் மட்டுமே. இந்த உருவகம் அதன் சாரத்தில்
கற்பனை. சாதியத்தைத் தாங்கும் ஆதாரங்களில் ஒன்றான மதம் என்ப

இப்படி ஒரு உருவகத்திற்குள் அடைக்க முடியாது. இந்த உருவகத்தைக் கடந்து இந்துமத உருவாக்கம் என்ற ஆதாரத்தில்தான் சாதியத்தை விளக்கமுடியும். மதம் என்ற வடிவத்தில் கருத்தியலை மட்டும் மார்க்சியம் ஆராய்வதில்லை. மதம் என்ற வடிவத்தில் நடைபெற்ற வர்க்கப் போராட்டத்தை நோக்கி மார்க்சியம் தன் கவனத்தைக் குவிக்கிறது. பார்ப்பனியத்தின் வெற்றி என்ற இந்த நூல், பௌத்த மதத்தை பார்ப்பனியம் எவ்வாறு அழித்து தன்னை நிலைநாட்டிக் கொண்டது என்பதை விரிவாகச் சொல்கிறது. கருத்தியல் அம்சங்களில் இவற்றுக்கிடையிலான முரண்பற்றி அதிகம் பேசும் அம்பேத்கார் அவர்கள், கருத்தியல் முரண்களுக்கு அடியில் இருக்கிற பொருளியல் அம்சம் பற்றி அதிகம் சொல்லவில்லை. பௌத்த மதத்தின் தோற்றத்திற்கோ பிறகு அழிவுக்கோ காரணமான பொருளியல் அம்சங்கள் பற்றி சொல்வது முக்கியம். இதைப் போல-பார்ப்பனியத்தின் தோற்றத்திற்கும் காரணமாக அமைகிற பொருளியல் அம்சங்கள் முக்கியம். பார்ப்பனரின் வேள்விகளில் கால்நடைகள் கொல்லப்பட்டன. வேளாண்மையின் வளர்ச்சிக்கு கால்நடைகள் தேவை. வேளாண்மை வளர்ந்து வருகிற காலகட்டங்களில், கால்நடைகளைக் கொல்லுகிற வேள்விமுறையை - பார்ப்பனர்களை - எதிர்க்கிற பௌத்தர்களுக்கு சமூகத்தில் செல்வாக்கு கிடைக்கும். மார்க்சிய வரலாற்றாசிரியர்கள், பௌத்தம் செல்வாக்குப் பெற்றதற்கான இக்காரணம் பற்றி குறிப்பிடுகின்றனர். பலவகை நாகரிகங்களுக்கிடையில் உறவு ஏற்படுத்துகிற வணிகர்களை பௌத்தம் போற்றியது. இதைப்போலவே பெண்களையும் தாழ்த்தப்பட்ட சாதியினரையும் பௌத்தமதம் ஏற்றுக் கொண்டது. இவை பற்றி அம்பேத்கர் குறிப்பிடுகிறார். நாம் இளமைக் காலத்தில் படித்த பாடநூல்களில் நோய்க்குக் காரணமென்ன, முதுமைக்கு என்ன காரணம்? மரணம் ஏன் ஏற்பட வேண்டும் என்பன போன்ற பிரச்னைகளுக்கு விடை காண்பதற்காக அரண்மனை வாழ்வைத் துறந்து புத்தர் காடு சென்றார் என்று படித்திருக்கிறோம். 12 ஆண்டுக்காலம் புத்தர் துறவியர் பலரோடு பழகி விடைகாண முயன்றார். இறுதியாக அவர் கண்ட விடை மையநெறி எனப்படுகிறது. புலன்களை வெறுக்கும் துறவும் வேண்டாம். புலன்களை இன்பத்தில் மூழ்கடிக்கிற நுகர்வு வெறியும் வேண்டாம். கடவுள் உண்டு அல்லது இல்லை என்பதால் மனிதச் சிக்கல் தீராது. மனித விடுதலைக்கு இடைக்கால நெறி, சங்கம். சாதி வேற்றுமை கூடாது. சங்கத்தினுள் வந்தவர்களைப் பொறுத்தவரை தனி உடைமை இல்லை. ஏற்றத்தாழ்வு இல்லை. சங்கம் முழுமுற்றான தீர்வு அல்ல. எனினும் புத்தரின் நெறி பழங்காலச் சூழலில் எதார்த்தத்திற்கு பொருந்திய முற்போக்கான நெறி. இது மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. இது முதற்கட்டம்.



செல்வர்கள் உள்ளே வந்தபொழுது சங்கத்திற்கு உடைமை சேர்ந்தது
அரசு அதிகாரம் புத்தமதத்தை ஏற்றுக் கொண்டபொழுது, புத்தமத
நிறுவனப்படுத்தப்பட்டது. பெரிய மடங்கள் தோன்றின. ஆயிரக்கணக்கி
மடங்களில் புத்தத் துறவிகள் வாழ்ந்தனர். தத்துவ ஆராய்ச்சி என்ற பெயரி
தர்க்கங்களின் நுணுக்கங்களில் அறிவாளிகள் தம்மைப் புதைத்து
கொண்டனர். ஒரு கட்டத்தில் அவர்கள் கண்ட இறுதி உண்மை சூன்ய
புத்தமதம் புத்தரை இறைவனென்றும் பேசியது. சடங்குகள் புத்தமதத்தை
ஆக்கிரமித்துக் கொண்டன. தனி உடைமைக்கும் அரசு அதிகாரத்திற்கு
ஆதரவாக செயல்படுகிற புத்தமதம் மக்கள் மீது ஒரு பெரிய பார
வரலாற்றின் வளர்ச்சிக்கு இது ஒரு பெரிய தடை. இந்த மதத்தை இ
அழிக்கமுடியும். இந்து மதம் இதைச் செய்தது. இது வரலாறு (இது எனக்கு
தெரிந்த சுருக்கமான வரலாறு. வரலாற்றாய்வாளர்கள் இந்த வரலாற்ற
தேவையான விரிவான விவரங்களோடு சரியாக சொல்ல முடியும்).

மதத்தின் தோற்றம் - வளர்ச்சி - அழிவு ஆகியவற்றை ஒ
மார்க்சியவாதி விளக்குவதைப் போல, டாக்டர் அம்பேத்காரிடம் நா
எதிர்பார்க்க முடியாது. வரலாறு பற்றி மார்க்சியத்தின் பார்வை
அம்பேத்காரிடம் இல்லை. அல்லது செறிவு பெறவில்லை. அம்பேத்காரின் பி
நூல்களில், ஒருவேளை மார்க்சிய நோக்கிலிருந்து இந்த குறிப்பிட்ட கா
வரலாற்றை / சமய வரலாற்றை விளங்கிக் கொள்வதற்குத் தேவையா
விவரங்கள் இருக்கக்கூடும். எனினும் முழு அளவில் மார்க்சியராக அ
இல்லை என்பதைக் கொண்டு அம்பேத்காரை நாம் குறைத்துப் பேச முடியாது
டாக்டர் அம்பேத்கார், இந்தியாவின் மாபெரும் சிந்தனையாளர், சமுதாய
போராட்ட வீரர். அடித்தள மக்களின் வரலாற்றை ஆதாரமாகக் கொள்கி
மார்க்சியம், டாக்டர் அம்பேத்கார் அவர்களைப் புரிந்து கொள்ளும் -
பெருமைப்படுத்தும். சாதி என்ற ஒற்றைக் கோட்பாட்டுக்கு
அம்பேத்காரை சிறைப்படுத்தவும் முடியாது. பார்ப்பனியம் பற்றி இன்
அழுத்தம் பெற்றிருக்கிற பெரியாரியப் பார்வையையும், அம்பேத்காரிய
பார்வையையும் ஒரு நிராக்க முடியாது.

தோழர் கருணாமனோகரன் அடிக்கடி வற்புறுத்துகிற மாதிரி, இன்றை
வரலாற்றுச் சூழலில் அடித்தள மக்கள் முன் செல்வதற்கான செயல்திட்ட
நமக்குத் தேவை. மார்க்சியத்திலிருந்தும், அம்பேத்காரியத்திலிருந்தும்
பெரியாரியத்திலிருந்தும் இந்தச் செயல்திட்டத்துக்கான ஆதாரங்களைச்
சேகரிக்க வேண்டும்.

# பார்ப்பனியம் - எப்படி, எப்போது ஒழியும்?

1. இந்தியாவில் அன்னிய நிறுவனங்களின் ஊடுருவலோடு பிற்போக்கான முதலாளியம் எல்லாக் களங்களிலும் தன்னை வலுப்படுத்திக் கொண்டு வருகிறது. இந்தியாவில் நெடுங்காலமாக நிலவிவரும் சாதி அமைப்புமுறை தற்போது இந்துத்துவம் என்ற மதவாத அரசியல் வடிவம் எடுத்துள்ளது. இத்தகைய போக்கை பார்ப்பனியம் என்றும், மேற்குலகில் தோன்றிய பாசிசத்திற்கு இது நிகரானது என்றும் சிலர் கருதுகின்றனர். பொருளியல் வகையில் மேலாண்மை செலுத்துகின்ற முதலாளியத்தையும் இதனோடு ஒத்துச் செயல்படுகிற பார்ப்பனியம் என்ற போக்கையும் உரசிப் பார்க்கும் சில நண்பர்கள், இந்தக் கட்டமைப்பு முழுவதையும் பார்ப்பனியம் என்ற சொல்லால் குறிப்பிட விரும்புகின்றனர். பாசிச வடிவமெடுத்துள்ள பார்ப்பனியத்தை ஒழிப்பதன் மூலமே இந்தியாவின் சாதியக் கட்டமைப்பைத் தகர்க்க முடியும் என்றும் இவர்கள் நம்புகின்றனர். சாதிய கட்டமைப்பை தகர்த்தாலொழிய தமிழ்த் தேசியம் என்ற அரசியலை வளர்த்தெடுக்க முடியாது என்றும் இவர்கள் நம்புகின்றனர். இதுகுறித்து நாம் இங்கு ஆராயவேண்டும்.

2. இந்தச் சிக்கலை விளங்கிக் கொள்வதற்கு லெனினின் ஆய்வொன்றை இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம். ரஷ்யாவில் முதலாளிய வளர்ச்சி குறித்துத் தன் தொடக்க காலத்தில் லெனின் விரிவாக ஆராய்ந்து ரஷ்யாவில் வளர்முகப் போக்கில் உள்ளது முதலாளியம்தான் என்று நிறுவினார். நரோத்னிக்குகள் என்ற கட்சியினரது ரஷியா பற்றிய பொருளியல் சித்திரிப்பை மறுக்கும் முறையிலானது இந்த ஆய்வு. நிலத்தில் கூட்டு உடைமையைக் கொண்ட கிராம சமுதாய அமைப்பு ரஷ்யாவில் நெடுங்காலமாக நிலவி வந்தது. இத்தகைய அமைப்பிலிருந்து சோசலிசத்திற்கு எளிதாக மாறிவிடலாம் என்று நரோத்னிக்குகள் கருதினர். முதலாளியத்தின் ஊடுருவல் காரணமாக முன்னைய கிராம சமூக அமைப்பு தொடர்ந்து தகர்ந்து வருகிறது என்றும், இந்தத் தகர்வை தடுத்து நிறுத்த முடியாது என்றும், முதலாளிய வளர்ச்சிப் போக்கின் ஒரு கட்டத்திலிருந்துதான் சோசலிசத்திற்கு மாறவேண்டுமென்றும் லெனின் விளக்கினார். லெனினது இத்தகைய ஆய்வு இன்றைய சூழலில் நமக்குச் சில தெளிவுகளை ஏற்படுத்த இயலும்.

3. ஆங்கிலேயர் வழியாக இந்தியாவிற்கு வந்து சேர்ந்த முதலாளியம் என்பது அண்மைக் காலத்தில் சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரில்



இந்தியாவின் பொருளியல் முதலியவற்றைத் தன் முழுமையான ஆதிக்கத்திற்குள் கொண்டு வருகிறது. மேற்குலகில் 15/16–ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ச்சி பெற்ற முற்போக்கான முதலாளியம் அல்ல, இங்கு 18 / 19 ஆம் நூற்றாண்டுகளில் வந்துசேர்ந்த முதலாளியம். இது பிற்போக்கான முதலாளியம். இங்கு இருந்த நில உடமை முறையோடும் சுதேச மன்னர்களோடும் கூட்டுச்சேர்ந்து கொண்டது இந்த முதலாளியம். இந்தியாவின் சாதிய முறையோடு இது சமரசம் செய்து கொண்டது. ஆங்கிலக் கல்வி முறையின்மூலம் தனக்குத் தேவையான அரசு அலுவலர்களை உற்பத்தி செய்து கொண்டது. இவர்களில் பெரும்பான்மையினர் பார்ப்பனர்கள். ஆங்கில அரசதிகாரத்தோடும் நிர்வாக முறையோடும் பொருளியற் செயல்பாடுகளோடும் இவர்கள் ஒத்துழைத்தனர். ஆங்கில அரசு இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒத்த முறையில் இந்தியாவின் தொழில் வளர்ச்சியை அழிக்கவும் சில வகைத் தொழில்களை அனுமதிக்கவும் செய்தது. முன்னர் நிலவிய நில உடமை முறையை மாற்றியமைத்தது. ரயத்வாரி என்ற பெயரில் நிலத்தில் தனி உடமை முறையைத் தோற்றுவித்தது. வரிவசூல் என்ற தேவைக்கல்லாமல் கிராமப்புறங்களில் ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கெதிரான இயக்கங்களை ஒடுக்கும் முறையிலும் செமீன்தாரி முறையைத் தோற்றுவித்தது.

4. நாற்பத்தேழுக்குப் பிறகு இந்த நில உடமைக் கட்டமைப்பு நில சீர்திருத்தச் சட்டத்தின் விளைவாக சற்றுத் தளர்ந்தது என்பது உண்மைதான். எனினும் தகர்ந்து விடவில்லை. இந்தியாவில் சோசலிசம் என்ற திட்டம் எத்தனையோ காரணங்களினால் செயற்படவில்லை. புதிய காலனியம் பசுமைப் புரட்சியை தோற்றுவித்தது. உலக அளவில் நிறுவிக்கொள்ளும் முறையில் புதிய காலனியத்தின் செயற்பாடுகளில் மிக முக்கியமானது பசுமைப் புரட்சி என்ற இந்தத் திட்டம். இதன் கடுமையான விளைவுகளை இன்று நாம் எங்கும் பார்க்கிறோம்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி என்பது, நகரங்களைப் பெருக்கியது. புதிய முதலாளிகளைத் தோற்றுவித்தது. வங்கிகள் முதலியவற்றைப் பெருக்கியது. இப்படி எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். ஒவ்வோராண்டும் தொழில் வளர்ச்சி 7 அல்லது 8 சதம்; வேளாண்மை வளர்ச்சி என்பது 2 / 2½ சதம் மட்டும். விவசாயத் துறையில் விலைக் கட்டுப்பாடு; தொழில்துறை உற்பத்திப் பொருள்களுக்கு

விலைக்கட்டுப்பாடில்லை. வங்கிக் கடன் முதலிய வசதிகளைத் தொழில்துறை தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொழில்துறை வளர்ச்சியில் அரசுக்கு இடர்ப்பாடு அதிகம். நவீன நாகரீகம் இல்லாமல் முடியாது. கிராமப்புறங்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. கல்வி, மருத்துவம் போக்குவரத்து முதலிய எல்லா வசதிகளும் நகரத்தார்க்கு உரியவை. அரசு அதிகாரிகளுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பு. மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், தணிக்கையாளர்கள், நீதிபதிகள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் முதலியவர்களுக்குத் தொடர்ந்து வாழ்க்கை வசதிகள் மேம்பட்டன. அரசு இவர்களுக்கு ஆதரவாக இருக்கிறது.

கிராமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அன்னிய நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களான ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் முதலியவற்றை விவசாயிகள் தலையில் கட்ட வங்கிகள் கடன் கொடுத்தன. விவசாயிகள் கடனாளியானார்கள். நிலமும் நீரும் நாசமாயின. காடுகள் அழிந்தன / அழிக்கப்பட்டன. தொழில்துறை மற்றும் நகரங்களின் தேவைகளுக்காக விவசாயிகள் சுரண்டப்பட்டனர். விவசாயிகள் கடனாளிகள் ஆக்கப்பட்டனர். விவசாயிகளிடமிருந்து சுரண்டப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை மானியமெனக் கொடுத்து விவசாயிகளை இழிவுபடுத்தினர். இன்னும் எத்தனையோ மாற்றங்கள். ஏற்றுமதிக்காக உற்பத்தி என்று கூறுகிறார்கள். தொழிற்சாலைக் கழிவுகளால் நிலமும் நீர்நிலைகளும் நாசமாவதை அரசியல்வாதிகள் தடுக்கவில்லை. இத்தகைய நாசங்களைத் தொழிற்சங்கங்கள் ஒப்புக் கொள்கின்றன. நகர்ப்புறத்து இயந்திரங்களில் வேலை செய்யும் தொழிலாளிகள் நன்றாக இருக்க வேண்டும். விவசாயிகளைப் பற்றி இவர்களுக்குக் கவலையில்லை. இதைத்தான் நமக்கு வழங்கியுள்ளது இந்த முதலாளியம்.

5. இந்தியாவில் அந்நிய நிறுவனங்களின் ஊடுருவலோடு செயல்படும் முதலாளியத்தைப் பிற்போக்கான முதலாளியம் என்று சொல்வதுகூட பொருந்தாது. இதைத் தரகு முதலாளியமென்று சிலர் குறிப்பிடுகின்றனர். நவீன அறிவியல் தொழில் நுட்பங்களோடும் பெரும் மூலதனத்தோடும் இந்தியாவிற்குள் வந்து இறங்கும் முதலாளிகளோடு குறைந்த அளவு மூலதனத்தோடு கூட்டு சேர்ந்து கொண்டு இந்தியாவின் இயற்கை வளங்களையும் பெரும் தொகையினராகிய தொழிலாளிகளின் மலிவான உழைப்புத் திறனையும் சேகரித்துப் பயன்படுத்துவதன்மூலம் அன்னியர்களுக்குக் கொள்ளை லாபத்தை ஈட்டிக் கொடுத்து அதற்கான தரகைப் பெற்றுக் கொள்ளும் இவர்களைத் தரகு முதலாளிகள் என்று



குறிப்பிடுவதுகூட ஓரளவுக்கே பொருந்தும். இந்த முதலாளிகள் இந்திய மக்கள் நலம் கருதித் தொழில் செய்வதில்லை. இந்திய மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான இயற்கை வளங்களை இவர்கள் அன்னியர்களுக்கு விட்டுத் தருகிறார்கள். மக்கள் நலமோ, தேசியப் பார்வையோ இவர்களிடம் அணு அளவும் இல்லை. இந்தியாவை இவர்கள் விற்று வருகிறார்கள். இவர்கள் சார்பிலான உடன்படிக்கைகளைத்தான் அரசும் அரசியல்வாதிகளும் செய்கிறார்கள். இதற்கான சேவைக் கட்டணம் இவர்களுட்குப் பெரும் அளவில் கிடைக்கின்றது. அண்மைக் காலத்தில் இவ்வகை ஊழல்களைப் பெரும் அளவில் பார்க்கிறோம். இந்திய மக்களுக்கான தேசத்தை அவர்களிடமிருந்து பறித்து அன்னியர்களின் ஆதிக்கத்தில் இவர்கள் ஒப்படைக்கிறார்கள். இத்தகையவர்களை லூம்பன் பூர்சுவா (அதாவது பொறுக்கி முதலாளி) என்றும் இவர்களின் பொருளியலை லூம்பன் பூர்சுவா பொருளியல் என்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

நேரு காலத்தில் சோசலிசம் பற்றி நிறையவே பேசப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் முதலியவை ஏற்படுத்தப்பட்டன. கூட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. நிலச்சீர்திருத்தம் பற்றிப் பேசப்பட்டன. இந்திராகாந்தி காலத்தில் வங்கிகள் தேச உடைமையாக்கப்பட்டன. அவ்வகைப் போக்குகள் பேசப்படவில்லை. இவ்வகைத் திட்டங்களின் விளைவாக முதலாளியம் வலுப்பட்டது என்பதும் உண்மைதான். இனி வன்முறை இல்லாமலேயே சமூக மாற்றத்திற்கு வழி பிறந்து விடுமென்று நேரு மட்டுமல்ல குருசேவும் சொன்னதை இந்தியப் பொதுவுடைமையாளர்கள் நம்பினர். ரசியாவிலுள்ளும் சோசலிசமென்ற பெயரால் முதலாளியந்தான் வலுப்பெற்று வந்தது. இவ்வகை சோசலிசத்தைத் தகர்ப்பதும் எதிர்பார்க்கக் கூடியதாகவே இருந்தது. சோசலிசம் சரியான திசைவழியில் செயல்படுத்தப்பட்டிருக்குமானால் பிற்போக்கான முதலாளியம் வலுப்பெற்றிருக்க முடியாது. உலகளவில் புதிய காலனியம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்கவும் இயலாது. எல்லோருக்கும் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம், மக்கள் நாயகம், அரசதிகாரத்தில் பங்கு என்றெல்லாம் ஏற்பட்டிருக்க இயலுமானால் இன்றைய சாதி மதக் கலவரங்களுக்கு இடமிருந்திருக்காது. பார்ப்பனியமும் வலுவிழந்து போயிருக்கும்; கிராமங்களும் வளமாகவே இருந்திருக்கக் கூடும். பிற்போக்கான முதலாளியம் பெரும்பாலான மக்களின் மீது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் தொடர்ந்து திணித்து வருவதோடு ஒருசிலரிடமே பெருமளவு மூலதனம் குவிவதற்கும் இது காரணமாக இருக்கிறது. இந்தப் போக்கு தீவிரப்படுவதன் காரணமாக வேலைவாய்ப்புகள், கல்விவாய்ப்புகள்

முதலியன தொடர்ந்து குறைவதோடு சமூகப் பிரிவுகளுக்கிடையில் பிரிவுகளையும் மோதல்களையும் தோற்றுவிக்கும் அண்மைக்கால வரலாறு இதைத்தான் மெய்ப்பிக்கிறது. இந்தச் சூழலில்தான் சாதிச் சங்கங்கள் தோன்றுகின்றன. மதக் கலவரங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. அன்னியச் சக்திகளையும் அவர்களோடு ஒத்துழைக்க முதலாளிகளையும் இவர்களுக்கு அனுசரணையான அரசதிகாரத்தையும் எதிர்க்கத் திறனில்லாத நிலையிலும், இவர்களின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு இடம் கொடுத்த நிலையிலும், உண்மை அறியாத மக்கள் தமக்குள் பகைத் தீயை மூட்டிக்கொண்டு அந்த நெருப்பில் வெந்து அழிகிறார்கள். இதுதான் இன்றைய உண்மையான நிலவரம்.

6. முற்போக்கான முறையில் செயல்படும் முதலாளியம், சாதி - மதம் முதலிய சமூகக் கட்டமைப்புகளைத் தகர்த்து நொறுக்கியிருக்கும். இந்தியாவிற்கு வந்து சேர்ந்ததும் வலுப்பெற்றதுமாகிய பிற்போக்கு முதலாளியம், சாதி - மதம் முதலியவற்றோடு சமரசம் செய்து கொண்டது. சாதி மதங்களை உள்ளடக்கிய இந்திய சமூக கட்டமைப்பில் கருத்தியலும் பொருளியலும் அடங்கியுள்ளன. இதன் பொருளியல் கட்டமைப்பை இந்தியாவுக்கு வந்து சேர்ந்த முதலாளியம் ஓரளவு தகர்த்தது என்பதில் ஐயமில்லை. இந்த இடத்தில்தான் முதலாளியம் அமர்ந்தது. முழு அளவில் தகர்த்ததா இல்லையா? என்ற கேள்விக்கு இடமுண்டு. எனினும் தகர்த்தது என்பது உண்மை.

நாற்பத்தியேழுக்குப்பிறகு முதலாளியப் பொருளியல் மேலும் வலுப்பெற்றது. வேளாண்மைக்குள் ஊடுருவியது. எத்தனையோ கைவினைகளுக்குள்ளும் இயந்திரங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் நுழைந்தன. பணப்பயிர்கள் ஊக்குவிக்கப் பெற்றன. காடுகள் அழிக்கப்பட்டு, தேயிலை - காப்பி பயிரிடப்பெற்றன. கரும்பும் புகையிலையும் பணப்பயிர்கள். மருத்துவத்தில் அலோபதி. இதைப் போல கல்வி முதலியவற்றிலும் முதலாளியப் போக்குகள். மின் விசையும் எந்திரங்களும் வாழ்வில் பெரும் ஊடுருவலை நிகழ்த்தின. இத்தகைய மாற்றங்கள் வாழ்வியல் முறையைப் பெருமளவு மாற்றின. நவீன நாகரீக வளர்ச்சி புகாத இடம் எதுவுமில்லை. கட்டிடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் எல்லாவற்றினுள்ளும் முதலாளியப் போக்கு. எங்கும் பணத்தின் ஆதிக்கம். அரசதிகாரம் நுழையாத இடமில்லை. குடும்பத்திற்குள்ளும் பண ஆதிக்கம். ஆண் பெண் உறவிலும் மாறுதல்கள். இவையெல்லாம் முதலாளியத்தின் விளைவுகள். இவற்றின் வழியே முதலாளியத்தின் விளைச்சல்.



புதியதாய் வந்து சேர்ந்த முதலாளியப் பொருளியல் - அரசியல்
கலாச்சார அமைப்பு. இந்தியாவில் நிலவிய சமூக அமைப்பை முற்றா
தகர்க்கவில்லை என்பது உண்மை என்றாலும் முன்னைய சமூக அமை
அதே வடிவில் தொடர இடம் தரவில்லை. பொருளியல் கட்டமைப்
கருத்தியல் கட்டமைப்பைக் காட்டிலும் எப்பொழுதும் வலிமை மிக்க
என்பதில் ஐயமில்லை. பொருளியல் கட்டமைப்பு தன் தேவைக்கொ
முறையில் கருத்தியல் கட்டமைப்பை மாற்றி அமைத்துக்கொள்ளு
உடைமைமுறையும் அரசதிகாரமும் கைகோத்துக் கொண்ட நிலைமி
கருத்தியல் தனித்தியங்காது. கருத்தியல் தனித்தியங்கி உடை
முறையையும் அரசு அதிகாரத்தையும் தன் வசப்படுத்துவது சாத்தியமில்
முதலாளியத்தின் பொருளியல் மற்றும் அரசியல் அமைப்புகள் த
இடங்களில் பார்ப்பனர் அமர்ந்து கொண்டனர். முதலாளிய வளர்ச்சிக்கு
கல்விமுறை இன்றியமையாதது. இங்கும் பார்ப்பனர்க்கு இடம் கிடைத்த
வேதம் ஓதும் வாழ்க்கை முறையைப் பார்ப்பனர் வீட்டளவில் வைத்து
கொண்டனர். முதலாளியம் சாதிமுறையைத் தன் வசதிக்கொ
முறையில் பயன்படுத்திக் கொள்ளத்தான் செய்தது. நாயுடு த
தொழிற்சாலையில் நாயக்கர்களையே நியமனம் செய்து கொள்வார். நா
தன் லாபத்தை விட்டுக் கொடுக்கமாட்டார். சாதி இங்கு நுழைவதை அ
அனுமதிக்கமாட்டார். தன் தொழிற்சாலைகளில் கூலிகளாக நாய்க்கர்க
அமர்த்திக் கொள்வது தன் லாபப் பெருக்கத்திற்கு வசதியானது. த
சொந்த சாதியினர் தனக்கெதிராகப் போராட மாட்டார்கள். அதைப் போ
மதத்தையும் பயன்படுத்திக் கொள்ள இயலும். இப்படித்தான் சாதி
மதமும் இன்று தக்கவைக்கப்பட்டன.

முதலாளியம் என்ற பொருளியல் கட்டமைப்புத்தான், சாதியை
மதத்தையோ தகர்க்கவும் தக்கவைத்துக் கொள்ளவும் செய்யும். சாதி
மதமோ முதலாளியப் பொருளியலின் அமைப்பைத் தோற்றுவிக்கவில்
முதலாளியத்தின் வளர்ச்சிக்கு சாதிமதங்கள் தடையாக இருக்கலா
அல்லது ஒத்துழைக்கலாம். முதலாளிய வளர்ச்சியை இவற்றால் தடுத்
நிறுத்த முடியாது. முதலாளி இருக்கிற இடத்தில் பார்ப்பனன் இருந்தா
வளர்ச்சி வேகம் சற்றுக் கூடுதலாக இருக்கக் கூடும். நாயுடு அல்ல
கவுண்டர் நாளடைவில் இந்த வளர்ச்சி வேகத்தை எட்டவும் முடியு
இலாபத்திற்கு அல்லது பணத்திற்குச் சாதி தெரியாது, மதம் தெரியா
இலாப வேட்டை என்பது பிசாசுத்தனமான ஒரு பெரும் சக்தி. இதுதா
இயற்கையையும் மனிதர்களையும் நாசப்படுத்துகிறது.

பிற்போக்கு முதலாளியம் தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்காக எதையும் துணிந்து செய்யும். சாதி மதங்களை உச்ச அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளும். மதவாதிகளைத் தனக்கு நெருக்கமாக அமர்த்திக் கொள்ளும். கோயில் திருவிழாக்கள் / ஆர்ப்பாட்டங்களை ஊக்குவிக்கும். பெரிய கோவில்களுக்கு மகத்துவம் கற்பிக்கும். புதிய புதிய மதபீடங்களை சன்னியாசிகளைத் தோற்றுவிக்கும். மக்களின் மதியை மயக்கும். இப்படிச் செய்வதன் மூலம் தன் பிசாசுத் தன்மையை மறைத்துக் கொள்ளும். புரோகிதர்களையும், மந்திரவாதிகளையும், சோதிடர்களையும் ஊக்குவிக்கும். இப்படியெல்லாம் செய்யாமல் இந்தப் பிற்போக்கு முதலாளியம் தன்னை தக்கவைத்துக் கொள்ள முடியாது.

இந்தியாவில் இந்த பிற்போக்கு முதலாளியம் தான் மக்கள் மத்தியில் மத உணர்வுகளைக் கிளப்பித் தன் ஆதிக்க அரசியலை வலுப்படுத்திக் கொள்கிறது. இதற்குப் பெயர்தான் இந்துத்துவம்.

இந்துத்துவம் இன்னும் பழையகால இந்தியாவைக் கனவு காண்கிறது. சோசலிசம் இதற்கு உவப்பாக இல்லை. சாதி அமைப்பை தக்கவைப்பதன்மூலமும் மத குருமார்களைப் பெருமைப்படுத்துவதன் மூலமும் பொருளியல் முதலியவற்றோடு கூடிய ஆதிக்க அரசியலை முற்றாகத் தாங்குவதன்மூலமே இந்துத்துவ சக்திகள் ஆதிக்கம் பெறுகின்றன. வேலைவாய்ப்பு குறைந்த சமூக சூழலில்தான் இஸ்லாமியர்களை ஒதுக்க வேண்டும் / ஒழிக்க வேண்டும் என்று இவர்கள் கூறுகிறார்கள். அயோத்தியில் இராமனை மீண்டும் நிறுவ வேண்டுமென்று இவர்கள் சொல்வதின் பொருள், ஆதிக்க அரசியலை நிறுவுவது என்பதுதான். இந்த மதவாத சக்திகளுக்குப் பின்பலமாக இருப்பவர்கள். முதல் வரிசையில் வணிகர்கள்; இவர்களுக்குப் பின்புறமாக தொழில் அதிபர்கள். இந்தியாவில் பாசிசம் என்ற போக்கு இன்னும் ஆதிக்கத்திற்கு வரவில்லை. அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று ஒழித்தது பாசிசம். அரசு என்ற கட்டமைப்பை முழு அளவில் தனக்கு வசப்படுத்திக் கொண்டது பாசிசம். இந்துத்துவம் இப்படி இந்தியாவில் அரசு கட்டமைப்பை இன்னும் முழு அளவில் வசப்படுத்திக் கொள்ளவில்லை. இந்துத்துவம் என்பதற்கு பாசிசம் என்றோ பார்ப்பனியம் என்றோ மாற்றுப் பெயர் சொல்லமுடியாது.

அன்னிய நிறுவனங்களின் ஊடுருவலோடு இந்தியாவில் வலுப்பெற்றுவரும் முதலாளியத்தை முன்னர் மறுத்த இந்துத்துவம் இப்பொழுது ஏற்பது எதைக் காண்பிக்கிறது? முதலாளியத்தைத் தன்னால்



கட்டுப்படுத்த இயலாது என்பதைத்தானே இது காட்டுகிறது? என்னதா
சுதேசியம் என்று பேசினாலும் இந்துத்துவம் தொடர்ந்து அதை
கைவிடுகிறது. பார்ப்பனர் முதலிய எல்லாச் சாதியின
முதலாளியத்தோடு ஒத்துழைக்கத்தான் செய்கின்றனர். முதலாள
நிறுவனங்களில் வேலை வாய்ப்பிற்காக இவர்கள் அலைகின்றனர். பண
தான் இவர்களின் தெய்வம். வாழ்வில் பணத்திற்காக இவர்கள் எதை
கைக்கொள்வார்கள் அல்லது கைவிடுவார்கள். சாதியை
கைவிடுவதற்கும் இவர்கள் தயங்கமாட்டார்கள். இதைப்போல இராமனை
இவர்கள் பணத்திற்காக விற்றுவிடுவார்கள். இவர்கள் வழியே
பிற்போக்கு முதலாளியத்தின் வெற்றியைத்தான் நாம் காண்கிறோ
கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளுக்கான விடைக்
இப்பொழுது நெருக்கமாக வந்திருக்கிறோம். இந்தியாவின் பிற்போக்கா
முதலாளியத்தை இந்தியாவில் நெடுங்காலமாக நிலவி வருவதா
சொல்லப்படும் சாதியக் கட்டமைப்பு / பார்ப்பனியம் / இந்துத்து
தனக்குள் செரித்துக் கொண்டிருக்கிறதா? அல்லது இந்தியாவின் சாதி
கட்டமைப்பை இந்தியாவில் வலுப்பட்டுவரும் பிற்போக்கு முதலாளியம் த
தேவைகளுக்கொத்த முறையில் செரித்துக் கொண்டிருக்கிறதா? இத
நாம் கூறும் பதில் நம்மைப் பொறுத்தவரையில் தெளிவாக இருக்கிற
பிற்போக்கு முதலாளியம்தான் சாதியக் கட்டமைப்பை, தனக்கொ
முறையில் உள்வாங்கிச் செரித்துக் கொண்டிருக்கிறது. இந்தியா
நெடுங்காலம் நிலவியதாகச் சொல்லப்படும் சாதியக் கட்டமைப்புக் குறி
நாம் இங்கு ஆராயவில்லை. நமது ஆய்வு முறை மார்க்சியத்திற்கு ஒ
ஆய்வு முறை. இதை மறுப்பவர்களின் ஆய்வு முறை. பெரியா
ஆய்வுமுறை. பெரியாரியம், பார்ப்பனியம் என்ற கருத்திய
முதன்மைப்படுத்துகிறது. மார்க்சியம், பொருளியலுக்கு அழுத்
தருகிறது. பொருளியலுக்கு மட்டுமே மார்க்சியம் அழுத்தம் தருவதா
சொல்ல முடியாது. பொருளியலோடு பிற கூறுகளையும் கருத்
கொள்வது தான் மார்க்சியம். பார்ப்பனியம் என்ற கருத்தியலை
தகர்ப்பதன்மூலம் பொருளியல் மாற்றத்தைக் கொண்டுவந்து விடமுடியா
பொருளியல் முதலிய அனைத்துச் சக்திகளையும் உள்ளடக்கிய ஒன்ை
பார்ப்பனியம் என்ற பெயரால் அழைக்க முடியாது. பார்ப்பனியத்திற்
பாசிசத்தை முழு அளவில் கண்டெடுக்க முடியாது. இப்படியெல்
தத்துவத்தில் குழப்பம் செய்வது உண்மையைக் காண்பதற்
தடையாகிவிடும். அன்னிய நிறுவனங்களின் ஊடுருவலோடு தன்ன
வலுப்படுத்திக் கொள்கிற பிற்போக்கு முதலாளியத்தை உள்வாங்
கொண்டவர்களும் இப்படியெல்லாம் பேசமுடியும். திராவிட இயக்கத்தி
பேசுவதை இப்படித்தான் நாம் பொருள்படுத்த முடியும். தமிழ்த் தேசி

பேசுபவர் இத்தகைய பார்வையைத் தமக்குள்ளிருந்து களைந்து கொள்ளத்தான் வேண்டும். பார்ப்பனியம் என்பது என்னவென்று நிர்ணயம் செய்வதிலும் விவாதத்திற்கு இடமுண்டு. சாதியையும் வர்க்கத்தையும் நாம் ஒன்றாகக் கருத வேண்டியதில்லை. இரண்டும் ஒன்றையொன்று ஊடுருவி இருக்கின்றன. இந்துத்துவம் என்பது ஒற்றை வடிவம் கொண்டது. இந்து மதம் என்பது ஒரு தொகுப்பு - முரண்பாடுகள் கொண்ட ஒரு தொகுப்பு. இதற்கு ஒற்றை முகம் இல்லை. பன்முகப் பரிமாணங்கள் கொண்டது இந்துமதம். இந்துமதமும் இந்துத்துவமும் ஒன்றல்ல. இந்துமதத்தின் பன்முகப் பரிமாணங்களை அழித்து அதற்கு ஒற்றை முகத்தைத் தருவது இந்துத்துவம். இந்துத்துவம் என்பது மதவாத அரசியல். இதை மதம் என்று பார்ப்பதைவிட அரசியல் என்று பார்த்தால்தான் இதன் உள்ளியக்கம் நமக்குப் புலப்படும்.

பிற்போக்கு முதலாளியத்திற்கு எதிராகச் செயல்படுவதன் மூலம்தான் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்ல இயலும். தமிழகத்தின் இயற்கை நலன்களை - வேளாண்மையை நாசமாக்குவோருக்கு எதிராகவும் மேற்கத்திய நாகரீகத்திற்கு நம்மைப் பலியிடுவதாகிய நவீன நாகரிகத்திற்கு எதிராகச் செயல்படுவதன் மூலமும், அன்னிய மூலதனத்தையும் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தும் முறையில் செயல்படும் பிற்போக்கு முதலாளியத்தை எதிர்ப்பதன் மூலமும்தான் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்ல முடியும். நமது கருத்தியலின் மையமாக சமதருமத்தை உறுதிப்படுத்த வேண்டும். நமக்குள்ளும் பாசிசம் தன் நச்சு விதைகளைக் கொண்டிருக்க முடியும் என்பது பற்றிய கவனமும் நமக்குத் தேவை. உலகளவிலான ஆதிக்கங்களுக்கு எதிராக நம்மை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். சாதிய அடிமைத் தளைகளிலிருந்து தம்மை விடுத்துக் கொள்வதற்கான தனிப் போராட்டங்களில் பட்டியல் சாதியினர் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் ஒட்டு மொத்தமான சமூக விடுதலைக்கான போராட்டத்தோடும் தம்மை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். சாதி இழிவு கூடாது என்பது போலவே கூலி அடிமைத்தனமும் கூடாது. தேசிய இன விடுதலையிலிருந்து சாதி ஒழிப்பிற்கானப் போராட்டங்களை தனிமைப் படுத்துவது சாத்தியமில்லை. ஒட்டுமொத்தமான மனித விடுதலை நமது இறுதி இலக்கு. எத்தனையோ சிக்கல்கள். விடுதலைக்கான நேர்பாதை இல்லை. வளைந்த பாதைகளில் வழி தவறவும் கூடும். கவனமாகவே நாம் முன் செல்லவேண்டும்.



## பகுதி 3

## மனிதன் - வரலாறு

விலங்குகள், பறவைகள் முதலியவற்றிலிருந்து மனித வாழ்க்கை எவ்வாறு வேறுபடுகிறது என்பது ஒரு முக்கியமான கேள்வி. மொழி மனிதனை வேறுபடுத்துகிறது என்பது ஒரு கூற்று. விலங்கு முதலியனவற்றிற்கும் ஏதோ ஒரு வகையில் மொழி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் மொழி வளர்ச்சியில் மனிதனின் வளர்ச்சியை விலங்குகள் எட்ட முடியாது. இதைப்போல வேறு வகையிலும் மனிதனை வேறுபடுத்தி, மனிதனுக்குரிய தனி அடையாளம் கண்டு சொல்ல வேண்டும். மனிதனுக்குத்தான் வாழ்வில் இலட்சியங்கள் உண்டு. தேசம் என்று தொடங்கி எத்தனையோ இலட்சியங்கள். மனிதனுக்குத்தான் மனம் உண்டு, பகுத்தறிவு உண்டு என்றெல்லாம் சொல்லும்பொழுது குறைந்த அளவுக்கேனும் இவை விலங்குகளுக்கு இல்லையா என்ற கேள்விகள் இடையிடையே எழத்தான் செய்யும். மனிதனுக்குத்தான் தன்னுணர்வு உண்டு என்பது மனிதனின் ஓர் தனி அடையாளம். இப்படியெல்லாம் சொல்லும்பொழுது மனிதனுக்குத்தான் வரலாறு உண்டு என்பது ஒரு முக்கியமான கூற்று. வரலாறு என்பதன் அடிப்படையில் தான் மனிதனுக்குள் வந்து சேர்ந்துள்ள கலைகள், மெய்யியல் என்று தொடங்கிப் பலவற்றையும் நாம் பேசமுடியும். இவ்வகையில் தான் மனிதனின் தனி வளர்ச்சியை நாம் கண்டு கொள்ள வேண்டும். இது குறித்து சில குறிப்புகளை இங்கு தரலாம்.

சில மாதங்களுக்கு முன்பு நாளிதழில் வந்த ஒரு நிகழ்ச்சி. இதை என்னால் இன்றளவும் மறக்க முடியவில்லை. ஏதோ ஒரு திருநாளின் போது தாத்தா தன் இரண்டு பேரன்களைப் பார்க்க தன் மகன் வீட்டுக்குச் செல்கிறார். தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஒரு கடுமையான மனத்தாங்கல். பேரக்குழந்தைகளைப் பார்க்க முடியாமல் தாத்தாவை மகன் தடுத்து விடுகிறான். பார்க்க இயலாத நிலையில் தாத்தா தன் வீட்டுக்குத் திரும்புகிறார். இப்பொழுது ஒரு நிமிடம் அங்கு என்ன நடந்திருக்கும் என்று சிந்திக்குமாறு நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டப் பெரியவர் தூக்கில் தொங்கி விடுகிறார். இப்படி நிகழ்வதை நாம் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டோம். எனினும் இப்படி நிகழ்ந்துவிட்டது.

தன் பேரக்குழந்தைகளை இவரால் பார்க்க முடியவில்லை. அதுவும் ஒரு திருநாளின் போது. எத்தனையோ ஆசையோடு எது எதையோ இவர் வாங்கிச் சென்றிருப்பார். மகன் தன்னோடு பேசவில்லை என்றாலும் பேரக்குழந்தைகளைப் பார்த்துப் பேசவேண்டும். இதைச் செய்வதன் மூலம் தான் அவர் தாத்தாவாக இருக்க முடியும். மறுக்கப்பட்ட நிலையில் இவர் இப்போது தாத்தாவாக இல்லை. மனிதனாக இல்லை. இனி உயிர்வாழ்வதற்கு அர்த்தமில்லை. அன்புதான் மனித வாழ்வுக்கான அர்த்தம். தன் மகன் இந்த அன்பைத் தனக்கு மறுத்துவிட்டான். இனி தன்னால் உயிர்வாழ முடியாது.

எல்லாச் சமயங்களிலும் இப்படி எல்லோரும் செய்வதில்லை. எனினும் இப்படி நேரும் போதெல்லாம் மனிதன் தனக்குள் செத்துப் போகிறான். இப்படி மனிதனுக்கு எத்தனையோ மரணங்கள் நேர்ந்த நிலையில் தான் மனிதன் தனக்குள் இறுகிக் கோபங்களோடு - வேதனைகளோடு வாழ்கிறான். இப்படி உடம்பை மட்டும் காப்பாற்றி வாழ்கிற வாழ்க்கை மனிதனுக்கு நிறைவு தருவதில்லை. வரலாற்றிற்குள் வந்து விட்டவன் மனிதன். தனக்குள்ளும் புறமும் நிறைவோடு வாழவேண்டும்.

நேருவின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி. தன் சுயசரிதையில் இந்த நிகழ்ச்சியை நேரு விவரிக்கிறார். கமலாவோடு திருமணம் முடிந்த நிலையில் தன் நண்பர்களோடு மானசரோவரைப் பார்க்கச் செல்லுகிறார் நேரு. பனிப்பாறைகள் சூழ்ந்த மலைப்பாதைகளில் செல்ல வேண்டும். காலில் ஆணி அடித்த கனமான பாதுகைகளை அணிந்து செல்ல வேண்டும். மலைச் சரிவில் ஏற, இறங்க கயிற்றோடு தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். இப்படித்தான் நேரு தன் நண்பர்களோடு சென்றார்.

திடீரென பனிப்பாறை உடைபட ஆழம் தெரியாத ஒரு பெரும் குழியில் நேரு விழுகிறார். சில நிமிடங்கள் நேரு அந்தரத்தில் தொங்குகிறார். மனத்தில் எத்தனையோ எண்ண அலைகள் புரளுகின்றன. நேரு மேலே இழுக்கப்பட்டார். சாவிலிருந்து நேரு தப்பித்து விட்டார். எனினும் உணர்வுக் கொந்தளிப்பில் பல மணி நேரம் அவர் இருந்திருக்க வேண்டும். நேரு முடிவு செய்து கொள்கிறார். இனிச் சொந்த நலன்களுக்காகத் தான் வாழமுடியாது. தன்னைப் பொருத்தவரை தனக்கான சொந்த வாழ்க்கை முடிந்துவிட்டது. இனி உலகத்திற்காகத் தான் வாழவேண்டும்.



அப்படித்தான் நேரு வாழ்ந்தாரா? என்ற கேள்வி முக்கியம் இல்ல
நேருவுக்குள் அதுநாள் வரை வளர்ந்து கொண்டிருந்த இந்தப் பொது
உணர்வு இப்பொழுது முழுமையாக விழித்துக் கொள்கிறது. மனித
இயற்கையோடும் சமூகத்தோடும் வாழ்கிறான் - வளர்கிறா
மனிதனாகிறான். வரலாற்றின் வழியேதான் இந்த உறவு ஏற்பட்டது. நே
இயற்கை அறிவியல் மட்டுமல்ல சமூக வரலாறும் கற்றவர். கலைக
கற்றவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உலக அளவில் வளர்
பெற்ற வரலாற்றுப் போக்குகள் கற்றவர். இவையெல்லாம் ஒருங்கு சு
நேருவை இந்த முடிவுக்குத் தள்ளி இருக்கிறது. இப்படித்தான் வரலாற்றி
நாம் மனிதராகிறோம். வரலாறு நமக்குத் தந்த வாய்ப்புக்களைத் த
சொந்த வாழ்வுக்காகப் பயன்படுத்தி இன்புறுவதென்பது மக்கள்
பெரும்பான்மையினர் தமக்கு தேர்ந்து கொள்கிற வாழ்க்கை. நேருவை
போல ஒருசிலர் மட்டுமே வரலாறு தந்த வாய்ப்புக்கள் வழியேதான் தனக்கு
எல்லா உள்ளதங்களும் இணைந்திருக்கின்றன என்பதைப் புரிந்
கொண்டு தன்னலத்திற்கான வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளா
பொதுநல உணர்வோடு வாழ்வதைத் தேர்ந்து கொள்கின்றனர்.

இப்படி எத்தனையோ மனிதர்களை - அறிவாளிகளைக்
கலைஞர்களை - அறிவியலறிஞரை நாம் குறிப்பிட்டுச் சொல்ல முடிய
இருபதாயிரம் / முப்பதாயிரம் ஆண்டுகளாக மனிதன் பல்லாயி
அனுபவங்களோடு வளர்ந்து வருகிறான். நிலத்தோடும் நீரோடு
இயற்கையோடும் வானத்தோடும் கொண்ட உறவில் இவ
தழைத்திருக்கிறான். மனித சமூகத்தில் எத்தனையோ முரண்பாடு
வழியே இவன் மேலேறி வந்திருக்கிறான். சூரியன் சந்திரன் என்
தொடங்கி ஆயிரக்கணக்கிலான பதிவுகள் இவனுக்குள் பதிந்திருக்கின்ற
பல்லாயிரமாண்டு வரலாறுகள் இவனுக்குள் பதிந்திருக்கின்றன. இவ
தனியனல்லன். தனிமனிதன் போல இவன் தோற்றம் கொண்டாலு
இவனுக்குள் வானம் வந்திருக்கின்றது. பறவைகள் பாடுகின்றன. சமூ
இவனுக்குள் இவனை வளர்த்திருக்கிறது. தனக்குள் இவன் விரி
கொண்டிருக்கிறான்.

இவன் தனியன் அல்ல. இவனுக்கு வயது ஐம்பதோ நூறோ அ
இத்தகைய உணர்வில் நிறையும் போது தான் இவன் மனிதன். இவனுக்கு
புத்தனும் ஏசுவும் வாழ்கிறார்கள். அவர்களோடு இணைந்து வாழ்கிறா
நான் யார் என்ற கேள்வியெழுப்பித் தன்னைத் தேடிச் செல்கிறபோது இ

இத்தகைய உணர்வைப் பெற முடியும். தனியனாக இவன் தன்னைக் காணமுடியாது. இவன் தனக்குள் தன் பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள் மட்டுமல்லாமல் தனக்குள் எல்லாக் காலங்களையும் உணரமுடியும். இவனுக்குள் இன்னும் அந்த ஆதி மனிதனும் இருக்கிறான்.

கடவுளைத் தோற்றுவித்த இவன் தன்னைக் கடவுளாகவும் முடியும். இப்படி உணரும் இவன் தனக்காக வாழ முடியாது. உணவில், வாழ்க்கை வசதிகளில் இவனால் இன்புற்று வாழ்ந்துவிட முடியாது. ஊருக்காக, உலகத்திற்காக இவன் தன்னை விட்டுக் கொடுப்பான். வரலாற்றுக்குள் வைத்து இவன் தன்னை உணரும்போது இவன் பெறுவது பரவச உணர்வு. உயிர்களுக்குள் இவன் கொள்வது கருணை. எல்லாவற்றோடும் இவன் இணைந்து கொள்கிறான். மனிதனைச் சுருக்கும் / குறுக்கும் / இறுகவைக்கும் சூழல்கள் இவனை அழிக்கின்றன. உணவிலும் பணத்திலும் அதிகாரத்திலும் தன்னைத் திரட்டிக் கொள்ளும்போது இவன் பெறுகிற உணர்வு இன்பமாக இருக்கலாம். ஆனால் இது தன்னலத் துய்ப்பு. இது பரவசம் இல்லை. வரலாற்று அளவில் தன்னை விரித்துக் கொள்பவனுக்கே இந்தப் பரவச உணர்வு சாத்தியப்படும். இந்த உணர்விலிருந்தே நேரு பிறக்கிறார். புத்தர் தோன்றுகிறார். உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடாது என்பதற்காக வடக்கிருந்து உயிர் துறக்கும் சமண முனிவரை இந்த உணர்வில் இருந்துதான் நாம் கண்டு கொள்ள முடியும். இவன்தான் மனிதன். இவன் எத்தனையோ குரூரங்களைச் செய்யவும் முடியும். இவனுக்குள்ளும் மனிதன் இருப்பதைச் சிரமம் எனினும் கண்டு கொள்ள முடியும். வரலாற்றின் கோணல்களிலிருந்து இத்தகையவனும் தோன்றுகிறான். திரும்பச் சொல்லலாம்: விலங்குகளிலிருந்து மனிதன் வேறுபடத்தான் செய்கிறான். விலங்குகளுக்கு இத்தகைய வாய்ப்பில்லை என்பதும் மனிதத் துயரத்தில் அடங்கும்.



# மாறிவரும் அரசியல், பண்பாடு

1. இந்தியச் சூழலில் அரசியல் அண்மைக் காலத்தில் பெருத்த மாறுதலுக்கு உட்பட்டு வருகிறது. எத்தகைய மாறுதல்கள், இவற்றிற்கு என்ன காரணங்கள் என்பனவற்றைப் பார்க்கும் முன்பு, அரசியல் என்றால் என்ன என்பது பற்றிய சில சிந்தனைகளை இங்கு முன்வைக்கலாம்.

மன்னராட்சிக் காலத்தில் அரசியல் அதிகாரம் மன்னரிடமும் அவரைச் சார்ந்தவர்களிடமும் இருந்தது என்பது தெளிவு. இந்த அரசியல் அதிகாரத்தில் மக்களுக்குப் பங்கில்லை. மேற்கத்திய உலகில் மக்களாட்சி என்ற போக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்துதான் மக்கள் சார்ந்த அரசியல் பற்றி பேசும் நிலை ஏற்பட்டது. பிரஞ்சுப் புரட்சிக்கு முன்பும் பின்பும் மக்களாட்சி என்ற கருத்தாக்கம் ஏற்பட்டு நிலைபெற்றது. சமூக ஒப்பந்தம் என்ற அடிப்படையில் அரசாக்கத்தை ரூசோ எடுத்துரைத்தார். மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே அரசு தோன்றியது என்றார் அவர். மக்கள் நலன் கருதி அரசு சில கடமைப் பொறுப்புக்களை மேற்கொள்கிறது; இதன் காரணமாக மக்கள் சில உரிமைகளை அரசுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள் என்பது ரூசோவின் கருத்து. மக்களாட்சி என்பதை அபிரகாம் லிங்கன் வரையறைக்கு உட்படுத்தும்போது மக்களால் மக்களின் நன்மைக்காக நடத்தப்படும் மக்கள் அரசு என்றார்.

மேற்குலகில் தொழிற்புரட்சியை அடுத்து சமூகத்தில் முதலாளிகளின் உற்பத்தி பெருகியது. மன்னரும் அவரைச் சார்ந்த நிலப்பிரபுக்களும் பங்கு பெறும் அரசியலில் தமக்குரிய பங்கை முதலாளிகள் கோரினர். நாளடைவில் முதலாளிகள் போர்க்கொடி உயர்த்தினர். சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற முழக்கங்களின் மூலம் மக்களைத் தம் சார்பில் திரட்டினர். மன்னராட்சி கவிழ்ந்தது. பாராளுமன்ற முறை நிறுவப்பட்டது. மக்கள் வாக்களித்து தமக்குரிய அரசைத் தேர்ந்தெடுத்தனர். இவ்வாறு ஏற்பட்டதுதான் மக்களாட்சி. மார்க்சியரின் சொற்களில் கூறுவதென்றால் இது முதலாளிய மக்களாட்சி.

மக்களின் உடன்பாட்டோடு அரசு அமைக்கப்படுகிறது. நிர்வாகம் நடைபெறுகிறது என்ற தோற்றத்திற்கு அடியில் முதலாளிகளின் நலன்களைக் காப்பதும் வளர்ப்பதுமாகிய அரசே செயல்பட்டது. சுரண்டலும் ஒடுக்குமுறையும் மக்களின் இசைவோடு தான் நடைபெறுவதாக முதலாளிகளின் அரசியல் இருந்தது. சுதந்திரம் – சமத்துவம் –

சகோதரத்துவம் என்ற குரல்கள், முதலாளிகளின் நலன்களாகிய உள்ளடக்கத்தைக் கொண்டவைகத்தான் இருந்தன. இந்த உண்மையை ஆழமாகப் புரிந்து கொண்டதன் விளைவாகத்தான் முதலாளிய அரசுக்கெதிரான அரசியல் எழுச்சி பெற்றது. 1917 அக்டோபரில் நடைபெற்ற சோசலிசப் புரட்சியின் மூலம் சோசலிச அரசியல் உலகிற்கு அறிமுகமாகியது. வரலாற்றுக் காலம் முழுவதும் தனியுடைமையும் அரசு அதிகாரமும் இணைந்தே செயல்பட்டன. அதாவது சுரண்டலும் ஒடுக்குமுறையும் இணைந்தே நிலவின. இது உடமையாதிகளின் அரசியல். அதாவது ஆதிக்க அரசியல். உடமையைப் பொதுமைப்படுத்த வேண்டும்; அரசு அதிகாரம் உண்மையில் மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதாகிய சோசலிச அரசியல், மக்களின் விடுதலை அரசியல். முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டதாகிய சோவியத் யூனியனின் சோசலிச அரசியல், மக்களின் விடுதலைக்கான அரசியலாகாது என்பதை இங்கு சுட்டுவது பொருந்தும்.

உண்மையில் மக்களாட்சி என்ற முதலாளிய அரசியல் ஒரு தனி மனிதனைக் குடிமகன் / பிரஜை என்றாக்குவதன் மூலம்தான் தன்னை நிறுவிக் கொள்கிறது. தனிமனிதனை அரசியல் அரங்கிற்குள் கொண்டு வருவதாகவும் அரசு அதிகாரத்தை அவனோடு பகிர்ந்து கொள்வதாகவும் கூறிக் கொண்டே முதலாளிய அரசியல், மக்கள் வாழ்வுக்கு ஆதாரமான அனைத்துக் களங்களையும் தன் அதிகார வரம்பிற்குள் இழுத்துக் கொள்கிறது. மெல்லமெல்ல நிலம், ஆறு, கடல், வானம், காடுகள் ஆகியவற்றில் தனக்கு அடிப்படையான முதலுரிமை உண்டென்பதை முதலாளிய அரசு நிறுவுகிறது. தனிநபர் என்ற முறையில் இவற்றை அனுபவிக்கலாம். ஆனால் தேவைப்படும்போது அரசு இந்த உடமைகளை எடுத்துக் கொள்ளும். அனைவருக்கும் கல்வி, மருத்துவம், சுகாதாரம், வேலை வாய்ப்பு, கருத்துக்கான உரிமை முதலியவை உண்டென்ற கொள்கை அறிவிப்பைச் செய்து கொண்டே, முதலாளிய / உடமை நலன்களுக்குத் தேவையான எத்தகைய கல்வியை, மருத்துவம் மற்றும் தொழில்முறையை மக்களுக்குத் தருவது மற்றும் அனுமதிப்பது என்பதில் மிகுந்த எச்சரிக்கையோடு அரசு செயல்படுகிறது. மக்கள் ஆயுதம் தரிக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டே தன்னை ஆயுதபாணியாக்கிக் கொள்கிறது. கொலை முதலிய வன்முறைகளில் மக்கள் ஈடுபடக்கூடாது என்று சொல்லிக்கொண்டே கொலை முதலிய வன்முறைகளில் அரசு ஈடுபடுகிறது. சட்டத்துக்கு முன் எல்லோரும் சமம் என்று சொல்லிக் கொண்டே அரசு ஊழியர் முதற்கொண்டு அரசு முதலிய அதிகாரப்



பீடங்களில் உள்ளவர்களின் நலன்களை முதன்மைப்படுத்துகிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு வாக்கு என்று சொல்லிக் கொண்டே சிலருக்கு அதிகப்படியான வாக்குகளைத் தருகிறது. திருடுவது குற்றம் என்று சட்டம் செய்து வைத்து, தொழிலாளர்களைச் சுரண்டுதல் முதலிய முதலாளிய வணிகமுறைகளுக்கு ஆதரவு தந்து அவர்களின் செல்வக் குவிப்புக்கு அரசு அங்கீகாரம் தருகிறது. ரயில்வே, தபால், தந்தி, செய்தி தொடர்பு, போக்குவரத்து முதலிய வசதிகளும் வாய்ப்புகளும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவை என்று சொல்லி இவற்றின் ஆக்கத்திற்கு தேவையான வரி முதலியவற்றை மக்களிடமிருந்து திரட்டி, இவற்றை முற்றிலும் வணிகர்கள், முதலாளிகள், அரசு அதிகாரிகள் ஆகியவர்களிடம் ஒப்படைக்கிறது. சுருக்கமாய்ச் சொன்னால் தனி மனிதர்களை இவ்வாறெல்லாம் செய்து குடிமக்களாக்கிவிட்டு தனது அதிகாரத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது அரசு. அதாவது தனிஉடமை மற்றும் அரசு அதிகாரத்தின் எல்லைக்கு வெளியில் தூக்கப்பட்டவனாகிய தனிமனிதன், தூக்கப்பட்ட நிலையில் தனிஉடமைக்கும், அரசு அதிகாரத்திற்கும் தொடர்ந்து சேவை செய்தாக வேண்டும். இவ்வகையில் இவன் குடிமகன் / பிரஜை.

2. இந்தியாவை ஆக்கிரமித்த கிழக்கிந்தியக் கம்பனியின் ஆட்சி 1857– விடுதலைப் போராட்டத்திற்குப் பிறகு முடிவுக்கு வந்தது. பிரிட்டிஷ் அரசின் நேரடி நிர்வாகத்திற்குள் இந்தியா இடம் பெற்றது. பிரிட்டனில் நிலவிய மக்களாட்சி என்ற அரசியலை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசு செயல்படுத்தவில்லை. பிரிட்டிஷ் அரசுக்கெதிரான இந்திய மக்களின் எழுச்சி பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டது. விடுதலைப் போராட்டம் போராயக் கட்சியின் தலைமையில் உருவாயிற்று. மேற்கத்திய கல்வி மற்றும் தொடர்பு காரணமாகவே சுதந்திரம் – சமத்துவம் முதலிய கோட்பாடுகள் இங்கு அறிமுகமாயின. பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிரான அரசியல் இயக்கத்தில் மக்கள் உள்வாங்கப்பட்டனர். இந்திய மக்களுக்கு அரசியலில் பயிற்சி தேவை என்று சொல்லிக்கொண்டு உள்ளாட்சி நிர்வாகம், மாநில மத்திய அரசு நிர்வாகம் ஆகியவற்றில் தவிர்க்க இயலாமல் மக்களின் சில பேராளர்களுக்கு பிரிட்டிஷ் அரசு இடமளித்தது.

இந்த வரலாறு 1947–ல் ஒரு கட்டத்தில் முடிவுக்கு வந்தது. 1950இல் இந்தியர்களாலேயே உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்தது. இந்தியா மதச்சார்பற்ற குடியரசு ஆயிற்று. முதலில் சோசலிச பாணி என்று தொடங்கிப் பிறகு சோசலிசம் என்று அறிவித்தனர். இந்தி

மக்களுக்கு வாக்குரிமை, தேர்தல், பாராளுமன்ற நடைமுறை, அமைச்சரவை, பிரதமர் மற்றும் முதலமைச்சரின் தலைமை, மத்தியில் குடியரசுத் தலைவர், மாநிலங்களில் ஆளுநர் பொறுப்புக்கள், அரசைப் பொறுத்தவரை மதச்சார்பின்மை, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான அதிகாரப் பிரிவினை, இந்தியாவைத் தொழில் மயப்படுத்த வேண்டும் என்ற முறையில் பொதுத்துறைக்கு முதன்மை, அதேசமயம் தனியார் துறை புறக்கணிக்கப்படாமை, மக்களுக்குக் கருத்துரிமை, பேச்சுரிமை, சங்கங்களை உருவாக்குவதற்கான உரிமை, எங்கும் இடம் பெயரவும் தொழில் செய்யவும் உரிமை ஆகியவை வழங்கப்பட்டன. கிராமிய மற்றும் சிறு தொழில்களுக்கு அரசின் ஆதரவு, கட்டாயக் கல்வி, மதுவிலக்கு முதலியனவும் அரசின் லட்சியங்கள், சட்டமியற்றுதலையும் நீதி நிர்வாகத்தையும் தனித்தனியே பிரித்தனர்.

இத்தகைய கூறுகளை உள்ளடக்கியதாக இந்திய அரசியல் உருவாயிற்று. அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே சோசலிசம் என்ற கருத்தாக்கம் இடம்பெற்றது. மத்திய அரசுக்குக் கூடுதலான அதிகாரம் என்பதை உள்ளடக்கிக் கூட்டாட்சி என்ற கோட்பாடு பேசப்பட்டது. கம்யூனிசத்திற்கும் முதலாளியத்திற்கும் இடைப்பட்ட பொருளியல் அமைப்புதான் இந்தியாவுக்கேற்றது என்று தலைவர்கள் நெறிவகுத்தனர். இந்தியத் தொழில்களின் வளர்ச்சி கருதி அன்னியர்களின் மூலதனத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. மக்களுக்கு கல்வி, சுகாதாரம், மருத்துவம் வேலைவாய்ப்பு, ஓய்வு ஊதியம் முதலிய திட்டங்கள் மக்கள் நல அரசு என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டன. இந்திய மக்களின் நலன்களுக்காகவே இத்தகைய திட்டங்கள் செயல்படுவதாக நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது.

நாற்பதாண்டுகள் கழிந்த நிலையில் இந்திய அரசியலரங்கின் அனுபவங்களை ஒரு மறுபரிசீலனைக்கு உட்படுத்திப் பார்க்கிறோம். வங்கிகள் தேசஉடமையாக்கப்பட்டன. ஆனால் வங்கிகள் மூலம் பயன்பெற்றவர்கள் இந்திய முதலாளிகளே. நிலச்சீர்திருத்தச் சட்டம் அரைகுறையாகவேனும் இயற்றப்பட்டது. ஆனால் இச்சட்டம் இரண்டொரு மாநிலங்களைத் தவிர பிற அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைக்கு வரவில்லை. மைய அரசின் அதிகாரம் தொடர்ந்து அதிகரித்தது. மாநகராட்சி என்ற அளவுக்கு மாநிலங்கள் குறுக்கப்பட்டன. இந்தியாவில் கூட்டாட்சிக்கு இடமில்லை. நெருக்கடி நிலை என்பதைப் பிரகடனப்படுத்தி மைய அரசு மாபெரும் கொடுங்கோன்மையைச் செயல்படுத்த முடியும்



என்பது மெய்ப்பிக்கப்பட்டது. மக்கள் இயக்கங்களுக்கு எதிரான மிசா, த
முதலிய சட்டங்களை அரசு செயல்படுத்த முடியும். அரசிய
அதிகாரத்திற்குள் இடம் பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற வெறியி
அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் அமைந்தன. தேர்தலில் த
சக்திக்கேற்றபடி ஒவ்வொரு கட்சியும் ஊழலைப் புகுத்தியது. மக்க
நலத்திட்டங்கள் அரசு மற்றும் ஆட்சியில் உள்ள கட்சியின் தேர்த
நோக்கங்களுக்கேற்றவாறு வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட
மதுவிலக்கு கைவிடப்பட்டது. பன்னாட்டு நிதி நிறுவனம் இந்தியாவி
பொருளியல் நிர்வாகத்திற்குள் நுழைந்தது. போபார்ஸ் தொடங்கி மாபெரு
ஊழல்களுக்கு இந்திய அரசு இடமளித்தது. சமூக அமைப்பு மற்று
அரசமைப்பை மாற்றியாக வேண்டுமென்ற தீவிர நோக்கத்தோடு உருவா
மக்கள் இயக்கங்கள் குரூரமான முறையில் அடக்கப்பட்டன. இராணுவ
பேரளவில் வலுப்படுத்தப்பட்டது. அரசு நிர்வாகம் பல மடங்கு தன்னை
பெருக்கிக் கொண்டது. இந்திய மக்களைத் தின்னும் அமைப்பாக அர
நிர்வாகம் மாறியது. நுகர்வியம் என்ற நெறி ஊக்குவிக்கப்பட்ட
அடிப்படைத் தொழில்களை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற நோக்கி
மூலதனம் ஈடுபடுத்தப்படுவதற்கு மாறாக, நுகர்வுப் பொருட்கள் உற்பத்திமி
அதிகப்படியான மூலதனம் இடப்பட்டது. மக்கள் வாழ்வில் ஊழல் நிரந்தர
ஆயிற்று. மத்திய வர்க்கம் பெருகியது மட்டுமல்லாமல் அரசு மற்று
முதலாளியப் போக்குகளை உள்வாங்கிக் கொண்டதாக மாறியத
பசுமைப்புரட்சி இந்தியாவில் ஒரு சில நன்மைகளோடு பல மடங்
தீமைகளை ஏற்படுத்தியது. சோசலிசம் என்ற நோக்கு மெல்ல மெல்
கைவிடப்பட்டது. மேற்கத்திய நவீன அறிவியல் - தொழில் நுட்பங்கள
இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இந்திய மக்கள் வாழ்வி
மேம்பாடு சாத்தியமில்லை என்று தலைவர்கள் கூறினார்கள். இந்
நோக்கில் அன்னிய மூலதனத்தை வரவேற்றனர். இதற்கு ஏற்றவா
கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து குறைத்தனர். சோவியத் ஒன்றியத்தி
தகர்வு இவர்களுக்கு எல்லாம் மாபெரும் வாய்ப்பாயிற்று. இந்தியாவி
அரசியலமைப்பை இவ்வாறு உள்ளிருந்தே சீர்குலைத்து, மக்களி
சக்திகளை முடமாக்கிய நிலையில் இனி எதுவும் செய்யலாம் என்ற போக்
குறிப்பாக 90-களில் வலுப்பெற்று வருகிறது. இது நம் அண்மைக் காலத்
அரசியல். முன்னைய அரசியல் நடைமுறையிலிருந்து இந்த அண்மை
காலப் போக்கு பெருமளவில் மாறுபட்டது. மாறிவரும் இந்த அரசிய
பண்பாட்டின் முக்கிய கூறுகளை இனித் தொகுத்துக் கொள்ளலாம்.

3. இந்தியாவை உலகின் பொருளியல் அமைப்போ

இணைக்கவேண்டும் என்ற நோக்கிலான சந்தைப் பொருளாதாரம் தான் இன்றைய இந்திய அரசியலின் அடிப்படைப் போக்காக அமைந்துள்ளது. சோசலிசம் நமக்குத் தேவை இல்லை. பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்களைக் கலைத்து தனியார்மயப்படுத்த வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களின் நிதிமூலதனம் இந்தியாவிற்குள் நுழைவதற்கான தடைகளை முழுமையாக அகற்றிவிட வேண்டும். ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் முறையில் இந்தியாவில் வேளாண்மை, தொழில்துறை ஆகியவற்றை மாற்றி அமைக்க வேண்டும். மின் உற்பத்தி, சுரங்கத்தொழில், தொலைத் தொடர்புகள், வங்கி, காப்பீடு, போக்குவரத்து முதலிய பல துறைகளையும் தனியாருக்குத் திறந்துவிட வேண்டும். முதலாளிகளிடம் மூலதனம் குவிந்தால் மட்டுமே தொழில் வளர்ச்சி சாத்தியம். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்ய வேண்டும். கணினி, உயிரித் தொழில் நுட்பம் முதலிய நவீன அறிவியல் போக்குகளை ஊக்குவிக்க வேண்டும். பத்திரங்கள் மூலம் நிதி மூலதனத்தைத் திரட்ட முடியும். மக்களின் கல்வி, சுகாதாரம், மருத்துவம் முதலிய தேவைகளை இனி சந்தையே தீர்மானிக்கட்டும். மானியங்களைக் குறைத்தாக வேண்டும். தொழிற்சங்க சட்டங்கள் முதலியவை பொருளியல் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கமுடியாது. காடுகள், நிலங்கள், ஆறு குளங்கள் கடல்களாகியவை மட்டுமல்லாமல் மக்களின் உழைப்புத்திறனும் இனி மூலதனத்திற்குத் தான் சொந்தம். உலகில் எங்கும் சென்று தன்னை நிலைநிறுத்தக்கூடிய பன்னாட்டு நிறுவனங்களின் நிதிமூலதனத்திற்கு இவை சொந்தம். 'காட்' உடன்படிக்கையை இந்தியா தவிர்க்க வேண்டும்.

இப்படித்தான் சந்தைப் பொருளாதாரம் என்ற அரசியல், இந்தியாவில் மக்கள்வாழ்வுக்கான ஆதாரக் களன்களனைத்தையும் இப்போது ஆக்கிரமித்து வருகிறது. இந்திய முதலாளிகள் அரசின் ஆதரவோடு ஏகாதிபத்திய நாட்டு முதலாளிகளோடு கைகோர்த்துக் கொள்கிறார்கள். இந்தியாவின் இயற்கை வளங்களை அன்னிய நாடுகளுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதில் தொடங்கி இந்தியா தன் சுதந்திரத்தை முழு அளவில் விட்டுக்கொடுக்கும் நிலை தோன்றியிருக்கிறது. முதலாளிகளின் நலன்களை முழு அளவில் நிறைவேற்றும் நோக்கில்தான் இந்தியாவில் கூட்டாட்சி முறையும் சோசலிசம் நோக்கிய செயற்பாடுகளும் கைவிடப்பட்டன. மூலதனத்தின் நலன்களை முற்றிலும் உள்வாங்கிக் கொண்டதாக இந்திய அரசியல் கட்சிகளின் போக்குகள் உருவாகியிருக்கின்றன. இந்திய மக்களை அடிமைப்படுத்துவது இந்த அரசியல். இந்தியாவின் அரசியல் பொருளியல் ஆகியவற்றை,



மூலதனத்தின் நலன்களை உள்வாங்கிக் கொண்ட அரசிடம் விட்டுவைக்க முடியாது. இன்றைய அரசு அதிகாரத்திலிருந்து மக்கள் தம்மை விடுவித்துக் கொண்டு இந்தியாவை விடுவிக்க வேண்டும். சில அரசியல் அறிஞர்கள் கருதுவதுபோல இது இரண்டாவது விடுதலைப் போர். இது விடுதலைக்கான அரசியல்.

மைய அரசின் கொடுங்கோன்மையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் முறையில் இந்தியாவில் இயக்கங்கள் உருவாகி வருகின்றன. அரசின் வன்முறைதான் அதற்கெதிரான மக்களின் வன்முறையைத் தோற்றுவித்துள்ளது. ஓராக்குழு அண்மையில் கண்டறிந்தது போல அரசியல்வாதிகளும் போக்கிரிகளும் கைகோர்த்துக் கொள்வது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அர்சத் மேத்தாக்கள் இந்தியாவின் பொருளியல் அரங்கினுள் எதையும் சாதிக்க முடியும். சிசர்வ் வங்கி முதல் பல்வேறு வங்கிகளும் இத்தகையவர்களுக்கு ஒத்தியங்கும். அரசின் திட்டங்கள் அவற்றிலிருந்து அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் வலிந்து கேட்டு பணம்பறித்துக் கொள்ளும் நோக்கிலேயே வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. கடத்தல்காரர்களும் அரசுஅதிகாரிகளும் இணைந்து கொள்கின்றனர். போதை மருந்துகளிலும் ஆயுதங்களிலுமான கொள்ளை வணிகம் இந்தியாவையும் ஆட்டிவைப்பதாக மாறிவருகிறது. முதன்மையான அரசியல் கட்சிகள் 100 / 1000 கோடியென பணம் திரட்டிப் பதுக்கி வைக்கின்றன. அன்னிய நாட்டு வங்கிகளில் அரசுத் தலைவர்கள் தம் பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்கின்றனர். இவர்கள்தான் இந்திய அரசியலை இனித் தீர்மானிக்கக்கூடிய சக்திகளாகத் தெரிகிறார்கள். இவர்களிடமிருந்து தான் இந்தியாவை மீட்க வேண்டும்.

இந்திய வங்கிகளிலிருந்து அர்சத்மேத்தா மட்டும் அடித்த கொள்ளை இருபதாயிரம் கோடி. இந்தத் தொகை எங்கு பதுக்கப்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்கிறது அரசு. ஆகவே இதை மீட்க முடியாது. வங்கி மேலாளர்களின் ஒத்துழைப்போடுதான் இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது. இந்திய வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற தொகையில் பெரும் முதலாளிகள் திருப்பிச் செலுத்தாத தொகை நாலாயிரத்து அறுநூறு கோடி. இது வாரா கடன். இந்தியாவில் ஆண்டுதோறும் எண்பதாயிரம் கோடி அளவில் கருப்பு பணம் பதுக்கப்படுகிறது. இத்தகைய கள்ளப்பணம் முதலியவைதான் கட்டிடங்கள், கார்கள், ஐந்து நட்சத்திர விடுதிகள் ஆடம்பர வாழ்க்கை முதலியவற்றுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அரசு அதிகாரிகளை இலஞ்ச ஊழலுக்கு உட்படுத்துவது இந்தத் தொகைதான்

பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கவும் இந்தத் தொகைதான் பயன்படுகிறது. கடந்த நாற்பது ஆண்டுகளில் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகிய ஒரு அமைச்சர்கூட விசாரணைக்கு உள்ளாகி தண்டனை பெறவில்லை. விசாரணைக்குழு அறிக்கைகளும் மறைக்கப்படுகின்றன. இத்தகைய சூழலில் இந்தியாவில் மக்களாட்சி எப்படி நிலைக்க முடியும்?

தேசிய இனங்களின் விடுதலை என்பது இன்றைய இந்திய அரசியலின் ஆற்றல் மிக்க போக்குகளில் ஒன்று. கூட்டாட்சியும் சோசலிசமும் சரியான திசைவழியில் செயல்பட்டிருக்கும் என்றால் தேசிய இனங்களின் விடுதலை இன்றைய அரசியல் அரங்கின் முன்னணிக்கு வந்திருக்க முடியாது. பெரும் முதலாளிகளின் நலன்களை உள்வாங்கிக் கொண்ட மைய அரசின் ஆதிக்கத்திற்கு எதிர்வினையாகத்தான் விடுதலை இயக்கங்கள் தோன்றியுள்ளன. இத்தகைய விடுதலை இயக்கங்களை முழு அளவில் ஒடுக்கவேண்டும் என்ற நிலையில் மைய அரசு இராணுவப் பெருக்கம் முதலிய நடைமுறைகளின் மூலம் தன்னை மேலும் வலுப்படுத்தி வருகிறது. எந்த அரசியல் கட்சியும் இப்போக்கை கேள்விக்கு உட்படுத்தவில்லை.

மண்டல் குழு அறிக்கை வெளியானதை ஒட்டி இந்தியாவில் இந்துத்துவம் என்ற மதவாத அரசியலின் முகம் தன்னைக் கடுமையாக வெளிப்படுத்திக் கொண்டது. இந்திய மக்களின் – குறிப்பாக இந்துக்களின் மதஉணர்வுகளில் தீ மூட்டி அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகிய மதவாத அரசியல்தான் இந்துத்துவம். சோசலிசத்திற்கு எதிராக முனைப்புக் கொள்வது இந்துத்துவம். இந்திய எல்லைக்குள் தனியார் மயப்படுத்தலை இந்துத்துவம் வற்புறுத்துகிறது. தேசீய இனங்களின் விடுதலை முழக்கத்தை எந்த விலை கொடுத்தும் அடக்கித் தீரவேண்டும். இந்திய மக்கள் அனைவரும் அடிப்படையில் இந்துக்கள் என்ற முறையில் கலாச்சார தேசீயம் என்ற கொள்கையை முன்வைக்கிறது இந்துத்துவம். இந்தியின் ஆதிக்கத்திற்குத் தமிழ் முதலிய மாநில மொழிகள் விட்டுக்கொடுக்க வேண்டும். இந்தியாவில் கலாச்சாரப் பன்முகத்திற்கு இடமில்லை.

இந்திய மொழிகள் அனைத்திற்கும் மூலம் சமக்கிருதம். இந்தியாவின் ஒருமைப்பாட்டை இந்தியா ஒரு தேசம் என்பதை மறுப்பவர்கள் இந்தியாவின் எதிரிகள். இந்துமதத் தலைவர்கள், துறவிகள் தான் இந்தியச் சமூகத்தின் தலைவர்கள். சோசலிசம், மக்களாட்சி முறை, ஆண்பெண் சமத்துவம் முதலியவை அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியான கருத்துக்கள். இந்தியாவின் கலாச்சார தேசீயத்திற்கு இக்கருத்துகள்



எதிரானவை. இத்தகைய கூறுகளை உள்ளடக்கியதாக இந்துத்துவம் என்ற அரசியல் இன்று இந்திய அரசியல் களத்தைக் கலக்கி வருகிறது. இந்திய மக்களின் விடுதலை அரசியலுக்கு இந்துத்துவம் எதிரானது என்பதில் ஐயமில்லை.

தேசீய இன விடுதலைக்கான இயக்கங்களோடு வேறு சில இயக்கங்களும் இந்திய அரசியல் அரங்கில் இன்று முன்னணிக்கு வரப் பாடுபடுகின்றன. இந்தியா முழுதும் தலித் மக்கள் போராற்றலுடன் தம்மைத் திரட்டி வருகிறார்கள். பிற்பட்ட சமூகத்தினரும் கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய களங்களில் தமக்கான உரிமைகளைக் கேட்டுப் பெறுவதன் மூலம் அரசியல் அதிகாரத்தினுள் நுழைகின்றனர். அரசு அதிகாரத்தினுள் தலித் மக்களும் பிற்பட்ட சமூகத்தினரும் இடம் பெறுவதன் மூலம், பெருகிவரும் முதலாளீயத்தையும் அரசு அதிகாரத்தையும் தமக்குள் உள்வாங்கி நிலைநிறுத்தும் ஆபத்தான போக்கிற்கு இவர்கள் இடம் தருகிறார்கள் என்பதும் உண்மைதான். நாளடைவில் இவர்களும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

இவர்களின் இயக்கங்கள் தவிர நுகர்வோர் இயக்கம், சுற்றுச் சூழல் இயக்கங்கள், பெண்ணுரிமை இயக்கங்கள், மனித உரிமைக்கான இயக்கங்களும் இன்று வலுப்பெற்று வருகின்றன. மார்க்சீய இயக்கங்கள் சில களங்களில் தோற்றுப்போனதை உடன்வைத்துப் பார்க்கும்போது இவ்வகை இயக்கங்களின் தோற்றத்திற்கான காரணங்கள் தெளிவாகின்றன. இவ்வகை இயக்கங்கள் சோசலிசம் என்ற மையத்தில் குவியும்போது, ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு ஒத்த முறையில் இந்தியாவின் முதலாளியமும் அரசு அதிகாரமும் இணைந்து செயல்படும் ஆதிக்க அரசியலுக்கு எதிர்நிலையில் இவ்வகை இயக்கங்கள் தமக்குள் இணைந்து போராட முடியும். இம்முறையில் இந்திய மக்கள் இந்தியாவின் பொருளியல் முதலிய களங்களில் தம்மை நிறுவிக் கொள்ள முடியும். அரசியலை இந்திய மக்கள் தம் விடுதலைக்கான அரசியலாக மாற்றிக் கொள்ள முடியும். முதலாளிய நலன்களை உள்வாங்கிக் கொண்ட அரசின் பார்வையில்தான் மக்கள் குடிமக்களாகக் குறைக்கப்பட்டார்கள். அரசை மட்டுமல்லாமல் பொருளியல் (தொழில் – வேளாண்மை ஆகியவை), கல்வி, மருத்துவம் முதலிய அனைத்துக் களங்களிலும் மக்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். மாறிவரும் இந்திய அரசியலில் இந்தக் கூறு மிக முக்கியமானது.

## வளர்ச்சியும் மனித உரிமையும்

வளர்ச்சி என்று சொல்லப்படுகிற முதலாளியக் கருத்தாக்கம் உலக அளவிலான அழிவை நோக்கி நம்மை உந்துகிறது என்ற உண்மையை இப்பொழுது எல்லோரும் உணர்கிறோம். பேராசிரியர் அமர்த்தியா சென் அவர்களுக்கு நோபெல் பரிசு வழங்கியதன் மூலம் உலக அளவில் இந்த உண்மை ஏற்கப்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். மாபெரும் அணுமின் திட்டங்களை, கனரகத் தொழிற்சாலைகளை, இராணுவச் சாதனங்களை, விண்வெளி ஆய்வுகளை மற்றும் போக்குவரத்து, பொழுதுபோக்கு வாய்ப்புகளை உருவாக்குவதை வளர்ச்சி என்று இனியும் நாம் மதிக்க முடியாது. இதற்கு மாறாக ஒரு நாட்டில் எந்த அளவுக்கு அனைத்து மக்களுக்கும் கல்விக்கான வாய்ப்புகள் மற்றும் சுகாதார வாய்ப்புகள் பெருகியிருக்கிறதோ அந்த அளவுக்குதான் ஒரு நாடு வளர்ச்சி பெற்றுள்ளது என அளவிட முடியும். நிலச்சீர்திருத்தம், பெண் உரிமை என்பனவற்றையும் வளர்ச்சிக்கான அளவுகோல்களில் சேர்த்துக் கொள்கிறார் பேராசிரியர் அமர்த்தியா சென் இவற்றைச் செய்துள்ள அரசுதான் மக்கள் நல அரசு என்ற மரியாதைக்குத் தகுதியுடையது.

மேலும், ஒரு உண்மையை அமர்த்தியா சென் வெளிப்படுத்தியுள்ளார். உணவு உற்பத்தி பெருகிய நிலையிலும் வறுமையும் பட்டினியும் இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து சொல்கிறார். சுரண்டலின் அளவைத் தொடர்ந்து அதிகரிப்பதன் மூலம் மக்களின் வாங்கும் திறனை அழித்துவிட்ட நிலையில் வறுமையும் பஞ்சமும் தவிர்க்க இயலாதவை.

கடந்த சில பத்தாண்டுகளில் உலக நிதி, சர்வதேச நிதிநிறுவனம் ஆகியவை பொருளாதார வளர்ச்சி குறித்துச் சொன்னவை அனைத்தும் பொய் என்பது மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளைத் தொடர்ந்து தமது ஆதிக்கத்திற்குள் வைத்திருப்பதற்கான சூழ்ச்சி என்பதும் இப்பொழுது அம்பலம் ஆகி உள்ளது. இதன் தொடர்ச்சியாகத்தான் சந்தைப் பொருளாதாரம், தனியார்மயப்படுத்தல், உலகமயமாதல் முதலிய பொருளியல் கோட்பாடுகளும் மூன்றாம் உலக நாடுகளின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்தியாவின் நிதி அமைச்சர்கள் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு இந்தியாவின் கதவுகளை அகலத் திறந்து விடுகின்றனர். இவற்றின் சார்பில் மூன்றாம் உலக நாடுகளின்மீது பிரகடனம் செய்யப்படாத மூன்றாம் உலகப்போர் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டுள்ளது.



மூலதனத்திற்குத் தான் உலகம் சொந்தம் மற்றும் இயற்கையும் மனித உழைப்புத் திறனும் சொந்தம். நாடுகளுக்கு இனி அரசு அதிகாரம் இல்லை. மூலதனம் தான் உலகத்தை ஆட்சி செய்யும். வரலாற்றிலும் இத்தகைய கொடுமையான போக்கின் விளைவாக மனித வரலாறு தன் இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டதைப்போலத் தோன்றுகிறது.

இந்தச் சூழலில்தான் மனித உரிமைகள் குறித்து நாம் மிகுந்த கவலையோடு பரிசீலனை செய்யவேண்டி இருக்கிறது. மேற்குலகில் தொழில்புரட்சி, மறுமலர்ச்சி, ஜனநாயகம் என்பனவற்றோடு தோன்றி வளர்ச்சி பெற்ற முதலாளியத்தை நாம் வரவேற்றோம். சுதந்திரம் – சமத்துவம் – சகோதரத்துவம் ஆகியவற்றை இந்த முதலாளியம் உலகிற்கு வழங்கும் என்றும், அதுநாள் வரை உலக மக்களைத் தனக்குள் ஆழ்த்தி இருந்த அடிமைத்தனங்களும் இருளும் விலகுமென்றும் அனைவரும் நம்பினோம். உயிர்களின் பரிணாமம் குறித்து ஆராய்ந்த டார்வின் முதலியவர்களும் வளர்ச்சி குறித்துப் பேசினார்கள். இரண்டு நூற்றாண்டுக்குள் என்ன நேர்ந்தது என்பதை தொகுத்துப் பார்க்கும்போது நாம் கலங்கிப் போகிறோம்.

ஏகாதிபத்தியங்கள் உலக மக்களுக்கு விடுதலை தரா முதலாளியத்தை உள்வாங்கிக் கொள்கிற சோசலிசமும் உலகமக்களின் நலன்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது. தனியுடைமையும் அரசாதிக்கமும் – அதாவது சுரண்டலும் ஒடுக்குமுறையும் தொடர்ந்து அதிகரிக்கிற விகிதத்தில் மக்களின் மீது அடிமைத்தனம் திணிக்கப்படுவதைத் தவிர்க்க இயலாது. இதைத்தான், நம் வரலாற்றனுபவம் நமக்கு உணர்த்துகிறது.

தொழில் வளர்ச்சி என்ற பெயரால் காடுகள் அழிக்கப்படுகின்றன மலைகள் மொட்டையாகின்றன. ஆறுகள், கழிவுநீர் சாக்கடைகள் ஆகின்றன. பசுமைப்புரட்சி என்ற போக்கின் விளைவாக விளைநிலங்கள் மலடாகின்றன. நிலத்தடி நீரும் நஞ்சாகிறது. ஏற்றுமதி பெருகினாலொழிய நமக்கு வாழ்வில்லை என்ற முறையில் ஏற்றுமதியின் தேவைக்கு ஒத்த தொழில்வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகின்றது. கிராமப்புறத்தில் உழவர்களின் வாழ்க்கை மேற்குலகச் சந்தையோடு இணைக்கப்படுகிறது. நிலச்சீர்திருத்தம் கைவிடப்படுகிறது. பழத்தோட்டங்கள், தேக்குமர சாகுபடி, இறைச்சித் தொழிற்சாலைகள் என்ற முறையில் தொழில்க

ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கான மூலதனத்தை சுயநிதி நிறுவனங்கள் எந்த வகையிலும் திரட்டலாம். வங்கிகளைக் கொள்ளையடிக்கலாம். அவ்வப்போது அரசியல்வாதிகளுக்குக் கொஞ்சம் கொடுத்துக் கொண்டிருந்தால் போதும். உணவு முதலிய உற்பத்திப் பொருட்கள் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் அதேவேளையில் இங்கு வறுமை பெருகலாம். சாதிச் சண்டைகளும் மதக் கலவரங்களும் கூடுதலாக வெடிக்கலாம். குழந்தைத் தொழிலாளர்களைக் குறைத்துக் கொள்ள வேண்டியதில்லை. மூலதனத்தின் சுரண்டல் தொடர்ந்து அதிகரிக்கும் போது குடும்பத்தில் சிக்கல்கள் அதிகரிக்கின்றன.

தொழிற்புரட்சி என்றும் வளர்ச்சி என்றும் தொடங்கிய வரலாறு இத்தகைய அவலத்திற்கு நம்மைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. காற்றில் சூடு ஏறுகிறது. ஓசோன் ஓட்டையாகிறது. என்றுமில்லாத அளவுக்குப் புயல் காற்றுகள் சுழன்று அடிக்கின்றன. கடல்கள் கொந்தளிக்கின்றன. தீவுகள் மூழ்கி வருகின்றன., மலைகள் சரிகின்றன. எங்கும் வெள்ளப் பெருக்கம். இலட்சக்கணக்கில் மக்கள் சாகின்றனர். கொள்ளை நோய்கள் பெருகுகின்றன. அடுத்த ஐம்பதாண்டுகளில் என்ன நேரும் என்பதை நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க இயலாத நிலை. இதற்குப் பெயர் வளர்ச்சி அல்ல. சிறு அழிவு அல்ல, பேரழிவு. மனித வரலாற்று அழிவு. இந்தப் போக்கைத் தொடர முடியாது. பல இலட்சம் ஆண்டுகள் வளர்ந்துவந்த மனித வரலாற்றை, அரக்கர்கள் அழிக்க நாம் அனுமதிக்க முடியாது.

இது நம்முடைய உலகம், நமக்கான உலகம். கோடிக்கணக்கான ஆண்டுகளாக, இலட்சக்கணக்கான பரிமாணங்களுடன் இயற்கை இந்த உலகத்தைப் பக்குவப்படுத்தியுள்ளது. அழகுபடுத்தியுள்ளது. கோடிக்கணக்கான உயிரினங்களின் உறவில்தான் இந்த உலகம் தளிர்த்துள்ளது. தழைத்துள்ளது.

இந்த மாபெரும் இயற்கையில் இலட்சக்கணக்கான உயிரினங்களில் மனிதனும் ஓர் உயிரி. உயிரினங்களின் இறுதியில் வந்தவன் இவன் என்பதைத் தவிர இவனுக்கு உயர்வு சொல்லமுடியாது. மதங்கள் இவன் தலையில் மகுடம் சூட்டியுள்ளதை ஏற்கமுடியாது. இந்த மாபெரும் இயற்கைக்கு விலை இல்லை. முதலாளி என்ற முட்டாள் - அயோக்கியன் இதை விலை பேசுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. பெண்கள் மீது



தாக்குதல் அதிகரிக்கிறது. இன்ப வேட்டை ஊக்குவிக்கப்படுகிறத
திரைப்படங்களில் ஆபாசம், போதைப் பொருட்கள், பொழுது போக்குக
முதலியவை திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுகின்றன. மக்கள் தன்மான
அழிந்து கோழைகள் ஆகின்றனர். போக்கிரிகளாகின்றனர். காவ
துறையில் காட்டுமிராண்டித்தனம் ஊக்குவிக்கப்படுகிறது. மக்களி
அறவுணர்வு அழிவது அரசியல்வாதிகளுக்கு ஆதாயம்.

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் கூடுதலாகின்றன. தொழி
சங்கங்கள் முடக்கப்படுகின்றன. உச்சத்தில் இருப்பவர்களின் உடைமை
வாழ்வும் பாதுகாக்கப்படுகிறது. அதேசமயம், அவர்களுக்கு ஆபத்துகள
அதிகரிக்கின்றன. மனித வாழ்க்கை சீர்குலைகிறது. மன நோய்க
பெருகுகின்றன. மதவாதிகள் தம் ஆதிக்கத்தைப் பெருக்கி
கொள்கின்றனர். சமூகம் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகிற
ஜனநாயகம் தொடர்ந்து சீர்குலைகிறது. அரசதிகாரம் நுழையாத இட
இல்லை. எல்லாம் எனக்குதான் என்கிறது மூலதனம். உயிர்க
மலிவாகின்றன. மலினப்படுத்தப்படுகின்றன. கல்வி இல்லை, சுகாதார
இல்லை, வாழ்வு இல்லை, அறம் இல்லை, பண்பாடு இல்லை. இந்நிலையி
மனிதன் மனிதனாக வாழ்வதற்கில்லை. அவன் விலங்காக, பேயா
ஆவியாகத்தான் வாழ முடியும். இதற்குப் பெயர் வாழ்க்கை என்
சொல்லமுடியாது. வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகிற வாழ்க்கை இ
இங்கெல்லாம் கவிதைக்கு இடமில்லை. கலைகளுக்கு இடமில்லை. இ
நரகம். இங்கு கடவுள் இல்லை. இங்கு நடைபெறுவது பேய் அர
சாத்திரங்கள் பிணம் தின்னுகின்றன. நாடுகள் சிதைப்படுகின்றன.

ஒரு செடி தழைக்கிறது - பூக்கிறது என்றால் இந்த மாபெர
பிரபஞ்சத்தின் உயிரியக்கம் செயல்படாமல் அந்தச் செடி தழைக்கமுடியா
பூக்க முடியாது. இந்த மாபெரும் உற்பத்திச் சக்தியை எந்த மார்க்ஸ் வந்
அளக்கமுடியும்? உயிரினங்களுக்குள் செயல்படும் அற்புதங்களை எற்
மூலதனம் உற்பத்தி செய்யமுடியும்? எந்தக் கட்சியதிகாரி உயிரினங்களி
வாழ்வை ஒழுங்குபடுத்த முடியும்? இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் உலகம்
பேரழகு. மனித வாழ்க்கை ஓர் அற்புதம். இந்த மாபெரும் பிரபஞ்
சூழலில் எல்லா உயிரினங்களோடும் ஒத்த உரிமையோடு வாழ்வதில்தா
பேரின்பம். உழைப்பதும் பகிர்வதும் மனிதனுக்குக் கிடைத்த பெரும் வாய்
இயற்கையோடும் மனித சமூகத்தோடும் உயிர்களோடும் ஒத்
இயங்குவதில் தான் மனிதனுக்கு விடுதலை. இது மனித உரிமை. இ

உரிமையை யாரிடத்திலும் மனிதன் விட்டுத்தர முடியாது. இலாபம் கருதி முதலை இழக்கும் மூடர்கள் முதலாளிகள் அரசியல்வாதிகள் மற்றும் ஆதிக்கவாதிகள். இவர்களுக்கு விடுதலை தேவை இல்லை. இவர்கள் ஒரு கணம்கூட மனிதராக இருந்து பார்த்ததில்லை. பிரபஞ்ச அளவில் மனிதன் தன்னை விரித்துக் கொள்வது தான் உண்மையான வளர்ச்சி. ஒரு பூ மலர்கிற மாதிரி மனிதன் தனக்குள் பிரபஞ்சச் சிலிர்ப்போடு வளர வேண்டும்.

ரிப்கின்ஸ் என்ற அமெரிக்கத் தத்துவ ஞானி எழுதினான் : கதிரவனின் ஒளி பெற்று தழைத்தது இந்த உலகம். கதிரொளிதான் இயற்கைக்குள் பேராற்றலாகத் திரண்டு உள்ளது. இதை அழிக்காமல், அளவாகப் பயன்படுத்தினால் மனித வாழ்க்கை தொடரும். செழிக்கும். எனக்குத்தான் இந்த உலகம் என்று இயங்கினால் – ஆற்றல்கள் தம்மை புதுப்பித்துக் கொள்வதற்கு அவகாசம் தரவில்லை என்றால் இறுதியில் இயற்கையோடு மனிதனும் அழிவான். ஆகவே இப்போதேனும் விழித்துக் கொள்வோம்.

குறிப்பு : மதுரையிலிருந்து வெளிவரும் மனித உரிமைக் கங்காணி இதழில் வெளிவந்த கட்டுரை.



## வரலாற்றில் காரியவாதம்

தோழர் எஸ்.என். நாகராசனோடு சிலநாட்களுக்கு முன்பு நடத்திய உரையாடல் ஒன்றை இங்கு தொகுத்துத் தருகிறேன்.

நண்பர் திரு. முப்பால்மணி 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நிலவிய சைவசித்தாந்தம் பற்றி அரிய ஆய்வொன்றைச் செய்திருக்கிறார். மேற்கத்திய உலகில் தோன்றியதென நாம் படிக்கிற அனுபவவாதம் (EMPIRICISM) எவ்வாறு தமிழகத்து சைவ சித்தாந்தத்தை இந்த நூற்றாண்டுகளில் மறு உருவாக்கம் செய்திருக்கிறது என்பதை அவர் விளக்கியிருக்கிறார். pragmatism சில சமயங்களில் POSITIVISM என்றெல்லாம் சொல்லப்படும் மேற்கத்திய தத்துவப் போக்குகளை EMPRICISM (அனுபவவாதம்) என்ற பெயரில் உள்ளே தொகுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன். பொதுப்படையான விவாதம் கருதி இந்த எளிமைப்படுத்தல்.

நண்பர் முப்பால்மணி அவர்களோடு ஒருசமயம் நான் பேசிக் கொண்டிருந்தபோது, பெரியாருக்குள்ளும் இந்த அனுபவவாதம் ஆற்றலோடு இருந்தது என்று நான் குறிப்பிட்டதை அவர் வியப்போடு ஒப்புக்கொண்டார். பெரியாரின் மெய்யியல் என்பது தன்மானம்தான். பல குளறுபடிகளோடு அவரது பகுத்தறிவுவாதம் என்ற கருத்தாக்கம் விளக்கப்படுகிறது. பெரியாரின் பகுத்தறிவு வாதம் என்பது உண்மையில் அவரது மெய்காண் முறைதான். நாட்டுப்புறத்தில் பூட்டு, குடைகளைப் பழுதுபார்க்கும் ஒருவரைப்போல, பெரியார் தன் பகுத்தறிவை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அங்குமிங்குமாகத் திருப்பி வளைத்து, தன்மானம் என்ற மெய்யியலை விளக்கிக் கொண்டிருந்தார்.

அனுபவவாதம் என்ற இந்த மெய்யியல்போக்கு, மேற்கத்திய உலகில் குறிப்பாக பிரிட்டனில் தோன்றி வளர்ச்சி பெற்று (Utilitarianism என்றெல்லாம் பெயர்களோடு) கிழக்கிந்தியக் கம்பெனியார் மூலம் இந்தியாவிற்குள் வந்து தமிழகச் சூழலில் அன்று அறிவுத் தலைமையில் இருந்தவர்களுக்குள்ளும் ஊடுருவிச் சென்று பரவியது என்பதாகத்தான் நண்பர் முப்பால்மணி கருதியிருக்கக் கூடும். மேற்குலகம், கிழக்குலகத்தை பாதித்தது இப்படித்தான் என்ற முறையில் நாமும் சிந்திக்ககூடும்.

இன்னொரு வியத்தகு ஒப்புமை – கைலாசபதி அவர்களுக்குள் இயங்கிய மார்க்சியத்தைக் கட்டமைத்தது பிரிட்டனின் நேர்க்காட்சிவாதம் (POSITIVISM) என்று தமிழவன் தன் கட்டுரையில் கூறியிருக்கிறார். எஸ்.என்.நாகராசன் மேற்கத்திய அறிவியல் எவ்வாறு மார்க்சுக்குள் செயல்பட்டது என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார். மாக்கியவில்லி, பேக்கன் ஆகியவர்களின் வழியாக மேற்கத்திய உலகில் நிலைபெற்ற ஒரு கருத்து. உலகில் மனிதன் தான் மையம். இவன் தனக்கென இயற்கையை அடிமைப்படுத்தும் உரிமை உடையவன். இந்த நோக்கம் மேற்கத்திய உலகில் தொடக்கத்திலிருந்தே வருகிறது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இதனால்தான் மேற்குலகில் வளர்ச்சி பெற்றன. மனிதன் தனக்கென இயற்கையை தான் படைத்த கருவிகள் கொண்டு கட்டுப்படுத்துகிறான். இயற்கையிலிருந்து தனக்கான பொருள்களைப் பறித்துக் கொள்கிறான். இந்தக் கருத்தியலின் ஆதிக்கத்தை தனக்குள் மார்க்சும் பெற்றிருந்தார். எங்கல்சுக்குள் நேர்க்காட்சிவாதம் செயல்பட்டதை லெனின் வெளிப்படுத்தினார். மார்க்சு பற்றி லெனின் விமரிசனம் செய்யவில்லை. உற்பத்திச் சக்திகளுக்கு முதன்மை தந்தார் ஸ்டாலின். உற்பத்தி உறவுகளை அவர் புறக்கணித்தார். ஸ்டாலின் பற்றி மாவோ வைத்த இந்த விமரிசனம் ஆழ்ந்து பார்த்தால் மார்க்சைப் பற்றிய விமரிசனமும்தான் என நாகராசன் கூறியிருக்கிறார். அடித்தளத்திற்கு / உற்பத்திச் சக்திகளுக்கு / பொருளாதாரத்திற்கு தம் காலத்தில் முதன்மை சொல்ல வேண்டியிருந்தது என்று எங்கல்சும் சுய விமரிசனம் செய்து கொள்கிறார்.

பாசிட்டிவிசம், பிராக்மாட்டிசம், எம்ப்ரிசிசம் என்றெல்லாம் சொல்லப்படும் கருத்தியல் போக்குகளின் ஒரு மையமாக இருப்பது காரியவாதம். அதாவது செயலுக்கு முதன்மை தருவது. ஒன்றை செயல்படுத்துவது. இதற்கு எது சுருக்கமான நெறி? தத்துவங்கள், கோட்பாடுகள் என்று பேசிக்கொண்டு, குழப்பிக் கொண்டு இராமல், அவசர / உடனடித் தேவைக்கு எதைச் செயல்படுத்தலாம், எப்படிச் செயல்படுத்தலாம் – இது காரியவாதம். இலக்கு முக்கியம், முடிவு முக்கியம். இதற்கான நெறி / வழிமுறை அவ்வளவு முக்கியமல்ல. போரில் அறநெறி முக்கியமில்லை. வெற்றிதான் முக்கியம். வணிகத்தில் லாபம்தான் முக்கியம். நிர்வாகத் துறையில் அரசன் / தலைவன் தன் அதிகாரத்தை நிறுவிக் கொள்வதுதான் முக்கியம். இராணுவம் தேவை என்றால் உடனே பயன்படுத்து. எந்தப் படைக்கலத்தையும் பயன்படுத்தலாம். புலனாய்வைப் பயன்படுத்தலாம். அறிவுக்குத்தான் இங்கு முதன்மை. அன்பு, கருணை இங்கு முக்கியமில்லை.



காரியவாதம் என்று புரிந்து கொள்ளத்தக்க இத்தகைய போக்
மேற்கிலிருந்துதான் வந்ததா என்றால், இல்லை என்றே சொல்லிவிடலா
முதலாளியம் என்ற போக்கு இலாப வேட்டைக்காக உலக அளவி
காரியவாதத்தைத்தான் முதன்மையாகப் பயன்படுத்தியது. பணத்திற்
முதன்மை. தொழிலுக்கு முதன்மை. தொழிலுக்கு உறுதுணையாகத்தா
வேளாண்மை. அரசு அதிகாரத்துக்கு முதன்மை. அ
அதிகாரத்துக்காகத்தான் மக்கள். இத்தகைய போக்கு ஸ்டாலின் உட்ப
எல்லோருக்குள்ளும் பதிந்திருந்தது. முதலில் நிர்வாகம். அப்புற
இயலுமானால் கொள்கை / கோட்பாடு / மக்கள் நலம். தொழில்துறை
அறிவியலும், அரசு அதிகாரமும் கைகோர்த்துக் கொள்ளும் சூழல், கடந்த
சில நூற்றாண்டுகளில்தான் நிறைவு பெற்றது. இந்தப் போக்கோ
அறிவாளிகளும், கட்சிகளும் ஒத்துழைத்து செயல்படுவது என்ற போக்கு
அண்மைக் காலத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் காரியவா
என்பது, பெருவாரியான மக்கள் நலத்துக்கும் அவர்கள் போற்
அறநெறிக்கும் எப்பொழுதும் எதிரானதுதான் என்பதில் ஐயமில்லை
காரியவாதத்திற்கு எதிர்நிலை என்பது, வரலாற்றில் எப்பொழு
எத்தனையோ வடிவங்களில் செயல்பட்டு வந்திருக்கிற
மார்க்சியத்திற்குள் காரியவாதம் செயல்படுகிறபொழுது, அதற்கெதிரா
போக்கும் உள்ளிருந்தே வெளிப்படும். மேற்கத்திய முதலாளிய தீவிரத்திற்
மார்க்சியம் எதிர்நிலை எடுத்தது என்பதில் ஐயமில்லை. எனினும் இர
மார்க்சியத்தினுள்ளும் பகைச் சக்தி வந்து பதுங்கிக் கொள்ள முடியும்.

இனி, இந்தியாவுக்குள் வைத்து இந்தப் போக்கைக் கணிக்கலா
பார்ப்பனியம் என்று இப்பொழுது நாம் நிறையப் பேசுகிறோம். இந்தி
வரலாற்றில் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் (பொருள் நூல்) இந்தி
அரசியல் பொருளாதாரத்தில் நெடுங்காலம் தொடரக்கூடிய ஒரு போக்கை
தொடங்கி வைத்தது. இதற்கு முன்னரும் இந்தப் போக்கு இருந்திருக்க
கூடுமென்றாலும் இந்தப் போக்கை அரசியல் பொருளாதார
கோட்பாடாக்கியவர், சாணக்கியர்தான். இவர் பார்ப்பனர். அதேசம
வரலாற்றுச் சூழலில் அரசு அதிகாரத்தை மையப்படுத்தி, பொருளிய
கோட்பாடு வகுத்தவர் இவர். அரசன் செய்யவேண்டிய மிக முக்கியமா
கடமை, ஒவ்வொரு பிரதேசமாக, அப்பிரதேசத்தைத் தன் ஆளுகைக்கு
கொண்டு வருகிறபொழுது, அங்குள்ள காடுகளை அழித்து, நிலத்தை
பக்குவப்படுத்தி, நீர்ப்பாசனத்திற்கு ஏற்பாடு செய்து, பழ
பிரதேசங்களிலிருந்து மக்களைப் பிரித்தெடுத்து, புதிதாக உருவாக்கப்
பிரதேசத்தில் குடியேற்றுவது ஆகும். காடுகளை அழிப்பதற்

நிலங்களைப் பக்குவப்படுத்துவதற்கும் உழைப்புப் படை என்பது தேவை. இப்படியெல்லாம் அர்த்தசாத்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதாக என் நினைவு. அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்குரிய முக்கியமான வழிகளில் இது ஒன்று. அரசு அதிகாரம் செல்ல விரும்பும் இடங்களில் பூர்வீக குடிகள் என்று மக்கள் இருப்பார்கள். நாகரிக சமூகத்திற்கு முற்பட்டவர்கள் இவர்கள். அரசு அதிகாரம் என்று வரும் புதியவன் இந்தப் பூர்வீகக் குடிகளுக்குள் தன் அதிகாரத்தைக் கொண்டு செல்லவேண்டும். பூர்வீகக் குடிகளை வசப்படுத்துவது, உள்நுழைந்து அழிப்பது என்பது பற்றி அர்த்தசாத்திரம் நிறையப் பேசுகிறது. அரசு அதிகாரம் தோன்றி வளர்ந்து, தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் முறையில், இப்படியெல்லாம் செயல்படும் என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

அரசு அதிகாரம் இப்படித்தான் செயல்பட்டது என்பதை இந்திய வரலாற்றில் நாம் நெடுகக் காண்கிறோம். புதிய பிரதேசங்களில் அரசு அதிகாரம் வேளாண்மையை மையம் கொண்டதாக, 12 / 18 சாதிகளைக் குடியேற்றுகிறது. கோயில் இங்கு ஒரு மையம். ஐயர் / பார்ப்பனர் இங்கு முக்கியம். சாதிய அமைப்பு என்பதுதான் இங்கு சமூக அமைப்பு. பூர்வீகக் குடிகள் செய்யும் கலகத்தை அரசனின் படைகள் அழித்தொழிக்கும். அடிமைப்பட்டவர், பணிந்தவர், சமூக அமைப்பில் ஓரங்களில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். இவர்களுக்கென தொழில்கள் பெரும்பாலும் கீழ்மையான தொழில்கள் ஒதுக்கப்படும்.

இவ்வாறு இந்தியாவில் அரசு அதிகாரம் – அரசுமுறை வடக்கில் தோன்றி அப்புறம்தான் தெற்கில் பரவியது. வட இந்திய அரசுகளுக்குப் பிறகுதான் தென்னிந்திய அரசுகளின் – தமிழக அரசுகளின் தோற்றத்தை நாம் பார்க்கிறோம். பல்லவர்கள் வடக்கிலிருந்து வந்தவர்கள். இந்திய சமூக அமைப்பு என்பதை, இவ்வாறு அரசு அதிகாரம்தான் உருவாக்கியது. இந்த அரசு அதிகாரம் உருவாவதற்கு ஆதாரமாக இருந்த நூல் அர்த்த சாஸ்திரம். இந்த அர்த்த சாத்திரம்தான் இந்தியாவை பல நூற்றாண்டுகள் ஆட்சி செய்தது. இந்தப் பொருள்நூலை எழுதியவன் சாணக்கியன். கோசாம்பி அவர்களின் கருத்துப்படி இந்த சாணக்கியனின் தத்துவ தரிசனம் சாங்கியம். சாங்கியத்தைப் பிற்காலத்தில் தனக்கு அங்கமாக மாற்றிக் கொண்டது வைதீகம். சாங்கியம், பொருள்முதலியல் கோட்பாடு. அத்வைதம் பேசுபவன் அரசு அதிகாரத்தின் அங்கமாக மாறமுடியாது. அர்த்த சாத்திரத்தில் தேர்ந்தவன் பார்ப்பனனாகத்தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. (சுக்கிராச்சாரியார், விசுவாமித்திரர் அரசியல் நூல்



தெரிந்தவர்). சடங்குகள் செய்யும் அதர்வண வேதத்துப் பார்ப்பனன்
அரசனுக்கு நெருக்கமாக இருக்க முடியும். வரலாற்றின் அர
அதிகாரத்தின் வளர்ச்சியை நாம் மறுத்துப் பேசுவதற்கில்லை. வரலாற்றை
ஒரு வர்க்கத்தின் சார்பாக – ஒரு சாதியின் சார்பாக வைத்து
பொருள்படுத்த முடியாது. முரண்பாடுகளின் மோதலின் வழியேதான்
வரலாறு வளர்கிறது / தேய்கிறது. ஒரு தொழிலினுள் செயல்படு
நுட்பங்களை அறிவு பூர்வமாகப் புரிந்து தொகுத்துச் சொல்வது கோட்பாடு
கோட்பாட்டை உருவாக்காமல் தொழில் வளர்ச்சி பெறாது. சாத்திர
என்பது, இவ்வகையில் உருவாக்கப்படும் கோட்பாடு. தாழ்ந்த சாதியினரின்
தொழில்களுக்கு பார்ப்பனர் சாத்திரம் சொல்லவில்லை. கோட்பாட்டு
அறிவை உருவாக்குவதற்கு அறிவுத்திறம் வேண்டும். இத்தகை
அறிவாளிகள் சமூகத்தின் ஆக்கத் திறன்களை தமக்குள் வளர்த்து
கொண்டவர். தொல்காப்பியர் சமணர். தமிழ்மொழிக்கான இலக்கண
வகுத்தவர். இறைவனைப் பற்றிய அறிவோடு மட்டும் பார்ப்பனரை
தொடர்புபடுத்தி ஆராய்வது ஒரு பக்கப் பார்வை. வேதம் சொல்லி சமூக
பிரிவுகள் அனைத்தையும் தன் அதிகாரத்திற்குள் உட்படுத்த முடியாது
பார்ப்பனன். சடங்குகள் மூலம் தன் அதிகாரத்தை சமூகத்திற்குள் அதிக
பரப்பமுடியும். அரசனோடு / அரசு அதிகாரிகளோடு சேர்ந்து, அரசிய
பொருளாதாரமாகிய பொருள்நூலை வகுப்பதில் ஈடுபட்டிருந்தவ
பார்ப்பனன் என்றால் (இவன் தான் இராஜகுரு) இவன் அர
அதிகாரத்திற்கு அதிகம் சேவை செய்தவன். எல்லா அரசுகளும் இந்த
பார்ப்பனரை தனக்கு அங்கமாகக் கொள்ளவே முந்தும்.

அரசு நிர்வாகம் என்பது அடிப்படையில் காரியவாதத்தைத்தா
கொண்டிருக்கும். நிர்வாகி என்பவன் தனக்குக் கீழ் உள்ளவர்களை
கொண்டு காரியம் செய்ய வேண்டும். இவன் தன் அறிவை மற்றவர்களோ
பகிர்ந்து கொள்ளமாட்டான். நான் சொல்வது போல செய் என்பா
குடும்பத்தில் தலைவன், பள்ளியில் ஆசிரியன் / தலைமை ஆசிரியன், இப்
எடுத்துக் கொண்டால் நிர்வாகிகள் எப்பொழுதும் காரியவாதிகளா
இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். காரியவாதம் மேற்கில் மட்டுமல்லாம
உலகில் எங்கும் எப்பொழுதும் செயல்படும் கோட்பாடு. முதலாளிய உலகி
இந்தக் கோட்பாட்டின் ஆதிக்கம் அதிகம்தான். கிழக்கத்தி
கம்பெனியாரும் பிரித்தானிய அரசு அதிகாரிகளும் இந்திய மக்களை
பிரித்தாள்வதில், நிர்வாகம் செய்வதில், போர்களில் வெற்றி பெறுவதி
காரியவாதிகளாக இருந்தனர். அதாவது நடைமுறைத் தந்திர
தெரிந்தவர்களாக இருந்தனர். இந்தியச் சூழலில் மேலுக்கு வ

முக்கியக்குணம் இது. இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு இந்தக் காரியவாதம் நன்றாகவே தெரிந்திருந்தது. இதனால்தான் மக்களின் விடுதலைக்கான கோட்பாட்டை மறைத்தார்கள் அல்லது தெரிந்து கொள்ளவில்லை.

பின்குறிப்பு :

ஒரு விவாதம் போல வெளிப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இது. இதில் கறாரத்தன்மை இல்லை. தொடர்ந்து ஆரோக்கியமான முறையில் நண்பர்கள் செயல்பட்டால் சரியான உண்மைகளை நோக்கிச் செல்லமுடியும். வரலாற்று விவரத் தொகுப்புக்கள் நிறையத் தேவை. சாணக்கியரின் நூலை நாம் புதிதாகப் பயிலவேண்டும். திருவள்ளுவருக்குள் சாணக்கியர் கோட்பாட்டுக்கு ஆதரவு கொஞ்சம், எதிர்ப்பு அதிகம். மதம், சடங்கு என்பனவற்றுக்குள் பார்ப்பனியம் எது என்று விவாதிப்பதை விட, அரசியல் நூல் உட்பட சாத்திர ஆக்கத்தினுள் பார்ப்பனியத்தின் பங்கு என்ன என்று ஆராய்வது பயன்தரும். இறுதியாக, வரலாற்று இயக்கத்தினுள் வைத்து யார் பங்கு எவ்வளவு என்பதை மதிப்பிட வேண்டும்.

25.2.93



# கோத்தா வேலைத் திட்டம்

அரசு / அரசியல் என்று பேசும்பொழுது கோத்தா வேலைத் திட்டம் பற்றி காரல் மார்க்ஸ் செய்த சில திறனாய்வுகளிலிருந்து தொடங்கலாம். ஜெர்மனியில் இருந்த சோசலிஸ்டுகள் கோத்தா என்ற இடத்தில் கூடி கட்சி வேலைத்திட்டம் ஒன்றைத் தீர்மானித்தனர். இந்த வேலைத்திட்டத்தை மார்க்சின் திறனாய்வுக்காக முன்வைத்தபொழுது அவர் கடுமையான முறையில் சில திறனாய்வுக் குறிப்புகளை தந்தார். தொழிலாளர்களின் உழைப்புத் திறனை சுரண்டுவதன் மூலம் உபரி மதிப்பை முதலாளிகள் பெறுகின்றனர். உபரி மதிப்பு முழுவதும் தொழிலாளிகளுக்குத் திரும்பக் கிடைக்கவேண்டும் என்று கோத்தாவில் கூடியவர்கள் முடிவு செய்திருந்தனர். இது எப்படி சாத்தியம் என்று மார்க்ஸ் கேட்டார். தொழிற்சாலை தொடர்ந்து நடைபெற வேண்டும், தேய்மானத்தை சரிக்கட்ட வேண்டும். ஆண்டுக்காண்டு தொழிற்சாலை விரிவு பெற வேண்டும். தொழிலாளர் வீட்டு குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவ வாய்ப்புகள் தேவை. முதியவர்கள் கவனிக்கப்பட வேண்டும். மாநகராட்சி சில நிர்வாகக் கடமைகளை செய்தாக வேண்டும். இவ்வாறு பலவித செலவினங்களுக்கு உபரி மதிப்பிலிருந்து தேவையான தொகை சேரவேண்டும். நிர்வாகம் நடைபெறவேண்டும். இத்தகைய நிர்வாகம் இல்லை என்றால் தொழிற்சாலை என்ற அமைப்போ தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்போ சாத்தியமில்லை - இவ்வாறு சில கூர்மையான திறனாய்வுக் குறிப்புகளை மார்க்ஸ் தந்தார்.

இதிலிருந்து சில தெளிவான உண்மைகளை நாம் புரிந்து கொள்ள முடியும். முதலாளிய சமூக அமைப்பிலிருந்துதான் மார்க்ஸ் பேசுகிறார். சமூகம் தொடர்ந்து இயங்க உற்பத்தியும் மறு உற்பத்தியும் இடையறாமல் நடைபெற வேண்டும். நிகழ்காலத் தேவைக்கு மட்டுமல்லாமல் எதிர்காலத் தேவையையும் முன்வைத்து நிர்வாக அமைப்புகள் இயங்கவேண்டும். மாநகராட்சி உட்பட அரசு நிர்வாகம் இல்லாமல் இது சாத்தியம் இல்லை. தனியுடமை / மூலதனம் இல்லாமல் தொழிற்சாலைகளோ, பிற நிறுவனங்களோ இல்லை. உற்பத்தியை முழு அளவில் துய்த்துத் தீர்த்துவிட முடியாது. உபரிமதிப்பு மூலதனம் ஆவதற்கு உபரியில் ஒரு பகுதி மூலதனமாகத் திரள்வது இன்றியமையாதது. இவ்வகை இயங்கும் முறையில் வரலாற்றில் நெடுங்காலத்துக்கு ஏற்றத்தாழ்வு என்பது தவிர்க்க இயலாதது. வரலாற்றில் வளர்ச்சி என்பதை வேறுவகையில் சாதிக்க

முடியாது. மார்க்சின் ஆய்வுக் குறிப்புகளிலிருந்து இவ்வகை உண்மைகளை நாம் பெறுகிறோம்.

முதலாளிய சமூக அமைப்பிலிருந்து தான் மார்க்ஸ் பேசுகிறார் என்றபோதிலும், பிற சமூகங்களுக்கும் பொருத்திப் பார்க்கக்கூடிய சில உண்மைகளை நாம் புரிந்து கொள்ள முடியும். வரலாற்றுக் காலம் முழுவதும் எத்தனையோ வடிவங்களில் தனியுடமை செயல்படுகிறது. அரசின் ஆதரவு இல்லாமல் தனியுடமை செயல்படுவது இல்லை. சுரண்டலும் ஒடுக்குமுறையும் இணைந்தே நிலவுகின்றன. வரலாற்றுக் காலம் முழுவதும் இவற்றுக்கு எதிரான மக்களின் போராட்டங்களும் எத்தனையோ வடிவங்களில் நடைபெறுகின்றன. தனியுடமை இல்லாமல், அரசு அதிகாரம் இல்லாமல் வரலாற்றில் வளர்ச்சியும் இல்லை. ஏற்றத்தாழ்வுகள் எந்த அளவுக்கு இருக்கலாம் என்ற கேள்விக்கு இடம் உண்டு எனினும் கம்யூனிசம் என்ற சமூகம் நிறுவப்படும் வரை ஏற்றத்தாழ்வு என்பது இருக்கத்தான் செய்யும். தொழில், வேளாண்மை, கல்வி, மருத்துவம், கலை, இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நகரம் என பற்பல ஆக்கங்கள் வழியே வரலாற்றில் சமூகம் முன்னோக்கிச் செல்கிறது. காடுகள், நிலங்கள் முதலியவை தனியுடமை எல்லைக்குள் கொண்டு வரப்படுகின்றன. மனிதர்களின் உழைப்புத் திறன்கள் சுரண்டப்படுகின்றன. மனிதனின் உழைப்புத் திறன் மட்டுமல்லாமல் மனிதனேகூட தனியுடமை ஆக்கப்படுகிறான். தேசம், ராணுவம், சட்டம் என்றெல்லாம் அமைப்புகள் ஏற்படுகின்றன. போர்கள், படையெடுப்புகள், நாடு கவர்தல், நாடுகளை அழித்தல் முதலியனவும் தொடர்கின்றன. தொலைதூர நிலங்களும் கடல்களும் தனியுடமை அரசின் ஆதிக்கத்திற்குள் வருகின்றன. வரலாற்றிற்கு முற்பட்ட இனக்குழுக்கள் வரலாற்றின் எல்லைக்குள் - தனியுடமை அரசு ஆதிக்கத்திற்குள் வருகின்றன. தனியுடமையோடும், அரசோடும் ஒத்துழைக்கும் முறையில் மத நிறுவனங்கள் எழுகின்றன.

தனியுடமை - அரசு - அதிகாரம் என்பனவற்றை மையப்படுத்துகிற அரசியலை ஆதிக்க அரசியலென நாம் குறிப்பிடலாம். அரசியல் என்ற சொல்லாக்கம் முதலாளிய சமூகத்திற்குத்தான் சரியாக பொருந்தும் என்றாலும், முன்னைய சமூகங்களின் ஆதிக்க செயல்முறையையும் அரசியல் என்றே குறிப்பிடலாம். ஆதிக்கம் சில / பல முனைகளில் / களங்களில் தன்னை திரட்டிக்கொள்ள முற்படும்பொழுது, அதற்கு எதிரான



மக்களின் இயக்கங்கள் மற்றும் போராட்டங்களை விடுதலைக்கான அரசியல் என்றே குறிப்பிடலாம்.

இயற்கை வளங்களின் மீது மட்டுமல்லாமல் மக்களின் மீதும், மக்களின் உழைப்புத்திறன் மற்றும் அறிவு - உணர்வு ஆகியவற்றின் மீதும் தம் ஆதிக்கத்தை நிறுவுவதற்கான அரசியலை ஆதிக்கவாதிகள் காலந்தோறும் செயல்படுத்துகிறார்கள். இவ்வாறு தம்மீது / தம்மைக் கொண்டு செயல்படுத்தப்படும் ஆதிக்கத்தை நெடுங்காலம் கழித்துத்தான் மக்கள் அறிந்து கொண்டார்கள். இடைக்காலத்தில் எத்தனையோ வழிகளில் ஆதிக்கத்திற்குள் தவிர்க்க இயலாமல் தாங்கள் மாட்டிக் கொண்டதை / அடங்கியிருப்பதை அறிந்து கொண்டார்கள். ஆதிக்கவாதிகள் எத்தனையோ மயக்கங்களை தங்களுக்குள் திணித்திருப்பதையும் புரிந்து கொண்டார்கள். தங்கள் உழைப்புத் திறனால்தான் மாபெரும் கட்டிடங்கள், அணைக்கட்டுகள், இயந்திர சாதனங்கள் என ஆயிரக்கணக்கில் படைக்கப்பட்டிருப்பதை புரிந்து கொண்டார்கள். இவற்றினுள்ளும் ஆதிக்கவாதிகள் நுழைந்து தங்கியிருப்பதையும் புரிந்து கொண்டார்கள். இத்தகைய புரிதலின் அடிப்படையில் ஆதிக்கவாதிகளிடமிருந்து தம்மை மீட்டுக் கொள்ளும் அரசியலை மக்கள் முன்வைக்கிறார்கள். பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி என பல்வேறு கட்டங்களின் வழியே மக்களின் விடுதலைக்கான அரசியல் மென்மேலும் தெளிவு பெற்று இருக்கிறது. விடுதலைக்கான இந்த அரசியலை சோசலிசம் என்று குறிப்பிடுவதும் பொருந்தும். இதற்கு எதிரான அரசியல், முதலாளிய அரசியல். இப்பொழுது நாம் நவீன முதலாளிய காலத்திற்குள் இருக்கிறோம்.

# பெண்ணியம்

இன்று பெண்ணுரிமை என்றும், பெண் விடுதலை என்றும் தமிழகத்தில் பரவலாக குரல் எழுந்திருக்கிறது. இந்தக் குரலின் வழியே வெளிப்படும் நியாயங்களை நாம் ஒப்புக் கொள்ள முடியும். பெண்ணுக்கு உரிமை வேண்டும். விடுதலை வேண்டும். எத்தகைய சமூகச் சூழலில் இவை சாத்தியம் என்பது பற்றி இங்கு நாம் சிந்திக்க வேண்டும்.

இன்றைய சமூகச் சூழலில் ஆண்களுக்கு உரிமை உண்டா? விடுதலை உண்டா? என்ற கேள்வியையும் இங்கு உடனடியாக சேர்த்தே கேட்டுக் கொள்வோம். இப்படிக் கேட்பதனால் ஆண் தன் ஆதிக்கத்தை பெண்ணின் மீது செலுத்துவதில்லை என்று நாம் கூறுவதாக கருத வேண்டியதில்லை. குடும்பத்திலும் சமூக அளவிலும் ஆண்கள், பெண்களின் மீது கூடிய அளவு அதிக அளவில் ஆதிக்கத்தைச் செய்கிறார்கள் என்பதற்கு சான்றுகள் தேட வேண்டியதில்லை. கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் பெண் தனக்குப் போட்டியாக வந்திருப்பதை ஆண் இன்று நன்றாகவே அறிந்துள்ளான். பெண்ணின் சம்பாத்தியம் இல்லாமல் இன்று குடும்பம் நடத்த இயலாது என்பதையும் ஆண் உணர்ந்திருக்கிறான். குடும்பத்திற்குள் ஆணுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பெண் செய்து தருவதன் மூலம்தான் வெளி உலகத்தில் ஆண் குறைந்த அளவுக்கேனும் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறான். இவ்வகையில் ஆணின் சம்பாத்தியத்தில் பெரும் பகுதிக்கு பெண்ணின் உழைப்பு காரணமாக இருக்கிறது என்பதையும் ஆண் இன்று உணரத் தொடங்கியுள்ளான். பெண் இல்லாமல் இவனுக்கு வாழ்க்கை இல்லை என்பதையும் ஆண் சரியாகவே அறிந்திருக்கிறான். இன்றைய சூழலில் பெண்கள் ஆண்களைப் பெருமளவுக்கு கலவரத்துக்குட்படுத்த முடியும் என்பதும் நிதர்சனமாகி வருகிறது.

அப்படியானால் பெண்ணுரிமை, ஆண் ஆதிக்கம் என்னும் இவ்விரு போக்குகளை எதிர்நிலைப்படுத்தி இவற்றுக்கிடையில் மோதலை உருவாக்குவதன் மூலம் பிரச்னை தீருமா? என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். சற்று ஆழ்ந்து பார்த்தால் பெரும்பாலான ஆண்கள், சமூகத்தின் பரப்பளவில் செயல்படும் ஆதிக்கச் சக்திகளின் கருவிகளாகத்தான் செயல்படுகிறார்கள் என்பதையும், இவ்வாறு கருவிகளாகச் செயல்படும்பொழுது ஆதிக்கவாதிகளின் தேவைகளுக்குகந்த முறையில் அவர்களுக்கான உணர்வுகளை / ஆதிக்க உணர்வுகளை தமக்குள்



சேகரித்துக் கொள்கிறார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும். அரசு அதிகாரம் இன்றும் பெரும்பாலும் ஆண்களின் மூலம்தான் சமூகத்திலும் செயல்படுகிறது. முதலாளியம் தன்னை வளர்த்துக் கொள்கிற / வலுப்படுத்திக் கொள்கிற செயற்பாடும் ஆண்களின் மூலம்தான் நடைபெறுகிறது. தனிச் சொத்துரிமை என்பது காலம் காலமாக ஆண்களிடம்தான் இருக்கிறது. அரசு, முதலாளி, நிலப்பிரபு, தனி உடைமையாளன் – இவர்கள் பிற உழைக்கும் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள இயலாது. ஆண்கள் செலுத்துவதாக நாம் அறிந்திருக்கிற ஆதிக்க உணர்வு இவ்வகையில்தான் செயல்படுகிறது. ஆண்கள் மூலம் செயல்படுத்தப்படும் ஆதிக்கத்தின் மூலங்கள் என அரசு, தனி உடைமை, முதலாளியம் ஆகியவற்றை நாம் காணமுடியும். இந்த ஆதிக்கங்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளவும், பெருக்கிக் கொள்ளவும், கூலி உழைப்பாளிகள் / அடிமைகள் தேவை. இம்முறையில்தான் கூலிக்காரர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் உற்பத்தி செய்யப்படுகிறார்கள். இந்த வரிசையில்தான் பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள். காலங்காலமாக சமூகத்தில் நிலைநிறுத்தப்படும் அடிமைத்தனத்தின் ஒரு பகுதிதான் பெண் அடிமைத்தனம். முதலாளியம், அரசு அதிகாரம், இவற்றோடு இன்றைய சூழலில் புதிய காலனியம் ஆகிய ஆதிக்கச் சக்திகளுக்கு பெரும்பாலான ஆண்களும்தான் அடிமைப்பட்டிருக்கிறார்கள். ஆண்கள் தம் அடிமைத்தனத்தை உணரும்பொழுது, பெண்களையும் சேர்த்தே ஆதிக்கச் சக்திகளுக்கு தாம் அடிமைப்படுத்தியிருப்பதை உணர்ந்து கொள்வார்கள். ஓர் அடிமை தனக்கு இன்னொரு அடிமையைத் தேடக் கூடாது என்பதையும் ஆண் உணர்ந்து கொள்வான்.

இந்தச் சிக்கலின் இன்னொரு முக்கிய பரிமாணத்தின்மீது நம் கவனம் குவிய வேண்டும். ஆதிக்கச் சக்திகள் இன்று தொடர்ந்து தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றன. இவற்றுக்கு தம்மை உட்படுத்திக் கொள்வதன் மூலம் மனிதர் தம் படைப்புத் திறனை – ஆக்கத் திறனை இழக்கிறார்கள். தம் ஆளுமையை அழித்துக் கொள்கிறார்கள். உலகச் சந்தையோடு இன்று இந்தியா இணைக்கப்படுகிறது. சந்தைப் பொருளாதாரம் என்ற முறையில் முதலாளியம் ஆக்கம் பெறுகிறது. நவீனத் தொழில்நுட்பங்கள் தொடர்ந்து இங்கு வந்து சேர்கின்றன. ஏற்றுமதிக்கு அதிக வாய்ப்புகள் இங்கு செய்யப்படுகின்றன. முதலாளியம் தொடர்ந்து பெருகுவதற்கான வாயில்கள் திறந்து வைக்கப்படுகின்றன. அரசு அதிகாரம் இன்று முழு அளவில் முதலாளியத்தோடு ஒத்துழைக்கிறது. இயந்திரங்களின் நுட்பங்கள் இன்று

பெருகும்போது இயற்கை தொடர்ந்து அழிக்கப்படுகிறது. நீர்நிலைகளும், நிலமும் நாசமாகின்றன. மக்களின் உடல் நலம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகிறது. வாழ்க்கை வசதிகள் என்ற முறையில் நுகர்வுத் தேவைகள் பெரும் எடுப்பில் ஊக்குவிக்கப்படுகின்றன. நுகர்வியம் இன்று எல்லோரையும் ஆட்கொண்டிருக்கிறது. கிராமங்கள் அழிகின்றன. உழவர்கள் வாழ்க்கை கடும் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது. இன்றைய சூழலில் மனித வாழ்க்கை வாழத் தகுந்ததாக இல்லை. வாழ்வில் தன்மானம், நேர்மை முதலியவற்றுக்கு இடமில்லை. அதிகாரம் எல்லோரையும் சிதைக்கிறது; நாசமாக்குகிறது. விடுதலைக்கான இயக்கங்கள், முயற்சிகள் ஒடுக்கப்படுகின்றன.

இந்தச் சூழல்தான் ஆண்களையும் அதேசமயம் பெண்களையும் கடுமையாக பாதித்திருக்கிறது. உரிமைகள் என்பவை இங்கு அரசு, முதலாளியம் ஆகியவற்றுக்குத்தான். ஆணுக்கெதிரான போர்க்குரல் எழுப்புவதைக் காட்டிலும் ஆண்களும் இன்று அடிமைப்பட்டிருப்பதை பெண் உரிமை இயக்கங்கள் பேசவேண்டும். காலங்காலமாக அடிமைத்தனத்துக்கு உட்பட்டிருக்கிற பெண்களின் நிலையில்தான் இன்று ஆண்களும் இருக்கிறார்கள் என்பதை ஆண்கள் இன்று உணர்ந்து கொள்ள வேண்டும். உண்மையில் இயற்கையும் வாழ்வுரிமைகளும் இவர்களிடமிருந்து பறித்துக் கொள்ளப்படுகின்றன. இவர்களின் படைப்புத் திறன்கள் பறித்துக் கொள்ளப்படுகின்றன அல்லது அழிக்கப்படுகின்றன. இவர்களுக்கு நிலம் சொந்தமில்லை, நாடு சொந்தமில்லை, மொழி சொந்தமில்லை, அரசு சொந்தமில்லை. வாழ்வதற்கான உரிமைகள் இவர்களுக்கு இல்லை. இவையனைத்தையும் இவர்களிடமிருந்து பறித்துக் கொண்டவர்கள் ஆளும் சக்திகள். அவர்களுக்காக இவர்கள் தொடர்ந்து உழைப்பில் அகப்படுத்தப்படுகிறார்கள். இப்படி உழைப்பதால் இவர்கள் மேலும் மேலும் தம்மை – தம் வாழ்வை – தம் படைப்புத் திறனை அழித்துக் கொள்கிறார்கள். இவர்களிடம் அன்பு இல்லை, நேசம் இல்லை, தியாகம் இல்லை பொய்யும், கோழைத்தனமும், போக்கிரித்தனமும், வேசைத்தனங்களும் இன்று பெருகி வருகின்றன. வாழ்க்கை என்பது இன்று இவர்களுக்கு சாக்கடையாகிவிட்டது. சமூகத்தின் மேட்டுத்தளங்களில் கோலாகலங்களும், கூத்துகளும், ஒளிவெள்ளங்களும், பெருகிவிடும்போது – இவர்கள் இன்னும் ஆழ்ந்த இருட்பள்ளங்களில் தள்ளப்படுகிறார்கள்.



இப்பொழுது பெண்ணியம் பற்றிப் பேசுவோம். அடிப்படையில் பெண்ணியம் என்பது இன்றைய சூழலில் உலகின் உய்வுக்கான மெய்யியல்; உலகைப் புதியதாகப் படைப்பதற்கான சிந்தனைக்களம். இயற்கை செழிப்போடு இருக்கவேண்டும். ஆறும், கடலும், வானமும் வளமாக இருக்க வேண்டும். மனிதர் மத்தியில் ஏற்றத்தாழ்வு தேவை இல்லை. சுதந்திரமான சூழலில்தான் மனிதர்க்குள் படைப்புத் திறன் மேம்படும். மனிதர்க்குள் அன்பு சுரக்கும். உழைப்பு எப்பொழுதும் மனிதனின் ஆற்றலை – ஆக்கத் திறன்களை தொடர்ந்து வளர்க்கும். சமத்துவம்தான் மனிதன் வாழ்வதற்கான ஆரோக்கியமான சூழல். உழைப்பின் மூலம்தான் மனிதன் சமூகத்தை தனக்குள் பெறுகிறான். சமூக உணர்வைப் பெறுவதன் மூலம்தான் மனிதன் வரலாற்றில் கலக்கிறான். மனிதன் தன்னைப் பிரபஞ்ச அளவில் விரிவுபடுத்திக் கொள்பவன். இவன் தனக்குள் விரிந்து செல்லும் எல்லைகளைச் சுருக்க முடியாது. போர்கள் மனிதர்களுக்குத் தேவை இல்லை. ஆயுதங்கள் தேவை இல்லை. ஒரு செடி வளர்த்தவனுக்கு இந்த உண்மைகள் தானே புரியும். குழந்தையைப் பெற்றெடுத்து வளர்க்கும் தாய்க்கு இந்த உண்மை புரியும். தன்னை இழந்து படைப்புக்களை உருவாக்கும் பாதிகளுக்கு இந்த உண்மை புரியும். ஆதிக்கவாதிகளுக்கு இந்த சூழலில் இடமில்லை. மனிதனின் ஆக்கத் திறன்கள் தமக்குள் சேர்ந்திருக்கிற தொழில்நுட்பங்களை வைத்து ஆதிக்கச் சக்திகள், ஆக்கத் திறன்களுக்கு மூலமான மனிதர்களை அழிக்கிறார்கள். இவர்களிடமிருந்து மனிதன் தன்னை, தன் ஆக்கத் திறன்களை, கருவிகளை மீட்டுக் கொள்ள வேண்டும். பெண்களின் வழியே வெளிப்பட்டுத் தெரிகிற தாய்மை, காந்தி – மார்க்ஸ் – ஏசு – வள்ளுவர் முதலிய சான்றோர்களுக்குள் இயங்கியது. சமூக வாழ்வின் மேம்பாட்டுக்காக தம்மை இணைத்துக் கொள்கிற அனைவர்க்குள்ளும் இயங்குவது இந்தத் தாய்மைதான். இயற்கையை, உயிர்களை, மனித வாழ்வை இன்று காப்பாற்றக் கூடியது இந்தத் தாய்மைப் பண்புதான். படைப்புத் திறன்மிக்க கவிஞர்கள், படைப்பாளிகள் இந்தத் தாய்மையை தமக்குள் இயல்பாக உணர்ந்திருக்கிறார்கள். பெண்ணியம் தன்னை ஆழத் தோண்டிச் செல்லும்பொழுது தன் ஆதார சக்தியாக இந்தத் தாய்மைப் பண்பைத் தான் கண்டுபிடிக்கிறது. இந்தத் தாய்மைதான் இன்று உலகைக் காப்பாற்றும். இந்த குணத்தை காலம்காலமாக தமக்குள் தக்க வைத்துக் கொண்ட பெண்கள் நம் வழிபாட்டுக்குரியவர்கள். பெண்ணிடமிருந்து இந்த வையகம் இப்பொழுதேனும் நீதியைக் கற்றுக் கொள்ள வேண்டும். தியாகத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பைக் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பில் தழைத்திடும் வையம் என்று பாரதி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை.

சோசலிச உணர்வை உள்வாங்கிக் கொள்கிற பெண்ணியப் பார்வையாக இதைச் சொல்லலாம். முதலாளியத்தை உள்வாங்கிக் கொள்கிற கல்வியும் மருத்துவமும் தொழில் முயற்சிகளும், பெண்ணுக்கு விடுதலை தராது. ஆக அதிகாரத்தில் இடம் பெறுகிறபொழுதே அதிகாரத்தை தனக்குள் உள்வாங்கிக் கொள்கிற பார்வை பெண்ணுக்கு விடுதலை தராது. அதேபோல ஆணுக்கும் விடுதலை தராது. குடும்பம் வேண்டுமா – வேண்டாமா, திருமணம் தேவையா – தேவையில்லையா, பாலுணர்வை எப்படி நிறைவு செய்து கொள்வது? என்ற விவாதங்களுக்குள் பெண்ணியம் தன்னைச் சுருக்கிக் கொள்ள முடியாது. விடுதலை பிரிவுபடாதது என்று மார்க்ஸ் கூறினார். பகுதிக்குள் முடக்கம் கொள்வது விடுதலை இல்லை. பன்முகப் பரிமாணங்களில் செயல்படுவது விடுதலை. பெண்ணியமும் மனித விடுதலைக்கான கோட்பாடு மற்றும் செயல்முறை.



# பாலியலும் மனித விடுதலையும்

பாலகுமாரன் நாவல்களில் பிரச்சினை முக்கியமான இடம்பெறுகிறது. இது பலருக்கு கவர்ச்சி தருகிறது. இதில் வியப்பில்லை. இதன் காரணத்தை நாம் விரிவாகப் பார்க்க வேண்டும். பாலகுமாரன் நாவல் பற்றிய பிரச்சினை அல்ல இது. நமது சமூகத்தில் பாலியல் பிரச்சினை எக்காரணங்களால் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பது பற்றிய பிரச்சினை. இதற்கு விடை கண்ட பின்பு பாலகுமாரன் நாவலுக்கு வரலாம்

நமது சமூகத்தில் பாலியல் இன்பம் மீதான தணியாத வேட்கை பெரும்பாலான மனிதர்களிடம் நீக்கமற நிறைந்துள்ளது. காமமே வாழ்க்கை என்று சொல்லுமளவுக்கு இப்பிரச்சினை தீவிரப்பட்டுள்ளது. கணவன் மனைவிக்கிடையே நாளடைவில் கவர்ச்சி குறையும்போது கணவன் அல்லது மனைவி இன்னொருவரிடம் இன்பம் நாடும் போக்கு ஏற்படுகிறது. தொடக்கத்தில் தெரியாவிட்டாலும் நாளடைவில் தெரியவரும்போது பலசமயங்களில் சகித்துக் கொள்ளப்படுகிறது. சிலசமயங்களில் மட்டுமே பிரச்சினை அடிதடி கொலை என்று முடிவடைகிறது. திருமணமாகாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் இது கடுமையான பிரச்சினை. பல சமயங்களில் பகலிலும் இரவிலும் பல மணிநேரத்தை இது ஆக்கிரமித்துக் கொள்கிறது; வேறு பிரச்சினைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியாமல் இது தடுக்கிறது. இடது சாரி இயக்கங்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களையும் இது தாக்கி அவர்கள் மனத்தில் குழப்பத்தை அதிகரித்து அவர்களைச் சோர்வுறச் செய்கிறது. தவறான போக்கு என்ற விமர்சன எழுகிறது. சுருங்கச் சொன்னால், இளைஞர்கள் முதல் பெரியவர்கள்வரை குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்களுக்கும் சரி – குடும்ப வாழ்க்கைக்கு வெளியே இருப்பவர்களுக்கும் சரி, காமம் முக்கியமான பிரச்சினை. இப்படியொரு தீவிரம் எப்படி ஏற்பட்டது?

பாலியல் பிரச்சினை ஆபாசத் திரைப்படங்களாலும், ஆபாச பத்திரிகைகளாலும் கதைகளாலும் இன்னும் பிற வெளியீடுகளாலும் பரவுகிறது என்ற கருத்து முற்போக்கு வட்டாரத்தில் முன்வைக்கப்படுகிறது. ஆகவே ஆபாசச் சுவரொட்டிகளை ஒழிப்பதற்கும் ஆபாச திரைப்படங்களைத் தடுப்பதற்கும் சிலசமயம் இயக்கம் நடத்தப்படுகிறது. இவ்வகை இயக்கங்கள் வேண்டாம் என்பதில்லை. இந்த இயக்கங்கள் வெளியில் பூத்திருக்கும் ஆபாச மலர்களைக் காண்கின்றனவே ஒழிய இத்தகைய செடிகளைத் தாங்கியிருக்கும் நிலத்தையோ இந்தச் செடிகளை

தோற்றுவிக்கும் வித்துக்களையோ காண்பதில்லை. ஆபாசத் திரைப்படங்கள், புத்தகங்கள் முதலியவைகளில் மட்டுமில்லாமல் நம் சமூக வாழ்விலும் ஆபாசப் போக்குகளை நேரிடையாகப் பல சந்தர்ப்பங்களில் நாம் காணுகிறோம். விலை மகளிர், இப்போக்குகளில் ஒன்று பாலுறவுக்காக திருமணம் என்பது இன்னொரு போக்கு. போக்கிரிகள் – அயோக்கியர்கள் என வர்ணிக்கப்படும் சில நபர்கள் தங்கள் உடல் தினவுக்காக செய்யும் கற்பழிப்புகள் இன்னொரு போக்கு. பத்திரிகைகளில் இவ்வகைச் செய்திகள் சித்திரிக்கப்படுவதும் ஒரு போக்கு. ஆபாசம் பற்றி பேசுபவர்கள் மூடி மறைக்கும் சில உண்மைகளும் உள்ளன. தமக்குள்ளும் எழும் ஆபாச உணர்வுகளை இவர்கள் சொல்லிக் கொள்வதில்லை. இத்தகையவர்களில் முற்போக்குவாதிகளும் உள்ளனர். மூடி மறைக்கப்படும் இன்னொரு உண்மை, கணவன் மனைவிக்கிடையிலும் ஆபாசக் காட்சிகளும் ரசனைகளும் உண்டு. இவற்றின் மூலம் மீண்டும் நாம் காணும் உண்மை என்னவென்றால், காமம் அனைவரையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது என்பதுதான். பாலியல் இன்பம் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டோ வேறுவகைகளிலோ கற்பழிப்பு போன்ற கோர வடிவங்களில் வெளிப்படும்பொழுது, இத்தகைய மனிதர்களை நாம் கடுமையாகக் குற்றம் சாட்ட முடிவதில்லை.

இன்னும் ஒரு உண்மையை நாம் இங்கு சொல்லிக் கொள்ளவேண்டும். பாலியல் இன்பம் வக்கிரமான பல வடிவங்களில் அனுபவிக்கப்படுகிறது. ஆண்களுக்கிடையில் பெண்களுக்கிடையில், ஒருவரையொருவர் கடுமையாக துன்புறுத்தி அனுபவிக்கும் இன்பம் இதில் ஒரு பகுதி. மனிதர்கள் தமக்குள் விகாரப்பட்டுள்ளதை இதன்மூலம் அறிகிறோம். இதிலிருந்தும் நாம் மீண்டும் அழுத்தமாகச் சொல்லமுடியும்: பாலியல் பிரச்சினை நம் சமூகத்தைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது.

பாலியல் சிக்கல், மனிதர்களை எல்லாக் காலத்திலும் இதே அளவில் பாதித்திருக்குமா என்றால், இல்லையென்று எளிதாகச் சொல்லிவிட முடியும். ஆதிகால மனிதர்கள், நாம் இன்று பறவைகளிடமும் விலங்குகளிடமும் காண்பதுபோல குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் பால் உணர்வைக் கொண்டிருந்திருக்க முடியும். இனப்பெருக்கத்தின் தேவைக்காக பால் உணர்வைத் தூண்ட வேண்டிய தேவைகளும் அந்தச் சமூகங்களில் இருந்தன. கூட்டுக் களியாட்டங்கள் இவற்றில் ஒருவகை. அக்காலத்தில் காடுகளுக்கு மத்தியில், உடைகளினால் ஏற்படும் கதகதப்பு இல்லாத நிலையில், வெயிலும் குளிரும் தாராளமாகத் தம் உடல்களில் பட்ட



நிலைகளில் பாலியல் உணர்வு மிகுதிப்பட்டிராது. உணவை ஈட்டுவதற்காக கடுமையான வேலைகளில் தங்களை அவர்கள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். வாழ்வின் தேவைக்காகக் கடுமையான பயிற்சிகளை அவர்கள் செய்யவேண்டும். அவர்கள் வாழ்க்கையில் போர் ஒரு முக்கியத் தொழில் இத்தகைய வாழ்க்கைப் பரப்பில் காமம் மையமாகவோ மி முக்கியமானதாகவோ இருந்திருக்க டியாது. உற்பத்திகள் பெருகி வெளியில் உள்ள வெயிலும் குளிரும் தம்மைப் பாதிக்காதபடி வீடு என்ற பாதுகாப்பு முறையும், பலவகை உடைகள் தரிப்பதால் உடம்புக்கு ஏற்படு கதகதப்பும் இன்று பெரும்பாலானவர்க்குக் கிடைக்கின்றன. இதனாலே பாலியல் உணர்வு மிகுதிப்பட வேண்டுமென்பது கட்டாயமில்லை. ஆனாலு இதுவும் ஒரு காரணம் என்று கொள்ளலாம்.

இந்த இடத்தில் இன்று நம் சமூக வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளோடு தொடர்புபடுத்தி இப்பிரச்சினையைப் பேசலாம் முன்னைய காலங்களில் ஆண்களுக்கு பதினைந்து. பெண்களுக்கு பனிரெண்டு வயதில் திருமணம் நடைபெற்றது. பால் உணர்வு என்ன என தெரியவரும் பருவத்தில் மணவாழ்க்கை ஏற்பட்டது. இதனா தேவைப்படும்பொழுது பாலியல் அனுபவம் அவர்களுக்கு வாய்த்த இன்று அப்படி இல்லை. பெரும்பாலான ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி திருமண வயது தள்ளிப் போகிறது. பாலியலை அனுபவிக்க மனத்திலும் உடம்பிலும் கிளர்ச்சி ஏற்பட்டாலும் அனுபவிப்பதற்கான தக்க சூழல் இல்லாததால், இது தள்ளிப் போகிறது தள்ளிப்போடுவதினாலும் பால் உணர்வுக் கிளர்ச்சி அதிகப்படுகிறது வரதட்சணை போன்ற பிரச்னைகளால் பாலியல் அனுபவம் மேலும் தள்ளி போடப்படுகிறது அல்லது சிலர்க்கு இல்லாமலே போகிறது. நம் சமூக காதலை இந்தக் காலத்திலுங்கூட அனுமதிப்பதில்லை. ஆண்களு பெண்களும் கலந்து பழகுவதை ஏற்பதில்லை. பொது இடங்களி கண்ணில் பார்த்துக் கொள்ளலாம். மனம் தடுமாறலாம். ஆனால் உற நெருக்கம் ஏற்பட்டு விடக்கூடாது. இத்தகைய போக்கு தேவைதானா என் கேள்வியையும் இங்கு எழுப்பிக் கொள்ளலாம். வெளிப்படையாக சமூக ஏற்பதில்லை என்பதால் மறைமுக வழிகள் திறக்கின்றன. கள்ளக்காத அரைகுறைக் காதல், பார்வையில் மட்டும் திருப்தி கொள்ளல் – இப்படி போக்குகள் எழுகின்றன. இவையும் கண்டிக்கப்படும்போது மனத்தி ஏற்படும் காயங்கள் குற்ற உணர்வுக்கு இடம் தருகின்றன. இந்தக் குற் உணர்வு காலம் முழுவதும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டு தழும்பா மாறுகிறது. இத்தகைய தழும்பேறிய மனிதர்கள், எத்தகை

காரணங்களால் தமக்குள் இவை ஏற்படுத்தப்பட்டன என்பதையே மறந்து தமக்கு ஏற்பட்ட தீங்குக்கு பழிவாங்கிக் கொள்வதுபோல, தம்மைச் சூழ உள்ளவர்களிடம் அன்போ, காதலோ ஏற்படும்பொழுது கடுமையாகக் கண்டிக்கின்றனர். 'பாவம்' என்று பேசுகின்றனர். 'அக்கிரமம்' என்று அங்கலாய்க்கின்றனர். தம் சூழலை இவர்கள் நாசப்படுத்துகின்றனர். பல சமயங்களில் இவர்கள் பெற்றோர்களாகவும், ஆசிரியர்களாகவும், சமயத் தலைவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் தம்மை ஒத்த டலட்டு மனிதர்களை குரூரமான மனிதர்களை - காயம்பட்ட மனிதர்களையே உற்பத்தி செய்கின்றனர். இத்தகைய மனிதர்கள் நம் சமூகத்தில் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

இந்த இடத்தில் ஜெயகாந்தன் படைப்புக்களில் வரும் சில மனிதர்களைக் குறிப்பிடலாம். 'சமூகம் என்பது நாலு பேர்', 'ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன', 'ரிஷிமூலம்', 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ஆகிய நாவல்களில் வரும் சில மனிதர்களை நினைத்துக் கொள்ளுங்கள். முத்துவேலருக்கு மனைவியாக வாய்த்தவள் உடலின்பத்தை ஒரு சுகமாகக் கொள்ளும் மனநிலையில் உள்ளவள் அல்ல. கருணாவோடு முத்துவேலர் கொள்ளும் சமத்துவ உறவு சமூகத்தால் ஏற்கப்படுவதில்லை. வெளிச்சமான பிரதேசத்துக்கு சிலசமயங்களில் வந்த முத்துவேலர் இறுதியில் தன்னை இருட்டறைக்குள் பூட்டிக்கொள்கிறார். அலங்கார வல்லியம்மாள் அவள் மனப்பக்குவம் கருதி கணவனால் அனுபவிக்கப்பட்டவள் இல்லை. தொடர்ந்து நினவெடுத்த கணவன், மனைவியின் மனப்பக்குவம் அறியாமல், அவளை இம்சித்ததன் விளைவாக அவள் மனம் முடங்கி விடுகிறது. வெளியில் செல்லும்பொழுது வீட்டுக்குள் தன் குழந்தைகளை பூட்டி வைத்துச் செல்கிறார். பெரிய மகள் தலைமை ஆசிரியை. தன் மாணவி ஒருத்திக்கு வந்த காதல் கடிதத்தைப் படித்து, மனம் வெகுண்டு தன் மாணவியைத் துன்புறுத்துகிறார். இளைய மகள் இந்தச் சிறையை விட்டு வெளியேறும் சந்தர்ப்பத்தில் எல்லோருமாகச் சேர்ந்து தடுக்கிறார்கள். கல்லூரியில் வேலை பார்க்கும் நடராசனும் இந்த வக்கிரத்தின் விளைவு. 'ஆடும் நாற்காலிகளி'ல் அசைந்தாடிய படியே வாழ்க்கை கழிகிறது. 'சில நேரங்களில்' வரும் கங்காவின் தாய் ஆரோக்கியமான மனநிலை உடையவள். சகோதரன் வக்கரிப்புக் கொண்டவன். கங்காவின் வாழ்க்கையை நாசமாக்குகிறான். வெங்கு மாமா இதே மாதிரி இன்னொரு முறையில் வக்கரித்தவர். ராஜாராமனின் தந்தை இரவு நேரத்தில் வெளித் திண்ணையிலிருந்து திருடனைப் போல



எழுந்து சென்று தன் மனைவியிடம் உடல் உறவு கொள்வது. இந்த கள்ளத்தனம் இராஜாராமனுக்கு அவனைச் சாமியாராக்கும் அளவுக்கு தண்டனை தருகிறது. நமது சமூகம் வக்கரித்துப்போன நிலை இவ்வகைப் படைப்புகளில் ஜெயகாந்தன் சிறப்பாக வெளிப்படுத்துகிறார்.

இப்பொழுது இன்னொரு உண்மையை கண்டுபிடிக்கும் கட்டத்திற் நாம் வந்துள்ளோம். அதாவது மனிதர்களின் படைப்பாற்றலை நம் சமூ அமைப்பு சிதைக்கின்றது; நாசமாக்குகின்றது; இயற்கையோடு சமூகத்தோடும் வரலாற்றோடும் விரிந்த அளவில் உறவு கொண்டு த ஆளுமையை வளர்த்துக் கொள்ளவேண்டியவர் மனிதர்கள். இவர்களை இயற்கையிலிருந்தும், சமூத்திலிருந்தும், வரலாற்றிலிருந்தும் வெட்டிப் பிரித் சின்னாபின்னப்படுத்தி, சிறுசிறு துண்டங்களுக்குள் அவர்களை சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. இந்தச் சமூகக் கட்டமைப்பு. இந்த சமூகத்தில் தலைவர்களென நினவெடுத்து நிற்பவர்கள் - அ அதிகாரமும் உடைமை வர்க்கங்களும் இவர்களுக்குத் தேவை பொருளுற்பத்திக்கு ஏற்றவாறு மனிதர்களை இவர்கள் தயாரித்துக் கொள் வேண்டும். இவர்கள் சொல்லும் விதிமுறைக்கு உட்பட்டு பொருளை உற்பத்தி செய்ய வேண்டும். உண்ண, உடுக்க, தங்க இவர்கள் குறை வசதிகளை மட்டுமே அவர்கள் அனுபவிக்க வேண்டும். வேறுவகையி அவர்களுக்குத் தனிஆளுமை தேவையில்லை. தங்களை அவர்க எதிர்த்து நிற்கக்கூடாது. கேள்வி கேட்கக் கூடாது. தங்கள் நிம்மதியை குலைக்கக் கூடாது. இந்த நோக்கில் மனிதர்கள் குறுக தரிக்கப்படுகிறார்கள். அவர்கள் தமக்குள் ஒத்திசைவோடு இருப்ப உடைமை வர்க்கத்திற்குத் தேவையில்லை. அவர்கள் உற்பத்திக்கு உதவியா கருவிகள் மட்டுமே. அவர்களைக் கொண்டு உடைமைவர்க்கம் தனக்கு தேவையான உயர்ந்த வசதிகளை உற்பத்தி செய்துகொள்ளு அதேசமயத்தில், அவர்களின் உயிர்வாழ்வுக்கான குறைந்த தேவைகள் மட்டுமே அளிக்கிறது.

அவர்களின் படைப்பாற்றல் பெருகுவதற்குத் துணைபுரிவதில்லை தேவைப்படும் கல்வி, கலாச்சாரம், சமூக வாய்ப்புகள் அவர்களுக் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் கூடிவாழ, தம் ஆற்றல்கள் விருத்திசெய்து கொள்ள, கலை உணர்வு முதலியவற்றில் பரவசம் கொள் இத்தகைய செயல்களின் மூலம் தம்மை மனிதர்கள் என உணர்ந்து தம்மை மென்மேலும் வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு தரப்படுவதில்லை அத்தகைய உணர்வு ஏற்படுமானால் அவர்கள் அடங்கி இருக்கமாட்டார்க

உற்பத்திச் செயல்களுக்குள் முடங்கி இருக்கமாட்டார்கள். ஒரே வகைச் செயலைத் திரும்பத் திரும்ப பல கோடி முறை செய்யும் மழுங்கிப்போன இயந்திரங்களாக இருக்க அவர்கள் உடன்படமாட்டார்கள். இப்படி தங்களை அறிவு, உணர்வு ஆகிய பல தரங்களில் மழுங்கவைத்திருப்பதன் மூலமே சமூகக் கட்டமைப்பை மீண்டும் மீண்டும் தம்மைக் கொண்டு மறுஉற்பத்தி செய்துகொள்ளும் ஆளும் வர்க்கச் சக்திகளை, அவர்கள் கேள்வி கேட்டு அசைத்துத் தகர்த்து, தமக்கென ஒரு புதிய உலகை பிரகடனம் செய்து கொள்வார்கள்.

இதற்கான ஒரு பார்வையும் ஆற்றலும் கருவியும் வாய்ப்புகளும் இல்லாமல் இவர்களைச் சாண்டி வைத்திருப்பதன் மூலமே ஆளும் வர்க்கங்கள் தம்மை காத்துக் கொள்ள முடியும். ஆளும் வர்க்கம் தனது நலன்களுக்காக - பாதுகாப்புக்காக முட்டாள்களை போக்கிரிகளை உற்பத்தி செய்கிறது.

மக்களின் படைப்பாற்றல்கள் பல திசைகளில் பல துறைகளில் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்குமானால், சின்னத்தனங்களில் முடங்கி அவர்கள் சீர்குலையமாட்டார்கள். இன்றைய சமூகக் கட்டமைப்பு இதற்கான வாய்ப்புகளை அனுமதிப்பதில்லை என்பதுதான் இங்கு நாம் காணவேண்டிய உண்மை. இத்தகைய சமூகச் சூழலில்தான் கிடைப்பதை இறுகப்பற்றிக் கொண்டு வாழ்ந்துவிடவேண்டிய தேவை பெரும்பாலான மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உடலையும் உள்ளத்தையும் பல பரிமாணங்களில் வளர்த்து, அத்தகைய வளர்ச்சியில் இன்புறுவதற்குப் பதிலாக, கிடைக்கும் சில வசதிகளை அல்லது வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வழியில் மனிதர் மூழ்கிவிடுகின்றனர். பாலுணர்வு என்பது இத்தகைய ஒரு வசதி அல்லது வாய்ப்பு அல்லது இன்பம். ஆளும் வர்க்கம் இந்த எல்லா வசதிகளையும் மனிதர்களிடமிருந்து பறித்துக் கொண்டு, பாலியலை மட்டும் அனுமதித்திருக்கிறது. மீண்டும் பாலியலைக் கொண்டே மனிதர்களை முடக்கிவிடும் நோக்கில், திரைப்படம் - பத்திரிகை தயாரிப்பு - ஒழுக்க நெறிகள் முதலியவற்றைப் பயன்படுத்துகிறது. இரகசியமாக, மறைவாக, கள்ளத்தனமாக, வெறித்தனமாக பாலுணர்வை அனுபவித்துக்கொள்ள இடம் ஏற்படுத்துகிறது. சமூகத்தில் தமக்கென மரியாதை இல்லாமல், தமது திறன்கள் கேவலப்படுத்தப்பட்டு - திரிக்கப்பட்டு - குரூரப்படுத்தப்பட்ட மனிதர்கள் பாலுணர்வை ஆரோக்கியமாக அனுபவிக்க முடியாது. தமக்குள் திணிக்கப்படும் வக்கிரத்தை - குரூரங்களை அவர்கள் பாலியல் அனுபவத்துக்குள் கொண்டு



செல்கின்றனர். காணாததைக் கண்டது மாதிரி, காய்ந்த மாடு கம்பங் கொல்லைக்குள் நுழைந்தமாதிரி அனுபவிக்கின்றனர். இத்தகைய குரூரமான அனுபவங்களில் அவர்கள் மனிதர்களாகவும் இல்லை. மனிதத் தரத்திற்கும் கீழான நிலையை அடைகின்றனர். இப்படி பாலியல் இன்பமே வாழ்க்கையின் பேரின்பமாய் அலையும் மனிதர்களைக் கட்டுப்படுத்தி அவர்களைக் கொண்டு தமக்கென வாழ்வுக் கோட்டையை ஆளும் வர்க்கம் வசதியாகக் கட்டிக் கொள்கிறது; பாலியல் ஒடுக்குமுறை என்பதோடுகூட சாதி - மதம் - வேறுவகையிலான ஏற்றத் தாழ்வுகள் முதலிய அனைத்து கருவிகளையும் - சித்தாந்தங்களையும் உற்பத்தி செய்து கொண்டு தன்னைப் பாதுகாப்போடு இருத்திக் கொள்ள முயற்சி செய்கிறது.

காமம் பாவமல்ல. மனிதர்களுக்கு உரிய இன்பம் பாலுணர்வு. இந்த இன்பம் மனிதனை வளர்க்க வேண்டும். அவனது ஆக்கத்திறன்களை பெருக்க வேண்டும். ஐம்புலன்களும் ஆரத் துய்க்கும் போக்கில் அவனுக்குள் ஆளும் வர்க்கம் திணிக்கும் சோம்பல், மந்தம், முடக்க ஆகிய குணங்களை உதறிக்கொள்ள வேண்டும். காமம் ஒரு விளையாட்டு விளையாட்டின்போது உடல் முழுவதும் புதிய காற்றில் புதிய வெளியில் இரத்தம் பாய்ந்து சென்று உடலின் எல்லாப் பகுதிகளையும் புத்துணர்ச் கொள்ளச் செய்வது போல, காம விளையாட்டும் மனிதனைப் புத்துணர்ச் கொள்ளச் செய்யும். சிறுவயதில் நண்பர்களோடு கூடிக்கலந்து, கள்ளமின்ற உடல்தொட்டு உரசி விளையாடி இன்புறுகிறோம். இந்த உராய்வு களியாட்டமும் நாளடைவில் சிறிது சிறிதாக நீங்கி விடுகிறது. பாலிய விளையாட்டு, கள்ளமற்ற முறையில் மீண்டும் ஐம்புலன்களையும் ஆர துய்க்க வைக்கிறது. இளம்பருவம் மீண்டும் திரும்பியதைப் போல இன்ப ஏற்படுகிறது. பாலியல் இன்பத்தின்போது உள்ளக் கலப்பும் உடல் கலப்பு உச்ச அளவில் ஏற்பட்டு பரவச நிலை ஏற்படுகிறது. இந்தப் பரவசம் எந் ஒரு கலைப் படைப்பின்போதும் ஆழ்ந்த தியான நிலையின்போதும் ஏற்படு பரவச நிலைக்கு மாற்றுக் குறைந்தது அல்ல. மனிதர், தன்னை கட்டுப்படுத்தும் எத்தனையோ தளைகளிலிருந்து விடுபட்டு பேரானந்த கொள்ளும் நிலை இந்தப் பரவச நிலை. மனிதனின் அறிவிலு உணர்விலும் இஃது ஒரு சிகர நிலை. இந்த நிலையின்போது மனித அன்பு மயமாகின்றனர். இந்த அன்பு மனிதர்களுக்குக் கொள்ளை கொள்ளையாய் வேண்டும். இத்தகைய பாலியல் இன்பம் கணவன் மனை என்ற இருவர்க்கிடையில் மட்டுமே ஏற்பட வேண்டுமென்று விதித்திருப் ஒரு கால கட்ட சமூகத்தின் கட்டுத்திட்டம். இந்த கட்டுப்பாட்டை எல்லா காலத்திலும் எல்லா இடத்திலும் தூக்கித் திரிய வேண்டுமென்

அவசியமில்லை. அன்பு பல சமயங்களில் - பல காரணங்களுக்காக கணவன் மனைவி என்ற எல்லைக்கப்பாலும் ஏற்படலாம். இந்த அன்பு உடற்கலப்பில்தான் நிறைவுபெறும் என்பது உண்மையில்லை. உடற்கலப்பு இல்லாமலும் அன்பு சாத்தியமே. உடற்கலப்பாலும் மனிதர் கெட்டுப் போவதில்லை. கருத்தடைச் சாதனங்கள் மனிதர்க்கு உதவி செய்கின்றன. சமூகத்தின் கேவலமான பொய்யான குற்றச்சாட்டுகளிலிருந்து மனிதர் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு கருத்தடை சாதனங்கள் பயன்படுகின்றன. இளைஞர்கள், தம்மைக் கட்டுப்படுத்தி மந்தமாக்கி, கேவலப்படுத்தும் பொய்யான சமூகக் கட்டுத்திட்டங்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள பாலியல் உறவு பயன்படும், பயன்படவேண்டும். அம்பையின் கதையொன்றில் ஒரு பெண் கூறுகிறாள் : 'இயற்கையின் இத்தனை அழகுகளுக்கிடையில் சூரிய ஒளியும் மெல்லெனச் சிதறும் மழைத்துளிகளும் கலந்த இந்த மாலை நேரத்தில் வெட்டவெளியில் உடைகளற்று என் கணவனைப் புணர்ந்து இன்புற வேண்டும்' - இப்படி ஒரு விடுதலை உணர்ச்சி நம் இளைஞர்களுக்குத் தேவை.

இப்படியெல்லாம் சொல்லும்பொழுது நாம் பொறுப்பு அற்று பேசிவிடவில்லை. ஆளும் வர்க்கம் எத்தனையோ காலமாக நம்மை வெட்டி, தரித்து, கூறுகளாக்கி, சிறுமைப்படுத்தி, படைப்புத்திறன்கள் அறச் செய்து வைத்திருக்கும் போக்கை நாம் தகர்த்துக் கொள்ளவேண்டும். இதற்காகவே பாலியல் விடுதலையை நாம் வற்புறுத்துகிறோம். இந்த பாலியல் விடுதலைக்கு திட்டவட்டமான நோக்கம் உண்டு. வெறும் உடல் இன்பமல்ல நம் குறிக்கோள். ஆளுமையைக் கட்டுப்படுத்தும் - குறுக்கும் சமூகச் சூழல்களுக்கும் சமூகச் சக்திகளுக்கும் எதிரானது இந்த பாலியல் விடுதலை. இனி எல்லோரும் எப்படி வேண்டுமானாலும் கூடிக் களிக்கலாம் என்று நாம் கூற வரவில்லை. பொய்யான கட்டுத்திட்டங்களை மேலும் மேலும் வற்புறுத்தி பாலியல் இன்பம் வேண்டாம் என்று சொல்லி மனித வளர்ச்சியை நாசப்படுத்த யார் விரும்பினாலும் அவர்களுக்கு எதிராக பாலியல் விடுதலையைப் பிரகடனப்படுத்திக் கொள்ளவேண்டும். சமூக வளர்ச்சியைக் கட்டுப்படுத்துபவர்களுக்கு எதிரான இந்தப் போக்கு, மனிதனுக்குள் அடக்கி வைத்துள்ள சக்திகளை விடுவிக்கும். காமம் என்னும் பாலுறவுத் திளைப்பிலேயே மனிதனை இது மூழ்கடித்துவிடாது. மிகக் குறுகிய கால அளவில் உடற்கலப்பின் எல்லையைக் கடந்து மனிதன் தன் படைப்பாற்றலை விரிவுபடுத்திக் கொள்ளமுடியும். இங்கு நாம் ரஜனீஷின் நடைமுறையை ஒரு கணம் நினைத்துக் கொள்கிறோம். கட்டற்ற உடல் கலப்பு ஒரு மருத்துவமுறை; மனிதனை சில கட்டுத்திட்டங்களிலிருந்து



- நோய்க் கூறுகளிலிருந்து விடுவிக்கும் மருத்துவ முறை. இப்ப
விடுவிக்கப்பட்ட பிறகுதான் தனது இருப்பின் உண்மை பற்றி அவன் அறி
இயலும்.

இப்பொழுது மீண்டும் பாலகுமாரன் நாவலுக்கு நாம் வருவோ
ஆண் பெண் உறவின் மேன்மையை தன் நாவல்களில் கவிதை நயத்தோ
விவரித்திருக்கிறார். பாலியல் இன்பத்தை வெட்கமில்லாமல் அனுபவிக்கு
மனிதர்களைப் பற்றிச் சொல்லுகிறார். இப்படியெல்லாம் சொல்லும்பொழு
அவரது வர்ணனைகளில் சங்கக் கவிதை முதல் ஆண்டாள் கவிதை, பா
கவிதை என பல காலக் கவிதைகள் பிரவாகம் கொள்கின்றன. இந்த
பிரவாகத்தினுள் மூழ்கி நாம் காலங்களையும் மனிதர்களையும் தரிசித்
அவர்களோடு கலந்த உணர்வு ஏற்படுகிறது. நாம் ஏதோ நம
காலத்திற்குள் சமூகச் சிறுமைகளுக்குள், உடலுக்குள் மட்டும் கட்டுப்பட்ட
உயிர்கள் அல்ல; நாம் வரலாற்று வெள்ளத்தில் நீந்திவரும் மானிடர்க
என்ற உணர்வு ஏற்படுகிறது. ஆண் பெண்களுக்கிடையில், கணவ
மனைவிக்கிடையில் மறைவிடம் தேடி இருள்வெளியில் அனுபவிக்கு
இன்பத் துய்ப்பு முறையைத் தகர்த்துக் கொள்ள வேண்டுமென்
வேட்கையைப் பாலகுமாரனின் வர்ணனைகள் நமக்குள் ஏற்படுத்துகின்ற
மனிதர்கள் கள்ளங்கபடமற்ற குழந்தைகள். குழந்தைகளின் விளையாட்டி
என்ன தவறு இருக்கமுடியும்? என்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது.

பாலகுமாரன் நாவல்களில் ஆண் - பெண் உறவு இன்னொரு சமூ
பரிமாணத்தையும் பெறுகிறது. நமது சமூகம் திருமணத்தில் ஒ
ஆணையும் பெண்ணையும் இணைக்கும் விதத்தில் கடைப்பிடிக்கும் விதி
பல. இவற்றின் பொய்மை நாம் நன்றாக அனுபவித்து வருகிறோ
திருமண பந்தத்தையும் கடந்து ஒரு ஆண் தன் மனைவியல்லா
இன்னொருத்தியோடு உறவுகொள்ளவும் அன்பில் திளைக்க
படைப்பாற்றலில் புத்துணர்வு கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுவதைத் த
நாவலில் பாலகுமாரன் சித்திரிக்கிறார். வயது முப்பதுக்குமேல் ஆ
வரதட்சணை முதலிய கொடுமைகளால் திருமணம் ஆகாமல் தனித்திருந்
அறிவு ஆற்றல்கள் நிறைந்திருந்தாலும் வாழ்க்கையில் உறவு இல்லை
என்று வருந்தும் பெண்களுக்கு வாழ்வில் உறவு வேண்டாமா என்
கேள்வியை பாலகுமாரன் வலிமையோடு எழுப்புகிறார். இதில் தவ
இல்லையென்று பிரகடனப்படுத்துகிறார். சமூகத்தில் ஆரோக்கியத்
ஏற்படுத்துவதற்கு இது ஒரு வழிமுறை. இதற்கு மேலும் பாலகுமார
செல்லுகிறார். கணவன் என்பவனைக் காலம் முழுவதும் ஒரு கனவா

தாங்கி இருக்க வேண்டியதில்லை. அவள் ஒரு சந்தர்ப்பம் - அப்பளவே ஒருவன் மூலம் குழந்தை பெற்றுக்கொண்டு அந்தக் குழந்தையை வளர்ப்பதிலேயே ஒரு பெண் தன் வாழ்வை அனுபவிக்க முடியும். "இரும்புக் குதிரைகளி"ல் வரும் காயத்ரி இப்படி. பொதுவாக பாலகுமாரன் நாவல்களில் ஆண் பெண் உறவு அன்புமயமாகச் சித்திரிக்கப்படுகிறது. ஒருவரையொருவர் சுரண்டுவதில்லை. ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொள்வதில்லை. இந்த உறவு தூய்மையான மானித உறவு.

பாலகுமாரனின் நாவல்களில் ஆண் பெண் உறவுச் சித்திரிப்பு மேலே நாம் விவரித்த சமூகப் பரிமாணங்களோடு - அர்த்தங்களோடு இல்லை. பாலகுமாரனுக்கு சமூக வரலாறு, தத்துவம், இவற்றின் பலமும் பார்வையும் தெரியாது - ஆகவே, இல்லை. இப்படி இல்லாத நிலையில் மனிதனின் படைப்பாற்றலை சமூக வளர்ச்சியோடு வரலாற்று வளர்ச்சியோடு சம்பந்தப்படுத்தும் கண்ணிகள் பாலகுமாரன் கதைகளில் இல்லை. குறுகிய சூழலில் மனித விடுதலையைத் தொட்டுக் காட்டும் பணியை பாலகுமாரன் நாவல்கள் செய்கின்றன. தி. ஜானகிராமனின் போக்கில் தொடங்கி அதில் நிலைத்திருப்பவர் பாலகுமாரன். நாவலாக்கத்தைப் பொறுத்தவரை தி. ஜானகிராமனின் பரப்பளவு பாலகுமாரனுக்குள் இல்லை. முதலாளி தொழிலாளி உறவுக்கிடையில் முதலாளிக்குச் சார்பான நேர்மையைத்தான் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட நேர்மையாகக் காண்கிறார் பாலகுமாரன். இந்தக் குறைபாடு காரணமாக பாலகுமாரன் தன் எல்லைகளைத் தகர்த்துக் கொள்வதில்லை. உண்மையின் ஒரு கற்றை அவரைப் பிரகாசப்படுத்துகிறது. அந்தப் பிரகாசத்தில் அவர் துள்ளி மகிழலாம். நமக்கோ இது போதாது. முதலாளியச் சமூகத்திற்குள் மனிதனின் சுதந்திரப் பரப்பை சிறிதளவே விரித்துக் கொள்வது அவருக்குப் புத்துணர்ச்சி தரலாம்; நமக்குப் போதாது.

முப்பதாண்டுகளுக்கு மேலாக
தமிழ் இலக்கியத்தைப்
புதிய முறைகளில்
ஞானி வாசித்து வருகிறார்.
மார்க்சியம் என்னும் தளத்தில்
உறுதியாக நின்று கொண்டே
பெரியாரியம், தலித்தியம்
பெண்ணியம், நவீனத்துவம்
பின்-நவீனத்துவம்
என்ற அணுகுமுறைகளை
தொடர்ந்து கடைப்பிடித்து
தமிழ் இலக்கியத்திற்குப்
புதிய வளம் சேர்க்கிறார்.
சமத்துவம், சமதர்மம்
ஆகியவற்றை தனக்குள்
நீரோட்டமாகக் கொண்டுள்ள
தமிழ் மரபுக்கும்
தமிழ் இலக்கியத்திற்கும்
அழிவு இல்லை என்று
உறுதியாக நம்புகிறார்.
எதிர் எதிர் கோணங்களில்
என்ற இந்த நூல்
இந்த உண்மையை
உறுதிப்படுத்துகிறது.